Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 91 | சர்வதேச மின் செய்தித்தாள் | பெப்ரவரி 15 2025

## 16ஆம் ஆண்டு
# வீரவணக்கம்



20.02.2009

வான் கரும்புலி
## கேணல் ரூபன்

வான் கரும்புலி
## லெப். கேணல் சிறித்திரன்

*வான் ஏறி, வீரவரலாறு வரைந்தவர்!*

*புதிதாய் எழுதப்பட்ட பக்கங்களின் அகரமானவரே!*
*வரிந்த வானத்திலும் தியாகப் பெருநெருப்பை வளர்த்து விட்டுச் சென்றவரே!*
*இருள் கிழித்து வான் எழுந்த திருமுகத்தின் ஒளிமுகங்களே!*
*எங்கள் வானத்தின் விடிபொழுதுக்கானது உங்கள் பறப்பு.*
*தாய்மண் மீதுள ஒவ்வொரு உயிர்ப்பிலும் உங்களின் நினைப்பு.*

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
AUDIT · REVIEW ENGAGEMENT · NOTICE TO READER · BUSINESS ADVISORY · CONTROLLERSHIP SERVICES · CORPORATE TAXES · PERSONAL TAXES · FINANCIAL PLANNING · CRA AUDITS · PAYROLL · BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 · 647-989-6298 · 647-748-6444 · www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $119.99 +
OIL CHANGE $59.99 +
USED TIRE $74.99 +
BRAKES JOB $299.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathananthan
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிட என்னை அழையுங்கள்!
Kaja Sivalingam
Sales Representative
647-338-5252
skajaruban@gmail.com
Higher Standard Agents... Higher Results!
HOMELIFE/GTA REALTY INC.
5215 Finch Ave E, Suite 203, Scarborough ON M1S 0C2 OFFICE: 416-321-6969

Muhunthan Sivathasan (Danny)
Graphic Designer & Printer
Silver Print House
Digital Printing, Graphics & Publication
D'impression numérique , les graphiques et la publication
437 423 5460
Silverprinthouse@gmail.com
Please call & book an appointment before visiting... I will provide the adress after booking....

TOPSTARS
RE/MAX ACE
வீடு வாங்க | விற்க | முதலீடு
BUY | SELL | INVEST
THRIVE FOR YOUR LIFE LONG HAPPINESS
Arul Amirthalingam
Realtor
Dir: 647-450-2479
Arulorealtor5@gmail.com
Office: 416-270-1111 / 3-1286 Kennedy Rd, Toronto M1P 2L5

Kurinchi Beauty & Makeup
647.918.9742

# 2025 உலக வணிகம்

விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203

Sangathamil
சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
சர்வதேச மின் செய்தித்தாள்

www.sangathamil.ca

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**தேச விடுதலைப் போராட்டங்களுக்கு உந்து சத்தியாக விளங்குவது தேசப்பற்று. தேசப்பற்றானது உணர்வுபூர்வமானது. மனிதர்களின் அடிமனத்தில் ஆழவேரோடி நிற்பது. காலத்திற்கும் இடத்திற்கும் அப்பால், புவியியல் எல்லைகளுக்கும் அப்பால், மனிதர்களை ஆட்கொண்டு நிற்கும் ஒரு அபூர்மானசக்தி.**







## சங்கத்தமிழ்

### தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**இணையத்தளம்** (Website)

**www.sangathamil.ca**

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# தமிழ் தளிர்க்க தாமுருகும் தவப்புதல்வர்கள் வரிசையிலே... மாவீரன் மேஜர் பிரசாத்

**மேஜர் பிரசாத்**
**கந்தசாமி முரளிதன் (வேவி, முரளி, பிரசாத், குண்டப்பா, அப்பா – மூளாய்)**

"உன் போன்றோரின்... இறப்புகளின் பின்னணியில் இந்தியப் படை வெளியேறும் சாவுகளின் மேட்டில் - ஒரு சரித்திரம் உருவாகும்."

மேஜர் பிரசாத் நினைவாக அன்றொரு நான் "சுதந்திரப் பறைவகள்" பாடி வைத்த கவிதை இது. இன்று இந்தியப் படைகள் முற்றாக வெளியேறிய நிலையில் இந்தக்க விதையும் ஒரு முத்தாய்ப்பாக அமைந்துள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்றுக்கொண்டிருந்த கந்தசாமி முரளிதரன் என்ற மாணவனை 1983ம் ஆண்டு யூலை கலவரம் ஆழமாக சிந்திக்க வைத்தது. கல்வியிலும் விளையாட்டிலும் அபார திறமை பெற்று விளங்கிய முரளிதரன் இனப்பற்றும், மொழிப்பற்றும் மேலிட்டமையால் தன்னையும் ஒரு போராளியாக்க விரும்பினான். இலட்சியப்பற்றும், தியாக உள்ளமும், உறுதியும் கொண்ட விடுதலைப் புலிகளின் பாசறை அவனுக்குப் பயிற்ச்சிக் கனமாயிற்று.

'The Battles of the Trafelquar and Waterloo were won on the playing field of Eton and Harrow.'

என்பது ஒரு பிரபலம் பெற்ற ஆங்கில பழமொழி. அதாவது ஆங்கிலேயர்கள் நெப்போலியன் என்ற மாபெரும் வீரனைத் தோற்கடித்த வரலாற்றுப் புகழ்பெற்ற Eton and Harrow என்ற இரண்டு கல்லூரிகளின் விளையாட்டு மைதானத்தில் அவர்கள் அனுபவ முத்திரைகளின் வெளிப்பாடாக நிகழ்ந்தது என்பது இதன் பொருளாகும். நெப்போலியனை 1805ல் தளபதி நெல்சனும் 1815ல் தளபதி வெலிங்டனும் இரண்டு தடவை தோற்கடித்தனர்.

இதே போல விடுதலைப் புலிகள் இயக்கத்திலும் பாடசாலை நாட்களில் கல்வியிலும் விளையாட்டுத்துறையிலும் மிகுந்த ஈடுபாடு காட்டிய மாணவர்கள் பின்னர் போராட்டக் களத்தில் முன்னணிப் போராளிகளாக விளங்கியுள்ளார்கள். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் விளையாட்டிலும் கல்வியிலும் தலைசிறந்த மாணவர்களாக பொன்னம்மான், ராதா, கேடில்ஸ், திலீபன், காண்டீபன் போன்ற போராளிகள் வகுப்பறையிலும் கல்லூரி விளையாட்டு மைதானத்திலும் முன்னணியில் திகழ்ந்தது போல விடுதலைப் புலிகனின் பாசறையிலும் எதிரியுடனான மோதலில் போர்க்களத்திலும் முன்னணி வியூகத்தில் இடம் பிடித்துக் கொண்டனர். யாழ்ப்பாணக் கல்லூரியின் புகழ் பெற்ற அதிபரான "பிக்னல்" ஞாபகார்த்த விளையாட்டு மைதானம் மேஜர் பிரசாத்திற்கு இத்தகைய அனுபவ முத்திரைகளின் பின்தனமாயிற்று.


### பாசறையில் பயிற்சி

விடுதலைப் புலிகளின் அணியில் இணைந்து கொண்டு இராணுவப் பாசறை ஒன்றில் சிறப்பான முறையில் இராணுவப் பயிற்சியை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பிய பிரசாத் பிரதேச ரீதியாக பல இடங்களிலும் அமைக்கப்பட்டு இருந்த இராணுவப் பயிற்சிக் கூடங்களில் போராளிகளுக்குப் பயிற்சி கொடுக்கும் பொறுப்பில் அமர்த்தப்பட்டான். அவன் பெற்றிருந்த இராணுவப்பயிற்சியும் ஆயுதங்களை கையாள்வதில் அவனுக்கு இருந்த அறிவும் ஒருமுகப்பட்டமையால் அவனால் பயிற்சி அளிக்கப்பட்ட பலர் உயிர்த்துடிப்பும் உத்வேகமும் ஆற்றலும் திறமையும் பெற்ற போராளிகளாக பரிணாமம் பெற்றனர்.

### சுழிபுரத்தில் பிரசாத்

1984 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் புளொட் சதிகாரக் கும்பலின் அடாவடித் தனங்கள் சுழிபுரம் பகுதியில் பகுதியில் வாழ்ந்த மக்களைக் கொடுமைக்குள்ளாக்கிக் கொண்டிருந்தன. விடுதலைப் புலிகளின் பாசறையில் முதலில் களப்பலியான லெப். சங்கரின் (சத்தியநாதன் - கம்பர்மலை) இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலிப் பிரசுரம் ஒன்றை ஓட்டுவதற்காக இப்பகுதிக்குச் சென்ற ஆறு போராளிகள் புளொட் சதிகாரக் கும்பலால் துடிக்கத் துடிக்க வெட்டிக் கொல்லப்பட்டு சுழிபுரம் காட்டுப் பகுதியில் புதைக்கப்பட்டனர்.

இக்கோரக் கொலை நிகழ்வுகளின் பின்னர் இச்சதிக்காரக் கும்பலின் நோக்கங்களைப் புரிந்து கொண்ட மக்கள் இவர் இப்பகுதியிலிருந்து இனம்கண்டு ஒதுங்கத் தொடங்கினர். இக்கொலைவெறிப் பயங்கரவாதிகளிடமிருந்து அந்தியப்பட்ட மக்கள் விடுதலைப் போராட்டத்னின்றும் அந்நியப்படாத வகையில் அவர்களைப் போராட்டத்துக்குள் உள்வாங்க வேண்டிய தேவை இருந்தது. இக்கால கட்டத்தில் சுழிபுரப் பகுதியில் வாழ்ந்து மக்களைப் போராட்டத்தினால் அணிதிரட்டி




அவர்களுக்கு ஒரு சரியான புரட்சிகர தலை மையை பிரசாத் கொடுத்தான். வட்டுக்கோட்டைத் தொகுதியில் விடுதலைப் புலிகள் என்ற விதை வேரூன்றி விருட்சமாக வளர்ந்து விடுதலை அபிமானிகளுக்கு நிழல் கொடுத்தது என்றால் அதற்கு முதுகெலும்பாக நின்று உழைத்தவன் பிரசாத் என்று ஒருமுறை தியாகி திலீபன் குறிப்பிட்டார். 1986 ஆம் ஆண்டுடளவில் பிரசாத் வட்டுக்கோட்டைப்பகுதி பிரதேச பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். பிரதேச பொறுப்பாளனாக நியமிக்கப்பட்ட பிரசாத் அரசியல் வேலைகளை முழுமையாகவும் திறமையாகவும் செய்து வந்தான்.

### பிரசாத் மேற்கொண்ட ஆராய்ச்சிகள்

மேஜர் பிரசாத் தனது பிரதேசத்தின் சமூக நிலமைகள், பொருளாதார வளங்கள், கல்வி வளர்ச்சிக்கான ஆதார தேவைகள் என்பன தொடர்பாக பல ஆய்வுகளை மேற்கொண்டு அவை பற்றிய பூரண அறிவை பெற்றுக் கொண்டான். ஒரு சமூகத்தின் அபிவிருத்திக்கு அந்தச் சமூகத்தின் அரசியல், சமூக, பொருளாதார, கல்வி வளர்ச்சி சம்பந்தமான பூரண தெளிவும் அறிவும் இருக்க வேண்டும். இத்தகைய கட்டுமானங்களை பிரசாத் தெளிவாகப் புரிந்துகொண்டுதான் திட்டங்களை வகுத்தான். சிறப்பான தலைமைத்துவத்தையும் மக்களுக்கு வழங்கினான்.

இவனிடம் காணப்பட்ட இன்னொரு சிறப்பு இவன் பலகலையும் கற்றுத் தேர்ந்த ஒரு சகலகலா வல்லுனன். அரசியல், பொருளியல், சமூகவியல், உளவியல், அழகியல், நுண்கலைகள். கிரிக்கட் முதலான விளையாட்டுக் கலைகளோடு பஸ், லொறி, வாகனங்கள் இயந்திரப் பொறி முறைகள் இயக்குவதிலும் பழுது பார்ப்பதிலும் இவனிடம் அபரிதமான அறிவு காணப்பட்டது.

### முறுவல் நிலமை

இந்திய இராணுவம் இலங்கைக்குள் இறக்கப்பட்டு விடுதலைப் புலிகளை ஒடுக்கும் நிலமைகளை மேற்கொண்டபோது அதனை அரசியல் ரீதியாக அம்பலப்படுத்த வேண்டிய தேவை விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டது. "போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் போராட்ட இலட்சியம் மாறாது" என்று தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் சுதுமலையில் விடுத்த அறைகூவலுக்கு அமைய ஆயுதப் போராளியான திலீபன் அக்கால நிலையைக் கருத்திற்கொண்டு சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டான். ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து திலீபன் உண்ணாநோன்பு ஆரம்பித்த தினம் மேஜர் பிரசாத் ஆற்றிய உரை பிரசித்தமானது.





திலீபன் முன்வைத்த கோரிக்கைகளை ஏறெடுத்தும் பாராத இந்திய மத்திய அரசு திலீபனின் இறப்புக்கு காரணமானது. திலீபன் கண்மூடிய போதுதான் தமிழ்ச் சமூகம் கண்விழித்துக் கொண்டது. இந்தியாவின் நிலைப்பாடு விடுதலைப் புலிகளுக்கு எதிரானது என்பதை புரிந்து கொண்ட மக்கள் ஆங்காங்கே மறியல் போராட்டங்களில் ஈடுபடலாயினர். இதைத்தொடர்ந்து குமரப்பா, புலேந்திரன் முதலான பன்னிரு புலிகளின் மறைவைத் தொடர்ந்து இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் வெற்றுத் தன்மையையும் இந்தியாவின் கையாலகத்தனமும் அம்பலப் படுத்தப்பட்டது. நன்றாக அம்பலப்படுத்தப்பட்ட இந்தியா விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

### யாழ். மாவட்டப் பொறுப்பாளர்

திலீபனின் மறைவைத் தொடர்ந்து மேஜர் பிரசாத் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். பிரசாத் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளனாக இருந்த காலகட்டத்தில்தான் இலங்கை- இந்தியப் போர் மிக உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. இக்காலகட்டத்தில் பிரசாத் ஆற்றிய பணி பலராலும் வியந்து பாராட்டப்பட்டது. இந்திய இராணுவத்தால் மிகமோசமாகத் தேடப்பட்ட பிரசாத் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கூடாக வெகு சுறுசுறுப்பாக இயங்கினான். அவனுக்காகப் பல இடங்களில் இராணுவத்தால் விரித்து வைக்கப்பட்ட வலைப் பின்னலை அவன் ஊடறுத்துக் கொண்டு எதிரியின் கையில் அகப்படாமல் சமயோசிதமாகப் பணியாற்றினான்.

விடுதலைப்புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்குமிடையில் யுத்தம் மிக உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த போது வட்டுக்கோட்டையிலிருந்து பலாலி வரை தன்னந்தனியாக ஒருநாள் ஒரு துவிச்சக்கரவண்டியில் ஆர்.கே.எல் எம்.ஜி ஒன்றும் ஏ.கே.எல்.எம்.ஜி ஒன்றும் கட்டிக்கொண்டு வந்து போராளிகளிடம் ஒப்படைத்தான். இந்திய இராணுவத்தின் கவசவாகனங்கள் வீதிகளை நிறைத்து ரோந்து சுற்றும் போது செயின் புளக்குகள் தார்போட்ட வீதிகளைக்கூட திரியும்போது ஆகாய மார்க்கமாக இந்திய ஹெலிகள் போராளிகளின் நடமாட்டம் பற்றி தரையில் நின்ற சிப்பாய்களுக்கு வெவு பார்த்து உளவு சொல்லிக்கொண்டிருக்க, சிப்பாய்களோ மதில்கனையும் தகர்த்து வீடுகளுக்குள் புகுந்து போராளிகளைச் சல்லடை போட்டுத் தேடிக்கொண்டிருக்கும்போது வட்டுக்கோட்டையிலிருந்து பலாலி வரை பல மைல்கள் தூரம் குச்சு ஒழுங்கைகளைத் தாண்டி கனரக ஆயுதங்களோடு சென்று மேஜர் பிரசாத் ஆற்றிய பணி மகத்துவமானது.



**இந்திய இராணுவத்தின் கவசவாகனங்ள் வீதிகளை நிறைந்து ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வேளையில் – செயின் புளக்குகள் தார் போட்ட வீதிகளைக் கூட ஊழுது கொண்டு திரிந்த நேரத்தில் – ஆகாய மார்க்கமாக இந்திய ஹெலிகள் போராளிகளின் நடமாட்டம் பற்றி தரையில் நின்ற சிப்பாய்களுக்கு வேவுபார்த்து உளவு சொல்லிக் கொண்டிருந்த நிலையில் – சிப்பாய்களோ வேலிகள் வெட்டியும் மதில்களை உடைத்தும் விடுகளுக்குள் புகுந்து போராளிகளைத் சல்லடை போட்டுத் தேடிக்கொண்டிருந்த வேளையில் இவர்கள் எல்லோரது கண்களிலும் மண்ணைத் தூவி விட்டு மேஜர் பிரசாத் வட்டுக்கோட்டையில் இருந்து பலாலிவரை தன்னந் தனியனாக ஒரு துவிச்சக்கர வண்டியில் ஆர். கே. எல். எம். ஜி ஒன்றையும் ஏ.கே. எல்.எம்.ஜி ஒன்றையும் கொண்டுவந்து போராளிகளிடம் கொடுத்து விட்டுச் சென்றான்.**

இவனது இந்த துணிகர செயல்பற்றி இயற்றப்பட்ட கவிதை ஒன்றின் வரியில்

“இருபக்க வீதியிலும்
இந்தியப்டை காத்திருக்க
பீதியடைந்த மக்கள்
வீதிகளை மறந்தோட
நீயோ……..
அடிபாட்டுக்குத் தேவையான
ஆயுதங்களை சுமந்து
சந்திகளையும் முடக்குகளையும்
சாதாரணமாய்
கடந்து வந்தாய்.”

### கடைசி நாட்கள்

இந்தியப்படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடந்த போரின் வேகம் சற்றுக்குறைந்து ஆனால் இந்திய இராணுவத்தின் ரோந்து சுற்றலும் தேடுதல் வேட்டையும் அதிகரித்து இருந்தபோது ஒரு நான் மேஜர் பிரசாத் வடலியடைப்பில் உள்ள வீதிவழியாக துண்டுப்பிரசுரமொன்றை அச்சடிக்குமுகமாக துவிச்சக்கர வண்டியொன்றில் சென்றுகொண்டிருந் தான். அப்போது இந்திய துருப்புகள் ஏற்றிய மூன்று ட்றக்குகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சென்றுகொண்டிருந்தன. அந்த மூன்றாவது ட்றக்கில் பிரயாணம் செய்து கொண்டிருந்த திருவாளர் துரொகியார் ஒருவர் பிரசாத்தை அடையாளம் கண்டு இந்தியத் துரப்புகளுக்கு காட்டிக்கொடுத்தார். இந்திய இராணுவத்தினுடனான மோதலின் போது காயப்பட்ட நிலையில் இயக்க மரபுகளுக்கமைய மேஜர் பிரசாத் சயனைட் வில்லைகளை உட்கொண்டு வீரமரணமுற்றார். தியாகத்தை தன்னகத்தே தாங்கி நிற்கும் தமிழீழ விடுதலை வரலாற்று டயறி மேஜர் பிரசாத்தின் மரணத்தை 6.2.1988 இல் பதிவு செய்துகொண்டது. மேஜர் பிரசாத்தின் மரணத்தைக் கேள்வியுற்ற தலைவர் பிரபாகரன் அவர்கள் பின்வருமாறு சக போராளி ஒருவரிடம் சொன்னார்.

“இலட்சியத்திற்காக இறுதிவரை நின்று உழைத்த தலைவன் ஒருவனை நாம் இழந்து விட்டோம்.”

மேஜர் பிரசாத்தை நினைக்கும் போதெல்லாம் சுபாஷ் சந்திர போஸ் தனது படை அணிக்கு கூறிய ஒரு வாசகம் நினைவுக்கு வருகின்றது.

வாளேந்தியவன் முன்னே வாளுடனே செல்!
வார்த்தைகள் அர்த்தமற்றுப் போய்விடலாம்.
துணிவிருந்தால் பயமேது?
நான் சுதந்திரத்துக்காக “பேசவரவில்லை”
எனக்குத் தேவையானது ஆயுதமும்
துணிச் சலுமே!

மேஜர் பிரசாத் பற்றி தமிழீழத்திலிருந்து வெளிவரும் ஈழநாதம் (01.04.1990) என்ற பத்திரிகையில் வந்த நினைவுக்குறிப்பு.

## பிரசாத்தின் மரணம் பற்றி…

**“இலட்சியத்திற்காக இறுதிவரை உழைத்த தலைவன் ஒருவனை நாம் இழந்து விட்டோம்.”**

*தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்*




# சிறீலங்கா ஜனாதிபதியிடம் 20 கோரிக்கைகளை சமர்ப்பித்தார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

01.02.2025

சிறீலங்கா ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க தலைமையில் இன்று (31) நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம பலம் பல்வேறு கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் சமர்ப் பித்தார்.

1. யாழ். போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதி உடனடியாக அமைக்கப்படல் வேண்டும்.

2. யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள நோயாளர் விடுதிகள் அதிகளவான நோயாளர்களால் நிரம்பி வழிகிறது. பல விடுதிகளில் கட்டில்கள் பற்றாக்குறை காரணமாக அவ்வப் போது நோயாளர்கள் தரையிலும் இரவு முழுவதும் கதிரை களில் அமர்ந்தவாறும் ஒரு கட்டிலில் இரண்டு நோயாளர்கள் என உறங்கவேண்டிய நிலைமைகள் காணப்படுகின்றன. நோயாளிகளைப் பராமரிப்பதற்காக உடனிருப்பவர்கள் பல மணி நேரமாக நின்ற நிலையிலேயே பராமரிப்பு பணிகளில் ஈடுபடவேண்டிய நிலையில் உள்ளனர். இந்நிலை உடனடியாக சீர் செய்யப்பட வேண்டும்.

3. யாழ். பண்ணையில் அமைந்துள்ள மார்பக சிகிச்சை (காச நோய்) பிரிவில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட வேண் டும். மயிலிட்டியில் அமைந்திருந்த காசநோய் பிரிவை அந்த இடத்தில் மீளவும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மயிலிட்டியில் இயங்கிய காசநோய் வைத்தியசாலை தற்காலிக மாக கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் இயங்குகிறது. ஆனாலும் அங்கு அந்த அலகுக்கான ஆளணிகள் எதுவும் நிய மிக்கப்படவில்லை. உடனடியாக ஆளணி நியமனம் செய்யப்பட வேண்டும்.

பண்ணையில் உள்ள மார்பக சிகிச்சை நிலையத்துக்கென நிரந்தரமான எக்ஸ்ரே றேடியோ கிறாபர் (x-ray radiographer) இல்லை. அவர்களை நிரந்தரமாக நியமிக்கப்பட வேண்டும். (துற்போது திங்கள், புதன் ஆகிய இரண்டு நாட்கள் மட்டும்)

இவ்வைத்தியசாலையில் பரிசோதனைக்காக பெறப்படும் சளி மாதிரிகளை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்துவதற்கான குளிர் சாதனப் பெட்டிகள் பெரும் பற்றாக்குறையாக உள்ளது. பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகள் ஐந்து நாட்களுக்குள் சோதனை செய் யப்பட வேண்டும். ஆனால், உரிய கருவிகள் இன்மையால் ஒரு வருடத்துக்கும் மேலாக சேமிப்பில் உள்ள நிலை காணப் படுகிறது. இந்நிலை சீர் செய்யப்பட வேண்டும்.

4. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பெருமளவான இளையோர் போதைப்பொருள் பயன்பாட்டுக்கு அடிமையாகி வருகின்றனர். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வளித்து, அவர்களை மீட்டெடுப்பதற்கான புனர்வாழ்வு நிலையம் யாழ்ப் பாணம் மாவட்டத்தில் அமைக்கப்பட வேண்டும்.

5. யாழ். மாவட்டத்தில் கடற்றொழில் படகுகளை பாதுகாப் பதற்கான கல்லணைகள் அமைத்தல்:

பருத்தித்துறை மூர்க்கம், முனை, கொட்டடி கடற்கரை, சுப்பர் மடம், இன்பர்சிட்டி கடற்கரை, சக்கோட்டை கடற்கரை, திக்கம் கடற்கரை, கொத்தியால் கடற்கரை, றேவடி கடற்கரை, ஆதி கோவிலடி கடற்கரை, தொண்டைமானாறு கடற்கரை, பலாலி கடற்கரை, சேந்தான்குளம் கடற்கரை, மாதகல் கடற்கரை ஆகிய இடங்களில் படகுகள் தரித்து நிற்கும் இடங்களில் படகு களைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்பு கல்லணைகள் அமைக் கப்பட வேண்டும்.

படகுகள் நுழையும் பகுதிகளை ஆழமாக்குதல்:

மூர்க்கம் தொடக்கம் மாதகல் வரை படகுகள் தொழிலுக்காக இறக்கப்படும் நுழைவு வான்கள் நீண்டகாலமாக ஆழப்படுத்தப் படாமையினால் படகுகள் சேதமடைகின்றன. படகுகள் சேத மடைவதனை தடுக்கும் வகையில் குறித்த இடங்கள் உடனடி யாக ஆழப்படுத்தப்படல் வேண்டும்.

கொத்தியால் கடற்கரையில் படகுகள் தரிப்பிடத்தில் அகழப்பட்ட மண்ணை அப்புறப்படுத்த நடவடிகை எடுத்தல்:

வல்வெட்டித்துறை கிழக்கு கிராமிய கடற்தொழில் அமைப் பினருக்குச் சொந்தமான படகுகள் தரித்து நிற்கும் பகுதியி லிருந்து அகழப்பட்ட மண் கடற்கரையிலேயே குவிக்கப்பட் டுள்ளது. அந்த மண் மீண்டும் மீண்டும் இறங்குதுறைக்குச் சென்று படகுகள் நிறுத்தும் பகுதியை மூடுவதனால் படகுகளை நிறுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு கொட்டப் பட்டுள்ள மண்ணை அகற்றுவதற்கான அனுமதியை சம்பந்தப் பட்ட திணைக்களங்கள் இன்னமும் வழங்கவில்லை. எனவே, அப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ள மண்ணை அண்மையிலுள்ள பொது அமைப்புக்களது பயன்பாட்டுக்காக எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

6. இந்திய மீனவர்களால் வலைகள், படகுகள், சேதமாக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும்.

7. கனமழை, வெள்ளப்பெருக்கு காரணமாக ஏற்பட்ட விவசாய அழிவுகளுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும்.

8. யாழ். குடாநாட்டில் சொந்த காணிகள் மற்றும் வீடுகள் இல் லாதவர்களுக்கு காணிகள் வழங்கவும் வீடுகள் கட்டிக்கொடுக் கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வீட்டுத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி போதாமல் உள்ளது, அத்தொகை அதிகரிக்கப்பட வேண்டும்.

9. தையிட்டியில் தனியார் காணியில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத திஸ்ஸ விகாரை கட்டுமானம் அகற்றப்பட வேண்டும். தனியார் காணிகள் அனைத்தும் பொது மக்களிடம் ஒப்படைக் கப்பட வேண்டும்.

10. மயிலிட்டியில் விடுவிக்கப்படாத மூன்று கிராம சேவையாளர் பிரிவுகள் உட்பட யாழ். குடாநாட்டில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள தனியார் காணிகள் மற்றும் பொதுக் காணிகள் அனைத் தும் விடுவிக்கப்பட வேண்டும். வசாவிளான் சந்தியிலிருந்து பலாலி சந்தி வரையான வீதி பொதுமக்கள் பயன்பாட்டுக்காக திறக்கப்பட வேண்டும்.

11. யாழ். நகர அபிவிருத்திக்கு கடந்த 2017ஆம் ஆண்டில் உலக வங்கி வழங்கிய நிதி உதவியில் வடிகாலமைப்பில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பான விரிவான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

12. யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் ஒவ் வொன்றுக்கும் தகுதிபெற்ற திட்டமிடலாளருக்குரிய ஆளணி உருவாக்கப்பட்டு, நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.



யாழ்ப்பாணம் மாவட்டம் முழுமைக்குமான பிரதான வடி காலமைப்பு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

13. வீதி விளக்குகள் பொருத்துவது தொடர்பில் மினசார சபைக் கும் பிரதேச சபைகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் உடனடியாக தீர்த்து வைக்கப்பட வேண்டும்.

14. நெடுந்தீவுக்கான கடல்வழிப் போக்குவரத்தில் ஈடுபடுத்தப் படும் படகுச் சேவைகள் கடற்படையினரிடமிருந்து மீளப்பெற்று வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட வேண்டும்.

15. வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இயக்கப்பட்டுவந்த குறிகாட்டுவான் - நயினாதீவுக்கான போக்குவரத்துப் பாதை பழு தடைந்த நிலையில் ஒரு வருடமாகத் திருத்தப்படாமல் உள்ளது. அது உடனடியாக திருத்தப்பட வேண்டும்.

நயினாதீவு தெற்குப் பகுதியில் அமைந்துள்ள இறங்குதுறை பழு தடைந்த நிலையில் நீண்டகாலமாக அங்கு போக்குவரத்து இடம்பெறுவதில்லை. அந்த இறங்குதுறை திருத்தி அமைக் கப்பட வேண்டும்.

16. குறிகாட்டுவான் இறங்குதுறை உடனடியாக விஸ்தரிக்கப்பட வேண்டும்.

குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து புங்குடுதீவு நோக்கிச் செல்லும் வீதி சுமார் 5 கிலோ மீற்றர் குன்றுங்குழியுமாக உள்ளது. உடனடியாக திருத்தப்பட வேண்டும்.

17. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு நிரந்தர மாகாண கல்விப் பணிப்பாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

18. வடக்கு மாகாணத்தில் SLEAS அதிகாரிகளுக்கான பற் றாக்குறை 50 வீதத்துக்கு மேல் காணப்படுகிறது. இவ்வெற் றிடங்களை உடனடியாக நிரப்பும் வகையில் பிரமாணங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

19. வடக்கு மாகாணத்தில் 3555 ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன. அவற்றை நிவர்த்தி செய்வதற்கு உடனடியாக நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

20. வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக் கான ஆளணி வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும்

இவ்வாறான கோரிக்கைகளை பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவிடம் சமர்ப்பித்தார்.

# தையிட்டி விகாரை காணி விவகாரம் குறித்து ஆளுனரின் கருத்தை ஏற்க முடியாது

## பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

01.02.2025

சட்டவிரோதமான முறையில் கட்டப்பட்ட தையிட்டி விகாரை காணிக்கு பதிலாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாற்றுக்காணி வழங்கும் ஆளனரின் கருத்தை ஏற்க முடியாது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஜனாதிபதி முன்னிலையில் ஏற்க முடியாது என தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை (31) ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒருங்கிணைப்பு குழுவு விடயதானங்களில் தையிட்டி விகாரை தொடர்பான விடயம் பேசப்பட்டது.

இதன்போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம் பலம் தமிழ் சிங்கள மக்களின் இன ஒற்றுமையை இந்த அரசாங்கம் எடுத்துக்காட்ட விரும்பினால் ஆரம்ப புள்ளியாக தையிட்டி சட்டவிரோத விகாரையை அகற்ற வேண்டும்

இந்த விகாரை தனியார் மக்களுடைய காணிகளில் அடாத்தாக கட்டப்பட்ட ஒரு விகாரை. இந்த விவகாரம் தொடர்பில் பிரதேச செயலாளர் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கு விவரம் வழங்கி யுள்ளார்.

தற்போது மாற்றம் என்ற போர்வையில் ஆட்சிக்கு வந்த நீங்கள் தமிழ் சிங்கள உறவை இனவாதம் இல்லாமல் நோக்குகிறீர்கள் என்றால் சட்ட விரோதமாக கட்டப்பட்ட விகாரையை அகற் றுங்கள் என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி, அது தொடர்பில் ஆராய்வோம் என கூறிய நிலையில் வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் குறித்த விகாரை அமைந்துள்ள கணிகளின் சொந்தக்காரர்களுடன் கலந்துரையாடி வருகி றோம்.

அவர்கள் மாற்றுக்காணியை வாங்குவதற்கு சம்மதம் தெரிவித் துள்ள நிலையில் அது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம் என்றார்.

இதன்போது குறிப்பீடு செய்த பாராளுமன்ற உறுப்பினர் கஜேந் திரகுமார் பொன்னம்பலம் ஆளுநரின் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

வேண்டுமென்றே தனியார் காணிகளில் விகாரையை கட்டி விட்டு மக்களுக்கு மாற்றுக்காணியை வழங்குவதாக் கூறு வதை ஏற்க முடியாது மக்களும் அதனை எதிர்பார்க்கவில்லை.

நாங்கள் மக்களுடன் போராடி வருகிறோம் மக்கள் அவ்வாறு காணியை கேட்கவில்லை ஆளுநரின் கருத்தை ஏற்க முடியாது என்றார்.

# முல்லைத்தீவில் அரச இயந்திரங்களால் அத்துமீறித் தொடரும் காணி அபகரிப்பு

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

16.01.2025

முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினர், வனஇலாகா, வன ஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட அரச கட்டமைப்புக்கள் மக்களுக்குரிய காணிகளை தொடர்ந்தும் அத்துமீறி அபகரிப்புச் செய்வதால், மக்கள் குடியிருப்பதற்கே காணிகள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.



இவ்வாறு அரச இயந்திரங்கள் தொடர்ந்தும் மக்களின் காணிகளை ஆக்கிரமிப்புச்செய்தால் மக்கள் வீதிகளிலா குடியிருப்பது எனவும் அவர் இதன்போது கேள்வி எழுப்பியுள்ளார். முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் 03.02.2025 இன்று இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் துணுக்காய் பிரதேசசெயலர் பிரிவில் 255 குடம்பங்களுக்கு குடியிருப்பதற்கு காணியில்லை என முறையிடப்பட்டது. இந் நிலையில் கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், துணுக்காய் பிரதேசசெயலர் பிரிவில் ஐயங்கன்குளத்தில் 21 குடும்பங்களுக்கு, பழையமுறிகண்டியில் 04 குடும்பங்ளுக்கும், புதுத்துவெட்டுவான் பகுதியில் 12 குடும்பங்களுக்கும், கல்விளான் பகுதியில் 15 குடும்பங்களுக்கும், தென்னியன்குளம் பகுதியில் 05 குடும்பங்களுக்கும், கோட்டைகட்டியகுளம் பகுதியில் 05 குடும்பங்களுக்கும், அம்பலப்பெருமாள் குளம் பகுதியில் 05 குடும்பங்களுக்கும், அமதிபுரம் பகுதியில் 07 குடம்பங்களுக்கும், துணுக்காய் பகுதியில் 08 குடும்பங்களுக்குமாக மொத்தம் 255குடும்பங்கள் துணுக்காய் பிரதேசசெயலர் பிரிவிலே காணியற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

இந் நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் படையினராலும், வனஇலாகா, வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட அரச இயந்திரங்களால் மக்களினுடைய காணிகள் அதிகளவில் அபகரிக்கப்பட்டிருப்பதற்கான புள்ளிவிபரங்கள் எம்மிடமுள்ளன.

இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ள இந்த காணிகள் மீட்கப்பட்டு இவ்வாறு வலிந்து காணிகள் இல்லாமல் செய்யப்பட்ட மக்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். குறிப்பாக வன இலாகா மக்களிடமோ, கிராமஅலுவலர், பிரதேசசெயலாளர், மாவட்டசெயலர் எவருடனும் தொடர்புகொள்ளாமல், அறிவித்தல் வழுங்கப்படாமலேயே இவ்வாறு மகாகளின் காணிகளில் எல்லைக்கற்கள் இடுகின்ற செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர்.

இனி இவ்வாறான செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும். எமது வன்னிப் பகுதிகளில் நீண்டகாலமாக்இடம்பெற்ற யுத்தம் காரணமாக தமது பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள், நீண்ட காத்திற்குப் பின்னரே தமது இடங்களில் மீளக்குடியேறியுள்ளனர்.

இந் நிலையில் அந்த மக்கள் இடப்பெயர்விற்கு முன்னர் வாழ்ந்த குடியிருப்புக் காணிகள், நெற்செய்கைக்காணிகள், மேட்டுப் பயிர்ச்செய்கைக் காணிகள் உள்ளிட்ட அனைத்துக் காணிகளும் பற்றைக் காடுகளாகக் காணப்படுகின்றன. இவ்வாறு பற்றைக்காடுகளாகக் காணப்படும் மக்களின் காணிகளையே வன இலாகா, வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட அரசதிணைக்களங்கள் எந்த அறிவிப்புக்களையும் செய்யாது தமது எல்லைக்கற்களை இட்டு ஆக்கிரமிப்புச்செய்கின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர். இவ்வாறு மக்களின் காணிகளை ஆக்கிரமிப்புச்செய்கின்ற திணைக்களங்களைச் சார்ந்தவர்கள் இவ்வாறான பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்



புக்குழுக் கூட்டங்களுக்கு வருவதில்லை. இந்த அபகரிப்பாளர்கள் இந்த கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டும். இவ்வாறானவர்களின் செயற்பாடுளை மிக வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இவ்வாறான அபகரிப்புச் செயற்பாடுகள் முல்லைத்தீவு மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றன. எனவே இந்த இந்தவிடயத்திற்கு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் முறையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ஏன் எனில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009 இற்கு முன்னர் வனவளத் திணைக்களத்திடம் 2,22006 ஏக்கர், 2009 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அடாவடித்தனமாக எமது மக்களின் காணிகளுக்கும் எல்லைக்கல்லிட்டு 4,35000 ஏக்கர் காணிகள் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ளது.

அந்தவகையில் 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் எமது மக்களின் காணிகளை விடுதலைப் புலிகள் பாதுகாத்தனர். அவ்வாறு எமது மக்களின் காணிகளை விடுதலைப்புலிகள் பாதுகாத்ததால்தான் எமது மக்கள் நிறைவாகவும், சிறப்பாகவும் வாழ்ந்தார்கள். நிலம்தான் எமது உரிமை, நிலம் இல்லையேல் எதுவுமில்லை. அவ்வாறிருக்க எமது மக்களின் காணிகள் அனைத்தையும் அபகரிப்புச்செய்தால், எமது மக்கள் காணியின்றி தெருவிலா இருப்பது எனவும் கேள்வி எழுப்பினார்.

# மட்டக்களப்பில் சட்டவிரோத மின்சார வேலி குடும்பஸ்தர் பலி: மற்றொருவர் காயம்

03.02.2025

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள பன்சேனை கிராமத்தில் யானை பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்த மின்சார கம்பியில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழுந்ததுடன் மற்றொருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் இன்று திங்கட்கிழமை (03) இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் முதலைக்குடாவில் வசிக்கும் 39 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஆவார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் கொக்கட்டிச்சோலை காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதியில் கிராம உத்தியோகத்தரால் கடந்த மார்கழி மாதப் பகுதியில் ஒலிபெருக்கி மூலமும் கிராம கூட்டங்கள் ஊடாகவும் காட்டு யானை பாதுகாப்புக்காக சட்டவிரோத மின்சார வேலி



யினை அமைக்க வேண்டாம் என அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழில். 575 ஏக்கர் தனியார் காணியில் சிறீலங்கா இராணுவத்தினரின் முதலீட்டு நடவடிக்கைகள்

03.02.2025

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 575 ஏக்கர் தனியார் காணிகள், சிறீலங்கா இராணுவத்தினரின் முதலீட்டு நடவடிக்கைகளுக்காக இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்துள்ளதாக, மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ் . மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை மாவட்ட செயலகத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற போது, மீள் குடியேற்றம் மற்றும் காணி விடுவிப்பு தொடர்பிலான விடயம் கலந்துரையாடப்பட்ட போதே அவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1775.27 ஏக்கர் காணி இராணுவத்தினரிடமும் , 160.67 ஏக்கர் காணி , கடற்படையினரிடமும் , 660.05 ஏக்கர் காணி விமான படையினரிடமும் , 28.28 ஏக்கர் காணி பொலிஸ் திணைக்களத்திடமும் காணப்படுகின்றன.

இவ்வாறாக யாழ் . மாவட்டத்தில் 2ஆயிரத்து 642.29 ஏக்கர் தனியார் காணிகள் முப்படையினர் மற்றும் பொலிசாரின் வசம் உள்ளன என தெரிவிக்கப்பட்டது.



# முல்லை. துவரங்குளம் வயல்காணி விடுவிப்பில் நீதிமன்றக்கட்டளை நடைமுறைப்படுத்தப்படவில்லை

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

03.02.2025

முல்லைத்தீவு – மாந்தைகிழக்கு பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட துவரங்குளம் மற்றும், அக்குளத்தின் கீழான வயல் நிலங்களையும் மக்களிடம் கையளிக்கும் விடயத்தில் நீதிமன்றம் உத்தரவு நடைமுறைப்படுத்தப்படவில்லை என வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு பிரதேசசெயலகமும், வனவளத் திணைக்களமும் தமக்கிடையிலான பிணக்குகளைத் தீர்த்து மக்களுக் குரிய குறித்த குளத்தையும் குளத்தின் கீழான வயல் நிலங்களையும் அவர்களிடமே கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கு மாறும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

மாந்தைகிழக்குப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் திங்கட்கிழமை (03) இடம்பெற்ற நிலையில் குறித்த கூட்டத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினரால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

குறித்த துவரங்குளத்தின் கீழுள்ள வயல்காணிகளில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட 63 விவசாயிகளுக்கெதிராக கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் வனவளத்திணைக்களத்தினால் நீதிமன்றில் வழக்குத்தொடரப்பட்டது.

அந்தவகையில் மங்குளம் நீதிமன்றில் இடம்பெற்ற இந்த வழக்கில், துவரங்குளம் மற்றும், இக்குளத்தின் கீழான வயல் நிலங்கள் எமது மக்களுக்கு உரியவை எனச்சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து வனவளத் திணைக்களத்தினால் வழக்குத் தொடரப்பட்ட விவசாயிகள் விடுவிக்கப்பட்டதுடன், இந்தவிடயத்தில் பிரதேசசெயலகமும், வனவளத் திணைக்களமும் தமக்கிடையிலான பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ளுமாறும் நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது.

இருப்பினும் ஒருவருடங்களுக்கு மேலாகியுள்ளபோதிலும் இந்த விடயம் தொடர்பில் இருதரப்புக்களும் தமக்கிடையிலான பிணக்குகளைத் தீர்த்து வயல்காணிகளையும், குளத்தையும் மக்களிடம் கையளிக்க இதுவரை எவ்விந நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இந்தவிடயத்தில் நீதிமன்றத்தினுடைய கட்டளை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றே சொல்வேண்டியுள்ளது. மக்களுக்குரிய இந்த வயல்நிலங்களும், குளமும் அந்த மக்களிடமே கையளிக்கப்படவேண்டும். தற்போது புதிதாக பொறுப்பேற்றுள்ள இந்த அரசாங்கம் இந்த விடயத்தில் கூடுதல் கவனமெடுக்க




வேண்டுமெனத் தெரிவித்தார்.

இந் நிலையில் இந்தக்காணிகளை மக்களிடம் கையளிப்பதற்கு மேலதிக நடவடிக்கைக்காக இவ்விடயத்தை மாவட்ட அபிவிருத்திக்குழுவிற்கு சமர்ப்பிப்பதென இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் சுதந்திர நாளை முன்னிட்டு மட்டக்களப்பில் கரி நாள் கவனயீர்ப்புப் போராட்டம்

04.02.2025

இலங்கையின் 77வது சுதந்திர நாள் இன்று 04.02.2025 சிறீங்கா அரச தரப்பினால் கொண்டாடப்பட்டது.



ஆனால், பல்வேறு அழுத்தங்கள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இலங்கையின் தேசிய சுதந்திர தினத்தினை கரிநாளாக பிரகடனப்படுத்தி வடகிழக்கு மாகாண வலிந்து

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் இன்று (4) பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினால் மட்டக்களப்பு – செங்கலடி பகுதியில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் இன்று நடத்தப்பட்டது.






செங்கலடி சித்தி விநாயகர் ஆலயத்துக்கு முன்பாக இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தினர் இந்த போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

“இலங்கையின் சுதந்திர தினம் எங்களுக்கு கரிநாள்”, “நீங்கள் சுதந்திரம் அனுபவிக்கும்போது நாங்கள் ஒடுக்கப்படுவதா”, “உங்களுக்கு சுதந்திர நாள் எங்களுக்கு திண்டாட்ட நாள்”, “காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே”, “எமது மேய்ச்சல் தரை எமக்கு வேண்டும்”, “நிம்மதியில்லாத நாட்டில் சுதந்திரம் எதற்கு”, “சுதந்திரம் இல்லாத நாட்டில் சுதந்திர தினம் எதற்கு”, “எங்கே எங்கே உறவுகள் எங்கே” போன்ற பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

செங்கலடி சித்தி விநாயகர் ஆலயத்துக்கு முன்பாக ஆரம்பமான இப்பேரணி கொம்மாதுறை பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக சென்றடைந்து, அங்கும் போராட்டம் தொடர்ந்தது.

இந்த போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் மூன்று மாவட்ட தலைவிகள் மற்றும் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பாராளுமன்றக் குழு பேச்சாளருமான ஞா.சிறிநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இலங்கையின் தேசிய சுதந்திர தினத்தினை வடகிழக்கு தமிழர்கள் கரிநாளாக அனுஷ்டிக்கும் வகையில் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் மட்டக்களப்பு நகரில் இந்த போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்தினால் நீதிமன்றத்தின் ஊடாக தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில், இந்த போராட்டம் செங்கலடியில் நடத்தப்பட்டது.

கொம்மாதுறை பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டபோது சர்வதேச சமூகத்துக்கு அனுப்புவதற்கான மகஜர், அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி செல்வராணியினால் வாசிக்கப்பட்டு, வழங்கிவைக்கப்பட்டது.

இன்று காலை தொடக்கம் மூன்று மாவட்டங்களிலும் புலனாய்வாளர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் உறுப்பினர்களை அச்சுறுத்திய நிலையிலும் மக்கள் இந்த போராட்டத்தில் கலந்துகொண்டதாக மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி அ.அமலநாயகி தெரிவித்தார்.

எமது வீட்டுக்குள் இருந்து எமது உரிமையினையும் எமது ஜனநாயகத்தினையும் நிலைநாட்ட அனுமதிக்காத இந்த புதிய அரசாங்கம் முகமூடியுடன் தம்மை அடக்க நினைப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

எமது மக்களை அடக்கியாள நினைக்கும் இலங்கை அரசாங்கத்திடம் இருந்து தமிழ் மக்களுக்கான எந்த நீதியையும் உரிமையினையும் பெற்றுக்கொள்ளமுடியாது என்பதை சர்வதேச சமூகம் உணர்ந்து இந்த நாட்டின் ஆட்சியாளர்களை கருத்தில் கொண்டு தமிழ் மக்களுக்கான சர்வதேச சமூகம் உரிமையினையும் நீதியையும் பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும் எனவும் இங்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.





# யாழ். பல்கலைக்கழகத்தில் சிங்கக் கொடி இறக்கப்பட்டு கறுப்புக்கொடி ஏற்றப்பட்டு போராட்டம் முன்னெடுப்பு

04.02.2025

யாழ். பல்கலைக்கழக பிரதான கொடி கம்பத்தில் பறந்த சிங்கக் கொடி மாணவர்களால் இறக்கப்பட்டு கறுப்புக் கொடியேற்றப்பட்டு இன்றைய நாள் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

















77 ஆவது தேசிய சுதந்திர நாள் நாடளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டுவரும் நிலையில், யாழ். பல்கலைக்கழக பிரதான கொடி கம்பத்தில் பறந்த சிங்கக் கொடி மாணவர்களால் இறக்கப்பட்டு கறுப்புக் கொடியேற்றப்பட்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை பல்கலைகழக சூழலில் கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன.

# சுதந்திர தினத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நல்லூரில் போராட்டம்

04.02.2025

இலங்கையின் 77வது சுதந்திர தினத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று செவ்வாய்கிழமை (04) யாழ்ப்பாணத்தில் கறுப்புக்கொடி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.





நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரையான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் சிவகுரு ஆதீனத்தில் ஆதீன குரு முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

**உண்மையில் எமது மக்களின் பாரிய உயிரிழப்பிற்கும் அவர்களின் உடமை நாசத்திற்கும் சிங்கள ஆளும் வர்க்கத்தின் இனவெறி பிடித்த தலைவர்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# இலங்கை சுதந்திர நாள் ஈழத்தமிழர்களின் கரிநாள்: கிளிநொச்சியில் போராட்டம்

04.02.2025

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நீதி கோரி கிளிநொச்சியில் இன்று (4) போராட்டத்தில் ஈடுபட்டனர்.








சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினரின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணி கிளிநொச்சிச்சி பழைய கச்சேரி வரை முன்னெடுக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, இந்த போராட்டத்தில் சுதந்திர தின அறிக்கை வாசிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டதாவது:

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதி தமிழ் தேசத்தின் கரி நாள் என நாம் பிரகடனப்படுத்தியுள்ளோம். இத தீவின் வடக்கு கிழக்கை தாயகமாகக் கொண்ட தமிழ் தேசத்தை ஆக்கிரமித்திருந்த ஆங்கிலேயர் தாம் கொண்டிருந்த ஆக்கிரமிப்பு மேலாதிக்கத்தை இத்தீவின் பௌத்த சிங்கள தேசத்திடம்




தாரைவார்த்த நாளே கரி நாளாகும்.

1948ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்ட நாளிலிருந்து தமிழர்கள் தமது வாழ்வாதாரங்களை ஒவ்வொரு துறையிலும் இழக்கத் தொடங்கினர்.

1956இல் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்கள சட்டமூலம் நமது மொழி, பண்பாட்டுப் படுகொலையின் தொடக்கமாகும்.

1958ஆம் ஆண்டும் அதன் பின்னரும் நடைபெற்ற திட்டமிடப்பட்ட இனக் கலவரமும் இனப்படுகொலையும் 1970இலும் அதன் பின்பும் தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக தரப்படுத்தலின் ஊடாக தமிழர்கள் பல்கலைக்கழக கல்வி பெறுவது தடுக்கப்பட்டது.

1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட குடியரசு யாப்பின் மூலம் இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது.




1981ஆம் ஆண்டு இலங்கை ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான சிங்கள அரசின் அமைச்சர்களான காமினி திசாநாயக்க ஸ்ரீல் மத்தியூ முதலியோர் தலைமையிலான குழுவினரும் அவர்களுடன் இராணுவமும்



பொலிஸூம் முன்னின்று யாழ்ப்பாண பொது நூலகத்தை எரித்தமை இன்னொரு இன அழிப்பின் உச்சத்தை காட்டியது.

இலங்கையை ஆண்டு வந்த பல்வேறு சிங்கள அதிபர்களால் தொடர்ந்து பல்வேறுபட்ட வழிகளில் திட்டமிட்டு நடாத்தப்படுகின்ற இனப்படுகொலைகளில் நாகர்கோவில் விமான குண்டு தாக்குதல், நவாலி சென் பீட்டர் தேவாலய தாக்குதல், நூற்றுக் கணக்கான செம்மணி புதைகுழிகள் போன்ற இனப்படுகொலைகள், இனப்படுகொலைகளின் சாட்சி பகிரும். தொடர்ச்சியாக அதேபோல் கடந்த சில தசாப்தங்களாக சிங்கள இராணுவத்தால் தொடர்ந்து நடாத்தப்பட்ட கொலை, கற்பழிப்பு, சித்திரவதை, வலிந்து காணாமல் ஆக்கப்படுத்தல் ஆகியவும் ஒரு சாதாரண நாளாந்த நிகழ்வுகளாயின.




இப்படியே இன்னும் பட்டியல் நீண்டு சென்று 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பேரவலம் வரை நிகழ்ந்தது. இன்று வரை எந்த நீதியும் இன்றி உள்நாட்டுப் பொறிமுறையால் திட்டமிடப்பட்ட இனப்படுகொலைக்கு நீதி கிடைக்காமல் நாம் சர்வதேச நீதி பொறிமுறையை வேண்டி போராடிக் கொண்டிருக்கிறோம்.

இக்கரி நாளில் பின்வரும் விடயங்களை நாம் வலியுறுத்துகிறோம்.

1. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதி வேண்டும்.

2. தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

3. பௌத்தமயமாக்கல் உடனே நிறுத்தப்பட வேண்டும்.

4. தமிழர் தாயக பிரதேசத்தில் தொடர்ச்சியாக நடந்துவரும் நில அபகரிப்பு உடனே நிறுத்தப்பட வேண்டும்.

5. தாயக வளத்தை அபகரிப்பது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

6. தமிழர் தாயக பிரதேசத்தில் இருந்து இராணுவம் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும்.

7. தமிழின படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணை வேண்டும்.

8. சிவில் செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்துதல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

9. ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவது நிறுத்தப்பட வேண்டும்.

10 எமது நிலம் எமக்கு வேண்டும்.

11. தாயகம், தேசியம், அரசியல் சுயநிர்ணயம் என்பன எமது உரிமைகள். அவற்றை உடனே அங்கீகரிக்க வேண்டும்.

12. வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும்.

13 சர்வதேசம் வட்டுக்கோட்டை தீர்மானத்தை அங்கீகரிக்க வேண்டும்.

14 எமது தலைவிதியை நாமே தீர்மானிக்க சர்வதேச நியமங்களுக்கு அமைய எமது தாயக பிரதேசத்தில் பொது வாக்கெடுப்பு நடத்துமாறு சர்வதேசத்தை கோருகிறோம்.

இப்போது பொறுப்பேற்று இருக்கின்ற அரசு கிளீன் ஸ்ரீலங்கா என கூறிக்கொண்டு எமது நிரந்தர அரசியல் தீர்வினை தருவதில் எந்த அக்கறையும் காட்டாமல் இருந்துகொண்டு அடுத்தடுத்து வருகின்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அரசை மேலும் மேலும் பலப்படுத்துவதில் இலக்காக இருப்பதுடன் எமது



நிரந்தர அரசியல் தீர்வினை தராமல் இருந்துகொண்டு ஒற்றை ஆட்சியை பலப்படுத்துவதிலேயே க்ளீனாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே இவர்களிடம் இருந்து எந்த நீதியும் நிரந்தர அரசியல் தீர்வும் கிடைக்காது. சர்வதேசமே தலையிட்டு மேற்குறிப்பிட்ட 14 விடயங்களையும் நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என இக்கரி நாளில் பிரகடனப்படுத்துகிறோம் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

இப்போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், சிவாஜிலிங்கம் முதலான அரசியல் பிரமுகர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

# யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கரிநாள் போராட்டத்தில் பிரகடன அறிக்கை வாசிப்பு

04.02.2025

இலங்கையின் சுதந்திர தினத்தினை கரி நாளாக அனுஷ்டித்து, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் பல்கலைக்கழக மாணவர்களால் இன்று (4) பல்கலைக்கழக முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதோடு, பிரகடனமும் வாசிக்கப்பட்டது.

அந்த பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எங்கள் தாய்நிலம் விடிவுறும் நாளே, தமிழர் எமக்கு சுதந்திர நாள்!

ஈழத் தமிழர்களாகிய நாம் மரபு வழி தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமைக்கு உரித்துடைய ஒரு தேசிய இனம் என்பதை மீண்டும் உலகுக்கு பிரகடனப்படுத்துகிறோம்.

வட்டுக்கோட்டைத் தீர்மானம், திம்பு கோட்பாடு, பொங்கு தமிழ் பிரகடனம் என்பவற்றின் ஊடாக வரலாற்றில் தமிழ் மக்களின் அபிலாசைகள் கூட்டாக பல முறை வெளிப்படுத்தப்பட்ட போதிலும், ஈழத் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய நிரந்தர அரசியல் தீர்வினை காண்பதற்காக மீண்டும் ஒரு தடவை எமது ஏகோபித்த வெளிப்படுத்தலை வலியுறுத்திக் கூற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் நாங்கள் இங்கு திரண்டுள்ளோம்.

தமிழ், சிங்கள தனித்தனி அரசுகளைக் கொண்டிருந்த இலங்கைத் தீவு காலனித்துவ ஆட்சியாளர்களின் நிர்வாகத் தேவையின் நிமிர்த்தம் இணைக்கப்பட்டது என்ற வரலாற்று உண்மையை முதலில் சிங்கள தேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வரலாற்று நிகழ்வுகளை முற்றாக புறந்தள்ளி எண்ணிக்கையில் பெரும்பான்மை அடிப்படையில் முழு நாட்டினதும் அதிகாரங்கள் சிங்கள தேசத்திடம் கையளிக்கப்பட்டமை என்பது ஈழத் தமிழினம் மீது தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைகளுக்கே வழிகோலியது என்பதோடு, சிறீலங்காவின் மாறி மாறி வரும் அரசுகள் அனைத்துமே தமிழ் மக்களிடையே எழும் போராட்டங்கள் மற்றும் உரிமைக்கான குரல்களை இராணுவ பலம் கொண்டு நசுக்குவதிலும், சிங்கள வன்முறைக் கும்பல்களின் வெறியாட்டத்துக்கு அனுமதிப்பத்திரம் அளிப்பதிலுமே நம்பிக்கை கொண்டிருக்கிறது. அதில் தற்போதைய தேசிய மக்கள் சக்தி முலாமிட்டுள்ள தேசிய மக்கள் சக்தி அரசும் விதிவிலக்கல்ல!

சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனியான சுதந்திர தமிழின அரசை அமைப்பதற்கான வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு 1977ஆம் ஆண்டு மக்கள் மகத்தான ஆணையை வழங்கி தங்கள் சுதந்திர வேட்கையை வெளிப்படுத்தியிருந்ததோடு, 1985ஆம் ஆண்டு திம்புப் பேச்சுவார்த்தையில் தமிழர்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டமையும் தீர்வுக்கான வழிகளில் முன்னேற்றம் காணப்படாமையின் விளைவாகவே தமிழரிடம் ஆயுதப் போராட்டம் கருக்கொண்டது என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

தமிழர் மீதான திட்டமிட்ட இனப்படுகொலைகளை கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்களின் துணையோடு தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட, நிகழ்த்தப்பட்டுக்கொண்டிருக்கிற கட்டமைக்கப்பட்ட படுகொலைகள், 2009ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அதியுயர் இன அழிப்பு படுகொலைகள் உட்பட மனித படுகொலைகள், நிலங்களை கையகப்படுத்துதல், பாலியல் வன்முறைகள், பண்பாட்டு மற்றும் பொருளாதார கட்டுமானங்களை அழித்தல் போன்ற வன்முறைகள் மூலம் தமிழ் மக்களுடைய தேசத்துக்கான தகுதிப்பாட்டை தாங்கி நிற்கும் அனைத்து விழுமியங்களும் அழித்தொழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என ஏற்றுக்கொள்ளப்படாமல், தமிழர் தேசம், சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்படாமல் தமிழ் மக்களின் இறைமை இந்த நிலத்தில் உறுதி செய்யப்படமாட்டாது. சிறீலங்காவுக்கு வழங்கப்பட்ட சுதந்திரம் என்பது தமிழ் மக்களை ஒடுக்குவதற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமே



தமிழர் தேசத்தின் கறுப்பு நாள் பிரகடனம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - 04.02.2025

ஆகும். பெறப்பட்ட சுதந்திரத்தின் இறைமை தமிழ் மக்களுடன் பகிரப்பட்டதாகக் கொள்ள முடியாது.

தமிழ் மக்களுக்கான தீர்வு முயற்சிகள் யாவும் திம்புக் கோட்பாட்டினை அடியொற்றியே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதோடு, தமிழ் மக்களின் அபிலாசைகளை சிறீலங்காவின் ஒற்றையாட்சி அரசியலமைப்பின் பதின்மூன்றாம் (13ஆம்) திருத்தம் மற்றும் ஏக்கிய ராஜ்ஜிய சதிக் கோட்பாடுகளினுள் தமிழர் தேசத்தின் இறைமைக்கான அரசியலை முடக்க எத்தனிக்கும் அனைத்து முயற்சிகளையும் முற்றாக நிராகரிப்பதோடு, தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வாக தமிழர்களை ஒரு தனித்த இறைமையுள்ள தேசமாக அவர்களின் பாரதீனப்படுத்தப்பட முடியாத சுயநிர்ணய உரிமை அங்கீகரிப்பது மட்டுமே மேலே குறிப்பிட்ட அனைத்து ஒடுக்குமுறைகளும் மீள நிகழாது இருப்பதை உறுதி செய்யும் என்பதை வலியுறுத்துகிறோம்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் பின்வரும் தமிழ் மக்களைச் சூழும் சதிக்கோட்பாடுகள் மற்றும் சமகால அடிப்படை சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டும் என்பதை குறிப்பிட்டுக்கொள்கிறோம்.

1. தமிழ் மக்களின் தீர்வு முயற்சிகளை சிறீலங்காவின் ஒற்றையாட்சி அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தினுள்ளும் ஏக்கிய ராஜ்ஜிய அரசியலமைப்பு சதிவலைக்குள்ளும் தமிழ் மக்களின் இறைமைக்கான அரசியலை முடக்குவதற்கு எத்தனிக்கும் அனைத்து முயற்சிகளும் முறியடிக்கப்பட வேண்டும்.

2. எமது உறவுகளை தேடும் உரிமை, கருத்துரிமை, பேச்சுரிமை, வளங்களை அனுபவிக்கும் உரிமை, நீதி கோரும் உரிமை என்பன பயங்கரவாத தடைச் சட்டம், நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் உள்ளிட்டவற்றை முன்னரே சிறீலங்காவின் நடப்பு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னரே வாக்களித்தது போன்று இவற்றை மீளப்பெற முன்வர வேண்டும்.

3. தொல்பொருள் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், வனவள பாதுகாப்பு திணைக்களம், மகாவலி அபிவிருத்தித் திணைக்களம் என்னும் போர்வையில் மேற்கொள்ளப்படும் அனைத்து வகையான நில அபகரிப்புத் திட்டங்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்பதோடு, ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் உரியவர்களிடம் மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. தேசிய மக்கள் சக்தியினால் தேர்தல் காலங்களில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைவாக, தமிழர் தாயகத்தின் நில ஒருமைப்பாட்டை சிதைக்கும் நோக்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து சிங்கள குடியேற்றங்களும் அகற்றப்பட வேண்டும்.

5. விடுவிக்கப்படாது எஞ்சியுள்ள ஏனைய தமிழ் அரசியல் கைதிகளும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும்.

6. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பான அனைத்துலக விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதுடன் அவர்களுக்கு அனைத்துலக நீதி வழங்கப்படுவதோடு குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

7. வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழ் இளையோர்கள் கூட்டாக சிந்திப்பதைத் தடுத்து உளவியல் ரீதியாக சிதறடிக்கும் நோக்கம் கொண்டு அரச படைகளின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் விநியோகம் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

8. பிராந்திய - பண்பாட்டுப் பல்கலைக்கழகங்களாக விளங்கும் எமது யாழ்ப்பாண, கிழக்கு, வவுனியா பல்கலைக்கழகங்கள் பிராந்தியம் சார் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களை மையமாகக் கொண்டு செயற்படுவதையும் தமிழ் மாணவர்களின் கல்வி மற்றும் கல்வி சாரா செயற்பாடுகளில் அவர்களது வாய்ப்புக்களின் இருத்தலையும் உறுதி செய்ய வேண்டும்.

9. காலகாலமாக நடைபெற்று வரும் தமிழின அழிப்புக்கு அனைத்துலக நீதி பொறிமுறை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் (ICC), அனைத்துலக நீதிமன்றம் (ICJ) ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிகார நீதி வழங்கப்பட வேண்டும். அத்துடன் ஐக்கிய நாடுகள் அவையில் சிறப்பாக உருவாக்கப்பட்ட தீர்ப்பாயத்தின் பொறிமுறைகளும் அனுமதிக்கப்பட வேண்டும்.

10. தமிழினப் படுகொலையை நிகழ்த்தி தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து தொடர்ந்தும் உரிமை மீறல்கள், சமூக விரோதச் செயல்களுக்கு பாதுகாப்பாக உள்ள இராணுவத்தினர் தமிழர் தாயகத்திலிருந்து வெளியேறுவதுடன், மக்களின் செயற்பாடுகளில் தலையிடுவதையும் முற்றாக நிறுத்த வேண்டும்.

இலங்கையில் நிலையான அமைதி ஏற்படுவதற்கு ஈழத்தமிழர்களின் தேசிய இன பிரச்சினையில் மரபு வழித் தாயகம், தமிழ்த் தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் எட்டப்படும் எந்தவொரு அரசியல் தீர்வும் அனைத்துலக சமூகத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டு கண்காணிக்கப்படும் பொது வாக்கெடுப்பின் மூலம் தமிழ் மக்களின் ஆணை பெறப்பட வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும்.

அத்துடன் ஈழத் தமிழர்களின் தலைவிதியை ஈழத் தமிழர்களே தீர்மானித்து, எம்மை நாமே ஆளக்கூடிய நிரந்தர தீர்வும் பொது வாக்கெடுப்பில் உள்வாங்கப்பட வேண்டும் என்பதை தமிழ் மக்கள் சார்பாக இந்த பிரகடனத்தின் ஊடாக உலகுக்கு அறிவிக்கின்றோம் என்றுள்ளது.

**எமது மொழியில், எமது கலைகளில், எமது பண்பாட்டில், எமது மண்ணில் நாம் கொள்ளும் பாசமும் நேசமும் தேசியப் பற்றுணர்வாகப் பரிணாமம் பெறுகின்றன.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

# இராணுவ ஆக்கிரமிப்பில் கிளிநொச்சி மகா வித்தியாலயப் பாதை

05.02.2025

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்துக்குச் செல்லும் பாதையினை இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்துள்ளமையால் 50 மீற்றர் தொலைவில் உள்ள மைதானத்துக்கு மாணவர்கள் ஒரு கிலோ மீற்றர் பயணம் செய்கின்றமை தொடர்பில் இலங்கை இராணுவத் தளபதிக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய அலுவலகம் விளக்கம் கோரி கடிதம் அனுப்பியுள்ளது.

பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியினை அடிப்படையாக கொண்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி. கனராஜ் இன்று (5) இக் கடிதத்தை எழுதியுள்ளார்.

கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவர்கள் 50 மீற்றர் தூரத்தில் உள்ள தங்களுடைய பாடசாலை மைதானத்துக்கு தினமும் ஒரு கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்று வருகின்றனர். அதுவொரு ஆபத்தான பயணமாக காணப்படுகிறது என்பதனை சுட்டிக்காட்டிய மனித உரிமைகள் ஆணைக்குழு இது தொடர்பில் இராணுவம் 11.02.2025க்கு முன்னர் தன்னுடைய நிலைப்பாட்டை தெரிவிக்குமாறும் கோரியுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் கல்வி அமைச்சின் செயலாளர், வட மாகாண ஆளுநர், கிளிநொச்சி படைகளின் கட்டளை அதிகாரி ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.




# முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்களின் காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்

## வன்ன மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

05.02.2025

வடக்கு கிழக்கில் தமிழ் மக்களுக்குச்சொந்தமான தெங்குப் பயிற்செய்கைக் காணிகள் உட்பட, பல காணிகளை அரச படைகள் அபகரித்துவைத்துக்கொண்டு இந்த நாட்டின் தேங்காய் ஏற்றுமதிக்குத் தடையாக இந்த நாட்டின் அரசபடைகளே காணப்படுவதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாராளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது முல்லைத்தீவு கேப்பாப்புலவில் இராணுவத்தினர் அபகரித்துள்ள மக்களின் பூர்வீகக் காணிகளில் அதிகளவு தெங்குப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதையும், அக் காணிகளின் முக்கியத்துவத்தையும் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் குறித்த காணிகள் இராணுவத்தின் பிடியிலிருந்து உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றில் 05.02.2025இன்று இடம்பெற்ற ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான விவாதத்திலே நான் குறிப்பட விரும்புவது என்னவெனில், தேங்காய் ஏற்றுமதிசெய்வதற்கு இடையூறுகள் காணப்படுகின்றன. குறிப்பாக வடக்கு கிழக்கில் மக்களுக்குச்சொந்தமான காணிகளை படையினர் இன்னமும் விடுவிப்புச் செய்யப்படவில்லை.

புதிய ஆட்சியின்பின்னர் வடக்கு கிழக்கில் ஒருசில இராணுவ முகாம்கள் விடுவிக்கப்பட்டதாக கூறப்பட்டபோதிலும் இன்றளவில் பலநூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள், மக்களின் வாழ்வாதார நிலங்கள் படையினரின் வசமே உள்ளது.

பூர்வீக நிலங்களை இழந்து அகதிகளாக இடைத்தங்கல் முகாம்களிலும், உறவினர்களின் அரவணைப்பிலுமே இவர்களின் வாழ்க்கை கழிகின்றது.

போர் மௌனித்து பதினைந்தாண்டுகள் ஆகியும்கூட இன்னமும் அகதிகளாக நாட்டின் குடிமக்கள், தமிழ் மக்கள் வாழும் அவலநிலையை எண்ணிப்பாருங்கள். தமிழர்களை அவர்களின் வாழிடங்களிலேயே வாழவிடுங்கள்.

இவற்றில் ஒன்றாக முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேசசெயலர் பிரிவில் கேப்பாபிலவு, புலக்குடியிருப்பு மக்களின் அவலநிலை இன்னும் தீர்ந்தபாடில்லை. அதிலிருந்து மீண்டவர்கள் சிலர். இன்னும் 54குடும்பங்கள் தங்களைத் தங்களுடைய பூர்வீக இடத்தில் குடியமர்த்தமாட்டார்களா என்ற ஏக்கத்தோடு இடைத்தங்கல் முகாம்களிலிருந்து பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

தங்களுடைய சொந்த இடத்தில் இருந்தபோது எந்தக்குறையும் தங்களுக்கு இல்லை. வளமானபூமி, ஒருபக்கம் ஆறு அதனால் மீன், இறாலுக்கு பஞ்சமில்லை. தங்களுடைய காணியில் குடியிருப்பு நிலம் தவிர்ந்த மிகுதி நிலத்தில் காலங்களுக்கேற்ப பயன்தரக்கூடிய தோட்டச்செய்கை, வயல்கள், இதுதவிர தென்னைகள் தாராளமாக ஒவ்வொரு காணிகளிலும் உண்டு, இன்றைய தேங்காயின்விலை மிகமிக அதிகம். எண்ணிப் பாருங்கள் மக்கள் எவ்வளவு வேதனைப்படுவார்கள்.



இப்படி சகலவிதத்திலும் தங்களின் பூர்வீக காணிகளில் பயன்பெற்று வாழ்வாதாரத்தை ஈடுசெய்துவாழ்ந்துவந்த குடம்பங்கள், தற்போது மிகவும் நொந்துபோயுள்ளார்கள். நான் ஏற்கனவே குறிப்பிட்ட 54குடும்பங்களின் 55ஏக்கர் நிலம் விடுபடாமல் இராணுவம் அபகரித்துவைத்துள்ளது. இதில் சில காணிகள் பலத்த நிலமீட்புப் போராட்டங்களின்பின்புதான் இராணுவத்தால் விடுவிக்கப்பட்டன.

அதேபோல அந்த மக்களின் பிரதிநிதியாகக் கேட்கின்றேன். 54குடும்பங்களின் காணிகளையும் விடுவிப்புச்செய்யுங்கள். பொறுப்பாக இருக்கும் அமைச்சுக்கள் இந்த மக்களின் காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்

# மன்னாரில் மேய்ச்சல் தரை இன்றி உயிரிழக்கும் கால்நடைகள்

06.02.2025

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மற்றும் நானாட்டான் பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் மேய்ச்சல் தரை பிரச்சினை நீண்ட நாட்களாக இருந்துவரும் நிலையில், அண்மைக் காலமாக மேய்ச்சல் தரை இன்றி அதிகளவான கால்நடைகள் உயிரிழந்து வருகின்றன.




குறிப்பாக மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நாயாற்றுவெளி பகுதியில் அதிகளவான கால்நடைகள் மேய்ச்சலுக்காக கொண்டு செல்லப்படுகின்ற நிலையில், சீரற்ற வானிலையுடனான அதிக பனி காரணமாக அதிகமான மாடுகள் உயிரிழக்கின்றன.

அதேவேளை, அதிகளவு மாடுகள் ஒரே பகுதிகளில் மேய்வதால் பட்டினியால் உடல் மெலிந்து இறந்துள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த உயிரிழப்புகளால் வாழ்வாதாரத்தை இழந்த கால்நடை மேய்ப்பாளர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

மன்னார் மாவட்ட செயலகத்தினால் மேய்ச்சல் தரைக்கு என பல வருடங்களுக்கு முன் ஒதுக்கப்பட்ட பல ஏக்கர் காணிகள் பல்வேறு அரச திணைக்களங்களினால் இதுவரை மேய்ச்சல் தரைக்கு விடுவிக்கப்படாதுள்ளது.




இதுபோன்ற சூழ்நிலையில் பொருத்தமற்ற இடங்களில் மேய்ச்சல் நடவடிக்கைகளுக்கு மாடுகளை கொண்டுசெல்வதால், அவை உயிரிழக்கின்ற அவலம் ஏற்பட்டுள்ளது.

**அசுர வேகத்தில் வளர்ந்துவரும் அறிவியலும் அதனால் எழுந்த புதிய உலகப் பார்வையும் மனிதனை ஒரு புதிய யுகத்திற்கு இன்று இட்டுச்செல்கிறன. இந்த அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப, காலமாற்றத்திற்கு ஏற்ப, சமூகப் பண்பாட்டுப் புறநிலைகளுக்கு ஏற்பச் சிந்தனை உலகமும் மாற்றங்களைச் சந்திக்கிறது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# ஊடகவியலாளர்கள் படுகொலைகள் மற்றும் தாக்குதல் சூத்திரதாரிகள் தண்டிக்கப்பட வேண்டும்

## யாழ். ஊடக அமையம்

06.02.2025

இலங்கை தீவு முழுவதும் கடந்த காலங்களில் கட்டவிழ்த்து விடப்பட்ட ஊடக படுகொலைகள் மற்றும் தாக்குதல் சூத்திர தாரிகள் தயவு தாட்சணியமின்றி சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டுமென யாழ்.ஊடக அமையம் வெளியிட் டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் ஊடகவியலாளர்கள் மீது கொலைகளும் வன்முறை ளும் கட்டவிழ்த்து விடப்பட்ட போது திருட்டு மௌனம் காத் திருந்த ஆட்சியாளர்கள் தற்போது லசந்த விக்ரமதுங்கவின் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவரை விடுதலை செய்வதற்கு சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கி யுள்ள போதும் அதே மௌனத்தை பேணப்போகின்றார்களா வென்ற கேள்வி எழுகின்றது.

கடந்த நெருக்கடி மிக்க காலப்பகுதிகளில் வடகிழக்கில் கொழும் பில் என 39 தமிழ் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டோ காணாமல் ஆக்கப்பட்டோ உள்ளனர்.

அவர்கள் தொடர்பிலான அனைத்து வழக்குகளும் முன்னைய காலங்களில் சட்டமா அதிபர்களது ஆலோசனைகளின் பிரகாரம் அவ்வவ் மாவட்ட நீதிமன்றங்களில் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் மாமனிதர் தராகி சிவராம் முதல் மயில் வாகனம் நிமலராஜன் வரையாக கொலைகளை அரங்கேற்றிய கொலைகாரர்கள் சர்வசாதாரணமாக நாட்டை விட்டு வெளி யேறவும் திரும்பி வரவும் ஏற்றதொரு சட்ட ஆட்சியே இந்நாள் வரை பேணப்பட்டுவருகின்றது.

சட்டத்தின் முன்னதாக கொலைகாரர்கள் தண்டிக்கபடாத சூழல் வடகிழக்கில் மட்டுமன்றி இலங்கை முழுவதும் பின்னராக பரவி யிருந்தது.

இந்நிலையில் தற்போது ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை விவகாரத்தில் சாட்சியங்களை அழித்தமை மாற் றியமை தொடர்பில் கைதுசெய்யப்பட்டு கடந்த ஐந்து மாதங்க ளாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் பிரதி காவல்துறை மா அதிபர் பிரசன்ன நாணயக்கார, காவல்துறை பரிசோதகர் திஸ்ஸ சுகந்தபால இராணுவ புலனாய்வுப் பிரிவின் சார்ஜன்ட் மேஜர் உதலாகம ஆகியோரை முற்றாக வழக்கிலிருந்து விடுவிக்க சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இத்தகைய அறிக்கையினை விடுத்த சட்டமா அதிபர் பதவி விலகவேண்டும், லசந்த விக்கிரமதுங்க படுகொலை சந்தேக நபர்களை விடுதலை செய்வதன் பின்னால் உள்ள கார ணங்களை பகிரங்கப்படுத்த வேண்டும்.

ஏனெனில் கடந்த காலங்களில் தமிழ் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்ட போதும் காணாமல் ஆக்கப்பட்டபோதும் புதிய புதிய விளக்கங்களை அதே தரப்புக்கள் முன்வைத்திருந்தன.

இலங்கை தீவு முழுவதும் கடந்த காலங்களில் கட்டவிழ்த்து விடப்பட்ட ஊடக படுகொலைகள் மற்றும் தாக்குதல் சூத்திர தாரிகள் தயவு தாட்சணியமின்றி சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டுமென யாழ்.ஊடக அமையம் மீண்டும் வலியுறுத்துகின்றது.

இன மத வேறுபாடுகளிற்கு அப்பால் கருத்து வெளிப்பாட்டு சுதந் திரத்தை வலியுறுத்த அனைவருடனும் கைகோர்க்கும் யாழ். ஊடக அமையம் மீண்டுமொரு முறை சகோதர ஊடக கட் டமைப்புக்களுடன் போராடும் தனது நிலைப்பாட்டை மீள உறுதிப்படுத்தியும் கொள்கின்றது.

# 14 ஏக்கர் காணியும் தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு சொந்தமானது (?)

## அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம்

06.02.2025

யாழ்ப்பாணம், திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனை சூழவுள்ள 14 ஏக்கர் காணியும் விகாரைக்கு சொந்த மானது எனவும், அதனை யாருக்கும் கையளிக்க முடியாது என அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம் யாழ். மாவட்ட செயலருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

குறித்த கடிதத்தில்,

கடந்த டிசம்பர் மாதம் 13ஆம் திகதி நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், திஸ்ஸ விகாரை அமைந் துள்ள காணியை பொது மக்களுக்கு கையளிக்க இணைக்கப் பாடு எட்டப்பட்டுள்ளதாக அறிகிறோம்.

குறித்த கூட்டத்திற்கு, விகாரைக்கு பொறுப்பான விகாராதி பதியையோ, விகாரை நிர்வாகத்தினரையோ அழைத்திருக் கவில்லை எனவே அந்த இணைக்கப்பாட்டை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

விகாரை அமைக்கப்பட்டுள்ள 07 ஏக்கர் காணி, அதனை சூழவுள்ள காணி என 14 ஏக்கர் காணியையும் விகாரைக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாறாக விகாரைக்கு சொந்தமான காணிகளை பொது மக்க ளுக்கு வழங்க முடியாது.

விகாரைக்கு உரிய காணியில், பௌத்த சமய முன்னேற்றத் திற்கான சைத்யம், புத்த மெதுரா, போதி, அன்னதான மடம், மடாலயம் , ஓய்வு மண்டப வசதிகள், தியான மண்டபங்கள், பூங்கா போன்றவை அமைக்கப்பட வேண்டும் அதற்கு உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும் என அக்கடிதத் தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.



# பலாலி ஓடபாதையை விரிவாக்குவதற்காக ஒரு தலைப்பட்டசமாக காணிகளை அபகரிக்கக்கூடாது

## யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

07.02.2025

பலாலி ஓடுபாதையை விரிவாக்குவதற்காக ஒருதலைப்பட்டச மாக காணிகளை அபகரிக்கக் கூடாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்.மாவட்ட பாராளு மன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம் பலம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்,

ஓடுபாதையை விரிவுபடுத்துவதற்காக பலாலியில் மேலும் நிலத்தை அரசாங்கம் அபகரிக்கப் போவதாக தினக்குரல் பத் திரிகையில் தலைப்புச் செய்தியாக உள்ளது.

தற்போது பலாலி ஓடுபாதை 1,300 மீற்றராகவும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் 3,400 மீற்றராகவும் ரத்மலானை விமான ஓடுபாதை 1700 மீற்றராகவும் உள்ளது.

தற்போது உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள உள்ள பலாலி விமான நிலையத்திற்கான விமான ஓடுபாதையை மேலும் 2,400 மீற்றர் வரை நீடிக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது இரத்மலானை விமான ஓடுபாதையின் அளவை விட அதிகமானதாகும்.

அரசாங்கம் மேலும் காணிகளை அபகரிக்கும் நோக்கில் செயற் படுவதால் பலாலி பிரதேசத்தில் மீள்குடியேற்றுவதற்காக காத்தி ருக்கும் பலாலி மக்கள் பெரும் கொந்தளிப்பில் உள்ளனர்.

ஜனாதிபதி யாழ்ப்பாணம் சென்று அனைத்து காணிகளும் விடு விக்கப்படும் என்று கூறியிருந்தாலும், உயர்பாதுகாப்பு வலய மாக காணப்படும் பலாலி பகுதிக்குள் விமான ஓடு பாதை நீடிப்புக் காக மேலும் காணிகளை அபகரிக்க இந்த அரசாங்கம் சிந்திக் கின்றது.




இந்த விடயங்கள் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களில் கலந்துரையாடப்பட வேண்டும். யாழ்ப்பாண மாவட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி கருத்துக் களைக் கேட்டறிய வேண்டும். எங்களுக்கும் கருத்துகள் உள்ளன.



நீங்கள் உண்மையில் மிகவும் திறமையான சர்வதேச விமான நிலையத்தை உருவாக்கப் போகிறீர்கள் என்றால் உண்மை யில் யாழ்ப்பாணம் பொருத்தமற்ற இடமாகும். அது ஒரு மூலையில் உள்ளது. வன்னியில் எங்காவது கட்டலாம். வவுனியாவில் அல்லது அனுராதபுரத்தில் அமைக்கலாம், கிழக்கில் அமைக்கலாம். மத்திய பகுதி யொன்றில் அமைக்க வேண்டும். ஏதோ ஒரு மூலையில் அமைக்கத் தேவையில்லை.

எனவே இவை விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் ஆகும். மேலும், பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, அரசாங்கம் ஒருதலைப்பட்சமான நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதையும் வலியுறுத்துகின்றேன் என்றார்.

# தையிட்டி விகாரை விவகாரத்தை எப்படி கையாள்கிறது என்பதை பொறுத்தே இந்த அரசாங்கம் இனவாதமுடையதா? இல்லையா? என்பது புலப்படும்

## யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

07.02.2025

தனியார் காணிகளில் கட்டப்பட்ட இந்த தையிட்டி சட்டவிரோத திஸ்ஸ விகாரை விவகாரத்தை எப்படி கையாள்கிறது என்பதை பொறுத்தே இந்த அரசாங்கம் இனவாதமுடையாதா? இல்லையா? என்பது புலப்படும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை (06) உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரிவினைகளை ஏற்படுத்தும் இனவாத நடவடிக்கைகளிலேயே இராணுவம் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறது என்று தொடர்ச்சியாக நான் சொல்லிவருகிறேன். தமிழ் மக்களுக்கு எதிராக அவர்கள் ஒரு போரை நடத்தியதோடு, அவர்கள் அந்த மன நிலையில் இருந்து வெளியே வரவில்லை. தமிழ் நலன்களுக்கு எதிரான மற்றும் தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு நிறுவன மாகவே இராணுவம் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது என்பதை பொறுப்புடன் கூறுகிறேன்.

தையிட்டியில் சட்டவிரோத திஸ்ஸ விகாரையை கட்டுவதில் இராணுவத்தினர் எவ்வாறு செயற்பட்டனர் என்பது இதற்கு சிறந்த உதாரணமாகும். அப்போதைய இராணுவத் தளபதியால் தனியாருக்குச் சொந்தமான காணியில் அடிக்கல் நாட்டப்பட்டு கட்டப்பட்டிருக்கிறது. அடிக்கல் நாட்டப்பட்ட சில நாட்களிலேயே மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இவ்விடயம் விவாதிக்கப்பட்டது.

அதில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், தெல்லிப்பளை பிரதேச செயலர், வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டு, தையிட்டி திஸ்ஸ விகாரையானது தனியார் காணியில் இருப்பதும், இந்த காணியானது எந்த விகாரைக்கும் சொந்தமானது அல்ல என்பதையும் உறுதிப்படுத்தியிருந்தனர்.

குறித்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் மேற்கொண்டு எந்தவொரு கட்டுமான நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது என்றும், கட்டுமான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்த நிலையிலும், இராணுவமே சட்டவிரோத விகாரையை கட்டியது.

குறித்த விடயம் தொடர்பாக 2024 டிசெம்பர் 13ஆம் திகதி கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் தலைமையிலான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் 2025ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திற்கு தலைமை தாங்கிய போதும் மீண்டும் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

அப்போது தையிட்டி திஸ்ஸ விகாரை கட்டப்பட்டுள்ள நிலம் தனியாருக்கு சொந்தமான நிலம் என்றும், எந்தவொரு முறையான சட்ட நடைமுறையும் இன்றி, சட்ட விரோதமாகவே விகாரை கட்டப்பட்டது என்றும், இவ்விடயம் குறித்து முடிவு எடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டிருந்தேன்.

இந்த பாராளுமன்றத்தின் குழுக்களின் பிரதித் தலைவரிடம் புதியதொரு விடயத்தைக் கொண்டு வருகின்றேன். அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் எழுதிய கடிதம் தொடர்பாக உதயன் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அவ்விடயம் தொடர்பான கடிதத்தை சபையில் சமர்ப்பிக்கிறேன். அக்கடிதத்தில் சந்திரா நிமல் வாக்கிஸ்கா என்பவர் அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் தலைவர் என்று அவரது கையொப்பம் இடப்பட்டுள்ளது.

தையிட்டி திஸ்ஸ விகாரைக் கட்டுமானமுள்ள 6 ஏக்கர் காணியும், உண்மையில் தனியாருக்குச் சொந்தமானதான இருக்கும்




நிலையில், சட்டவிரோத விகாரை அமைக்கப்பட்டுள்ள இடம் தேவநம்பிய திஸ்ஸ மன்னன் காலத்தில் இருந்து திஸ்ஸ விகாரைக்கு சொந்தமானது எனவும், திஸ்ஸ விகாரைக்கு 14



ஏக்கர் காணி இருந்ததெனவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தனியாருக்குச் சொந்தமான காணிகளையும், அதனுடன் சேர்த்து மேலும் பல ஏக்கர் நிலத்தையும் பறிமுதல் செய்து வழங்க வேண்டும் என்றும், தனியாருக்கு சொந்தமான காணிகளை காணி உரிமையாளர்களிடம் ஒப்படைக்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவம் ஒரு இனவாத கட்டமைப்பில் செயற்படுகின்றது என்று நான் குறிப்பிடுவது இதனால்தான். அது அதன் மன நிலையையிலிருந்து மாற்றவில்லை. நான் கூறும் கூற்றுக்களில் ஓரளவு உண்மை இருப்பதாக நீங்கள் கருதினால் நீங்கள் சட்டபூர்வ செயல்முறையொன்றுக்கு செல்ல வேண்டும்.

இராணுவமென்றால் எந்தச் சட்டத்தையும் மீறலாம் என்ற நிலை இருக்கமுடியாது. காட்டுச்சட்டங்களைப் பிரயோகிக்க முடியாது. ஆனால் இன்னும் அந்த அடிப்படையிலேயே அவர்கள் செயற்படுகிறார்கள்.

இந்தக் கடித்தை எழுதியிருந்த அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் தற்போதைய தலைவர் யார் என்று நான் தேடிய போது, அவர் தேசிய புலனாய்வு பிரிவின் முன்னாள் பணிப்பாளராகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபராகவும் செயற்பட்ட ஒருவராவார். எனவே, இங்கே ஒழுங்கமைக்கப்படும் இத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளின் இணைப்பை நீங்கள் பார்க்கலாம்.

இந்த அரசாங்கம் இனவாதக் கொள்கைகளை பின்பற்றப் போவதில்லை என்றும், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டப் போகிறது என்றும் கூறிய உறுதிமொழிகளுக்கு உண்மையாக இருக்குமாயின் சட்டம் நியாயமானதாக இருக்க வேண்டும். எவரும் சட்டத்தை மீறுவதற்கு அனுமதிக்க முடியாது.

எனவே - தனியார் காணிகளில் கட்டப்பட்ட இந்த தையிட்டி சட்டவிரோத திஸ்ஸ விகாரை விவகாரத்தை எப்படி கையாள்கிறது என்பதை பொறுத்தே இந்த அரசாங்கம் இனவாத முடையாதா? இல்லையா? என்பது புலப்படும். திஸ்ஸ விகாரைக்கு சொந்தமான நிலத்தில் விகாரை அமைக்கக் கூடியதாக இருந்தும் இந்தச் சட்ட விரோதச் செயலுக்காக தனியாருக்குச் சொந்தமான நிலத்தை அபகரிக்க அவர்கள் தேர்வு செய்திருப்பது விரும்பத்தகாத ஒன்றாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

# 400 வருடங்கள் பழமைவாய்ந்த வட்டுக்கோட்டை துணைவி பிரகேதீசுவரர் ஆலயத்தினை மீள் உருவாக்கும் பணி ஆரம்பம்

07.02.2025

வட்டுக்கோட்டை துணைவி ஆலயத்தினை மீள் உருவாக்கம் செய்யும் பணி இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் புஸ்பரட்ணம் தலைமையில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட நிலையில் இன்று அப் பணிகள் ஆரம்பமானது.



மிகத் தொன்மையான எமது முன்னோர்களின் வழிப்பாட்டுத் தலமான இவ்வாலயம் பல ஆண்டு காலம் கவனிப்பார் இன்றிக் காணப்பட்ட நிலையில் அதனை மீள்உருவாக்கம் செய்வதற்கு



நீண்ட காலம் முயற்சி எடுக்கப்பட்டது.

இந் நிலையில் தற்போது அமெரிக்காவில் வசிக்கின்ற கைதடியினைச் சேர்ந்த கலாநிதி சிவயோகநாதனின் மகள் பாலயோகஸ்தினி சிவயோகநாதன் இவ்வாலயத்தினை பழைய நிலைக்கு மீள் உருவாக்கம் செய்வதற்குரிய நிதியுதவியினை வழங்கியுள்ளார்.

இன்று இடம் பெற்ற இவ் வாலயத்தின் மீளுவுருவாக்கும் பணிகளில் மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் மரபுரிமை மையத்தின் உபதலைவர் சத்திர சிகிச்சைப் பேராசிரியர் ரவிராஜ், இவ்வாலயத்தினை மீள் உருவாக்கம் செய்வதற்குரிய நிதி உதவியினை வழங்கிய பாலயோகஸ்தினி சிவயோகநாதன் அவர்களின் தந்தை கலாநிதி சிவயோகநாதன், யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தின் செயலாளர் ரமேஸ், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை சிரேஸ் விரிவுரையாளர் ஜெயதீஸ்வரன் இவ்வாலயத்தினை மீளுருவாக்கம் செய்யும் முக்கிய பணியில் இருக்கும் கபிலன், செல்வி துஸ்யந்தி, மணிமாறன் மற்றும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் பத்திராசிரியர் பார்த்திபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# மட்டக்களப்பில் வேலையற்ற பட்டதாரிகள் அரச நியமனம் கோரி ஆர்ப்பாட்டம்

07.02.2025

வேலையற்ற பட்டதாரிகள் அரச நியமனங்கள் கோரி மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இன்று வெள்ளிக்கிழமை (07) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் அழைப்பினையடுத்து, காந்தி பூங்காவில் ஒன்றிணைந்த வேலையில்லா பட்டதாரிகள், " அரச நியமனத்தினை உறுதிப்படுத்து", "காட்டாதே காட்டாதே பாரபட்சம் காட்டாதே", "அழிக்காதே அழிக்காதே எங்களது கனவுகளை அழிக்காதே", "வயது ஏறுது வாழ்க்கை போகுது வேலைவேண்டும்" போன்ற பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டதில் சுமார் ஒரு மணித்தியாலம் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 2000க்கும் மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் உள்ளபோதிலும் அவர்களுக்கான நியமனங்கள் குறித்து இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் பல்வேறு கனவுகளுடன் பல கஷ்டங்களுக்கு மத்தியில் பட்டப்படிப்புகளை முடித்துள்ளபோதிலும், இதுவரை தமது வேலைவாய்ப்புகள் உறுதிப்படுத்தப்படவில்லை போன்ற என இதன்போது பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.



அதனை தொடர்ந்து, அங்கிருந்து பழைய கச்சேரியில் மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து மகஜர் ஒன்றை கையளித்த பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள் அங்கிருந்து விலகிச் சென்றனர்.

# திருகோணமலையில் வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் முன்னெடுத்த கவனயீர்ப்பு போராட்டம்

08.02.2025

திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்னால் வேலையற்றப் பட்டதாரிகள் சங்கம் இன்று சனிக்கிழமை (08) காலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.



அரசே அனைத்து பட்டதாரிகளுக்கும் பாரபட்சம் இன்றி தொழிலை வழங்கு என வலியுறுத்தி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, அனைத்து பட்டதாரிகளுக்கும் பாரபட்சம் இன்றி தொழிலை வழங்கு, வரவு செலவு திட்டத்தில் 35,000 வேலை வாய்ப்பினை பட்டதாரிகளுக்கு வழங்குவதை உறுதி செய், படித்து பட்டம் பெற்றும் பதவி இல்லை, வேலை இல்லை




என்றால் பல்கலைக்கழகம் எதற்கு, வேண்டாம் வேண்டாம் போட்டி பரீட்சைகள் வேண்டாம் உள்ளிட்ட வாசகங்களை ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பப்பட்டு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அதிகளவான பட்டதாரிகள் பங்கு பெற்றிருந்தனர்.

# மாற்றுக்காணி என்ற பேச்சுக்கே இடமில்லை

## பூர்வீக நிலத்தின் உரிமையாளர்கள்

08.02.2025

மாற்றுக் காணி என்ற பேச்சுக்கே இடமில்லை - பூர்வீக நிலத்தின் உரிமையாளர்களாகிய நாம் உரிமங்களுடன் இருக்க தையிட்டி விகாரை நிர்மாணிக்கப்பட்ட நிலப்பரப்பும், அதனை அண்டிய மக்களின் காணி நிலங்களும் விகாரைக்குரியதென்று கூறுவதை ஏற்க முடியாது என கூறியுள்ள தையிட்டி காணி உரிமையாளர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் பௌர்ணமி நாளன்று போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று சனிக்கிழமை (08) ஊடகவியலாளர் சந்திப்பொன்றை முன்னெடுத்திருந்த குறித்த காணி நிலங்களின் உரிமையாளர்கள் இவ்வாறு தெரிவித்திருந்தனர்.

குறித்த சந்திப்பில் கலந்துகொண்டு க.ஜெயகுமார்,பா.பாஷ்கரன், சுகுமாரி சாருஜன் ஆகியோர் மேலும் கூறுகையில்,

மக்களது காணி நிலங்கள் மக்களுக்கே சொந்தம். அவை மக்களுக்கு வழங்கப்படும் என ஜனாதிபதி அனுர அண்மையில் யாழ் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

ஆனால் அவர் கூறிய கருத்துக்கு முரணாக தையிட்டி விவகாரம் இருக்கின்றது.

அகில இலங்கை பௌத்த மகாசபை ஒருபடி மேல் சென்று விகாரை கட்டப்பட்ட காணி நிலம் மட்டுமல்ல, அயலில் உள்ள காணி நிலங்களும் சுவீகரிக்கப்படும் என இறுமாப்புடன் கூறியுள்ளது.

அதேநேரம் தேர்தல் கலங்களில் தேசிய மக்கள் சக்தியின் இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் மூவரும் எம்முடன் இவ்விடையம் தொடர்பில் பேசி, கடந்த கால யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றல்லாது, கடந்த அரசுகள் போலல்லாது தாம் ஆட்சிக்கு வந்ததும் இவ்விடையம் தீர்க்கப்படும் என எமக்கு வாக்குறுதியும் வழங்கியிருந்தனர்.

ஆனால் இன்று இம் மூவரும் பொம்மைகள் போன்று வாய்பேசாதுள்ளனர். நாம் எமது பூர்வீக நிலங்களையே கேட்கின்றோம்.

ஆளுநர் கூட எம்முடன் பேசிய விடையத்தை வேறு திசை நோக்கி கொண்டு செல்ல முயற்சித்து தவறான அர்த்தத்துடன் ஜனாதிபதிக்கு கூறியிருந்தார்.

ஆனாலும் அன்று கஜேந்திரகுமார் எம்.பி எமது பிரச்சினையை




எடுத்திருந்தாலும் அவருக்கு பலமாக ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைக்கொடுத்திருக்கவில்லை. இது வாக்களித்த எமக்கு ஏமாற்றத்தையே கொடுத்தது.

இந்நிலையில் எதிர்வரும் 11 ஆம்திகதி மாலை 4 மணியிலிருந்து மறுநாள் மாலை 6 மணிவரை எதிர்ப்பு போராட்டம் ஒன்றை நாம் முன்னெடுக்கவுள்ளோம்.

காணி உரிமையாளர்களாகிய எமது போராட்டத்துக்கு பாரபட்சமற்ற வகையில் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், போக்கு வரத்து மற்றும் சிற்றூர்தி, முச்சக்கர வண்டி சங்கம் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஆதரவை வழங்கி வலுச்சேர்க்குமாறு அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.ca

# கிழக்கு மாகாணத்தில் கடந்த ஒரு மாத காலமாக மின்சார வசதியின்றி இருளில் மூழ்கியுள்ள விவசாயக் கிராமங்கள்

08.02.2025

கடந்த ஒரு மாத காலமாக மின்சார வசதியின்றி இருளில் மூழ்கியுள்ள விவசாயக் கிராமம் இந்நிலையிலும் காட்டு யானை அச்சுறுத்தலால் அக்கிராமத்திலிருந்தும் வெளியேற தாம் தயாராகி வருவதாக அங்குள்ள மட்டக்களப்பு மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலாளர் பிரிவு பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

இதனால் அங்கு வசிக்கும் மக்கள் சுத்தமான குடிநீர் இன்றியும், போக்குவரத்துக்குரிய பாதைகள் சேதமடைந்து காணப்படுவதுடன், காட்டு யானை அச்சுறுத்தலுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தற்போது அப்பகுதியில் பெரும்போக வேளாண்மை அறுவடை மேற்கொண்டு வருவதன் காரணமாக விவசாயிகள் இரவு வேலைகளிலும் தங்களது பணிக்காக சென்று வரும் வேளை வெள்ள அனர்த்தத்தினால் சேதம் அடைந்த மின்சார கம்பங்கள் கடந்த ஒரு மாத காலமாக திருத்தப் பணிகள் மேற்கொண்டு மின்சார வசதி வழமை நிலைக்கு கொண்டுவருவதங்கு சம்பந்தப்பட்டவர்கள் முன்வரைவில்லை எனவும் அப்பகுதி மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

இவற்றால் அங்குள்ள மக்களின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் கடந்த ஒரு மாத காலமாக உயிர் அச்சுறுத் துக்களுக்கு மத்தியில் இரவுப் பொழுதுகளை கழிக்க வேண்டி உள்ளதாக கருத்து தெரிவிக்கின்றனர்.

அங்குள்ள மக்கள் விவசாயம், மீன்பிடி, கால்நடைவளர்ப்பு, மேட்டுநிலப் பயிர்செய்கை, போன்றவற்றை தமது வாழ்வாதார கொண்டுள்ள போதிலும் கிரான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கல்லடிவெட்டை, கானந்தனை, ஆகிய பகுதி கிராமமக்களே இவ்வாறு மின்சார வசதியின்றி பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இதனால் அங்குள்ள மாணவர்களின் கற்றல் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் சுகாதாரப் பிரச்சினைகளுக்கும் அவர்கள் முகம் கொடுக்க நேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயம் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், விரைவில் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



அப்பகுதி மக்களுக்கு வழங்கும் மின்சாரத்தில் ஏற்பட்டுள்ள தடங்கல் தொடர்பில் கேட்டறிவதற்காக மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபையுடன் தொலைபேசி மூலம் சனிக்கிழமை (08.02.2025) தொடர்பை ஏற்படுத்திய போதும் அதற்கு யாரும் பதிலளிக்கவில்லை.

எனினும் மின்சார சபையின் திருகோணமலையில் அமைந்துள்ள காரியாலயத்திற்கு அழைப்பெடுத்தபோது சனிக்கிழமை (08) மட்டக்களப்பு காரியாலயத்தில் யாரும் இருக்கமாட்டார்கள், மின்சார சபையின் மட்டக்களப்பு காரியாலயத்திற்குப் பொறுப்பான பொறியியலாளரின் தனிப்பட்ட தொடர்பு இலக்கம் தமக்குத் தெரியாது எனவும் தொலைபேசிக்குப் பதிலளித்த பெண் தெரிவித்தார்.

# அநுராவின் பாடப்புத்தகத்தில் இனப்பிரச்சினை 'பாடத்திட்டம் (Syllabus)' இல்லை

பா. அரியநேத்திரன்

10.02.2025

1948, பெப்ரவரி,04ல் பிரித்தானியரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்ததாக கூறப்பட்டாலும் உண்மையில் ஆங்கிலேயரிடம் இருந்து சிங்களவருக்கு ஆட்சி கைமாறிய தினமே அதுவாகும். இலங்கையில் வாழும் தமிழ் இனத்துக்கு சுதந்திரம் இதுவரை இல்லை. தமிழர்களுக்கு 77, வருட கரி நாளாகவே பார்க்கப்படுகிறது.

கடந்த 2025, பெப்ரவரி,04ல் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அநுராவால் எளிமை யான முறையில் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது, அதில் தமிழ் மொழி மூலமாக தேசிய கீதம் பாடப்பட்டது என்றெல்லாம் பல சமூக வலைத்தளங்களில் பலதமிழர்கள் புகழாரம் சூட்டுகிறார்கள். தமிழில் தேசிய கீதம் பாடுவதாலோ, வல்வெட்டித்துறையில் சென்று ஜனாதிபதி வகுப்பு எடுத்ததாலோ, அல்லது அவருக்கு யாழில் ஆராத்தி எடுத்து ஆரவாரம் காட்டுவதாலோ ஈழத்தமிழ் இனத்துக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டது என்று கருதமுடியாது.

1978ல், புதிய அரசியலமைப்பு ஊடாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அறிமுகமாகி தற்போது 2025ம் ஆண்டு வரை 47, வருடங்களில் 8, ஜனாதிபதிகள் ஆட்சியில் இருந்து தற்போது 4, மாதங்களாக 9வது ஜனாதிபதியாக தேசிய மக்கள் சக்தி கட்சியின் புதிய ஜனாதிபதியாக அநுரகுமார திசநாயக்கா பதவி ஏற்றுள்ளார். இடது சாரி கொள்கை என கூறப்பட்டாலும் அவர்கள் வலது இடது சாரி கொண்ட கலப்பு கொள்கையே அவர்களிடம் தற்போது உள்ளது.

பச்சைகட்சி, நீலக்கட்சி ஆட்சிகள் மாறி தற்போது சிவப்புக் கட்சிக்கு கைமாறியுள்ளது. நிறங்கள் மாறியுள்ளது நிலைமை மாறவில்லை. முகங்கள் மாறியுள்ளது முறைமை மாறவில்லை. ஜனாதிபதி தேர்தல் காலத்தில் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதாகவும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதிபதி முறைமை ஆட்சியை நீக்குவதாகவும் தற்போதய ஜனாதிபதி அநுர கூறினார். அவருடைய கட்சி தேசிய மக்கள் சக்தி பொதுச் செயலாளர் நிகால் அபேசிங்கா வாக இருக்கலாம், அந்த கட்சியின் தாய்க்கட்சி யான மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் தில்வின் சில்வாவாக இருக்கலாம் அனைவருமே கூறியிருந்தார்கள்.

பதவி பெற்று நான்கு மாதம் கடந்து அதற்கான எந்த முயற்சியும் இதுவரை எடுக்கப்பட வில்லை. தற்போது 3, வருடங்களால் நிச்சயம் அதை செய்வேன் என கூறுகிறார் ஒருவேளை எதிர் வரும் 2028ம் ஆண்டு பழைய அரசியல் யாப்பு 1978ல் நிறைவேற்றியது 50, வருடம் நிறைவுறும் நிலையில் 50, ஆண்டு பூர்த்தி விழாவாக தற்போதய அரசியலமைப்பை மாற்றி புதிய அரசியலமைப்பை உருவாக்கலாம் என்ற எண்ணத்தில் 2028ம் ஆண்டை குறித்து வைத்துள்ளார்களோ தெரியாது. என்னைப்பொறுத்தவரை புதிய அரசியல் யாப்பு திருத்தம் என்பது இந்த அரசாலும் நிறைவேற்ற முடியாமல் போனாலும் ஆச்சரியம் இல்லை. இப்போது புதுக்குண்டை தூக்கிப்போட்டுள்ளார் அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயசிங்க.

அரசியலமைப்பை விட பொருளாதாரப் பிரச்சனையே முக்கியமானது இப்போதைக்கு அரசியலமைப்பு முக்கியமில்லை எனக் கூறி அரசியலமைப்பு விடயத்தை மீண்டும் குப்பைத் தொட்டியில் வீசியுள்ளனர்.



இந்த பேச்சைப்பார்த்தால் ஏற்கனவே பதவியில் இருந்த எட்டு ஜனாதிபதிகளைப் போன்றே அநுரவும் தமது நிறைவேற்று அதி காரத்தை வைத்து ஆட்சியை கடத்தப் போவது உறுதி. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை மாற்றுவதையோ புதிய அரசியலைப்பை உருவாக்குவதோ தற்போதய ஜனாதிபதி அநுராவுக்கோ அவருடைய தேசிய மக்கள் சக்தி அரசுக்கோ அறவே இல்லை, பொருளாதாரம், ஊழல், அபி விருத்தி, ஒன்றுபட்ட இலங்கையர், சமத்துவம் இந்த ஐந்து சொற் களையும் வைத்து ஐந்து வருடங்கள் கடத்தக் கூடியதாகவே தேசிய மக்கள் சக்தி அரசின் ஜனாதிபதியும் 159, பாராளுமன்ற உறுப்பினர்களும் நாட்களை கடத்துவார்கள் என்பதை அவர்களுடைய செயல்பாடுகளில் தெளிவாக தெரிகிறது. 159, மக்கள் பிரதிநிதிகளில் ஏறக்குறைய 15, உறுப்பினர்களை தவிர்ந்த 144, உறுப்பினர்களும் புது முகங்களாகவே ஒரு பயிற்சி பாடசாலை போன்றே பாராளுமன்றத்தில் உள்ளனர். அவர்கள் தேசிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி செயலாளர்கள் கொள்கை வகுப்பாளர்கள் சொல்வதை நாடாளுமன்றத்தில் செய்வார்கள் அவர்களை மீறி வேறு எதையும் செய்ய மாட்டார்கள்.

ஜனாதிபதியாகி முதலாவது ஆற்றிய அக்கிராசன உரையானாலும் சரி, கடந்த 77வது சுதந்திரதின உரையானாலும் சரி அவர் எந்த ஒரு இடத்திலும் இனப்பிரச்சனை ஒன்று இருந்தது, இருக்கிறது, அதற்கான போராட்டம் இடம்பெற்றது, அதற்காக அரசியல் தீர்வு வழங்குவது முக்கியம் என்று எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவர் கூறவில்லை கடந்த வருடம் 2024, டிசம்பர், 15ல் இந்தியாவுக்கும், இந்த வருடம் 2025, ஜனவரி, 13ல் சீனாவுக்கும் சென்ற ஜனாதிபதி அரசியல் தீர்வு விடயம்பற்றி பேசவில்லை. மூன்றாவது வெளிநாட்டு பயணமாக எதிர்வரும் 2025, பெப்ரவரி, 10, தொடக்கம் பெப்ரவரி, 15, வரையும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ்சிக்கு அதிகாரபூர்வ விஜயம் மேற்கொள்ள உள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஜனாதிபதி முகமது பின் சயீத் அல் நஹ்யானின் அழைப்பின் பேரில் நடைபெறவுள்ளது. இந்தப் பயணத்தின் போது, துபாயில் நடைபெறும் உலக அரசாங்க உச்சி மாநாட்டில் உரையாற்றுவார். என கூறப்படுகிறது. இந்த பயணங்கள் எல்லாமே பொருளாதாரம் தொடர்பாகவே உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படுவதை காணலாம்.

சுதந்திரதின உரையிலும் பொருளாதாரத்தை பற்றி மட்டுமே கூறியுள்ளார் கடந்த வாரம் யாழ்ப்பாணம் சென்று தேசிய தலைவர் பிரபாகரனுடைய பிறந்த மண் வல்வெட்டித்துறை சென்று அங்குள்ள மக்களுக்கு வகுப்பு எடுத்தார் அவருடைய அந்த பாடத்தில் இனப்பிரச்சனை தொடர்பாகவோ, அரசியல் தீர்வு தொடர்பாகவோ பேசவில்லை. அவரின் பாடப்புத்தகத்தில் இனப்பிரச்சினை பாடம் இல்லை பொருளாதாரமும், ஊழல் ஒழிப்பும் மட்டுமே உள்ளது இன்னும் சொல்வ தானால் "அநுரவின் பாடப்புத்தகத்தில் இனப்பிரச்சனை சிலவஷ் (Syllabus) இல்லை" என்பதை இலகுவாக புரிந்து கொள்ளலாம்.

இந்த வாரம் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், துபாய் பயணங்களை முடித்த கையோடு இந்த மாதம் இறுதி வாரத்தில் மட்டக்களப்பிற்கும் வருகை தருவார் என நம்பப்படுகிறது அங்கும் ஏதாவது ஒரு கிராமத்திற்குச்சென்று இதே சிலவஷ் பொருளாதாரப்பாடம் நடத்துவார், தமிழ் மக்களும் தேசிய மக்கள் சக்தி அரசின் மூளைச்சலவை பேச்சுகளுக்கு செவிசாய்த்து தமிழ்த்தேசிய அரசியலில் இருந்து விலகிச்செல்வதை தடுப்பதற்காக வடகிழக்கில் உள்ள தமிழ்தேசிய தலைமைகளுடமோ, கட்சிகளுக்கோ மக்கள் மயப்படுத்தும் வேலைத்திட்டங்கள் எதுவுமே கடந்த 16, வருடங்களாக இல்லை என்பதே உண்மை.

இம்முறையும் வடக்கு கிழக்கில் இலங்கையின் சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பல இடங்களில் கரிநாள் கவன ஈர்ப்பு போராட்டங்கள் நடைபெற்றாலும் மாறாக என்றுமில்லாத வகையில் 77வது சுதந்திர தின கொண்டாட்டங்களும் வடகிழக்கில் பல தமிழ் பகுதிகளில் பகிரங்கமாகவே சிங்க கொடி தூக்கி கொண்டாட்டங்களாக நடைபெற்றதை அவதானிக்க முடிந்தது. தமிழ்மொழியில் தேசிய கீதம் பாடுவதாலோ, தாய் மொழியில் அரச நிர்வாக சேவைகள் இடம்பெறுவதாலோ, தமிழ் பகுதிகளில் தமிழ் பொலிசாரை நியமனம் செய்வதாலோ தமிழ் இனத்திற்கு சுதந்திரம் கிடைத்து விட்டதாக இல்லை. ஆனால் தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து தமிழ் இளைஞர்களின் மனோநிலை மாற்ற முடியும் என்ற சிந்தனை தற்போதைய அரசுக்கு உள்ளது என்பது உண்மை..

# தையிட்டி விகாரை பிரச்சினை என்பது ஒட்டுமொத்த தமிழர்களின் பிரச்சினை என்பதை உணராவிடில் பாரிய ஆபத்திற்கே இட்டுச் செல்லும்

## அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சத்திவேல்



10.02.2025

தையிட்டி விகாரை பிரச்சினை என்பது ஒட்டுமொத்த தமிழர்களின் பிரச்சினை என்பதை உணராவிடில் பாரிய ஆபத்திற்கே இட்டுச் செல்லும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் திங்கட்கிழமை (10.02.2025) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசமான தையிட்டியில் தமிழர்களின் அரசியலுக்கு சவால் விட்டும் ஆக்கிரமிப்பின் நோக்கத்தோடும் படையினர் திஸ்ச விகாரையும், தூபியையும் அமைத்துள்ளமை சட்ட விரோதமானது மட்டுமல்ல அது மனித நீதிக்கும், மக்களின் அமைதி வாழ்வுக்கும், சமாதானத்திற்கும், நாட்டின் அரசியல் செல்நெறிக்கும் எதிரானதோடு இறை நீதிக்கும் எதிரானதாகும் என்பதால் சமய அமைப்புகளும் அதன் தலைமைத்துவங்களும் விசேடமாக வடகிழக்கில் இருக்கும் சமய அமைப்புகளும் சமய தலைமைத்துவங்களும் இனியும் மௌனம் காக்காது தான் சார்ந்த சமயநெறி நின்று மக்களின் சார்பெடுத்து இறைநீதி குரல் எழுப்ப வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம்.

யுத்த காலத்தில் இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களில் படையினரால் புரியப்பட்ட சட்ட விரோத செயற்பாடுகள், கொலைகள், காணாமலாக்குதல் தொடர்பில் மக்கள் நீதி கேட்டு வீதியில் நிற்கின்றனர். மேலும் சர்வதேச கதவுகளையும் தட்டுகின்ற நிலையில் சமய அமைப்புகளும் மக்களுக்கு தூரமாகவே நிற்பதை அவதானிக்கின்றோம்.

ஆனால் ஒரு சில சமய அருட் தொண்டர்கள் துணிச்சலோடு மக்களோடு நின்று குரல் எழுப்புகின்றனர். இன்னும் சிலர் உயிர் தியாகிகளாகியுள்ளனர். அவர்களை பாராட்டுவதோடு அவர்கள் வரலாற்றில் பதியப்பட்டவர்களாவர். இவர்களை சமய அமைப்புகளும், அதன் தலைமைத்துவங்களும் உரிய அங்கீகாரம் அளிக்காமை வேதனை அளிக்கின்றது.

தற்போதைய சூழ்நிலையில் தையிட்டி விகாரை பிரச்சினை என்பது அக்கிராம மக்களின் பிரச்சினையோ,அது அமைந்துள்ள தனியார் காணி உரிமையாளர்கள் பிரச்சினையோ, அல்லது ஏதோ ஒரு கட்சி கட்சியின் பிரச்சினையோ அல்ல. இது ஒட்டுமொத்த தமிழர்களின் பிரச்சினை. தமிழர் தாயக பிரச்சினை. நாட்டின் அரசியல் பிரச்சினை என்பதை உணராவிடில் பாரிய ஆபத்திற்கே இட்டுச் செல்லும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

எழுந்துள்ள விகாரை பிரச்சினை கடந்த காலங்களில் படையினர் புரிந்த மனித படுகொலைகளையும் மேவிய அரசியல் கொலை அடையாளமாகும். அரச பயங்கரவாதம் புத்தரின் தர்ம உபதேச கொள்கைகளையும், கோட்பாடுகளையும் குழி தோண்டி புதைத்து விட்டே நாட்டின் நடைமுறை சட்டங்களுக்கு எதிராக சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பு மனநிலையினின்று துணிச்சலோடு இதனை கட்டி எழுப்பியுள்ளது. இதற்கு எதிராக உண்மையான சமய தலைமைத்துவங்கள் இனம், மொழி, சமயம் கடந்து நீதி குரல் எழுப்ப வேண்டிய காலம் இது.

ஒரு இனத்தை ஒடுக்கவும், அவர்களின் இருப்பை அழிக்கவும், அரசியல் அபிலாசைகளை எதிர்பார்ப்பை சிதைக்கவும் எந்த ஒரு சமயமும் தம் அடையாளங்களை பாவிப்பதையும், ஆக்கிரமிப்புக்காக நிறுவுவதையும் அங்கீகரிக்க முடியாது.

அது எந்த வடிவில் நிகழ்ந்தாலும் அதற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டிய சமயம் தார்மீக கடமை ஆன்மீக தலைமைகளுக்கு உண்டு. கடந்த கால தவறுகளில் தொடர்ந்து இருக்காது சமய தலைமைகள் தம் அமைப்பு சார்ந்தும், தனித்தனியாகவும் கூட்டாகவும் இறை நீதியை வெளிப்படுத்த ஒன்றிணைய வேண்டும்.

தற்போதைய தேசிய மக்கள் சக்தியும் நாட்டின் ஜனாதிபதியும் கிளீன் சிறீலங்கா (தூய்மையான இலங்கை) தொடர்பில் அதிகம் பேசுகின்ற கலாச்சாரமாகியுள்ளது. வரவேற்கத்தக்கது. ஆனால் அது இலஞ்சம், ஊழல், அரச சொத்துக்கள் கொள்ளையிடல் மற்றும் குப்பை குளங்கள் தொடர்பாக மட்டும் இருக்கக் கூடாது.

அரச பயங்கரவாதத்தையும் அதன் இன சமய கலாச்சார ஆக்கிரமிப்பு அழிப்பு என்பவற்றையும் சிங்கள பௌத்த ஆதிக்க வாதத்தையும் தடுத்து நிறுத்துவதும் கிளீன் சிறீலங்காவுக்குள் உள்ளடக்குதல் வேண்டும். இதற்கும் சமய தலைமைத்துவங்கள் ஆட்சியாளர்களுக்கு அளுத்தம் கொடுத்தல் வேண்டும்.

இதன் மூலமே நாட்டின் நல்லிணக்கத்தை கட்டி எழுப்ப முடியும். சமயத்தை காக்கவும் முடியும். அரசியல் நீதி இல்லாதவிடத்து அதற்கு எதிராக குரல் கொடுக்க முடியாவிடில் சமயம் வாழாது. வளராது என்பதையும் நினைவில் கொள்வோம்.

# யாழ். தையிட்டி சட்டவிரோத விகாரையை அகற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டம்



11.02.2025

யாழ். தையிட்டி சட்டவிரோத விகாரைக் கட்டுமானத்தை உடனடியாக அகற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் சட்டவிரோதமாகக் கையகப்படுத்தப்பட்ட காணிகளை உரிமையாளர்களிடம் உடனடியாக கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தி தையிட்டியில் இன்று (11) பிற்பகல் 4 மணிக்கு கவனயீர்ப்புப் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது…

இப்போராட்டம் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் கூறுகையில்,

இப்போராட்டத்துக்கு பல கட்சிகளும் பேதங்களின்றி ஆதரவு வழங்கியுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

எனவே, அனைத்து தமிழ் மக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் சார்ந்தவர்களை இப்போராட்டத்துக்கு கட்சி பேதங்களின்றி அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தையிட்டி மக்கள் அழைப்பு விடுத்துள்ளார்கள்.


அனைவரையும் இப்போராட்டத்தில் கலந்துகொண்டு வலுச் சேர்க்குமாறு அன்புடன் அழைக்கிறோம் என தெரிவித்துள்ளார்.





**எமது தாயக மண்ணில், வரலாற்று ரீதியாக எமக்கு உரித்தான எமது சொந்த மண்ணில், நாம் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும்; என்பதே எமது குறிக்கோள். இதுவெ எமது தேசத்தின் அபிலாசை.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# “தையிட்டி விகாரையை பொறுத்தவரை அது சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ளது அது அகற்றப்பட்டவேண்டும்”

## மக்கள் போராட்ட முன்னணியின் செய்தியாளர் ராஜ்குமார் ரஜீவ்காந்

11.02.2025

தையிட்டி விகாரையை பொறுத்தவரை அது சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ளது அது அகற்றப்படவேண்டும் என மக்கள் போராட்ட முன்னணி தெரிவித்துள்ளது.

மக்கள் போராட்ட முன்னணியின் செய்தியாளர் சந்திப்பில் ராஜ்குமார் ரஜீவ்காந் இதனை தெரிவித்துள்ளார்

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது

வடக்குகிழக்கு பகுதிகளிலே தமிழர் பிரதேசங்களை கையகப் படுத்துகின்ற நடவடிக்கைகள் பல்வேறு தடவைகளில் இடம்பெற் றுள்ளன.

நாங்களும் அதற்கான எதிர்ப்புகளை தொடர்ச்சியாக பதிவு செய்துகொண்டுவருகின்றோம்.

இன்று தையிட்டி என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத விகாரை தொடர்பில் சில விடயங்களை நான் தெளி வுபடுத்த விரும்புகின்றேன்.

குறிப்பாக தையிட்டி என்ற பிரதேசத்தில் தனியாருக்கு சொந்த மான காணிகளை அபகரித்து சட்டவிரோதமாக ஒரு விகாரையை கட்டிமுடித்திருக்கின்றார்கள். இராணுவத்தின் உதவியுடன், இராணுவ ஆக்கிரமிப்பின் ஊடாக இந்த விகாரை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

பௌத்த சம்மேளனம் கிட்டத்தட்ட 14 ஏக்கர் தனக்கு சொந்த மானது என எந்த வித பொறுப்பும் இல்லாமல், ஒரு அறிக் கையை வெளியிட்டுள்ளது. இலங்கையின் சட்டத்தின்படி ஒரு வருடைய இடத்திற்கு சென்று, நீங்கள் ஒரு கட்டிடத்தை கட் டினால் அந்த இடம் அகற்றப்பட்டு அதன் உரிமையாளருக்கு கையளிக்கப்படவேண்டும்.

இந்த சட்டம் அனைவருக்கும் பொதுவானது, இந்த சட்டம் குறிப் பிட்ட ஒரு பிரிவினருக்கு அதிகாரத்தில் உள்ளவர்களிற்கு மதத்திற்கு மாத்திரம் உரியதல்ல.

இந்த சட்டம் பௌத்தபேரினவாதத்திற்கு மாத்திரம் விதிவிலக் கானது என எங்கும் குறிப்பிடப்படவில்லை.

எண்ணிக்கை அடிப்படையில் அதிகமாக உள்ளவர்கள், அர சியல் அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டு தங்களிற்கு தேவையானது போல சட்டத்தை வளைத்துக்கொள்கின்ற நட வடிக்கைகள் தொடர்ச்சியாக இந்த நாட்டில் நடைபெறுகின்றன.

தையிட்டி விகாரையை பொறுத்தவரை அது சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ளது அது அகற்றப்படவேண்டும், அவ்வளவுதான்.

ஏனென்றால் அந்த மக்கள் வேறு ஒரு இடத்திலே தங்களிற்கு தேவையான காணியை பெறுவதற்கு தயாராகயில்லை.

குறிப்பாக ஜனாதிபதி யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது மாவட்ட அபிவிருத்தி குழுகூட்டத்தில், இந்த பிரச்சினை எழுப்பப்பட்டது ஜனாதிபதி எந்த பதிலையும் வழங்கவில்லை ஆனால் ஆளுநர் இடையில் குறுக்கிட்டு, நாங்கள் அவர்களிடம் பேசிவிட்டோம், அவர்களிற்கு வேறு காணிகளை வழங்குவோம், உரிமை யாளர்கள் வேறு காணிகளை பெற்றுக்கொள்ள தயார் என்ற ரீதியில் ஒரு கருத்தை வெளியிட்டிருந்தார்.

இந்த கருத்திற்கு எதிர்ப்பை தெரிவித்த காணி உரிமை யாளர்கள் தாங்கள் வேறு காணிகளை பெறதயாரில்லை என தெரிவித்திருந்தனர்.

சட்டவிரோதமாக கையகப்படுத்தப்பட் நிலத்தில் அமைக்கப்பட்ட



கட்டிடத்திற்கு வடக்கு ஆளுநர் எந்த அடிப்படையில் ஆதரவை வழங்குவார்? என்ற கேள்வி எமக்குள்ளது.

ஆளுநரின் வீட்டிற்கு சென்று நாளை யாராவது அவரது வள விற்குள் விகாரையை அமைத்துவிட்டு வேறு காணிகளை வழங்கினால் அவர் அதனை ஏற்றுக்கொள்வாரா? என்ற கேள்வியை நாங்கள் முன்வைக்கின்றோம். ஏனென்றால் நாளை இந்த விடயத்தை உதாரணம் காட்டி வேறு ஒருவர் எந்த இடத்திலும் காணிகளை அபகரித்து தங்களிற்கு தேவையான காணிகளை கட்டிக்கொள்ளலாம் என்ற அடிப்படையில் இந்த விடயம் அமைந்துள்ளது.

இந்த அபகரிப்பிற்கும் சட்டவிரோதத்திற்கும் யாராவது ஒருவர் ஆதரவுவழங்குவாராகயிருந்தால், இந்த நாட்டின் எதிர்காலம் பெரும் கேள்விக்குறிக்கு உள்ளாகும். ஏனென்றால் இது இத் துடன் நின்றுவிடப்போவதில்லை.

# ‘புதிய அரசியலமைப்பை தமிழத் தேசமாக ஒருமித்து எதிர்கொள்ள வேண்டும்’

## தமிழ் சிவில் சமூகக அமையம்

11.02.2025

‘புதிய அரசியலமைப்பாக்க முயற்சியை தமிழ்த் தேசமாக ஒரு மித்து எதிர்கொள்ள வேண்டும்’ என்று தமிழ் சிவில் சமூக அமையம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அந்த அமையம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப் பட்டுள்ளது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு ஆட்சியமைத்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது புதிய அரசியலமைப்பு ஒன்றை கொண்டுவருவதனை தமது பாராளுமன்ற காலப் பகுதிக்கான செயற்றிட்டங்களில் ஒன்றாக தமது தேர்தல் விஞ் ஞாபனத்தில் அறிவித்திருந்தது. பாராளுமன்றத்தில் அரசிய லமைப்பு நிர்ணய சபை மூலமாகவோ அல்லது பாராளுமன்ற தெரிவுக்குழு மூலமாகவோ அல்லது வேறு ஏதேனும் வழிவத் திலோ புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதற்கான முயற்சி தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் முன்மொழியப் படக்கூடிய நிலையில் புதிய அரசியலமைப்பாக்கல் முயற்சியை எவ்வாறு தமிழ்த் தேசமாக எதிர்கொள்வது என்பது கவனத் திற்கொள்ள வேண்டிய விடயமாக உள்ளது’ என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

‘அரசாங்கம் அரசியலமைப்பாக்க முயற்சியை உத்தியோகபூர் வமாக அறிவிக்கும் வரை நாம் காத்திருக்க வேண்டியதில்லை. இவ்விடயத்தில் நாம் தயார் நிலையில் இருத்தல் அவசியமான தாகும்’ என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

‘கடந்த பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் கணிசமான அளவில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கும் வாக்களித்திருந்தார்கள் என்பது வெளிப்படையான உண்மை’. ‘பொதுத்தேர்தலில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய முடிவுக ளானவை தமிழ்த் தேசிய கருத்தியலை மக்கள் மறுதலிக்க வில்லை என்பதனை எடுத்தியம்புவதோடு மாறாக தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் அரசியல் கட்சிகள் மீது அவர்களுக் குள்ள சலிப்பே தேசிய மக்கள் சக்தி கட்சிக்கான வாக்காக வெளிப்படுத்தப்பட்டிருந்தது என்பதனையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது’. ‘எனவே, தேர்தல் கால கூட்டுக்களுக்கு அப்பால் தமிழர் தேசம் முகங்கொடுக்கக்கூடிய சவால்களுள் ஒன்றாக தமிழ்த் தேசிய பரப்பிலுள்ள அரசியல் கட்சிகள் சேர்ந்து இயங்குவது என்பது முக்கியமானதாகும்’ என்று தமிழ் சிவில்




சமூக அமையம் தெரிவித்துள்ளது.

‘அந்த வகையில் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் பெற்றிருக் கக்கூடிய தமிழ்த் தேசியக் கட்சிகளானவை பாராளுமன்றத் தினூடாக முன்வைக்கப்படக்கூடிய அரசியலமைப்பாக்கல் முயற்சி தொடர்பாக கருத்தொருமிக்க ஒருமைப்பாட்டை அடைய வேண்டும் என்பது தமிழ் மக்களுடைய எதிர்பார்ப்பாகும்’ என்றும் தமிழ் சிவில் சமூக அமையத்தின் அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

# கிளிநொச்சியில் கண்ணிவெடி அகற்றும் பணிகளைப் பார்வையிட்டார் ஜப்பானியத் தூதுவர்

11.02.2025

ஜப்பானிய தூதுவர் அகிஜோ இசோமட்டா (Akio Isomata) தூதரக அதிகாரிகள், கிளிநொச்சி முகமாலை பகுதிக்குச்சென்று கண்ணிவெடி அகற்றும் பணிகளைப் பார்வையிட்டதுடன், கண்ணிவெடி அகற்றும் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினர்.



இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண் டுள்ள ஜப்பானிய ஜப்பானிய தூதுவர் அகிஜோ இசோமட்டா





(Akio Isomata) தூதரக அதிகாரிகள் இன்று செவ்வாய்க்கிழமை (11) காலை முகமாலைப்பகுதிக்குச் சென்று கண்ணிவெடி அகற்றும் நிறுவவனப்பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய துடன் கண்ணிவெடி அகற்றும் பணிகளையும் பார்வையிட் டுள்ளார்.

அந்தப் பகுதியில் வெடிபொருட்கள் மிக ஆபத்தான நிலையில் காணப்படுவதாகவும் இந்தப்பகுதியில் மீள் குடியேற்றத்திற்குப் பின்னர் வெடிபொருட்களில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளதாகவும் கண்ணிவெடி அகற்றும் நிறுவனப்பிரதிநிதிகள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், முகமாலைப் பகுதியில் ஜப்பான் நிதிப்பங்களிப் புடன் டாஸ், கலோரெஸ்ட் மற்றும் சாப் நிறுவனத்தினால் கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றமையை யப்பானிய தூதுவர் பார்வையிட்டுள்ளார்.

# திருகோணமாலை, கிளிவெட்டி – குமாரபுரம் படுகொலையின் 29 ஆவது ஆண்டு நினைவேந்தல்

11.02.2025

திருகோணமலை, கிளிவெட்டி - குமாரபுரம் படுகொலையின் 29ஆவது ஆண்டு நினைவுதினம் உணர்வு பூர்வமான முறையில் நினைவுகூறப்பட்டது.

குறித்த நிகழ்வானது இன்று (11) குமாரபுரம் கிராம மக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, படுகொலை செய்யப்பட்டவர்களின் புகைப்படங்களுக்கு விளக்கேற்றி மலர்தூவி, நினைவு வணக்கம் செலுத்தி இறந்தவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்தனை இடம் பெற்றது.

அத்துடன் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்களிடம் மனு ஒன்றும் படுகொலை செய்யப்பட்ட உறவினர்களினால் வழங்கி வைக்கப்பட்டது.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குமாரபுரம் கிராமத்தில் அத்துமீறி நுழைந்த ஆயுததாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு மற்றும் வெட்டுச் சம்பவத்தின் காரணமாக பெண்கள், சிறுவர்கள் உட்பட 26 அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்ததுடன் 15வயதான சிறுமி ஒருவர் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.




இந்த கொடூர சம்பவம் 1996.02.11ஆம் திகதி மாலை இடம் பெற்றிருந்தது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக 96 இராணுவச் சிப்பாய்கள் கைது செய்யப்பட்டு மூதூர் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு நீதவான் மு.கோ.செல்வராசா முன்னிலையில் தொடர்ச்சியாக 3 நாட்கள் அடையாள அணிவகுப்பு இடம் பெற்றது.

இதன்போது 7 பேர் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு ஆரம்பகட்ட விசாரணை மூதூர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இதன்போது போதிய சாட்சியங்கள் இருப்பதன் காரணமாக குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை 154ஆவது பிரிவின்கீழ் திருகோணமலை மேல் நீதிமன்றத்திற்கு தீர்ப்புக்காக குறித்த வழக்கு பாரப்படுத்தப்பட்டது.

இந்தநிலையில், பாதுகாப்பு நிமிர்த்தம் குறித்த வழக்கானது அனுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு விசாரணை ஜூரிகள் சபை முன்னிலையில் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்த நிலையில் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் 2016ஆம் ஆண்டு யூலை மாதம் 27ஆம் திகதி எஞ்சியிருந்த 6 முன்னாள் இராணுவ வீரர்களும் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டதுடன், அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவிக்கப்பட்டனர்.







# தையிட்டி விகாரை விடயத்தில் சட்ட ஆட்சி செல்லுபடியாகது

## மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன்

12.02.2025

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஜனாதிபதி சட்ட ஆட்சியைப் பலப்படுத்தப் போவதாக தனது கொள்கை விளக்கவுரையில் குறிப்பிட்டார். ஆனால், சட்டவிரோதமாக சட்ட ஆட்சிக்கு எதிராக, தனியார் காணியில் ஆக்கிரமிப்பு ரீதியாகக் கட்டப்பட்ட தையிட்டி விகாரையைப் பாதுகாப்பதில் பௌத்த சாசன அமைச்சரும் பொலிசாரும் படையினரும் அக்கறையாக உள்ளனர் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமத்து ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

சட்ட ஆட்சி தையிட்டி விகாரை விடயத்தில் செல்லுபடியாகாது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பௌத்தத்துக்கு ஒரு சட்டம், ஏனைய மதத்தவர்களுக்கு ஒரு சட்டம் என்ற பாரபட்சங்கள் புதிய தேசிய மக்கள் சக்தி ஆட்சியிலும் நடைபெறுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தையிட்டி விகாரை தொடர்பில் அவர் இன்று புதன்கிழமை (12) வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உண்மையில் சிங்களவர் ஒருவருக்குச் சொந்தமான தனியார் காணியில் கோவிலோ தேவாலயமோ பள்ளிவாசலோ அமைப்பதற்கு இந்த அரசாங்கம் கடைசி வரை அனுமதிக்காது. அவ்வாறு தவறுதலாக அமைத்திருந்தால், உடனடியாக இந்த அரசாங்கம் உடைத்து அழித்து விட்டிருக்கும். இதனை சட்ட ஆட்சி என்று கூறுவர்.

அந்த சட்ட ஆட்சி தையிட்டி விகாரை விடயத்தில் செல்லுபடியாகாது. அதே போன்றுதான் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பௌத்தத்துக்கு ஒரு சட்டம், ஏனைய மதத்தவர்களுக்கு ஒரு சட்டம் என்ற பாரபட்சங்கள் புதிய தேசிய மக்கள் சக்தி ஆட்சியிலும் நடைபெறுகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி சார்பாக தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இவற்றை கண்டும் காணாமல் இருக்கின்றார்கள். இதுதான் கூட்டுப் பொறுப்புக் கொள்கை என்று தேசிய மக்கள் சக்தி கற்பிக்கிறது.

வடக்கு, கிழக்கு காணி அபகரிப்புகளைக் கண்டும் காணாமல் இருப்பதற்கு வடக்கு, கிழக்கு மக்கள் அங்கிருந்து தமிழ்ப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்திருக்க மாட்டார்கள்.

வடக்கில் தமிழ் அரசுக் கட்சியினர் வேட்பாளர் தெரிவில் விட்ட தவறுதான் அங்கு தேசிய மக்கள் சக்தியில் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் மேலதிகமாக தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணமாகும். இல்லாவிட்டால் அந்த ஆசனங்கள் தமிழ் அரசுக் கட்சிக்கு உரியதாக அமைந்திருக்கும்.

இந்த நிலையில், வட பகுதித் தமிழ் மக்கள் உணர்ந்திருப்பார்கள். ஆளுங்கட்சியில் உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால் தமிழர்களுக்கு எதிரான எதனையும் தட்டிக்கேட்க முடியாமல் உள்ளது.



தையிட்டி விகாரை, வெடுக்குநாறி மலை, மயிலத்தமடு மாதவனை, கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் போன்ற விடயங்களையும் தேசிய மக்கள் சக்தி தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களால் தட்டிக்கேட்க முடியாமல் உள்ளதை அறிய முடிகின்றது.

எனவே தமிழ்த் தேசியத்தை பலப்படுத்துவதன் மூலமாகவே தமிழர்களின் பிரச்சினைகளை தடுக்க முடியும் அல்லது குறைக்க முடியும். இதனைத் தமிழ் மக்கள் உணரும் சந்தர்ப்பத்தை தையிட்டி விகாரை உணர்த்துகிறது என்று தெரிவித்துள்ளார்.

**நாம் ஒருவரையும் ஏமாற்றவும் இல்லை. துரோகம் இழைக்கவும் இல்லை ஆனால் எம்மை யாரும் ஏமாற்றினால் அல்லது எமக்குத் துரோகம் இழைத்தால் நாம் பதிலடி கொடுக்கத் தயங்கமாட்டோம்.**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**

# யாழ். தையிட்டியில் மாபெரும் மக்கள் போராட்டம் சட்டவிரோத விகாரையை அகற்றி பொது மக்களின் காணிகளை விடுவிக்க வலியுறுத்தல்

12.02.2025

யாழ்ப்பாணம் தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையை அகற்றி பொது மக்களின் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி மாபெரும் போராட்டமொன்று இன்று 12.02.2025 புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இந்த விகாரைக்கு எதிராக பல்வேறு அச்சுறுத்தல்கள் எதிர்ப் புகளுக்கு மத்தியில் நேற்று மாலை முதல் ஆரம்பமாகிய இப் போராட்டம் இரண்டாவது நாளாக இன்றும் இடம்பெற்றது.

விகாரைக்கு முன்பாக பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சிவில் அமைப்புக்களும் பொது மக்களும் என பல நூற்றுக் கணக்கானோர் இன்று காலை முதல் ஒன்று திரண்டிருந்தனர்.

இப் போராட்டம் நடைபெறும் இடத்தில் பெருமளவிலான பொலிசார் குவிக்கப்பட்டு வைத்து தடைகள் போடப்பட்டு புலனாய்வாளர்களின் கண்காணிப்பும் தீவிரமாக இருந்தது.


இவ்வாறான பல்வேறு அச்சுறுத்தல்கள் கெடுபிடிகள் எதிர்ப் புக்களுக்கு மத்தியிலும் கறுப்புக் கொடிகளுடன் பெருமளவில் திரண்ட தமிழ் மக்கள் பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக அகற்று அகற்று சட்டவிரோத விகாரையை அகற்று, வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம், இனப்படுகொலை இரா ணுவமே வெளியேறு, இந்த மண் எங்களின் சொந்தமண், கண்திறந்த புத்தருக்கு மண்மீது ஆசையா, எமது நிலம் எமக்கு வேண்டும் உள்ளிட்ட பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு கோசம் எழுப்பினர்.




இதன் போது பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் பொலிசார் செயற்பட்டதால் பொலிசாருக்கும் பொது மக்களுக்கும் இடையே வாக்குவாதங்கள் ஏற்பட்டதால் முளுகல் நிலை ஏற்பட்ட பதற்றமான நிலைமை ஏற்பட்டிருந்தது.

எனினும் அச்சுறுத்தல்கள் எதிர்ப்புக்குகளுக்கு மத்தியிலும் தொடர்ந்தும் விகாரகைக்கு எதிரான போராட்டம் முன்னெடுக் கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.







# செம்மணி பகுதியில் மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் மீட்பு: மாணிவி கிருஷாந்தியின் படுகொலையுடன் தொடர்புடையவையா?

14.02.2025

யாழ்ப்பாணம் செம்மணி பகுதிக்கு அருகில் மனித எலும்புக் கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளமை அப்பகுதி மக்கள் மத்தியில் மீண்டும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளன.

செம்மணி பகுதிக்கு அருகில் அமைந்துள்ள சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மின் தகன எரியூட்டி அமைக்கும் பணிகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன

அவற்றுக்கு நேற்றைய நாள் வியாழக்கிழமை அத்திவாரம் வெட்டும் போது, மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் காணப் பட்டுள்ளன.

அதனை அடுத்து, கட்டட வேலைகளை முன்னெடுத்த ஒப்பந்தக் காரர், அது தொடர்பில் நல்லூர் பிரதேச சபை மற்றும் மயான அபிவிருத்தி சபையினருக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொலிசாருக்கு தெரியப்படுத்தியுள்ள நிலையில், கட்டட பணிகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது

1996ஆம் ஆண்டு சுண்டுக்குளி மாணவி கிருஷாந்தி உள் ளிட்ட 4 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை 1995ஆம் ஆண்டு மற்றும் 96ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்ட பலர் படுகொலை செய்யப்பட்டு, செம்மணி பகுதியில் உள்ள வயல் வெளிகளில் புதைக்கப்பட்ட சம்பவம் வெளிச்சத்திற்கு வந்தது.



காணாமல் ஆக்கப்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக் கப்பட்டதாக கூறப்படும் பகுதிகள் குறித்த மயானத்தை அண் மித்த பகுதிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

**மற்றவர்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காக தன்னை இல்லாதொழிக்கத் துணிவத தெய்வீகத் துறவறம். அந்தத் தெய்வீசகப் பிறவிகள் தான் கரும்புலிகள்.**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**

# “தையிட்டியில் தமிழ் குடும்பங்களின் காணி உரிமைகளில் கை வைப்பது ஒவ்வொரு தமிழனின் தலையிலும் கை வைப்பதற்கு சமமானது”

## தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

11.02.2025

தையிட்டியில் அந்த பகுதியை சேர்ந்த தமிழ் குடும்பங்களின் காணி உரிமைகளில் கை வைவக்கின்ற போது, ஒவ்வொரு தமிழனின் தலையிலும் கை வைப்பதற்கு அது சமமானது என நாங்கள் கருதவேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத விகாரைக்கு எதிராக தையிட்டியில் நேற்று இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட நிலையில், அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஏனைய கட்சிகள் கட்சிபேதங்களை புறந்தள்ளிவிட்டு இந்த போராட்டத்திற்கு ஆதரவாக போராடும் மக்களிற்கு ஆதரவாக வந்திருக்கின்றன. சட்டத்தின் ஆட்சி குறித்து கதைக்கும் அரசாங்கம் தான் தொடர்ந்தும் இந்த அநியாயத்தை செய்து கொண்டிருக்கின்றது.

சட்டத்தின் ஆட்சி என்றால் சட்டத்தை மாத்திரம் கருத்தில் எடுக்க வேண்டும் வேறு எதனையும் கருத்தில் எடுக்ககூடாது. அது பௌத்த விகாரையாக இருக்கலாம், சைவ கோயிலாக இருக்கலாம், முஸ்லீம் பள்ளிவாயிலாக இருக்கலாம், கிறிஸ்தவ தேவாலயமாக இருக்கலாம், சட்டத்தை மீறி எவர் நடந்தாலும், எப்படி ஒரு பொதுமகன் சட்டத்தை மீறி ஒரு கட்டிடத்தை கட்டினால் அகற்றவேண்டுமோ அதேபோன்று தான் இது சட்ட விரோதமானது என கருதபட்டு அகற்றப்பட்டே ஆக வேண்டும்.

இது அகற்றப்படாவிட்டால் இதனை ஒரு முன்னுதாரணமாக வைத்து ஒவ்வொரு இடத்திலும் ஆக்கிரமிக்க விரும்புகின்ற ஒவ்வொரு இடத்திலும், சிங்கள மயப்படுத்தவிரும்புகின்ற ஒவ்வொரு இடத்திலும் இதேபோன்ற ஒரு முன்னுதாரணத்தை, பயன்படுத்தி தொடர்ந்தும் தமிழர் தாயகத்தின் அனைத்து பிரதேசங்களிலும்,ஆக்கிரமிப்புகள் நடைபெறும் என்பதை நாங்கள் விளங்கிக்கொள்ளவேண்டும்.

இந்த இடத்தில் இந்த இடத்தின் குடும்பங்களின் காணி உரிமை




களில் கைவக்கின்ற போது, ஒவ்வொரு தமிழனின் தலையிலும் கைவைப்பதற்கு சமமானது என நாங்கள் கருதவேண்டும். சட்டத்தின் ஆட்சியை மதிக்கின்ற எவராகயிருந்தாலும் இந்த போராட்டத்திற்கு முழுமையான ஆதரவை வழங்கவேண்டும்.

# முள்ளிவாய்க்கால் நினைவுமுற்ற வளாகத்தில் சாகும்வரை உண்ணாநோன்பு போராட்டத்தை ஆரம்பித்த முன்னாள் போராளி

14.02.2025

'முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற வளாகத்தில் முன்னாள் போராளி ஒருவர் பத்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து நீதி கிடைக்கும் வரை சாகும் வரையான உண்ணாநோன்பு போராட்டம் ஒன்றை இன்று காலை ஆரம்பித்துள்ளார்.





இன்றைய நாள் (14.02.2025) காலை 7 மணிக்கு, அழக ரெத்தினம் வனகுலராசா என்னும் ஒரு காலினை இழந்த முன்னாள் போராளி ஒருவர் முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற வளாகத்தில் நீர் மற்றும் உணவு இல்லாமல், நீதிகிடைக்கும் வரை உண்ணாநோன்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். அவர் 10 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து, இலங்கை மற்றும் உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஆரம்பித்துள்ளார்.

அக் கோரிக்கைகளாவன,

1. தமிழர்களுக்கு தனி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.

2. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு உடனடி தீர்வு வழங்கப்பட வேண்டும்.

3. மாவீரர் துயிலும் இல்லங்களில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

4. தமிழினத் துரோகிகள் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும்.

5. உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டு கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.

6. பிரதேசவாதம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்.

7. தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இல்லாதவர்கள் இருந்ததாக கூறி, வெளிநாடு மற்றும் உள்நாட்டில் சக போராளிகளை காரணம் காட்டி பணம் வசூலித்து, போராளிகளை ஏமாற்றி, சுற்றுலா விடுதி, தோட்டம், பண்ணை அமைத்து, வேலை செய்யும் பணியாளர்களுக்கு சரியான சம்பளம் வழங்காமல் இருப்பதை நிறுத்தி, அவர்களுக்கு ஒரு மணி நேரத்திற்கு 200 ரூபாய் அடிப்படை சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

8. முதியோர் மற்றும் இளையோர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

9. காணி மற்றும் வீடு இல்லாதவர்களுக்கு காணி, வீடு வழங்கப்பட வேண்டும்.

10. இலங்கையில் பிச்சை எடுப்பவர்களின் வீதம் அதிகரித்துள்ளதால், பிச்சை எடுப்பவர்கள் இல்லாத நிலை உருவாக்கப்பட வேண்டும்.




போன்ற 10 கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

# கிளிநொச்சி பூநகரி மதுபானச்சாலையை அகற்றுமாறு மக்கள் போராட்டம்

14.02.2025

கிளிநொச்சி பூநகரி வாடியடி பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியுடன் கூடிய மதுபானசாலையை இடம் மாற்றுமாறு கோரி பிரதேச மக்கள் பூநகரி பிரதேச செயலகத்துக்கு முன்பாக இன்று (14) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஏ32 பிரதான வீதியின் வாடியடி சந்தியை அண்மித்த பகுதியில் இயங்கிவரும் விடுதியுடன் கூடிய மதுபானசாலையை இடம் மாற்றுமாறு அப்பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கைகளை வலியுறுத்தியே இப்போராட்டத்தில் மக்கள் கலந்து கொண் டுள்ளனர்.

அதனையடுத்து, பூநகரி பிரதேச செயலாளர் அகிலனிடம் தங்களது கோரிக்கை அடங்கிய மகஜர்களை போராட்டத்தில் பங்கேற்ற மக்கள் கையளித்தனர்.






# அமெரிக்காவுடன் வர்த்தகப்போரை ஆரம்பித்த கனடா

01.02.2025

அமெரிக்கா ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கனடா மீது 25 வீத வரி விதிப்பை அறிவித்த காரணமாக கனடாவும் அமெரிக்கா மீது வரி விதிப்பதாக அறிவித்துள்ளது.




இதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகப் போர் ஆரம்பமாகியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

நேற்றைய தினம் முதல் கனடாவின் ஏற்றுமதிகள் மீது அமெரிக்கா 25 வீத வரியை விதித்துள்ளது.

இந்த வரி விதிப்பிற்கு பதிலடி வழங்கும் வகையில் கனடிய அரசாங்கமும் அமெரிக்க ஏற்றுமதி பொருட்களுக்கு 25 வீத வரியை விதிப்பதாக அறிவித்துள்ளது.

இதன்படி அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சுமார் 155 பில்லியன் டாலர் பெறுமதியான பொருட்களுக்கு வரி விதிக்கப்பட உள்ளது. இந்த வரி விதிப்பு தொடர்பில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஊடகங்களிடம் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வரி விதிப்பிற்கு பதிலடி வழங்கும் நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் எனவும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அமெரிக்காவின் 30 பில்லியன் பெறுமதியான ஏற்றுமதிகள் மீது வரி விதிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் சுமார் 125 பில்லியன் டாலர் பெறுமதியான ஏற்றுமதிகளுக்கு எதிர்வரும் 21 நாட்களில் வரி விதிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் கனடிய பண்டங்களை கொள்வனவு செய்யுமாறும் பிரதமர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



கனடா மீது விதிக்கப்பட்ட வரி காரணமாக பல்வேறு தரப்பினர் தொழில் வாய்ப்புகளை இழக்க நேரிடும் எனவும் இது உணவு மற்றும் மளிகை பொருட்களின் விலைகளையும் எரிபொருட்களின் விலைகளையும் பாதிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் மீது அதிக சுமையை திணிக்காதிருப்பதற்கான முனைப்புகளில் ஈடுபட்டுள்ளதாக பிரதமர் ட்ரூடோ அறிவித்துள்ளார்.

# அமெரிக்கா – கனடா வர்த்தகப் போர் தற்காலிகமாக இடை நிறுத்தம்

03.02.2025

அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் இடையில் ஆரம்பமாகியுள்ள வர்த்தகப் போர் நிலைமை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க கனடிய தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். கனடிய ஏற்றுமதிகள் மீது அமெரிக்கா 25 வீதம் வரி விதிப்பை அறிவித்திருந்தது.

இந்த வரி விதிப்பு தீர்மானத்திற்கு பதிலடியாக கனடாவும் அமெரிக்கா ஏற்றுமதிகள் மீது வரி விதிப்பதாக அறிவித்திருந்தது.

இவ்வாறான ஒரு பின்னணியில் இரு நாடுகளின் தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

இதனை தொடர்ந்து வரி விதிப்பது குறித்த தீர்மானத்தை ஒத்தி வைப்பதற்கு இரு நாட்டுத் தலைவர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

உத்தேச வரிவிதிப்பு யோசனை 30 நாட்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் மற்றும் ட்ரூடோ ஆகியோர் இரண்டு தடவைகள் தொலைபேசி ஊடாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

எல்லை பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்கப் போவதாகவும் சட்டவிரோத குடியேறிகள் மற்றும் குற்றவாளிகள் அமெரிக்காவிற்குள் பிரவேசிப்பதை தடுக்க பாதுகாப்பை பலப்படுத்த உள்ளதாகவும் கனடா உறுதிமொழி வழங்கியுள்ளது.



# ரொரான்ரோவில் வீடற்றவர்களின் மரணங்கள் அதிகரிப்பு!

03.02.2025

கனடாவின் ரொரான்ரோ பகுதியில் வீடற்றவர்களின் மரணங்களில் அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியில் வீடற்றவர்களின் மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது என தெரிவிக்கப்படுகிறது.

வாரம் ஒன்றிற்கு சுமார் ஐந்து மரணங்கள் பதிவாகி இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ரொரான்ரோ பொதுசுகாதார அலுவலகம் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையிலான காலப்பகுதியில் 135 வீடற்றவர்கள் உயிரிழந்திருந்தனர்.

2023 ஆம் ஆண்டு முதல் ஆறு மாத காலப்பகுதியின் மரண எண்ணிக்கைகளை விடவும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மைய நாட்களில் வீடற்றவர்கள் மரணிப்பது அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


மேலும் சட்டவிரோத போதை மருந்து பயன்பாட்டினாலும் மரணங்கள் பதிவாகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.




## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது.”

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

www.sangathamil.ca

# டீப்சீக் செயலியை அரச சாதனங்களின் தடை செய்தது கனடா

07.02.2025

சீன செயற்கை நுண்ணறிவு ஸ்டார்ட்அப் நிறுவனமான டீப்சீக், முக்கியமான தரவுகளை தகாத முறையில் சேகரித்து தக்கவைத் துக்கொள்ளக்கூடும் என்ற தீவிரமான தனியுரிமை கவலைகள் காரணமாக, அரசாங்க சாதனங்களில் அதன் சாட்போட்டைப் பயன்படுத்துவதை கனேடிய மத்திய அரசு தடை செய்கிறது.

அரசாங்கத்தின் தலைமைத் தகவல் அதிகாரி டொமினிக் ரோச்சன் இத்தகவலை உறுதி செய்தார்.

சீனாவிற்குச் சொந்தமான டீப்சீக் செயலி கடந்த வாரம் எதிர் பாராத விதமாக உலகில் அதிகம் பதிவிறக்கம் செய்யப்பட்ட ஒன்றாக மாறியது. இப்போது பகிரப்பட்ட சேவைகள் கனடா (SSC) மேற்பார்வையிடும் சாதனங்கள் மற்றும் நெட்வொர்க் குகளில் தடைசெய்யப்பட்டுள்ளது என்றார்.

SSC சாதனங்கள் மற்றும் நெட்வொர்க்குகளைப் பயன்படுத்தாத துறைகள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் தங்கள் நெட்வொர்க்குகளில் பயன்பாடு மற்றும் வலைத்தளத்தைத் தடுக்க வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

முக்கியமான தனிப்பட்ட தகவல்களை பொருத்தமற்ற முறையில் சேகரித்தல் மற்றும் தக்கவைத்துக்கொள்வது தொடர்பான தீவிர தனியுரிமை கவலைகள் காரணமாகவும், அரசாங்க நெட் வொர்க்குகள் மற்றும் தரவைப் பாதுகாப்பதற்கான முன்னெச் சரிக்கை நடவடிக்கையாகவும், அரசாங்க சாதனங்களில் DeepSeek chatbot ஐப் பயன்படுத்துவதைத் துறைகள் மற்றும் நிறுவனங்கள் கட்டுப்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது," என்று ரோச்சன் நேஷனல் போஸ்ட் பெற்ற குறிப்பில் எழுதினார்.

இந்தத் தடை கனடியர்களின் தனிப்பட்ட சாதனங்களுக்கு நீட்டிக் கப்படாது.

கடந்த மாதம், டீப்சீக் என்ற சிறிய சீன ஸ்டார்ட்அப் நிறுவனம், நிரலாக்கம் மற்றும் பகுத்தறிவு உள்ளிட்ட பல்வேறு அளவு கோல்களில், OpenAI இன் ChatGPT போன்ற ஏற்கனவே உள்ள தயாரிப்புகளுடன் பொருந்தியதாகவோ அல்லது விஞ்சிய தாகவோ கூறப்படும் அதன் AI மாதிரியை அறிமுகப்படுத்திய போது தொழில்நுட்ப உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.




அதன் தோற்றம் பங்குச் சந்தையை சீர்குலைத்து, என்விடியா போன்ற AI தொடர்பான நிறுவனங்களின் மதிப்பில் குறிப்பிடத் தக்க வீழ்ச்சியை ஏற்படுத்தியது. குறுகிய காலத்தில், சீன நிறு வனத்தின் வெற்றி சீனாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையி லான AI பந்தயத்தை மீண்டும் தூண்டிவிட்டு, இந்தத் துறையில் அமெரிக்க தலைமைக்கு சவால் விடுத்துள்ளது.

# கனடிய அமெரிக்க எல்லைப் பகுதியில் பாதுகாப்பு அதிகரிப்பு

07.02.2025

கனடா மற்றும் அமெரிக்க எல்லை பகுதியில் பாதுகாப்பு வெகுவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடாவின் பொலீஸ் அதிகாரிகள் பெரும் எண்ணிக்கையில் எல்லை பகுதியில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

கடந்த மூன்று வார கால பகுதியில் போலீசாரின் பிரசன்னம் சுமார் 35% அதிகரித்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா வரி விதிப்பதாக அறிவித்த நிலையில் இவ்வாறு எல்லை பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் இருந்து சட்ட விரோதமான முறையில் குடியேறிகள் அமெரிக்காவிற்குள் பிரவேசிப்பதாகவும் பாரிய அளவிலான போதை பொருட்கள் கனடாவில் இருந்து அமெரிக்காவிற்குள் கடத்தப்படுவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் இந்த குற்றச்சாட்டை சுமத்தி இருந்தார். இவ்வாறான ஓர் பின்னணியில் வரி விதிப்பு குறித்து அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வரி விதிப்பு 30 நாட்களுக்கு ஒத்தி வைப்பதாக அறிவிக்கப்பட்டது. அண்மைய நாட்களாக கனடிய அமெரிக்க எல்லை பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# அமெரிக்க ஜனாதிபதி டொனால் டிரம்ப் கனடாவை அமெரிக்காவுடன் இணைக்க ஆசைப்படுவது உண்மை

## கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ

09.02.2025

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் உண்மையாகவே கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கவிரும்புகின்றார் என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வர்த்தக சமூகத்தினர் மத்தி யில் தெரிவித்துள்ளார்.

கனடாவைஅமெரிக்காவுடன் இணைக்கும் டிரம்பின் ஆசை உண்மையானது என ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

எங்கள் நாட்டை கைப்பற்றி அமெரிக்காவுடன் இணைப்பது இலகுவான விடயம் என டிரம்ப் எண்ணுகின்றார் என ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

ஒலிவாங்கி செயற்பட்டுக்கொண்டிருந்ததை அறியாமல் கனடா பிரதமர் இதனை தெரிவித்தார் பின்னர் ஒலிவாங்கி நிறுத்தப் பட்டது என கனடா ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

டிரம்ப் கனடாவின் கனிமவளங்கள் மீது கண்வைத்துள்ளார் அவர்களிற்கு எங்கள் வளங்களை பற்றி தெரியும் எங்களிடம் என்ன உள்ளது என்பது தெரியும் இதன் காரணமாகவே அவர்கள் எங்களை தங்களுடன் இணைந்து 51வது மாநில மாக மாற்றுவது குறித்து பேசுகின்றனர் என தெரிவித்துள்ளார்



# அமெரிக்க வரி விதிப்பினால் பல கனடிய நகரங்கள் பாதிக்கப்படும்

13.02.2025

அமெரிக்காவின் வரி விதிப்பு காரணமாக கனடாவின் பல நகரங்கள் பாதிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கனடாவின் சில ஏற்று மதிகள் மீது வரி விதித்துள்ளார்.

பின்வரும் கனடிய நகரங்கள் வரி விதிப்பு காரணமாக கூடுதல் பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிடும் என தெரிவிக்கப்படு கின்றது.

சேன் ஜான், என்.பி., 131.1 சதவீதம்
கால்கரி, அல்டா., 81.6 சதவீதம்
விண்ட்சர், ஒன்ட்., 61.7 சதவீதம்
கிச்சனர்-கேம்பிரிட்ஜ்-வாட்டர்லூ, ஒன்ட்., 43 சதவீதம்
பிராண்ட்ஃபோர்ட், ஒன்ட்., 27.8 சதவீதம்
குயில்ப் ஒன்றாரியோ, 24 சதவீதம்
சாகுனேய் கியூபெக், 23.5 சதவீதம்
ஹாமில்டன், ஒன்ட்., 19.8 சதவீதம்
ட்ராய்ஸ்-ரிவியர்ஸ், கியூ., 18.9 சதவீதம்
லெத்பிரிட்ஜ், அல்டா., 15.7 சதவீதம்
பெல்வில் குயின்ட்டி 14.4 சதவீதம்
டிரம்மண்ட்வில்லே, கியூ., 12.1 சதவீதம்
தண்டர் பே, ஒன்ட்., 11.2 சதவீதம்
ஓஷாவா, ஒன்ட்., 11 சதவீதம்



அபோட்ஸ்ஃபோர்ட்-மிஷன், பி.சி., 7.6 சதவீதம்

# ரொரான்ரோ பெரும்பாகத்தில் கடும் பனிப்பொழிவு

13.02.2025

ஒன்ராரியோ மாகாணத்தின் ரொரான்ரோ பெரும்பாகத்தில் கடும் பனிப்பொழிவு நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் பதிவான மிக மோசமான பனிப் பொழிவு தற்போது நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பல இடங்களில் 25 சென்டிமீட்டருக்கு மேல் பனிப்பொழிவு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதுடன் போக்குவரத்திற்கும் இடையூறுகள் ஏற்பட் டுள்ளன.

கனடிய சுற்றாடல் திணைக்களம் இது தொடர்பான தக வல்களை வெளியிட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் பின்னர்



ரொரான்ரோவில் பதிவான அதிகூடிய பனிப்பொழிவு தற்போது பதிவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அனேகமான பகுதிகளின் பாடசாலைகள் பனிப்பொழிவு காரண மாக மூடப்பட்டுள்ளன. பொது போக்குவரத்து சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதைவேளை, சீரற்ற கால நிலை காரணமாக பல்வேறு இடங்களில் வாகன விபத்து சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

# கனடாவின் 13 மாகாண முதல்வர்களோடு நடத்திய உரையாடலுக்குப் பின்னரும் கூட "கனடா இணைக்கப்படாது" என்று சொல்ல விருப்பப்படாத அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பின் சிரேஸ்ட அதிகாரிகள்!

13.02.2025



கனடாவின் 13 மாகாண முதல்வர்கள் 12ம் திகதி புதன்கிழமை அன்று வாசிங்டன் நகரில் நடத்திய கலந்துரையாடலில் ஜனாதிபதி டிரம்ப்பின் சிரேஸ்ட அதிகாரிகள் சிலர் கலந்து கொண்டனர். அவர்கள் அமெரிக்க ஜனாதிபதியின் சார்பாக பேச்சு வார்த்தைகளில் பங்கெடுத்தனர்.

எனினும் சில மணிநேர உரையாடலுக்குப் பின்னரும் கூட "கனடா இணைக்கப்படாது" என்று சொல்ல விருப்பப்படாத மேற்படி ஜனாதிபதி டிரம்ப்பின் சிரேஸ்ட அதிகாரிகள் பற்றி மேற்படி 13 கனடிய மாகாணங்சகளின் முதல்வர்களும் அதிருப்தியும் ஏமாற்றமும் அடைந்தார்கள் என அறியமுடிகின்றது.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பின் சிரேஸ்ட அதிகாரிகள் மற்றும் நிர்வாக அதிகாரிகள் கனடாவின் 13 பிரதமர்களை புதன் கிழமை சந்தித்து, கனடாவை 51 வது மாநிலமாக மாற்றுவதையும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் வார்த்தைகளை தீவிரமாக எடுத்துக் கொள்ள இயலாது என்றும் கூறியதாகவும் எனினும் அதற்கு அமெரிக்க அதிகாரிகள் சாதகமான பதிலைத் தெரிவிக்கவில்லை என்றும் அறியப்படுகின்றது.

கனடாவின் 13 மாகாண முதல்வர்களும் வாஷிங்டனுக்கு குறுகிய அறிவிப்பில் சென்று வெள்ளை மாளிகையில் அதிகாரிகளுடன் பேசினார், கனேடிய எஃகு மற்றும் அலுமினியத்தில் 25 சதவீத கட்டணங்களை விதிப்பதில் இருந்து நிர்வாகத்தை தடை செய்யும் வண்ணம் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண முதல்வர் டேவிட் எபி, இரண்டு வெள்ளை மாளிகையின் அதிகாரிகளை சந்தித்தார், துணைத் தலைவர் ஜேம்ஸ் பிளேர் மற்றும் ஜனாதிபதி பணியாளர் அலுவலக செர்ஜியோ கோரின் இயக்குநர், ஒன்ராரியோ பிரதமர் டக் ஃபோர்டு அவர் அங்கு என்று கூறிய போதிலும், அவர்கள் யாரைச் சந்தித்தார்கள் என்பதை பகிர்ந்து கொள்ள டிரம்பின் வார்த்தைகளை உண்மையான வார்த்தைகளாக நிச்சயம் எடுக்க வேண்டும் என்று பிளேயரும் கனடிய மாகாண முதல்வர்களிடம் தெரிவித்தார். குறிப்பாக எல்லை பாதுகாப்பு பற்றி பேசும்போது.

"இது ஒரு நல்ல உரையாடல், இது ஆக்கபூர்வமானது என்று நான் நினைத்தேன், கலந்துரையாடல் நடைபெற்ற போது, சில வெளிப்படையான தருணங்கள் இருந்தன, ஜனாதிபதியை அவருடைய வார்த்தையில் அழைத்துச் செல்லும்படி அவர்கள் எங்களை வலியுறுத்தினர், எனவே நாங்கள் நிச்சயமாக அதைச் செய்வோம்" என்று பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண முதல்வர் டேவிட் எபிகூறினார்.

"51 வது மாநிலக் கருத்தைப் பற்றி நாங்கள் வெளிப்படையான உரையாடல்களைக் கொண்டிருந்தோம், அது ஒரு அடிப்படையான தளம் அல்லாதது என்று நாங்கள் அடிக்கோடிட்டுக் காட்டினோம், அது அனைத்து முதல்வர்களின் ஒத்ததும் வெளிப்படையான கருத்தாகவும் ஒத்துப்போகிறது" என்று ஈபி கூறினார்.

மேலும் மாகாண முதல்வர்கள் 13 பேரின் ஜனாதிபதி செய்தியை டிரம்பிற்கு அனுப்ப பிளேயரும் கோரும் உறுதியளித்ததாக பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண முதல்வர் டேவிட் எபி கூறினார்.

2024 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதிலிருந்து, கனடா அமெரிக்காவின் 51 வது மாநிலமாக மாற வேண்டும் என்று டிரம்ப் பலமுறை கூறியுள்ளார்.

கனடா கட்டணங்களைத் தவிர்க்க விரும்பினால், அவர்கள் அமெரிக்காவில் சேர வேண்டும் என்று மார்-எ-லாகோவில் ஒரு விருந்தில் டிரம்ப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுடன் கேலி செய்ததாக முதலில் தெரிவிக்கப்பட்டது.

டிரம்ப் தனது பதவியேற்புக்கு முன்னதாக இந்த யோசனையை மீண்டும் அமுல் செய்வதாக பேசத் தொடங்கினார், கனடாவை அமெரிக்காவொடு இணைக்க வேண்டும் என்று தொடர்ந்து வாதிட்டு வருகிறார், இது கனேடிய பொதுமக்களிடையே நன்கு பரவியுள்ளது என்றும் அவர் கூறுகிறார்.

கனடாவின் வாகனத் தொழிலில் 100 சதவீதம் வரை பாரிய கட்டணங்களை டிரம்ப் அச்சுறுத்தியுள்ளார், கனடா அமெரிக்காவிலிருந்து தொழில்துறையை "திருடியது" என்றும் வாதிட்டார்.

மூத்த வெள்ளை மாளிகை அதிகாரிகளுடன் கடைசி நிமிட சந்திப்பைப் பெறுவது ஒரு சாதனை என்றும், குறிப்பாக ஜனாதிபதி டிரம்ப் ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் உக்ரேனிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திய நாளில் இந்த சந்திப்புக்கு அனுமதி கிட்டியது பெரிய விடயம் என்றும் கனடிய மாகாண முதல்வர்கள் சிலர் தெரிவித்தனர்.

"பொதுவாகவே மக்கள் இது போன்ற கடைசி நிமிட சந்திப்புக்களை அமெரிக்காவிடமிருந்து பெறமாட்டார்கள், எனவே நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். இது நம்மிடம் உள்ள உறவையும், கனடா மற்றும் கனடாவைப் பற்றிய அமெரிக்காவின் மரியாதையையும் காட்டுகிறது" என்றும் "தனது அமைச்சரவை செயலாளர்கள் பதவியேற்றவுடன் டிரம்ப் நிர்வாகத்துடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்றும் ஒன்ராரியோ மாகாண முதல்வர் டக் போர்டு கூறினார்.

**எமக்கு ஒரு நாடு வேண்டும் – எமது மக்களுக்கு விடுதலை வேண்டும் – எமது இனம் சுதந்திரமாக வாழவேண்டும் – என்ற ஆக்கிரோசமான இலட்சிய வேட்கையுடனே, மாவீரர்கள் களத்தில் விழுகிறார்கள்; எனவே எமது மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும் எமது நாட்டின் விடுதலையை முரசறையும் வீரசுதந்திரப் பிரகடனமாகவே சம்பவிக்கினறது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-



# தமிழக செய்திகள்



# பாலாற்றில் கழிவு நீர்: சுற்றுச்சூழல் கண்காணிப்பு குழு அமைக்க வலியுறுத்தல்

## -பாமக தலைவர் அன்புமணி-

01.02.2025

“பாலாற்றைக் காக்கும் விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பை மதித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய இழப்பீடு வழங்குவதுடன், சுற்றுச்சூழலை பாதுகாக்க உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் குழு ஒன்றை தமிழக அரசு அமைக்க வேண்டும்.” என்று பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், “பாலாற்றில் தோல் தொழிற்சாலைகளால் கலந்து விடப்படும் தோல் தொழிற்சாலைகளின் கழிவுநீரால் பாதிக்கப்பட்ட, ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மக்களுக்கு சென்னை உயர் நீதிமன்றத்தால் கடந்த 2001, 2009 ஆகிய ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட இழப்பீட்டை அடுத்த 6 வாரங்களில் வழங்க வேண்டும்

தோல் தொழிற்சாலைகளில் இருந்து திறக்கப்படும் கழிவு நீரால் பாலாறு மற்றும் வேலூர் மாவட்டத்தில் சுற்றுச்சூழல் பாதிக்கப்படாமல் கண்காணிக்க உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. வேலூர் மாவட்டத்தின் சுற்றுச்சூழலையும், அங்குள்ள மக்களின் நலன்களையும் பாதுகாக்கும் நோக்கத்துடன் உச்ச நீதிமன்றம் அளித்துள்ள இந்தத் தீர்ப்பு வரவேற்கத்தக்கது.

ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் பாலாற்றில் தோல் தொழிற்சாலைகளின் கழிவுகள் கலக்கப்படுவதால் ஏற்படும் பாதிப்புகளுக்கு எதிராகவும், தோல் தொழிற்சாலைகளில் இருந்து கழிவு நீர் வெளியேறுவதைத் தடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் கடந்த 30 ஆண்டுகளில் ஏராளமான போராட்டங்களை பாட்டாளி மக்கள் கட்சி நடத்தியுள்ளது.

வேலூர் மாவட்டத்தில் பாலாறு பாயும் அனைத்து பகுதிகளிலும் பாமக நிறுவனர் இராமதாஸ் 3 நாட்களுக்கு மிதிவண்டி பேரணி நடத்தினார் ராமதாஸ௺ம், நானும் இணைந்து ராணிப்பேட்டையில் கழிவு நீரை வெளியேற்றும் தோல் தொழிற்சாலை ஒன்றின் கழிவு நீர் கால்வாயை சுவர் எழுப்பி தடுத்தோம் என்பன உள்ளிட்ட பல கட்ட போராட்டங்களை நடத்தியுள்ளோம்.

ஆனால், தோல் தொழிற்சாலைக் கழிவுகளில் இருந்து வேலூரையும், பாலாற்றையும் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் தமிழக ஆட்சியாளர்களுக்கு சிறிதும் இல்லாததால் தான் பாலாறு பாழாறு ஆகி விட்டது. இந்த விவகாரத்தில் மக்களுக்கும், சுற்றுச்சூழலுக்கு துணையாக இருக்க வேண்டிய ஆட்சியாளர்கள் தோல் தொழிற்சாலை உரிமையாளர்களின் பக்கம் நின்றது தான் அனைத்துத் தீமைகளுக்கும் காரணம் ஆகும்.

தோல் தொழிற்சாலைக் கழிவுகளால் பாதிக்கப்பட்ட பாலாறையும், அதன் கரைகளில் வாழும் மக்களையும் பாதுகாக்கும் வகையில் உச்சநீதிமன்றம் அளித்துள்ள இந்தத் தீர்ப்பு வரலாற்று சிறப்பு மிக்கதாகும். இந்தத் தீர்ப்பை செயல்படுத்தத் தவறியவர்களையும், இந்தத் தீர்ப்பை மீறுபவர்களையும் தமிழ்நாட்டில் உள்ள சிறைகளில் கூட அடைக்க மாட்டோம்

தில்லியில் உள்ள திகார் சிறையில் தான் கொண்டு வந்து அடைப்போம் என்று உச்சநீதிமன்ற நீதிபதி பர்திவாலா கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. பாலாற்றைக் காக்கும் விவகாரத்தில் உச்சநீதிமன்றம் எந்த அளவுக்கு தீவிரமாக இருக்கிறது என்பதை இதிலிருந்தே தமிழக ஆட்சியாளர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.



எனவே, இனியும் தாமதிக்காமல் தோல் தொழிற்சாலை கழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழக அரசு உடனடியாக நீதி வழங்க வேண்டும். உச்சநீதிமன்ற ஆணைப்படி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய இழப்பீடு வழங்குவதுடன், அதற்கான தொகையை ‘மாசுபடுத்துபவரே இழப்பீடு செலுத்த வேண்டும்’ என்ற தத்துவத்தின் அடிப்படையில் தோல் தொழிற்சாலைகளிடமிருந்து வசூலிக்க வேண்டும். சுற்றுசூழலை பாதுகாக்க ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் குழு ஒன்றையும் தமிழக அரசு அமைக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

# கொடுங்கையூர் குப்பை கிடங்கை பயோ மைனிங் முறையில் மீட்டெடுக்கும் பணி

05.02.2025

கொடுங்கையூர் குப்பை கிடங்கை பயோ மைனிங் முறையில் மீட்டெடுக்க மார்ச் 1-ம் தேதி முதல் நாளொன்றுக்கு 10 ஆயிரம் டன் குப்பை கழிவுகளை கையாள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

வட சென்னை மற்றும் மத்திய சென்னை பகுதிகளில் சேகரமாகும் குப்பை முழுவதும், கடந்த 40 ஆண்டுகளாக கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்பட்டு வருகிறது. அந்த குப்பை கிடங்கை சுற்றி 100 மீட்டர் தொலைவிலேயே மக்கள் குடியிருப்பு பகுதிகள் உள்ளன.

எந்த விதி, அறிவியல் முறையையும் பின்பற்றாமல், மக்கும் குப்பை, மக்காத குப்பை என வகைப்படுத்தாமல் மாநகராட்சி நிர்வாகம் அங்கு குப்பை கொட்டி வந்ததால், குப்பை மலைபோல் குவிந்து கிடக்கிறது. இனிவரும் காலங்களில் குப்பைகளை கொட்ட மாற்று இடம் தேடும் நிலை ஏற்பட்டுள்ளது. அப்பகுதியை சுற்றி காற்று மாசு, நிலத்தடி நீர் மாசுபடுதல் என பல்வேறு சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், சுமார் 343 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் சுமார் 252 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள சுமார் 66.52 இலட்சம் டன் திடக்கழிவுகள் பயோ மைனிங் முறையில் மீட்டெடுக்க மாநகராட்சி திட்டமிட்டு, ரூ.648 செலவில் பணிகளை மேற்கொள்ள அரசிடம் நிர்வாக அனுமதியும் பெற்றிருந்தது. இதன் தொடர்ச்சியாக தற்போது குப்பையை அகழ்ந்தெடுத்து, அப்பகுதியை மீட்டெடுக்கும் பணிகளை மாநகராட்சி தொடங்கியுள்ளது.



இது தொடர்பாக மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் கூறியதாவது: கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தை பயோ மைனிங் முறையில் மீட்டெடுக்கும் பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது. தற்போது 3 இலட்சம் டன் வரை அகழ்ந்தெடுக்கப்பட்டு, மொத்தம் 6 தொகுதிகளாக பணிகள் நடைபெற்று வருகின்றன.

சில ஆரம்பகால நடைமுறை சிக்கல்களை சந்திக்க வேண்டி இருந்தது. அவை இம்மாத இறுதிக்குள் சரி செய்யப்பட்டுவிடும். அதன் பின்னர் மார்ச் 1-ம் தேதி முதல் நாளொன்றுக்கு 10 ஆயிரம் டன் குப்பைகளை கையாளும் திறனுடன் பணிகள் வேகமெடுக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**வேளாண்மையும் கைத்தொழிலுமே எமது பொருண்மியக் கட்டுமானத்திற்கு அடித்தளமானவை; தன்னிறைவான பொருளாதார வாழ்வுக்கு ஆதாரமானவை.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

# இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை கோரி தமிழக எம்.பி.க்கள் பாராளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டம்

07.02.2025

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களை மீண்டும் தாயகம் அழைத்து வரக் கோரி தமிழக பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற வளாகத்தில் இன்று (வெள்ளிக்கிழமை) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், இலங்கை வசம் உள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உடனடி தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தியும் தமிழக எம்.பி.க்கள் பாராளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திமுக எம்பி கனிமொழி, "இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை கைது செய்து துன்புறுத்தி வருகின்றனர். தற்போது கிட்டத்தட்ட 97 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். முதல்வர் மு.க. ஸ்டாலின் அமைச்சருக்கும் பிரதமருக்கும் கடிதம் எழுதியுள்ளார். அவர் இங்கு வரும் ஒவ்வொரு முறையும், இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண பிரதமரிடம் வலியுறுத்துகிறார்.

இலங்கை கடற்படையினர் நமது மீனவர்களின் கிட்டத்தட்ட 210 படகுகளை எடுத்துச் சென்றுள்ளனர். அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருகிறது. மீனவர்கள் தங்கள் படகுகள் இல்லாமல் என்ன செய்ய முடியும்? இது தமிழ்நாட்டில், குறிப்பாக மீனவர்களுக்கு ஒரு பெரிய பிரச்சினையாக மாறி வருகிறது. அவர்களின் முழு வாழ்வாதாரம், குடும்பம் மற்றும் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளன.

மீனவர் குழுக்களிடையே பேச்சுவார்த்தை நடத்தி இந்தப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க குழுக்களை அமைப்பதாக உறுதியளித்த மத்திய அரசு, இதுவரை இது குறித்து எதுவும் செய்யவில்லை. கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை. அவர்களை விடுவிக்க அவர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும். நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

சிறைபிடிக்கப்பட்ட படகுகளை விடுவிக்க வேண்டும். மத்திய அரசு இலங்கை அரசுடன் பேசி இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும்." என்று தெரிவித்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 10 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கடந்த 3ம் தேதி கைது செய்தனர். முன்னதாக, இராமேசுவரத்தில் இருந்து கடந்த ஜனவரி 26-ம் தேதி மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் 34 பேரை இலங்கை கடற்படை கைது செய்தது.

கடந்த ஒரு மாத காலத்தில் 5 வெவ்வேறு சம்பவங்களில் தமிழ



கத்தைச் சேர்ந்த 63 மீனவர்கள் மற்றும் 5 மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். கடந்த 2024-ம் ஆண்டில் 36 வெவ்வேறு சம்பவங்களில் 530 மீனவர்கள் மற்றும் 71 மீன்பிடிப் படகுகள் சிறைபிடிக்கப்பட்டுள்ளது. தற்போது இலங்கை சிறைகளில் 97 மீனவர்கள் உள்ளனர். அதோடு, அவர்களின் 216 மீன்பிடிப் படகுகளும் மீட்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

இலங்கைக் கடற்படையினரால் மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் தொடர்ந்து நடப்பதால், மீனவர்கள் அச்சத்துடனேயே மீன்பிடிக்கச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவது, அவர்களின் வலைகளை சேதப்படுத்துவது, அவர்கள் பிடித்த மீன்களை பறிமுதல் செய்வது போன்ற அராஜகங்களை செய்து வந்த இலங்கை கடற்படை, கடந்த மாதம் இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடும் நடத்தியது.

# தமிழக மீனவர்கள் கைது: இராமதாஸ் கண்டனம்

10.02.2025

பா.ம.க. நிறுவனர் டாக்டர் இராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது:

வங்கக்கடலில் மீன்பிடிக்க சென்ற இராமேசுவரம் பகுதி மீனவர்கள் 14 பேரை கைது செய்து சிறையில் அடைத்துள்ள இலங்கை கடற்படை, அவர்களின் இரு படகுகளையும் பறிமுதல் செய்திருக்கிறது.

தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தை சிதைக்கும் வகையில் இலங்கை கடற்படையினர் தொடர்ந்து இத்தகைய அத்துமீறலில் ஈடுபட்டு வருவது கண்டிக்கத்தக்கது. கடந்த ஆண்டு அக்டோபர் 29-ந்தேதி இந்தியா-இலங்கை ஆகிய இரு நாடுகளின் மீனவர்கள் நலனுக்கான கூட்டு பணிக்குழு கூட்டம் கொழும்பில் நடைபெற்றது. அப்போது இரு நாட்டு மீனவர் அமைப்புகளின் பேச்சுகளுக்கு விரைவாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்திய தரப்பில் வலியுறுத்தப்பட்டதை இலங்கை தரப்பு ஏற்றுக்கொண்டது.

ஆனால், அதன்பின் 100 நாட்களுக்கு மேலாகியும் இந்த இரு வாக்குறுதிகளையும் இலங்கை அரசு இன்று வரை நிறைவேற்றவில்லை. தமிழக மீனவர்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சனைகள் தொடர்பாக இலங்கை அரசுடன் இந்திய அரசு பேச வேண்டும். மீனவர்கள் நலன் தொடர்பாக அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி இலங்கை அரசை, இந்தியா வலியுறுத்தவேண்டும். அதையும் மீறி தமிழக மீனவர்களுக்கு எதிரான செயல்களில் இலங்கை அரசு ஈடுபட்டால் அதன் மீது தூதரக நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள



வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# செல்வி ஜெயலலிதாவின் நகைகளை தமிழக அரசிடம் ஒப்படைக்க தடையில்லை

14.02.2025

1991 முதல் 1996 வரை தமிழக முதல் அமைச்சராக ஜெயலலிதா செயல்பட்டார். அப்போது அவர் வருமானத்திற்கு அதிகமாக சொத்துக்குவித்ததாக புகார் எழுந்தது. இது தொடர்பாக 1996ம் ஆண்டு லஞ்ச ஒழிப்புத்துறை பொலீசார் அவரது வீட்டில் சோதனை நடத்தினர்.

இந்த சோதனையில் 27 கிலோ தங்கம், வைர நகைகள், 700 கிலோ வெள்ளி பொருட்கள், 11 ஆயிரத்து 344 புடவைகள், 750 ஷூக்கள், 91 வாட்சுகள், சொத்து ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கு கர்நாடக சிறப்பு கோர்ட்டிற்கு மாற்றப்பட்டது. இதையடுத்து, பறிமுதல் செய்யப்பட்ட 66 கோடி ரூபாய் மதிப்புள்ள நகைகள், சொத்து ஆவணங்கள் அனைத்தும் கர்நாடக மாநில கருவூலத்திற்கு மாற்றப்பட்டது.

இதனிடையே, சொத்துக்குவிப்பு பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்கள், நகைகளை தமிழக அரசிடம் ஒப்படைக்கும்படி கர்நாடக சிபிஐ சிறப்பு கோர்ட்டு உத்தரவிட்டது. அதேவேளை, சிபிஐ சிறப்பு கோர்ட்டின் உத்தரவை எதிர்த்து ஜெயலலிதாவின் அண்ணன் மகன் ஜெ தீபா, தீபக் கர்நாடக ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர்.

அதில், ஜெயலலிதா 2016ம் ஆண்டு உயிரிழந்த நிலையில் பறிமுதல் செய்யப்பட்ட நகைகள், சொத்துக்களை தங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென வழக்கு தொடர்ந்தனர். இந்த மனுவை கர்நாடக ஐகோர்ட்டு தள்ளுபடி செய்தது. இந்நிலையில், ஜெயலலிதாவின் நகைகள், சொத்துக்களை தங்களிடம் ஒப்படைக்கும்படியும், கர்நாடக ஐகோர்ட்டின் உத்தரவை ரத்து செய்யக் கோரியும் தீபா, தீபக் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, ஜெயலலிதாவின் நகைகள், நில ஆவணங்கள் உள்ளிட்ட சொத்துக்களை தமிழக அரசிடம் ஒப்படைக்க தடையில்லை என்று சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. மேலும், தீபா, தீபக் தாக்கல் செய்த மனுவையும் சுப்ரீம் கோர்ட்டு தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது. இதனை தொடர்ந்து கருவூலத்தில் உள்ள ஜெயலலிதாவின் தங்க, வைர நகைகள், சொத்து ஆவணங்கள், வெள்ளி பொருட்களை உள்பட அனைத்து பொருட்





களையும் தமிழக அரசிடம் ஒப்படைக்கும் பணியை கர்நாடக அரசு தொடங்கியுள்ளது.

ஜெயலலிதாவின் தங்கம், வைர நகைகள், வெள்ளி பொருட்கள், சொத்து ஆவணங்கள் உள்பட அனைத்தும் இன்று இரவு தமிழகத்திற்கு கொண்டுவரப்பட உள்ளது.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com




# கனடா மற்றும் மெக்சிகோவுக்கு இன்று முதல் 25% வரி விதிப்பு

01.02.2025

கனடா, மெக்சிகோவுக்கு இன்று முதல் 25% வரி விதிப்பு அமுலுக்கு வருவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கூறியுள்ளார்.

கனடா, மெக்சிகோவுக்கு 25 சதவீத வரிவிதிக்கும் திட்டத்தை அறிவித்துள்ளதோடு, பிரிக்ஸ் நாடுகளுக்கும் அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சட்டவிரோத குடியேற்றம் மற்றும் ஒப்பியாய்டுகள் அமெரிக்காவுக்கு தீங்குவிளைவிக்கும் அச்சுறுத்தலாய் இருக்கும் ஒப்பியாய்டு விநியோகத்தில் சீனாவின் பங்கு இருப்பதாய் கூறி அந்நாட்டின் இறக்குமதி பொருள்களுக்கு 10 சதவீதம் வரி விதிக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத குடியேற்றம் மற்றும் ஒப்பியாய்டுகள் போன்ற போதை வஸ்துக்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதைத் தடுக்க அண்டை நாடுகளான கனடா மற்றும் மெக்சிகோவுக்கு இன்று முதல் 25 சதவீதம் வரிவிக்கப்படும் என்று ட்ரம்ப் உறுதியளித்திருந்தார்.

டொலருக்கு பதில் வேறு ஒரு புதிய கரன்ஸியை உருவாக்கினால் 100 சதவீத வரி விதிப்பை எதிர்கொள்ள வேண்டியது இருக்குமென்று பிரிக்ஸ் நாடுகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளார்



# கனடா, மெக்ஸிகோ மீதான வரி விதிப்பை 30 நாட்களுக்கு இடைநிறுத்தினார் அமெரிக்க ஜனாதிபதி

04.02.2025

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மெக்சிகோ மற்றும் கனடா மீதான தனது கடுமையான கட்டண அச்சுறுத்தலை இடைநிறுத்தினார்.

இரு அண்டை நாடுகளுடனான எல்லை மற்றும் குற்ற அமலாக்கத்திற்கான சலுகைகளுக்கு ஈடாக வரி விதிப்பினை 30 நாட்களுக்கு இடைநிறுத்துவதற்கு அவர் ஒப்புக்கொண்டார்.

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் மெக்சிகோ ஜனாதிபதி கிளாடியா ஷீன்பாம் இருவரும் குடியேற்றம் மற்றும் போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க ட்ரம்பின் கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் எல்லை அமுலாக்க முயற்சிகளை வலுப்படுத்த ஒப்புக்கொண்டதாக தெரிவித்தனர்.

இதனால், செவ்வாய்கிழமை (பெப்ரவரி 04) முதல் நடைமுறைக்கு வரவிருந்த 25% வரி விதிப்பானது அடுத்த 30 நாட்களுக்கு ட்ரம்பின் உத்தரவுக்கு அமைவாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவுடனான அதன் எல்லையில் புதிய தொழில் நுட்பம் மற்றும் பணியாளர்களை நிலைநிறுத்தவும், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள், போதைப்பொருள் கடத்தல் மற்றும் பண மோசடி ஆகியவற்றை எதிர்த்து கூட்டு முயற்சிகளைத் தொடங்கவும் கனடா ஒப்புக்கொண்டது.

மெக்ஸிகோ தனது வடக்கு எல்லையை 10,000 தேசிய காவலர் உறுப்பினர்களுடன் வலுப்படுத்த ஒப்புக்கொண்டது, இது சட்டவிரோத இடம்பெயர்வு மற்றும் போதைப்பொருள் ஓட்டத்தைத் தடுக்கிறது.

எவ்வாறெனினும் செவ்வாய்க் கிழமை (04) அந் நாட்டு நேரப்படி 12:01 அதிகாலை ((0501 GMT) ) இல் தொடங்குவதற்கு தயாராக இருக்கும் 10% முழுவதுமான கட்டணங்களை எதிர்கொள்ளும் சீனாவிற்கு அத்தகைய சலுகைகள் எதனையும் அமெரிக்க அரசாங்கம் அறிவிக்கவில்லை.

இந்த வாரம் வரை சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்குடன் ட்ரம்ப் பேசமாட்டார் என வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், பீஜிங் மீதான வரியை மேலும் அதிகரிக்கலாம் என்றும் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

மேலும், வரி விதிப்பில் 27 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் தனது அடுத்த இலக்காக இருக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி டெனால்ட் ட்ரம்ப் ஞாயிற்றுக்கிழமை (02) கூறினார்.

ஆனால், ஐரோப்பிய ஒன்றியம் மீதான வரி விதிப்பு எப்போது என்று அவர் கூறவில்லை.

2020 இல் ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு வெளியேறிய பிரிட்டன், கட்டணங்களைத் தவிர்க்கலாம் என்றும் ட்ரம்ப் சுட்டிக்காட்டினார்.

திங்களன்று பிரஸ்ஸல்ஸில் நடந்த முறைசாரா உச்சிமாநாட்டில் ஐரோப்பிய ஒன்றிய தலைவர்கள், அமெரிக்கா கட்டணங்களை விதித்தால், ஐரோப்பா எதிர்த்துப் போராடத் தயாராக இருக்கும் என்று கூறினர்.

எனினும், அவர்கள் ட்ரம்புடனான பேச்சுவார்த்தைக்கும் அழைப்பு விடுத்தனர்.




ஐரோப்பிய ஒன்றியத்தின் மிகப்பெரிய வர்த்தக மற்றும் முதலீட்டு பங்காளியாக அமெரிக்கா உள்ளது.

இதனிடையே ட்ரம்ப் வார இறுதியில் வெள்ளை மாளிகையில் ஆற்றி உரையில், தனது கட்டணங்கள் அமெரிக்க நுகர்வோருக்கு சில குறுகிய கால வலியை ஏற்படுத்தக்கூடும் என்று ஒப்புக்கொண்டார்.

ஆனால் குடியேற்றம் மற்றும் போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்தவும் உள்நாட்டுத் தொழில்களை ஊக்குவிக்கவும் அவை தேவை என்றும் வலியுறுத்தினார்.

ஏனைய ஆய்வாளர்கள் இந்த கட்டணங்கள் கனடா மற்றும் மெக்சிகோவை மந்தநிலையில் தள்ளலாம் மற்றும் “தேக்க நிலையை” தூண்டலாம் - அதிக பணவீக்கம், தேக்கமான வளர்ச்சி மற்றும் உயர்ந்த வேலையின்மையை ஏற்படுத்தலாம் என்று எச்சரித்தும் உள்ளனர்.

# காசாவை அமெரிக்கா கையகப்படுத்தும்

## அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்

05.02.2025

போரினால் அழிக்கப்பட்ட காசா பகுதியை அமெரிக்கா கைப்பற்றி, பாலஸ்தீனியர்கள் வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்ட பின்னர் பொருளாதார ரீதியாக அபிவிருத்தி செய்யும் திட்டத்தினை அதிபர் டெனால்ட் ட்ரம்ப் வெளியிட்டுள்ளார்.

செவ்வாயன்று (04) அமெரிக்காவுக்கு வருகை தந்த இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவுடன் வெள்ளை மாளிகையில் நடைபெற்ற ஒரு கூட்டு செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது ட்ரம்ப் இந்த திட்டத்தை மேலதிக விவகரங்களை வழங்காமல் அறிவித்தார்.

காசாவில் இருந்து அண்டை நாடுகளுக்கு பாலஸ்தீனியர்களை நிரந்தரமாக மீள்குடியேற்ற ட்ரம்ப் முன்வைத்த அதிர்ச்சித் திட்டத்தைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய ட்ரம்ப், அமெரிக்கா காசா பகுதியை கையகப்படுத்தும், நாங்கள் அதையும் செய்வோம். நாங்கள் அதை சொந்தமாக வைத்திருப்போம். மேலும், தளத்தில் உள்ள ஆபத்தான வெடிக்காத குண்டுகள் மற்றும் பிற ஆயுதங்கள் அனைத்தையும் அகற்றுவதற்கு நாங்கள் பொறுப்பாவோம்.

தேவையானால், நாங்கள் அதைச் செய்வோம், நாங்கள் அந்தப் பகுதியைக் கையகப்படுத்தப் போகிறோம், நாங்கள் அதை மேம்படுத்தப் போகிறோம், ஆயிரக்கணக்கான மற்றும் ஆயிரக்கணக்கான வேலைகளை உருவாக்கப் போகிறோம்.

மேலும், இது முழு மத்திய கிழக்கு நாடுகளும் மிகவும் பெருமைப்படக்கூடிய ஒன்றாக இருக்கும். நான் ஒரு நீண்ட கால உரிமை நிலையைப் பார்க்கிறேன், அது மத்திய கிழக்கின் அந்தப் பகுதிக்கு பெரும் ஸ்திரத்தன்மையைக் கொண்டு வருவதை நான் காண்கிறேன். இது குறித்து நான் பிராந்தியத் தலைவர்களுடன் பேசியுள்ளேன், அவர்கள் இந்த யோசனைக்கு ஆதரவு வழங்கியுள்ளதாகவும் ட்ரம்ப் கூறினார்.

இதன்போது, அங்கு (காசாவில்) யார் வசிப்பார்கள் என்று கேள்வி எழுப்பப்பட்ட போது அதற்கு பதிலளித்த அமெரிக்க அதிபர், அது “உலக மக்களின்” வீடாக மாறக்கூடும் என்று கூறினார். இது அமெரிக்க உரிமையின் கீழ் “மத்திய கிழக்கின் ரிவியரா” ஆகலாம் என்று அவர் பரிந்துரைத்தார்.

எனினும், கடலோரப் பகுதியின் கட்டுப்பாட்டில் நீண்ட, வன்முறை வரலாற்றைக் கொண்ட சுமார் இரண்டு மில்லியன் மக்கள் வசிக்கும் காசாவை எப்படி, எந்த அதிகாரத்தின் கீழ் அமெரிக்கா கைப்பற்றி ஆக்கிரமிக்க முடியும் என்ற கேள்விக்கு ட்ரம்ப் நேரடியாக பதிலளிக்கவில்லை.



அவரது முதல் பதவிக்காலத்தில் ட்ரம்ப் உட்பட அடுத்தடுத்து வந்த அமெரிக்க நிர்வாகங்கள் அங்கு அமெரிக்க படையினரை நிலைநிறுத்துவதை தவிர்த்தன. “ரிவியரா” என்ற வார்த்தை தமிழ் மொழியில் பொதுவாக “கடற்கரைப் பகுதி” அல்லது “சூழலாக அழகான கடற்கரைகள்” என்று பொருள் தரக்கூடும். இது பெரும்பாலும் அழகான, உழைக்கின்ற மற்றும் செம்மையான கடற்கரைகளை குறிக்க பயன்படுத்தப்படுகிறது.

குறிப்பாக பிரஞ்சு ரிவியரா அல்லது இத்தாலிய ரிவியரா போன்ற பிரபலமான கடற்கரை பகுதிகள் ஆக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மீது தடை விதித்தார் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்

07.02.2025

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஒரு சட்டவிரோதமானது எனக் கூறி அதன் மீது தடை விதித்துள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவையும் நமது நெருங்கிய கூட்டாளியான இசுரவேலையும் குறிவைத்து சட்டவிரோதமான மற்றும் ஆதாரமற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டதாக குற்றம் சாட்டி, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மீதான தடை உத்தரவில் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை வெளியிடப்பட்ட வெள்ளை மாளிகை குறிப்பில், ஹேக்கை தளமாகக் கொண்ட ஐ.சி.சி, ஒரே நேரத்தில் வாரண்டுகளை பிறப்பிப்பதன் மூலம் ஹமாஸ் மற்றும் இசுரவேல் இடையே வெட்கக்கேடான தார்மீக சமத்துவத்தை உருவாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்த தீய நடத்தை அமெரிக்காவின் இறையாண்மையை மீறுவதாக அச்சுறுத்துகிறது மற்றும் அமெரிக்க அரசாங்கத்தின் மற்றும் இசுரவேல் உட்பட நமது நட்பு நாடுகளின் முக்கியமான தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை பணிகளை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என்று உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

ஐ.சி.சியின் சமீபத்திய நடவடிக்கைகள் ஒரு ஆபத்தான முன்னுதாரணத்தை அமைத்தன என்றும், அமெரிக்கர்களை துன்புறுத்தல், துஷ்பிரயோகம் மற்றும் சாத்தியமான கைதுக்கு ஆளாக்குவதன் மூலம் அவர்களை ஆபத்தில் ஆழ்த்தியது என்றும் டிரம்பின் நிர்வாக உத்தரவு கூறியது.

இந்தத் தடைகள்... சொத்துக்கள் மற்றும் சொத்துக்களை முடக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளன, அதே போல் ஐ.சி.சி அதிகாரிகள் மற்றும் அவர்களது உடனடி குடும்ப உறுப்பினர்கள் அமெரிக்காவிற்குள் நுழைவதைத் தடுக்கவும் வாய்ப்புள்ளது

மனித குலத்திற்கு எதிராக காசாவில் பாலஸ்தீனியர்கள் மீத இனப்படுகொலையை மேற்கொண்ட பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, இராணுவ அமைச்சர் மற்றும் ஹமாஸ் தலைவர்கள் மீது கடந்த நவம்பர் மாதம் அனைத்துலக கைதுபிடியாணையை சர்வதேச நீதிமன்றம் வழங்கியது. இந்த நடவடிக்கையால் அமெரிக்கா குறித்த தடையைக் கொண்டு வந்துள்ளது.

“போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு” நெதன்யாகு, அவரது முன்னாள் பாதுகாப்பு மந்திரி யோவ் கல்லண்ட் மற்றும் ஹமாஸின் முகமது டெய்ஃப் ஆகியோர் “குற்றவியல் பொறுப்பை ஏற்க வேண்டும்” என்பதற்கு “நியாயமான காரணங்கள்” இருப்பதாக நீதிமன்றத்தில் நீதிபதிகள் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கை அமெரிக்க குடிமக்கள் அல்லது கூட்டாளிகளின் ஐ.சி.சி விசாரணைகளுக்கு உதவும் தனிநபர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் மீது நிதி மற்றும் விசா கட்டுப்பாடுகளை விதிக்கிறது.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வாஷிங்டனுக்கான பயணத்திற்போது டிரம்ப் இந்த நடவடிக்கையில் கையெழுத்திட்டார்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) என்பது இனப்படுகொலை, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்களுக்கு வழக்குத் தொடர அதிகாரம் கொண்ட ஒரு உலகளாவிய நீதிமன்றமாகும்.

தனது முதல் பதவிக் காலத்தில், அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானில் போர்க்குற்றங்களைச் செய்தனவா என்பதை விசாரித்து வந்த ஐ.சி.சி அதிகாரிகள் மீது டிரம்ப் தடைகளை விதித்தார். அந்தத் தடைகள் ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகத்தால் நீக்கப்பட்டன.






சமீபத்திய ஆண்டுகளில், உக்ரைனில் நடந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்களுக்காக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கும், ஆப்கானிஸ்தான் பெண்கள் மற்றும் பெண்களைத் துன்புறுத்தியதற்காக தலிபான் தலைவர்களுக்கும், ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கு எதிரான குற்றங்களுக்காக மியான்மரின் இராணுவத் தலைவருக்கும் கைது வாரண்டுகளை பிறப்பித்துள்ளது.

அமெரிக்காவும் இசுரவேலும் நீதிமன்றத்தில் உறுப்பினர்களாக இல்லை, ஆனால் இங்கிலாந்து மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் உட்பட 120க்கும் மேற்பட்ட நாடுகள் இதில் உறுப்பினர்களாக உள்ளன.

நீதிமன்றத்தை நடத்தும் நெதர்லாந்து, டிரம்பின் உத்தரவுக்கு வருத்தம் தெரிவிப்பதாகக் கூறியது.

# ஐ.சி.சி. தடைகளை அமெரிக்கா கைவிட வேண்டும்; ஐ.நா. வலியுறுத்தல்

07.02.2025

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை (ICC) தடை செய்யும் முடிவை அமெரிக்கா திரும்பப் பெற வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை கேட்டுக் கொண்டது .

நீதிமன்ற ஊழியர்களுக்கு எதிராக நேற்று அறிவிக்கப்பட்ட தனிப்பட்ட தடைகளுக்கு நாங்கள் மிகவும் வருந்துகிறோம், மேலும் இந்த நடவடிக்கையை திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் என்று ஐ.நா. மனித உரிமைகள் அலுவலக செய்தித் தொடர்பாளர் ரவினா ஷம்தாசானி ஏஎவ்பி செய்தி நிறுவனத்திற்கு அளித்த கருத்துகளில் தெரிவித்தார்.

ஒரு அரசு விசாரணை அல்லது வழக்குத் தொடர விருப்பமில்லாமல் அல்லது உண்மையாகவே இயலாத நிலையில், நீதிமன்றம் அதன் சுயாதீனமான பணியை முழுமையாக மேற்கொள்ள முடியும் என்று ஷாம்தாசனி கூறினார்.

நமது கூட்டு அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு சட்டத்தின் ஆட்சி இன்றியமையாததாக உள்ளது.

நேற்று வியாழக்கிழமை, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், அமெரிக்கா மற்றும் இசுரவேலை குறிவைத்து நடத்தப்பட்ட ஆதாரமற்ற விசாரணைகளுக்காக நீதிமன்றத்தை அனுமதிக்கும் நிர்வாக உத்தரவில் கையெழுத்திட்டார்.



# அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப தடைகளை ஐ.சி.சி. கண்டித்தது

07.02.2025

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் உடலுக்கு அனுமதி அளித்த நிர்வாக உத்தரவுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ஐ.சி.சி) வெள்ளிக்கிழமை கடுமையான விமர்சனத்தை வெளியிட்டது.

ஐ.சி.சி தனது அதிகாரிகள் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கவும், அதன் சுயாதீனமான மற்றும் பாரபட்சமற்ற நீதித்துறைப் பணிகளுக்கு தீங்கு விளைவிக்கக் கோரும் ஒரு நிர்வாக உத்தரவை அமெரிக்கா பிறப்பித்ததை ஐ.சி.சி கண்டிக்கிறது என்று நீதிமன்றம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

உலகெங்கிலும் உள்ள அட்டூழியங்களால் பாதிக்கப்பட்ட மில்லியன் கணக்கான அப்பாவிகளுக்கு ஐ.சி.சி தொடர்ந்து நீதியையும் நம்பிக்கையையும் வழங்கும் என்று உறுதியளித்த இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

எங்கள் 125 உறுப்பினர்களும், சிவில் சமூகம் மற்றும் உலகின் அனைத்து நாடுகளும் நீதி மற்றும் அடிப்படை மனித உரிமைகளுக்காக ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்று நாங்கள் அழைக்கிறோம் ஐ.சி.சி கூறியது.

1998 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஐ.சி.சி, இனப்படுகொலை, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்களுக்காக தனிநபர்களைத் தண்டிக்கும் ஒரு சர்வதேச தீர்ப்பாயமாகும்.




# காசாவை மீண்டும் கட்டியெழுப்ப குறைந்தது 53 பில்லியன் டொலர்கள் வேண்டும்

ஐ.நா

12.02.2025

காசாவை மீண்டும் கட்டியெழுப்ப குறைந்தபட்சம் 53 பில்லியன் டாலர்கள் தேவைப்படும் என்று ஐ.நா. மதிப்பிட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட பகுதியில் காசாவை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் மனிதாபிமான பேரழிவை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் 53 பில்லியன் டாலர்களுக்கு மேல் ($52.4 பில்லியன்) செலவாகும் என்று ஐ.நா மதிப்பிடுகிறது. முதல் மூன்று ஆண்டுகளில் 20 பில்லியன் டொலர் தேவைப்படும் என்று கூறியுள்ளது.

இசுரவேலுக்கும் பாலஸ்தீனிய குழுவான ஹமாஸூக்கும் இடையே ஒரு வருடத்திற்கும் மேலாக நீடித்த போரில் 60%க்கும் அதிகமான வீடுகள் அழிக்கப்பட்டதால், வீட்டுவசதித் துறைக்கு சுமார் $15.2 பில்லியன் தேவைப்படும் என்று அறிக்கை மதிப்பிடுகிறது.

வர்த்தகம் மற்றும் தொழில்துறை துறைக்கு 6.9 பில்லியன் டொலர்கள் தேவைப்படும் என்றும், சுகாதாரத்துறைக்கு அது தேவைப்படும் என்றும் அறிக்கை தெரிவித்துள்ளது. விவசாயத்தை மீட்டெடுக்க சுமார் 4.2 பில்லியன் டொலர்கள், போக்குவரத்துக்கு 2.9 பில்லியன் டொலர்கள், நீர் மற்றும் சுகாதாரத்திற்கு 2.7 பில்லியன் டொலர்கள் மற்றும் கல்விக்கு 2.6 பில்லியன் டொலர்கள் தேவைப்படும்.

வெடிக்காத வெடிபொருட்களுடன் 50 மில்லியன் டன்களுக்கும் அதிகமான குப்பைகள் உருவாகியுள்ள போரின் விளைவாக சுற்றுச்சூழல் துறைக்கு $1.9 பில்லியன் செலவிட வேண்டியுள்ளது என்றும் அறிக்கை குறிப்பிட்டது.



# ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் நீண்ட நேரம் பேசினேன்: போரை நிறுத்த புடின் ஒப்புக்கொண்டார்!

## அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்



13.02.2025

உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவரும் பேச்சுவார்த்தை குறித்து மிக நீண்ட நேரம் ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் தொலைபேசியில் உரையாடியதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தனது உண்மை என்ற சமூக ஊடகத்தில் பதிவிட்டார்.

உரையாடலின் முடிவில் பேச்சுவார்த்தையை தொடங்க புடினி ஒப்புக்கொண்டதாகவும் டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார்.

உக்ரைன் பற்றி மட்டுமல்லாமல், மத்திய கிழக்கு, எரிசக்தி, செயற்கை நுண்ணறிவு, டாலரின் சக்தி மற்றும் பல்வேறு விடயங்கள் குறித்து புடினுடன் பேசியதாக டிரம்ப் கூறினார்.

ஆனால் முதலில், நாங்கள் இருவரும் ஒப்புக்கொண்டபடி, ரஷ்யா, உக்ரைனுடனான போரில் நடைபெறும் உயிரிழப்புகளை நிறுத்த விரும்புகிறோம் என்று டிரம்ப் கூறினார்.

நாங்கள் ஒருவருக்கொருவர் நாடுகளுக்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்துவது உட்பட மிக நெருக்கமாக இணைந்து பணியாற்ற ஒப்புக்கொண்டோம் என்று டிரம்ப் கூறினார்.

எங்கள் குழுக்கள் உடனடியாக பேச்சுவார்த்தைகளைத் தொடங்கவும் நாங்கள் ஒப்புக்கொண்டோம். மேலும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியை அழைத்து உரையாடலைப் பற்றி அவருக்குத் தெரிவிப்போம். அதை நான் இப்போது செய்வேன்.

இந்த பேச்சுவார்த்தைக் குழுவில் அமெரிக்க தரப்பில் இருந்து வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ, சிஐஏ இயக்குனர் ஜான் ராட்க்ளிஃப், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக்கேல் வால்ட்ஸ் மற்றும் மத்திய கிழக்கிற்கான சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காஃப் ஆகியோர் பேச்சுவார்த்தைகளுக்கு தலைமை தாங்குவார்கள் என்று டிரம்ப் கூறினார்.

கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவும் டிரம்ப்-புடின் அழைப்பை உறுதிப்படுத்தினார், மேலும் உக்ரேனிய மோதல் குறித்து விவாதிக்க ரஷ்யாவில் அமெரிக்க பிரதிநிதிகளை வரவேற்க புடின் தயாராக இருப்பதாகக் கூறினார்.

புடினும் டிரம்பும் தனிப்பட்ட தொடர்புகளைத் தொடரவும் ஒப்புக்கொண்டுள்ளனர். தனிப்பட்ட சந்திப்பை ஏற்பாடு செய்வது உட்பட புடின் டிரம்பை மாஸ்கோவிற்கு அழைத்திருப்பதைக் குறிப்பிட்டார் அவர் குறிப்பிட்டார்.

அழைப்புக்குப் பிறகு சில மணி நேரங்களுக்குப் பிறகு, தானும் புதினும் சவுதி அரேபியாவில் சந்திப்போம் என்று டிரம்ப் கூறினார்.

நானும் அமெரிக்க அதிபர் டிரம்ப்புடன் தொலைபேசியில் உரையாடிதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி கூறுகிறார். சமாதானத்தை அடைவதற்கான வாய்ப்புகள் குறித்து நாங்கள் நீண்ட நேரம் பேசினோம், குழு மட்டத்தில் இணைந்து பணியாற்ற எங்கள் தயார்நிலை மற்றும் உக்ரைனின் தொழில்நுட்ப திறன்கள் ட்ரோன்கள் மற்றும் பிற மேம்பட்ட தொழில்கள் உட்பட பற்றி விவாதித்தோம் என்று ஜெலென்ஸ்கி எக்ஸ் இல் ஒரு பதிவில் கூறினார். இந்த அழைப்பைப் பற்றி ஆன்லைனில் கருத்து தெரிவித்த டிரம்ப், ஜனாதிபதி புடினைப் போலவே, ஜெலென்ஸ்கியும் அமைதியை ஏற்படுத்த விரும்புகிறார் என்று கூறினார்.

இதநேரம் யேர்மனியின் முச்சன் நகரில் (மூனிச்) நடைபெற்ற பாதுகாப்பு உச்சி மாநாட்டில் உக்ரைன் நேட்டோவில் சேரும் கனவு ஒருபோதும் நடைபெறாது என்றும் 2014 ஆண்டுக்கு முன்னர் உக்ரைனின் பிரததேசங்களை மீட்க முடியாது என்று நம்புவதாக அமெரிக்காவின் பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்செத் நேற்றுப் புதன்கிழமை தெரிவித்தார்.

உக்ரேனிய மோதல் குறித்து விவாதிக்க வெள்ளிக்கிழமை மியூனிக் பாதுகாப்பு மாநாட்டில் ஜெலென்ஸ்கி வான்ஸை சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இசுரவேலிய பணயக்கைதிகளை விடுதலை செய்ய ஹமாஸ் இணக்கம்



13.02.2025

இசுரவேலிய பணயக்கைதிகளை திட்டமிட்டபடி எதிர்வரும் சனிக்கிழமை விடுவிக்க ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இசுரவேல், ஹமாஸ் இடையிலான போர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இதனிடையே, போர் நிறுத்த ஒப்பந்த அடிப்படையில் ஹமாஸ் அமைப்பினர் தங்கள் வசம் உள்ள இசுலவேலிய பணய கைதிகளை விடுதலை செய்ய ஒப்புக்கொண்டனர்.

இசுரவேல் தங்கள் நாட்டுச் சிறைகளில் உள்ள பலஸ்தீன கைதிகளை விடுதலை செய்வதற்கு இணக்கம் தெரிவித்தது. சனிக்கிழமை அனைத்து பணயக்கைதிகளையும் ஹமாஸ் விடுதலை செய்யாவிட்டால் காசாவில் போர் வெடிக்கும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இது தொடர்பாக இசுரவேல் தரப்பில் இருந்து இதுவரை எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. ஹமாஸ் அமைப்பின் இந்த அறிவிப்பின் மூலம் காசாவில் போர்நிறுத்தத்திற்கு பாதிப்பு ஏற்படாது என எதிர்பார்க்கப்படுகிறது.

# யேர்மனியில் மக்கள் கூட்டத்தில் மகிழுந்த மோதியது: 30 பேர் காணம்



13.02.2025

இன்று வியாழக்கிழமை மத்திய முனிச்சில் தொழிற்சங்க ஆர்ப்பாட்டத்தில் ஒரு ஓட்டுநர் காரை ஓட்டிச் சென்றதில், குழந்தைகள் உட்பட குறைந்தது 30 பேர் காயமடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். இது ஒரு தாக்குதல் என்று நம்பப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். சந்தேக நபர் - ஆப்கானிஸ்தான் புகலிடம் கோருபவர் என்று அவர் தற்போது கைது செய்யப்பட்டார் என்று காவல்துறையினர் தெரிவித்தனர்.

சேவைத் தொழிலாளர்கள் சங்கமான ver.di நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் காலை 10:30 மணியளவில் மியூனிக் நகர மையத்திற்கு அருகிலுள்ள ஒரு தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, கூட்டத்தைத் தொடர்ந்து வந்த ஒரு காவல்துறை வாகனத்தை முந்திச் சென்ற மகிழுந்து வேகமாக வந்து கூட்டத்தின் பின்புறத்தில் மோதியது.

மகிழுந்தை நோக்கி காவல்துறையினா துப்பாக்கியால் சுட்ட பின்னர், சந்தேக நபரை அதிகாரிகள் கைது செய்ததாக துணை காவல்துறைத் தலைவர் கிறிஸ்டியன் ஹூபர் தெரிவித்தார்.

குறைந்தது 28 பேர் காயமடைந்திருக்கலாம் என்றும், அவர்களில் சிலர் படுகாயமடைந்திருக்கலாம் என்றும் அவர் மேலும் கூறினார்.

சம்பவ இடத்தில் சேதமடைந்த மினி மகிழுந்துடன், காலணிகள் உள்ளிட்ட இடிபாடுகளும் காணப்பட்டன.

சந்தேக நபர் 24 வயதான ஆப்கானிஸ்தான் புகலிடம் கோருபவர் என்று ஹூபர் கூறினார்.

இது ஒரு தாக்குதலாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. நிறைய அதை சுட்டிக்காட்டுகின்றன என்று பவேரிய ஆளுநர் மார்கஸ் சோடர் சம்பவ இடத்தில் செய்தியாளர்களிடம் கூறினார்.

www.sangathamil.ca

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# “சிறீலங்காவின் சுதந்திர நாள் தமிழினத்தின் கரிநாள்”
# 04.02.2025 உலகமெங்கும் கவனயீர்ப்புப் போராட்டங்கள்





















AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


AR
GROUP
Arasan
ARASAN
RAJADURAI
Real Estate & Developments
Realtor
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
hello@argroup.ca
argroup.ca
RE/MAX
HALLMARK FIRST GROUP REALTY
RAISING THE BAR
1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA


Build Your Dream Home
SABESAN
உங்கள்
அனைத்து வீட்டு
வேலைகளிற்கும்
அழையுங்கள்
We build 10,000 Sq.Ft (Minimum)
warehouse from $139.00 Per Sq.Ft.
400 Kilometre per hour
Wind resistance
Termite Proof
Compare Traditional Building
Energy Savings
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன்
இணைந்தபடி
மேலதிக இருப்பிட
வசதியை ஏற்படுத்த
விரும்புகிறீர்களா?
அழையுங்கள்
Sabesan
விருது பெற்ற தொழிற்துறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com

## "தனிமனிதர்களது வாழ்க்கையானது சுயநலச் சுவர்களுக்குள் சிறைப்பட்டு கிடக்கின்றது. இந்த சுயநல வரம்புகளுக்கு அப்பால், தேசிய விடுதலை என்ற பொதுநல விழுமியத்தில் மனிதர்களைக் கவர்ந்திழுக்கும் எழுத்துக்களே இன்றைய காலத்தின் தேவையாக இருக்கின்றது"

## "உண்மைதான் என்றும் நிலைத்து நிற்கும். எனவே, எமது மண்ணில் நிலவும் உண்மை நிலையை, யதார்த்த சூழ்நிலையை நாம் துணிவுடனும் நேர்மையுடனும் எடுத்துச் சொல்லத் தயங்கக்கூடாது"

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்திருக்கும் எழுத்தாளர்களுக்கும், கலைஞர்களுக்கும் மற்றும் எமது வானொலி சேவையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்துவரும் அனைவருக்கும் முதலில் எனது அன்பு வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

எமது விடுதலை இயக்கத்தின் முக்கிய மக்கள் தொடர்பு சாதனமாக, உலகத்தொடர்பு ஊடகமாக விளங்கி வரும் புலிகளின் குரல் கடந்த ஏழு ஆண்டுகளுக்கு மேலாக எமது (தேசியப் போராட் டத்திற்கு அரும் பணியாற்றி வருகின்றது. தொடர்ச்சியாக நீடித்துவரும் போர்ச் சூழலில் எத் தனையோ நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து, எத்தனையோ இடர்களைச் சந்திந்து எமது போராட்டத்தின் விடுதலைக்குரலாக நாளாந்த ஒலிபரப்புச் சேவையை நடத்திவருவது சாதாரண விடயமல்ல. இதனை ஒரு அபாரமான சாதனை என்றே சொல்லவேண்டும். இந்தச் சாதனையை நிறைவு செய்து வருவதில் உங்கள் அனைவருக்கும் பங்குண்டு என்பதை நான் அறிவேன். போரில் அனர்த்தங்கள் மத்தியில் இடம்பெயர்வு போன்ற இடர்பாடுகள் மத்தியில் துன்பங்களைப் பொருட்படுத்தாது எமது வானொலிச் சேவையோடு இணைந்து நின்று நீங்கள் ஆற்றிவரும் விடுதலைப் பணிவை நான் மனமாரப் பாராட்டுகின்றேன். சிங்கள் இனவாத அரசு எமக்கு எதிராக ஒரு ஆயுதப் போரை மட்டும் நடத்தவில்லை. ஒரு கருத்துப் போரையும் நடத்தி வருகின்றது. உண்மையை மறைத்து, பொய்களைப் புனைந்து மக்களைக் குழப்பும் நேரக்கில் இந்தப் பரப் புரைப் போர் நடத்தப்பட்டு வருகின்றது. சிங்கள தேசத்தின் சகல மக்கள் சாதனங்களும் இந்தப் பரப்புரைப் போரை முன்னெடுப்பதில் மும்முரமாக செயல்பட்டு வருகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போருக்கு களங்கம் ஏற்படுத்தி, போராட்டத்தை மழுங் கடிக்கச் செய்வதே இந்த கருத்துப் போரின் கபட நோக்கம். இப்படியான ஒரு சூழலில் எமது தகவல் ஊடகங்களின் பணி முக்கியமாகின்றது. நாம் எமது மக்களுக்கும் உலகத்திற்கும் உண்மையை எடுத்துச் சொல்ல வேண்டும். உண்மை என்ற ஆயுதமேந்தி நாம் பொய்மைக்கு எதிராகப் போராட வேண்டும். பொய்களும் புனைகதைகளும் காலத்தால் அழிந்து போவன. உண்மைதான் என்றும் நிலைத்து நிற்கும். எனவே, எமது மண்ணில் நிலவும் உண்மை நிலையை, யதார்த்த சூழ்நிலையை நாம் துணிவுடனும் நேர்மையுடனும் எடுத்துச் சொல்லத் தயங்கக்கூடாது. இதன் அடிப்படையின் எமது வானொலியான புலிகளின் குரல் எமது போராட்டத்தின் உண்மைக்குரலாக, சத்தியத்தின் முரசாக ஒலிக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். தமிழரின் தேசியத்தை மறு தலிப்பது, சிங்கள தேசியவாதத்தின் பரப்புரைத் தந்திரோபாயங்களில் முக்கியமானது. தமிழர்கள் சிறுபான்மை இனத்தவர் என்றும், பல்வேறு இனக்குழுக்களில் ஒரு குழு என்றும், தமிழருக்குத் தனித்துவமான தாயகம் இருக்கவில்லை என்னும், சிங்களம் கருத்துக்களைப் பரப்பி வருகின்றது. எல்லோரும் இலங்கையர் என்றும். எல்லோருக்கும் இலங்கையே தாயகம் என்னும், எல்லோரும் ஒரே மக்கள் என்னும் சிங்கள அரசு மிகவும் நுட்பமான பரப்புரையைச் செய்து வருகின்றது. இப்படியாகப் பிரச்சார இயக்கத்திலும் சரி, அரசு முன் வைத்திருக்கும் தீர்வுப் பொதியிலும் சரி தமிழரின் தேசிய தனித்துவத்தை மறுதலிக்கும் யோசனைகளே முதன்மை பெற்றிருப்பதைக் காணலாம். தமிழ் மக்களின் தாயகப் பற்றையும் தேசிய உணர்வையும் மழுங்கடித்து, தமிழர் களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிடுவதுதான் அரசின் நோக்கம். எனவே, இந்தப் பொய்யான விசமத்தனமான பரப்புரையை முறியடித்து, எமது மக்கள் மத்தியில் தேசிய விழிப் புணர்வையும் விடுதலை உணர்வையும். பேணிவளர்ப்பது எமது மக்கள் தொடர்பு ஊடகங்களின் முக்கியமான பணியாக அமைகிறது. தமிழீழ மக்களாகிய நாம். ஒரு தேசிய இனக்கட்டமைப்பைக் கொண்டவர்கள். பழம்பெரும் மொழியும் பண்பாடும் பாரம்பரியத் தாயகமும் பழமை மிக்க வரலாறும் கொண்ட தனித்துவ தேசமாக நாம் வாழ்ந்து வருகிறோம். இந்தத் தமிழர் தேசத்தையே தமிழீழும் என நரம் அழைக்கின்றோம். இந்தத் தமிழச் தேசத்திற்கு, தன்னாட்சி உரிமையையும், இறைமையையும் வென்றெடுக்கவென்றே நாம் இரத்தம் சிந்திப் போராடி வருகின்றோம். தமிழ் தேசியத்தை ஆதாரமாகக் கொண்ட ஈழத்தமிழரின் போராட்டத்திற்கு எழுத்தாளர்களதும் கலைஞர்களதும் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. உங்களது கலை, இலக்கியப் படைப்புக்கள் தமிழர்களது தேசிய ஆன்மாவைத் தட்டி எழுப்பி. தமிழீழ தேசிய எழுச்சிக்கு முனைப்பூட்டுவதாக அமையவேண்டும். ஒழுங்கும் அமைதி நிலவும் ஒரு சாதாரணச் சமூகச் சூழலில் நாம் வாழ வில்லை. நெருக்கடிகள் மிகுந்த ஒரு போராட்டச் சூழயில் வாழ்த்து கொண்டு இருக்கின்றோம். இச்சூழலில் வாழும் எமது மக்களின் இன்றைய வாழ்வுநிலை மிகவும் துன்பகரமானது. அவலங்கள் நிறைந்தது. இந்தத் துயரமான வாழ்வை சித்தரிக்க விளையும் கலை, இலக்கியம் படைப்புக்கள் வெறுமனே அவலத்தையும் சோகத்தையும் எடுத்துக்காட்டாமல் இன ஒடுக்கு முறையை எடுத்துக்காட்டி மக்களிடையே விழிப்புணர்வையும் ஒடுக்குமுறைக்கு எதிரான கொதிப்புணர்வையும் தூண்டிவிட வேண்டும்.

தனிமனிதர்களது வாழ்க்கையானது சுயநலச் சுவர்களுக்குள் சிறைப்பட்டு கிடக்கின்றது. இந்த சுயநல வரம்புகளுக்கு அப்பால், தேசிய விடுதலை என்ற பொதுநல விழுமியத்தில் மனிதர்களைக் கவர்ந்திழுக்கும் எழுத்துக்களே இன்றைய காலத்தின் தேவையாக இருக்கின்றது.

இத்தகைய கலை. இலக்கியப் படைப்புக்களே தமிழ் தேசிய வளத்திற்கும் தேசிய விடுதலை எழுச் சிக்கும் உரமூட்டுவதாக அமையும். தேசிய உணர்வை வெளிக்காட்டும் படைப்பாக்கங்கள் தமிழீழ மண்ணில் படிப்படியாக மேலோங்கி வருவதை இன்று நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த போர்க்கால விடுதலை இலக்கியம் மேலும் வளர்ச்சி கண்டு செழிப்புற வேண்டும். எமது மக்களின் விடுதலைத் தாகம் கலை இலக்கியங்களில் வெளிப்பாடு காணவேண்டும். இது எழுத் தாளர்களாகிய உங்களது ஆக்க முயற்சியில்தான் தங்கியிருக்கின்றது. இதனை ஒரு உன்னத மான விடுதலைப் பணியாகக் கருத்தில் கொண்டு, நீங்கள் செயல்பட வேண்டும் என நான் அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன். எமது இயக்கத்தின் விடுதலைக் குரலாக முழங்கிவரும் புலிகளின் குரல் வானொலி ஓசை தனது இலட்சிய பணியில் தொடர்ந்தும் வெற்றிநடை போட எனது நல்லாசிகள்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

**(தமிழீழ மக்கள் தொடர்பு சாதனங்களின் கடமை குறித்து, தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள் 18.02.1998 இல் நடந்த விசேட நிகழ்வில், புலிகளின் குரல் வானொலியில் பணிபுரியும் கலைஞர்கள், எழுத்தாளர்கள் மத்தியில் பேசிய உரையின் முழுவிபரம்)**


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
416 - 587 - 8000
மின்னும் பொன் நகை மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6
சிங்கப்பூர் மற்றும் டுபாய் நகைகள் மிகவும் மலிவு விலையில்..
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24 h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
NORITZ 25
Install Included
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
WHY UPGRADE TO TANKLESS
Endless Supply of Water, SAVE UP to Save Up To 40%
25 YEARS WARRANTY
FREE ESTIMATE
Sale & Service
Repair & Installation
S.Kumar @ (416-993-8001
Airehvac70@gmail.com


K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & Draping ★
Hair Flowers & Bouquet and more. ★
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

# அழகான அந்தப் பனை மரம் அடிக்கடி நினைவில் வரும்



அழகான அந்தப் பனை மரம் அடிக்கடி நினைவில் வரும்
தமிழீழ மண்ணே உன்னை மறப்பேனா நீ என் அன்னை
அழகான அந்தப் பனை மரம் அடிக்கடி நினைவில் வரும்
அடிக்கடி நினைவில் வரும்
அடிக்கடி நினைவில் வரும்

அன்று முற்றத்தில் அழித்து அழித்து நான்
ஆனா எழுதிய மண்ணல்லவா
அன்று முற்றத்தில் அழித்து அழித்து நான்
ஆனா எழுதிய மண்ணல்லவா
இன்று நான் பாடும் பாட்டும் என் தாய்மண் என்னுள்
இசைக்கின்ற பண்ணல்லவா
இன்று நான் பாடும் பாட்டும் என் தாய்மண் என்னுள்
இசைக்கின்ற பண்ணல்லவா
அழகான அந்தப் பனை மரம் அடிக்கடி நினைவில் வரும்
அடிக்கடி நினைவில் வரும்
அடிக்கடி நினைவில் வரும்

எங்கு வாழ்ந்தாலும் எனது தமிழ் நெஞ்சம்
இயங்கும் என் தாயின் எண்ணத்திலே
எங்கு வாழ்ந்தாலும் எனது தமிழ் நெஞ்சம்
இயங்கும் என் தாயின் எண்ணத்திலே
அங்கு தமிழினம் துடிக்கும் பொழுதெல்லாம்
ஆறு பாயுமென் கன்னத்திலே
அங்கு தமிழினம் துடிக்கும் பொழுதெல்லாம்
ஆறு பாயுமென் கன்னத்திலே
அழகான அந்தப் பனை மரம் அடிக்கடி நினைவில் வரும்
அடிக்கடி நினைவில் வரும்
அடிக்கடி நினைவில் வரும்

எதிரி எங்கள் தாய் மண்ணை அழித்ததாய்
இரவு பகல் நூறு கதை கட்டுவான்
எதிரி எங்கள் தாய் மண்ணை அழித்ததாய்
இரவு பகல் நூறு கதை கட்டுவான்
அதிரும் புலிகளின் குண்டு வெடியோசை
அறிந்து தமிழ்பிள்ளை கை தட்டுவான்
அதிரும் புலிகளின் குண்டு வெடியோசை
அறிந்து தமிழ்பிள்ளை கை தட்டுவான்
அழகான அந்த பனை மரம் அடிக்கடி நினைவில் வரும்
அடிக்கடி நினைவில் வரும்
அடிக்கடி நினைவில் வரும்

பகைவர் பாயலாம் உடல்கள் சாயலாம்
எனினும் தமிழ் ஈழம் பணியாது
பகைவர் பாயலாம் உடல்கள் சாயலாம்
எனினும் தமிழ் ஈழம் பணியாது
அகமும் புறமுமாய் உயிரில் கலந்த என்
அன்னை மண் பாசம் தணியாது
அகமும் புறமுமாய் உயிரில் கலந்த என்
அன்னை மண் பாசம் தணியாது
அழகான அந்தப் பனை மரம் அடிக்கடி நினைவில் வரும்
தமிழீழ மண்ணே உன்னை மறப்பேனா நீ என் அன்னை
அழகான அந்தப் பனை மரம் அடிக்கடி நினைவில் வரும்
அடிக்கடி நினைவில் வரும்
அடிக்கடி நினைவில் வரும்



பாடல் வரிகள்: உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்

## தாயகப் பாடல்




# குடா நாடு மீதான முற்றுகைப்போர் முறியடிக்கப்பட்ட முற்றுகை

ஈழப்போர் -2 தொடங்கு முன்னரே, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக ஒரு புதிய போர்முறைத் திட்டமொன்றைச் சிங்கள் அரசு வரைந்து வைத்திருந்தது.

யாழ். குடாநாடு மீதான பூரண இராணுவ - பொருளாதார முற்றுகைப் போர்முறையே அதுவாகும்.

குடாநாட்டின் பத்து இலட்சம் மக்களையும் குடாநாட்டுக்குள்ளே சிறைவத்து, அவர்கள் மீது தீவிரமானதொரு போரைத் தொடுத்து, குடாநாட்டைச் சிங்களப்படைகளிடம் சரணாகதியடையச் செய்வதுதான் அந்த முற்றுகைப் போர் முறைத் திட்டத்தின் நோக்கம்.

குடாநாட்டைச் சரணாகதியடையச் செய்தால், தண்டவாளம் இல்லாத புகைவண்டிபோல தமிழீழ விடுதலைப் போராட்டம் செயலிழந்துவிடும் என்று, சிங்களத் தலைவர்கள் நம்பினர். அந்தளவுக்கு குடாநாட்டை விடுதலைப் போராட்டத்தின் உந்து தளமாகவும் - மையவிசையாகவும் கருதினர்.


ஆனால், 1990 யூன் 10ஆம் திகதி போர் தொடங்கியபோது, தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலான முறையில் புலிகள் இயக்கம் தொடுத்த அதிரடிகள் - முகாம் தகர்ப்புகளால் திகிலடைந்த சிங்களப் படைத்துறை, உடனடியாக குடாநாடு மீதான முற்றுகைப் போரைத் தொடுக்க முடியவில்லை.

ஏற்கெனவே இருந்த ஆட்பலத்தின்மூலம் குடாநாடுமீதான முற்றுகைப் போரையும் நடாத்திக்கொண்டு. அதேவேளை தமிழீழத்தின் மற்றைய பகுதிகளிலும் தமது இராணுவ நடவடிக்கைகளைத் தொடரமுடியும் என்றே, முன்னர் படைத்துறைத் தலைமை எண்ணியது.




ஆனால், போர் தொடங்கிய பின்னர் புலிகளின் பலத்தைக் கண்ட கொண்ட அரசு, தனது படையின் ஆள் எண்ணிக்கையை அதிகரித்த பின்னர்தான் குடாநாடு மீதான முற்றுகைப் போரைத் தொடுக்கமுடியும் என்று உணர்ந்து கொண்டது.

1990 இன் பிற்பகுதியிலும் 1991 இன் முற்பகுதியிலும் சிங்கள அரசு, பெரும் எண்ணிக்கையில் படைக்கு ஆள்திரட்டிப் போர்ப் பயிற்சி கொடுத்தது.



‘ஒப்பரேசன் தவளை’ சமருக்குப் புறப்பட்ட புலிவீரர்கள் முன் உரை நிகழ்த்தி, அவர்களை வழியனுப்பிவைக்கும் தலைவர்.
**“சென்று வாருங்கள் வென்று வாருங்கள்”**




1991 யூலை ஆனையிறவுச் சமரைத் தொடர்ந்து, சிங்கள அரசு தனது முற்றுகைப் போர்த்திட்டத்தைச் செயற்படுத்தத் தொடங்கியது. ஆனையிறவுச் சமரில் புலிகள் இயக்கம் சந்தித்த பெரும் எண்ணிக்கையிலான உயிரிழப்பால் புலிப்படை பலவீனப்பட்டு விட்டது என்று எண்ணிக்கொண்டு, முற்றுகைப் போரை ஆர்வத்துடன் ஆரம்பித்தது.

### முற்றுகைப் போரின் முதலாவது கட்டம்

குடாநாடு மீதான முற்றுகைப் போரைச் சுலபப்படுத்துவதற்குரிய முன்நிபந்தனையாக மணலாறு ஆக்கிரமிக்கப்படவேண்டும் என்று, படைத்துறைத் தலைமை கருதியது. அதன்மூலம் வடக்கு - கிழக்கென்று தமிழர் தாயகத்துக்குக் குறுக்கே வேலி போட்டு, புலிகளின் பலத்தை இருகூறுகளாகச் சிதைத்துப் பலவீனப்படுத்தலாம் என்று நம்பியது.



இதன்காரணமாக முற்றுகைப் போரின் முதலாவது கட்டம், மணலாற்றை ஆக்கிரமிப்பதாகவே இருந்தது.

“ஒப்பரேசன் மின்னல்” என்று சிங்களப் படைகள் பெயரிட்ட அப்படையெடப்பைத் தீரத்துடன் எதிர்த்துநின்ற புலிவீரர்கள், சிங்களப் படைகளின் எண்ணத்தை ஈடேறவிடாது தடுத்துத் திருப்பியனுப்பினர்.

இவ்விதம் குடாநாடு மீதான முற்றுகைப் போரின் ஆரம்பமே தோல்விகண்டது.

### முற்றுகைப் போரின் இரண்டாவது கட்டம்

இப்போது சிங்களப் படைகள் நேரடியாகவே குடாநாடு மீது முற்றுகைப் போரில் இறங்கின. 17.10.1991 அன்று, காரைநகரிலிருந்து ஞானிமடம் வரை ஒரு படைநகர்த்தலைச் செய்து பூநகரிப் பகுதியை ஆக்கிரமித்து, கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையை விழுங்கிக்கொண்டது. புலிகளின் பாரிய எதிர்த் தாக்குதல்கள் ஏது மில்லாமல் இந்த இராணுவ நடவடிக்கை



யைச் சிங்களப் படைகள் நிறைவேற்றின.

ஆனையிறவு, மணலாற்றுச் சமர்களின்பின் புலிகள் இயக்கம் புதிய போர் உத்தியைப் புகுத்தியது. பரவலானமுறையில் மின்னல் வேக அதிரடிகளைக்கொண்ட இப்புதிய போருபாயத்தை வரைந்த தலைவர் அவர்கள், அதை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தத் தொடங்கினார். இப்போருபாயத்தின் பிரதான

நோக்கம், சிங்கள இராணுவ இயந்திரத்திற்கு அடி மேல் அடி கொடுத்து - அதைத்திணறடித்து - குடாநாடு மீதான முற்றுகைப்



போருக்குத் தொல்லை கொடுப்பதுதான்.

இதன் அடிப்படையில் மட்டக்களப்பு - திருக்கோணமலை, மன்னார், மணலாறு, வன்னி என்று சிங்களப் படையணிகள் மீது புலிவீரர்கள் வெற்றிகரமான தாக்குதலைத் தொடுத்தனர்.


ஏறக்குறைய ஓராண்டுகாலம் தொடர்ந்து நடந்த இந்த மின்னல் வேக அதிரடிகளில் 1220 இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர்; அதேயளவு ஆயுதங்களும் மற்றும் வெடிப்பொருட்களும் புலிவீரர்களால் கைப்பற்றப்பட்டன.

ஆயினும் இப் பேரிழப்புகளுக்கு மத்தியிலும் சிங்களப் படைத்துறைத் தலைமை, முற்றுகைப் போரை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியது.



**முற்றுகைப் போரின் மூன்றாவது கட்டம்**

கேரதீவு - சங்குப்பிட்டி பாதை மூடப்பட்டபின், கொம்படி - ஊரியான் பாதைமூலம் மக்கள் பயணம் போயினர். 28.06.1992 அன்று வெற்றிலைக்கேணியிலிருந்து தொடங்கிய ஒரு இராணுவ நடவடிக்கைமூலம், இப்போக்குவரத்துப் பாதையும் மூடப்பட்டது. இந்த நடவடிக்கையுடன் குடா நாட்டுக்கான அனைத்துத் தரை மார்க்கமும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டது. இதனால் கிளாலி நீரேரியூடாக மக்களின் பயணம் தொடங்கியது. ஆரம்பத்தில் இந்த நீரேரிப் பயணத்தை அரசு பெரிய விடயமாக எடுத்துக் கொள்ளவில்லை. நினைத்த நேரத்தில் கடற்படையைக்கொண்டு அப்பாதையை மூடிவிடலாம் என்று அரசு நம்பியது. ஆகவே, கொம்படி - ஊரியான் பாதையை மூடிய கையோடு வேறொரு இராணுவ நடவடிக்கையைச் செய்து, குடாநாட்டு முற்றுகையைத் தீவிரமான ஒரு கட்டத்திற்குக் கொண்ட செல்ல முடிவெடுத்தது.




**முற்றுகைப் போரின் நாலாவது கட்டம்**

இந்த இராணுவ நடவடிக்கை மூலம் தீவுப்பகுதியிலிருந்து நீரேரியைத்தாண்டி, வலிகாமத்தின் கரையோரப்பகுதியை ஆக்கிரமிப்பதாக இருந்தது. ஏற்கெனவே தீவுப்பகுதியில் நிலை கொண்டிருந்த படையினர் காரைநகர், அராலித் துறை, மண்டைதீவு ஆகிய இடங்களிலிருந்து படையெடுப்பைத் தொடங்கி யாழ்நகரப்பகுதி உட்பட வலிகாமத்தின் கணிசமான கரையோரப் பகுதியைக் கைப்பற்ற அரசு திட்டமிட்டது.

ஆனால், இப்படையெடுப்பு தொடங்கும் சமயத்தில் 08.08.1992 அன்று, அராலித்துறையில் வெடித்த ஒரு கண்ணி, படையெடுப்புத் திட்டத்தையே முறியடித்தது. வடபிராந்தியத்தின் படைத்துறைத் தலைமை ஒரு வாகனத்தில் ஏறி படையெடுப்பை நெறிப்படுத்தச்சென்ற சமயத்தில், வேவுப்புலி வீரர்களால் நுட்பமான முறையில் புதைக்கப்பட்ட கண்ணியில் சிக்கி அவர்கள் கொல்லப்பட்டார்கள்.

கடலில் பலம்பெற்ற கடற்புலிகள் 25.08.1993 அன்று நடந்த பாரிய கடற்சண்டையுடன், நீரேரியில் தமது மேலாதிக்கத்தை நிலைநிறுத்தினர்.



அதிஉயர் தளபதிகளானலெப்ரினன்ற் ஜெனரல் கொப்பேகடுவ

மேஜர் ஜெனரல் விஜய விமலரத்ன



றியர் அட்மிரல் ஜயமகா

லெப்.கேணல் பலிப்பான

லெப்.கேணல் ஸ்ரீபன்

லெப்.கேணல் ஆரியரத்ன



கடற்படை லெப்ரினன்ற் விஜயபுர

கடற்படை லெப்ரினன்ற் கொமடோர் லங்காதிலக

மேஜர்அல்விஸ

விக்கிரமசிங்க

**8.8.1992 அன்று அராலியில் நடந்த கண்ணிவெடித் தாக்குதலில், சிங்களப்படையின் அதிஉயர் தளபதிகளானலெப்ரினன்ற் ஜெனரல் கொப்பேகடுவ, றியர் அட்மிரல் ஜயமகா, மேஜர் ஜெனரல் விமல ரத்ன, லெப்.கேணல்கள் ஆரியரத்ன, லெப். கேணல் பலிப்பான, லெப். கேணல் ஸ்ரீபன் , மேஜர்அல்விஸ், கடற்படை லெப்ரினன்ற் கொமடோர்லங்காதிலக, கடற்படை லெப்ரி னன்ற் விஜயபுர ஆகியோரும் அழிக்கப்பட்டனர்.இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்ணி வெடித் தாக்குதலுடன், வடபிராந்திய படைத்துறை ஆணைப்பீடம் (Northern Military Command Structure) முற்றாகவே அழிக்கப்பட்டுவிட்டது.**

**முற்றுகைப் போரின் ஐந்தாவது கட்டம்**


இதைத்தொடர்ந்து அரசின் கவனம், கிளாலி நீரேரிப் பயணத்



தின் பக்கம் முழுமையாகத் திரும்பியது.

எச்சரிக்கைகள், குண்டுத்தாக்குதல்கள், கோரமான படுகொலைகள் மூலம் படகுப் பயணத்தை நிறுத்த அரசு முயன்றது. அதற்கு மாறாக கடற்புலி வீரர்களின் விடா முயற்சியும் - வீரமும் - தியாகமும் படகுப் பயணத்தை நடாத்திக் கொண்டிருந்தன. ஈழப்போர் -2 இன் பிரதான போர்களமாக யாழ். நீரேரி மாறியது. நீரேரியின் சிங்களக் கடற்படை வைத்திருந்த இராணுவ மேலாதிக்கத்தைத் தகர்ப்பதற்கான, கடற்புலிகள் தினந்தோறும் கடற்சண்டையில் ஈடுபட்டனர். மெதுமெதுவாகக் கடற்கரும்புலிகள் நடாத்திய தாக்குதல்களால் இரண்டு நீருந்து விசைப்படகுகளுடன், நாகதேவன் துறை படகுத் தளத்தின் போரிடும் உறுதியும் (Morale) மூழ்கடிக்கப்பட்டது.

நீரேரியில் கடற்புலிகள் மேலாதிக்கம் பெற்றுவிட்டனர் என்பதைத் தன்னளவில் ஏற்றுக்கொண்ட சிங்களப் படைத்துறைத் தலைமை, நீரேரிப் பயணத்தைத் தடுத்து முற்றுகைப் போரை முழுமைப்படுத்தும் நோக்கில் புதிய திட்டத்தை வரைந்தது.




**முற்றுகைப் போரின் ஆறாவது கட்டம்**

கிளாலி இறங்குதுறையைக் கைப்பற்றுவதன் மூலம் கடற்புலிகள் நீரேரிமீது வைத்திருந்த கடலாதிக்கத்தைச் செல்லாக்காசாக முடியும் என்று, படைத்துறைத் தலைமை எண்ணியது. ஆகவே கிளாலியை ஆக்கிரமிக்க விரும்பி 28.09.1993 அன்று, ஆனையிறவிலிருந்து படையெடுப்பைத் தொடங்கியது.








ஆனால், புலோப்பளையில் வைத்து புலிவீரர்கள் தொடுத்த பெருந்தாக்குதலில் அப்படையணி பேரிழப்பைச் சந்தித்தது. இருந்தாலும் சிங்களப் படையணி கௌரவத்தைக் காப்பதற்காகக் கிளாலிவரை “வாரோட்டம்“ செய்த படையினர், மீண்டும் ஆனையிறவுக்கே திரும்பினர்.

இதனால் படைத்துறைத் தலைமை சிங்ளப் பேரினவாதிகளின் கண்டனத்துக்குள்ளானது. இந்தக் கண்டனங்களிலிருந்து தப்புவதற்காக, “இராண்டாவது யாழ் தேவி” பற்றிப் படைத்துறைத் தலைமை கருத்து வெளியிட்டது.

### முற்றுகைப் போரின் ஏழாவது கட்டம்


கிளாலி இறங்குதுறையை மீண்டும் இராணுவம் ஆக்கிரமிக்க இருக்கின்றது என்ற செய்திகளும், நீரேரியை மறுமுனையில் இருந்து கட்டுப்படுத்துவதற்காக ஆனையிறவுத் தளத்தை அமைத்துக்கொண்டிருக்கின்றனது என்ற செய்திகளும் கொழும்புப் பத்திரிகைகளில் வெளி வந்துகொண்டிருந்தபோது,














நீரேரியின் வேட்டை நாயான பூநகரி கூட்டுத்தளம் புலிகளின் “தவளை” ப் பாய்ச்சலுக்கு உள்ளாகியது.
இதில் ஞானிமடம் - நாகதேவன் துறைக் கடற்படைத்தளம் முற்றாக அழிக்கப்பட்டது. கூட்டுத்தளத்தின் பெரும்பகுதியும் புலி வீரர்களால் வெற்றிகொள்ளப்பட்டது. நாகதேவன் படகுத் துறையிலிருந்து, கடற்புலிகள் ஐந்து நீருந்து விசைப் படகுகளைக் கைப்பற்றினர். இந்த விசைப்படகுகளுடனும், ஞானிமடம் - நாகதேவன்துறை கடற்படைத்தளத்தின் அழிவுடனும் நீரேரியின் “தனிக்காட்டு ராஜாவாக“ கடற்புலிகள் மாறினர்.

குடாநாடு மீதான முற்றுகைப் போரின் ஏழாவது கட்டம் இது. புலிகள் உருவாக்கிய இந்த ஏழாவது கட்டத்துடன், குடாநாடு மீது சிங்கள அரசு விதித்த முற்றுகைப் போர் முடிவுக்கு வந்தது.

புலிகளின் தமது இராணுவ பலத்தால் சிங்கள அரசின் இராணுவ முற்றுகையை உடைத்து, வட தமிழீழ மக்களுக்கென ஒரு போக்குவரத்துப் பதை சமைத்துவிட்டனர்.

இவ்விதம், இரண்டாவது ஈழப்போருக்கென்று சிங்கள அரசு தயாரித்த போர்முறைத் திட்டத்தைப் புலிகள் முறியடித்தவிட்டனர்.











# வெளிவந்துவிட்டது

உலக வணிகம்
ULAGA VANIKAM
2025




## விளம்பரமின்றி வியாபாரமில்லை

தங்கள் வணிகத்தை மேம்படுத்திக்கொள்ள உலக வணிகத்தில்
உங்கள் விளம்பரமும் இடம்பெற அழையுங்கள்

www.ulagavanikam.ca

437-345-4203




## தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வ

# உடும்பன்குளம் படுகொலை 19.02.1986

ஒவ்வொரு வருடமும் மாசி மாதம் மக்கள் விவசாய நிலங்களில் அறுவடை செய்யும் காலமாகும். உடும்பன் குளத்தில் தங்களது வயல்களில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் கொட்டகை அமைத்து வயல் வேலைகள் முடியுமட்டும் அங்கேயே தங்கியிருந்து தமது அறுவடையினை முடித்துககொண்டு நெல் மூட்டைகளுடனேயே திரும்புவது வழக்கமாகும். இவ்வாறே 1986ஆம் ஆண்டு மாசி மாதமும் வயல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்களது பிள்ளைகளுடன் தங்கியிருந்து வயலில் அறுவடை செய்து கொண்டிருந்தார்கள். 1986.02.19 அன்று காலை 6.30 மணியளவில் கொண்டைவெட்டுவான் இராணுவ முகாமிலிருந்து கவச வாகனங்களில் வந்த இராணுவத்தினரால் உடும்பன் குள வயல்களில் அறுவடை செய்து கொண்டிருந்தவர்களும், அங்கு தங்கியிருந்தவர்களும் சுற்றி வளைக்கப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கைகள், கண்கள் கட்டப்பட்டார்கள். இவ்வாறு கைது செய்தவர்களில் பெண்கள் இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவிற்குட்படுத் தப்பட்டார்கள். ஆண்களின் ஆண் உறுப்பு வயலில் நெல் வெட்டுவதற்கு பயன்படுத்தப்படும் அரிவாளினால் வெட்டப்பட்டது. இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அனைவரும் மிகவும் மோசமான முறையில் துன்புறுத்தப்பட்டார்கள் பலர் இராணுவத்தினரின் துன்புறுத்தலினாலேயே தமது உயிரினை இழந்தார்கள். பின்னர் எஞ்சியிருந்தவர்களைச் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்ததுடன், அவர்களின் உடலினை அறுவடை செய்யப்பட்ட நெற்சூட்டினுள் ஒன்றாகப் போட்டு எரித்தார்கள். இவ்வாறு 1986.02.19 அன்று காலை இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள், வாடியில் தங்கியிருந்தவர்கள் என நூற்று முப்பத்து மூன்று பேலிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். இவரகளில் ஒரு சிலர் பலத்த காயங்களுடன் உயிர் தப்பியிருந்தார்கள். இரண்டு நாட்கள் கழித்து 21.02.1986 அன்று மட்டக்களப்பு பிரசைகள் குழு வணபிதா சந்திரா பெர்ணான்டோ, நாளேட்டாளர்கள் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று அரைகுறையாக எரிந்த




நிலையிலிருந்த தொண்ணூற்றெட்டுப் பேரினது உடல்களை எடுத்து அடக்கம் செய்தார்கள். உடும்பன் குளத்தில் வயல்களில் அறுவடை செய்து கொண்டிருந்தவர்கள் மீதான தாக்குதலை நடத்திய இராணுவத்தினருக்குப் பொறுப்பாக லெப்டினன்ட் சந்திரபால தலைமை தாங்கினார். இச்சம்பவத்தில் இராணுவத்தினருடன் இணைந்து முசுலிம் குழுக்களும் தாக்குதல்களை நடத்தியிருந்தார்கள்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது தொழில்)

01. இராசையா தவேந்திரன் 18
02. இராமசாமி கந்தையா 48
03. ந.கோபாலகிருஸ்ணன் -
04. ந.விநாயகமூர்த்தி -
05. க.பாக்கியராசா -
06. கதிரேசபிள்ளை வைரமுத்து -
07. குமரவேல் நாகராசா 27
08. கணேசமூர்த்தி பேரின்பன் 28
09. கணேசபிள்ளை மோகனராசா 22
10. கணபதி வடிவேல் 27
11. பத்மநாதன் -
12. மைலன் தியாகராசா 18
13. த.சுமன் 22
14. தாசப்பு செபமாலை -
15. தாசப்பு செல்லையா -
16. துரை இராமலிங்கம் -
17. தம்பிப்பிள்ளை குமாரவேல் -
18. மயில்வாகனம் தியாகராசா. 13
19. மார்க்கண்டு ரவீந்திரன் -
20. முத்துப்போடி சுமனாவதி -
21. முத்துசாமி முத்துலிங்கம் -
22. மசன்னா ஜெயராஜ் -
23. ஆ.நல்லதம்பி -
24. ஆ.சோமசுந்தரம் -
25. பொன்னன் இராசதுரை -
26. பொன்னம்பலம் யோகராசா 18
27. சோமசுந்தரம் கருணாநிதி 21
28. வெங்கிட்டன் குழந்தை -
29. ஞானமுத்து புவனேந்திரன் -
30. சுந்தரம் சின்னவன் 20
31. சீனித்தம்பி -
32. சீனித்தம்பி தவநாகன் 30
33. சீனித்தம்பி அருள்செல்வன் 18
34. சில்வஸ்ரர் இன்னாச்சி 32
35. சுவாமி டேவிட் 29
36. வயிரமுத்து சுந்தரலிங்கம் -
37. வர்ணகுலசிங்கம் புண்ணியமூர்த்தி 21
38. விஸ்வகேது இராசா 23
39. ரங்கன் போல் -

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விரபங்களையும் பெறமுடியவில்லை.

# வங்காலை படுகொலை 17.02.1991

வங்காலைக் கிராமமானது, மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேசசெயலர் பிரிவில் வடக்குத் திசையாக கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது. 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் மன்னார்த்தீவின் நுழைவாயிலிலுள்ள பாரிய சங்கிலிப் பாலமும் தொடருந்துப் பாலமும் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுப் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை உண்டாகியதன் காரணமாக தாழ்வுப்பாட்டுக் கடற்கரையிலிருந்து கடல் வழியாக கற்பிட்டியூடாகக் கொழும்புக்கு மக்கள் பிரயாணம் செய்தனர். இந்நிலையில் வங்காலையைச் சேர்ந்த மக்கள் இராணுவத்தின் கெடுபிடிகளினால் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர். வீடுகளிலிருந்து வெளியேறாதவர்களை இராணுவத்தினர் பலவந்தமாக வெளியேற்றிவிட்டு வீடுகளிலுள்ள பெறுமதி வாய்ந்த பொருட்கள் அனைத்தையும் சூறையாடினார்கள். வங்காலை மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய செபமாலை அவர்களும் ஜஸ்டின் லம்பேட் என்ற வங்காலையைச் சேர்ந்த ஆசிரியரும் இன்னும் சிலரும் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்காகக் கற்பிட்டி வழியாக கொழும்பு சென்று பொருட்களை வாங்கிக் கொண்டு 16.02.1991 இல் படகில் தாழ்வுப்பாட்டுக்கு வந்து அன்றிரவு அங்கு தங்கியிருந்து மறுநாள் 17.02.1991ன்று காலை பத்து மணிக்கு துவிச்சக்கர வண்டியில் வங்காலை வழியாக காத்தான்குளம் சென்றார்கள். இவர்கள் வங்காலைப் பாடசாலைச் சந்திக்கு வரும்போது இராணுவத்தினர் செபமாலை (அதிபர்), ஜஸ்டின் லம்பேட் (ஆசிரியர்), சூசையப்பு (ஆசிரியர்), நவரட்ணம் குருவிக்கந்தையா ஆகியோருடன் ஒரு சிறுவனையும் தடுத்து நிறுத்தி கயிற்றினால் கைகளையும் துணியினால் கண்களையும் கட்டிவிட்டு சூசையப்பு ஆசிரியரைக் கத்தியால் குத்தினார்கள். பின்னால் வந்தவர்கள் இந்த நிகழ்ச்சியை நேரிற் பார்த்துக்கொண்டு சென்று முருங்கன் பங்குத்தந்தையிடம் முறையிட்டனர். மறுநாளாகியும் கைது செய்யப்பட்டவர்கள் வீடு




திரும்பாததினால் உறவினர்களும் பங்குத்தந்தையும் தள்ளாடி இராணுவமுகாமிற்குச் சென்று உத்தரவுபெற்று அவர்களைத் தேடுவதற்கு வங்காலைக்கு வந்தபோது வங்காலைச் சந்தியிலிருந்து உள்ளே செல்லவிடாது இராணுவத்தினர் தடுத்தனர். அப்படியிருந்தும் உறவினர்களில் இருவர் மட்டும் சென்று, சந்திக்கு அருகிலிருந்த பூர்சியல் பீரிஸ் ஆசிரியரின் பூட்டியிருந்த வீடு திறந்திருந்ததைக் கண்டு அதனுள் சென்றபொழுது அந்த வீட்டு அறைகளெல்லாம் இரத்த வெள்ளமாகக் காணப்பட்டது. இரத்தத் தடயங்களின் வழியே சென்று பார்த்தபொழுது வீட்டின் பின்னாலிருந்த கிணற்றுக்குள் ஐந்து சடலங்களும் துண்டங்களாக்கப்பட்டுப் போடப்பட்டிருந்தது. எனினும் அப்போதைய சூழ்நிலையில் உடனடியாக சடலங்களை மீட்க முடியாதிருந்தது.

1993ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியமர்ந்தபோது பூர்சியன் ஆசிரியரின் வீட்டிற்குப் சென்று பார்த்த பொழுது கிணறு மட்டமாக்கப்பட்டிருந்தது. பூர்சியன் ஆசிரியரின் வீட்டுக் கிணற்றில் முன்னர் ஐந்து சடலங்கள் போடப்பட்டிருந்தன என்பதைக் காவற்றுறையினருக்குத் தெரியப்படுத்தி, அவர்களின் உதவியுடன் உயிரிழந்த ஐவரினதும் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டு மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன. பின்னர் ஐவரின் எலும்புக்கூடுகளும் மேலதிக பரிசோதனைகக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டன. இனறு வரை இவை தொடர்பாக எந்த மேலதிக விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. அந்தோனி கொபின்லெம்பேட் ஆசிரியர் -36
02. அந்தோனிப்பிள்ளை செபமாலை - பாடசாலை அதிபர் - 49
03. அப்புக்குட்டி கந்தையா - கமம் - 51
04. செபமாலை அந்தோனி - விவசாயம் - 30
05. சீமான் தற்குரூஸ் சூசையப்பு - பாடசாலை உப அதிபர் - 43

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# வட்டக்கச்சி அரசநெற்பண்ணை குண்டுவீச்சு – 28.02.1991

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் வட்டக்கச்சி என்னும் கிராமம் காணப்படுகிறது. இங்கு வாழ்கின்ற மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும். அத்தோடு சிலர் பகுதிநேர நன்னீர் மீன்பிடி மற்றும் கூலித்தொழிலிலும் ஈடுபட்டுள்ளார்கள். இப்பிரதேசத்தில் “அரச நெற்பண்ணை” என்னும் பெயரில் நெல்வயல்கள் காணப்பட்டன. இங்கு வேலை செய்பவர்கள் தங்கி வேலை செய்வதற்காக வட்டக்கச்சி மூன்றாம் வாய்க்காற் பகுதியில் அரச நெற்பண்ணை விடுதிகள் அமைக்கப்பட்டிருந்தன. இங்கு ஐந்து குடும்பத்தை சேர்ந்தவர்கள் தங்கியிருந்தனர்.

28.02.1991 அன்று காலை 7.00 மணியளவில் வேலைக்குச் செல்வதற்காக விவசாயிகள் விடுதிகளில் காலை உணவு அருந்திக்கொண்டிருந்த வேளையில் விமானப்படையினரின இரண்டு “பொம்பர்” விமானங்கள் வட்டக்கச்சிப் பிரதேசத்தைச் சுற்றிவந்து மூன்று குண்டுகளை வீசியது. இதில் ஒரு குண்டு விடுதிக்குள் வெடிக்க மற்றைய இரண்டும் வயற்பிரதேசங்களிலும் வீழ்ந்து வெடித்தன. இதில் ஒன்பது பேர் உயிரிழந்தனர். மூன்று பேர் காயமடைந்தனர். உயிரிழந்த ஒன்பது பேரில் ஆறு பேரின் உடல்கள் சிதறுண்டு உருக்குலைந்துபோக ஏனைய மூன்று பேரின் உடல்களையும் காயப்பட்ட மூவரையும் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றார்கள். இந்தச் சம்பவத்தை அடுத்து தம் உறவுகளை இழந்த நிலையில் அக்குடும்பங்கள் விடுதிகளை விட்டு வேறிடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றன. இந்தச் சம்பவத்தின் போது சம்பவ இடத்திலிருந்த இராமையா பரமசுந்த்தரம் அவர்க்கள் தெரிவித்ததாவது,

“நான் நெற்பண்ணையில் இருந்த வேளை 28.02.1991 அன்று பொம்மர் விமானம் வந்து குண்டு போட்டது. இந்தச் சம்பவத்தில் சம்பவ இடத்திலேயே ஒன்பது பேர் கொல்லப்பட்டார்கள். மூன்று பேர் காயமடைந்தார்கள். காயமடைந்தவர்களை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு போய் காப்பாற்றிவிட்டார்கள். இறந்தவர்கள் அனைவரையும் ஒரே குழியிற் போட்டு புதைத்தோம். இச்சம்பவத்தில் பண்ணையிலிருந்த கிட்டத்தட்ட நாற்பது ஆடுகள், இருபது கோழிகள் இறந்தன. அவற்றையும் மனித உடல்களுடன் ஒரே குழியிற் போட்டுப் புதைக்க வேண்டிய சூழல் இருந்தது. ஏனென்றால் திரும்பவும் புக்காரா வந்து குண்டு போடுமோ என்ற பயம் இருந்துகொண்டே இருந்தது. சம்பவம் நடந்த இடத்திற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வந்து பார்வையிட்டுச் சென்றது. மக்களை அழிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இந்த இடத்தில் குண்டு போட்டதாக நான் கருதுகிறேன். ஏனென்றால் காலையில் தொழிலுக்குப் போகமுன் 7.30 மணியளவில் வந்து குண்டு போட்டால் எல்லோரும் இறப்பார்கள் என்ற திட்டம்தான். இன்று நேற்றல்ல, 1990ம் ஆண்டிலிருந்தே சிறீலங்கா இராணுவம் தமிழ் மக்களை கொலை செய்து கொண்டுதான் இருக்கிறது.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம்

01. இராசேந்திரம் சித்திரம்மா
02. நாகமுத்து ஆறுமுகம்
03. முனியாண்டி செல்வம்
04. முருகையா சுமதி
05. முருகையா சித்திரா
06. ஆறுமுகம் இராசேந்திரன்
07. ஆறுமுகம் கமலாதேவி
08. ஆறுமுகம் விஜயலட்சுமி
09. சின்னத்தம்பி உமாதேவி

# சுண்டிக்குளம் மீனவர் படுகொலை – 18.02.1994

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவில் அடங்கியுள்ள சுண்டிக்குளம் எனும் பிரசேத்திலுள்ள ஒரு மீனவர் குடியிருப்பு தொடுவை வாய்க்கால் ஆகும். இங்கு வாழ்பவர்களது சீவனோபாயத் தொழில் மீன்பிடி ஆகும். 18.02. 1994 அன்று அதிகாலை 5:15 மணியளவில் இப்பகுதி மீனவர்கள் மீன் பிடிப்பதற்காகக் கட்டு மரங்களில் கடலை நோக்கிச் சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்தவேளை அங்கு வந்த கடற்படையின் “டோறாப்படகு” மீனவர்கள் மீது திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவேளை அங்கிருந்த மீனவர்கள் சிலர் தப்பிச் செல்லும் நோக்கில் கட்டுமரங்களை விட்டு கடலில் குதித்து நீந்தியவண்ணமும் மற்றவர்கள் வலைகளை அறுத்து விட்டும் கரையை நோக்கிக் கட்டுமரங்களை நகர்த்திய வண்ணமும் இருந்தனர். கடற்படையினரோ மீனவர்களை நோக்கித் தொடர்ந்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். துப்பாக்கி வேட்டுக்களின் சத்தம் கரையோரக் குடியிருப்புக்களிலிருந்த அனைவருக்கும் தெளிவாகக் கேட்க தங்கள் உறவுகள் மீன் பிடிக்கச் சென்றதை எண்ணி ஏங்கிக் கரையை நோக்கி ஓடி வந்து அவர்கள் பார்த்தவேளை கடற்படையின் டோறாப்படகு கடற்கரையை மிகவும் அண்மித்து வந்து மீனவர்களைச் சுடுவதைக் கண்டனர். தாக்குதலுக்கு இலக்காகி மீனவர்கள் கடல் நீரில் சோர்ந்து விழுவதைக்கண்டு மக்கள் கதறியழுதனர். கடற்படையின் தாக்குதலில் பத்து மீனவர்கள் கடலில் உயிரிழந்தனர். தாக்குதல் நடந்தன்று மூன்று பேரின் உடல்களே கிடைக்கப்பெற்றன. ஏனைய ஏழு பேரது உடல்களும் மறுதினமே கரையொதுங்கியன. இந்த தாக்குதலினால் பீதியுற்ற மீனவர்கள் சிலமாதங்களாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடவில்லை. இதனால் அன்றைய காலகட்டத்தில் அப்பிரதேச மீனவர்கள் மிகவும் வறுமையான நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இயக்கோ கபிரியேல்பிள்ளை 29
02. இயக்கோப்பிள்ளை நிக்சன் 20
03. கரியோப்பிள்ளை அருள்ஜெயசீலன் 25
04. மனுவேற்ப்பிள்ளை மரியசீலன் 26
05. அந்தோனிப்பிள்ளை இயக்கோப்பிள்ளை 46
06. அமிர்தநாயகம் யோன்பெர்னான்டோ 35
07. ஆசிர்வாதம் வினஞ்சேநிதிமரிசலின் 44
08. யேசுராசா அலோசியஸ் சாந்தகுமார் 22

# கிராஞ்சி படுகொலை – 22.02.2008

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேசசெயலர் பிரிவிலுள்ள கிராஞ்சி சிவபுரம் என்னும் கிராமத்தின் முருகன் கோயிலுக்கு அருகாக உள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது 2008 22ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 8.15 மணியளவில் சிறீலங்கா வான்படையினரின் குண்டுவீச்சு விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. இதன்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு மாதக் குழந்தை, 04வயதுச் சிறுவன், அவர்களின் தாயார் மற்றும் ஆங்கில ஆசிரியர் ஒருவர் என எட்டுப் பொது மக்கள் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் படுகாயமடைந்த நிலையில் 12 பொதுமக்கள் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் மிகவும் ஆபத்தான நிலையிலுள்ள 07 பேர் உடனடியாக நோயாளர் காவுவண்டி மூலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். மறுநாள் பூமணி என்ற வயோதிபர் சிகிச்சை பலனளிக்காது மரணமானார்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. சசிகரன் கௌரிநாயகி, 34
02. சசிகரன் தமிழ்வேந்தன், 06மாதம்
03. சசிகரன் கஜீவன், 04
04. கதிரவேலு திருநீலகண்டன், 79
05. கிருஸ்ணசாமி சிவாநந்தி, 27
06. விஜயகுமார் விதுஜா, 21
07. இந்திரன் லலிதா
08. சுதாகரன் சுமதி, 30
09. தர்மலிங்கம் பூமணி, 68

22.02.2008 அன்று கிராஞ்சியில் காணமடைந்தவர்களின் விரபம்

1. சசிகரன் காருன்னியன் (08)
2. சிறீபதி இராஜேஸ்வரி (33)
3. சத்தியநாதன் தேவநாயகி (43)
4. சதாசிவம் கமலாதேவி (60)
5. சுதாகரன் பானுசன் (06)
6. விஜயகுமார் சிவாநந்தினி (36)
7. விஜயகுமார் டினோசன் (21)
8. அருளாநந்தம் லீலாதேவி (68)
9. அருளாநந்தம் சத்தியவரதன் (43)
10. தேவநாயகி (43)
11. தர்மலிங்கம் பூமணி (68)



# தையிட்டி விகாரை: என்ன செய்யலாம்?






09.02.2025

தையிட்டி விகாரை ஒரு தனியார் காணியில் கட்டப்படுறது என்பதனால் அது சட்டவிரோதமானது என்று கூறி அதனை ஒரு சட்ட விவகாரமாக மட்டும் குறுக்குவது தமிழ் மக்களுக்குப் பொருத்தமானது அல்ல. அது சட்டப் பிரச்சினை மட்டுமல்ல, அதைவிட ஆழமான பொருளில் அது ஓர் அரசியல் விவகாரம். இன ஒடுக்குமுறையின் ஆகப் பிந்திய வெளிப்பாடுகளில் ஒன்று. அது ஓர் ஆக்கிரமிப்பு. ஒரு மரபுரிமைப் போர். இலங்கைத் தீவின் சட்டங்கள் எவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிராக வளைக்கப்படும் என்பதற்கு அது ஒரு சான்று. 2009க்கு பின்னரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்படவில்லை என்பதற்கு அது ஒரு சான்று.

சம்பந்தப்பட்ட சில தமிழர்களின் காணி உரிமை பற்றிய ஒரு சட்டப் பிரச்சினையாக அதை அணுகி, தனி நபர்களுக்குத் தீர்வு காண்பதன் மூலம் அதைத் தீர்த்து விட முடியாது. சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு காணியைக் கொடுத்தோ அல்லது காசைக் கொடுத்தோ அதைத்தீர்த்துவிட முடியாது. அது 2009க்கு பின்னரான இன ஒடுக்குமுறையின் வெளிப்பாடுகளில் ஒன்று. எனவே அதற்குரிய தீர்வும் கூட்டுரிமைகளின் அடிப்படையில்தான் இருக்க வேண்டும்.

எனவே அந்த விடயத்தை அதற்குள்ள பல்பரிமாணத்தின் அடிப்படையில்தான் அணுக வேண்டும்; முன் வைக்க வேண்டும். அதற்கு அரசியல் தீர்வுதான் தேவை.



வடக்கு ஆளுநரிடம் மாற்றுக் காணி கேட்டார்கள்

ஆளுநரின் ஊடகப் பிரிவு விளக்கம்

யாழ். தையிட்டியில் திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணியின் உரிமையாளர்கள் விகாரைக்குச் சொந்தமான அயலிலுள்ள காணியை மாற்றீடாகத் தமக்கு வழங்க வேண்டும் என ஆளுநர் நா.வேதநாயகனிடம் கோரியிருந்தனர் என்று வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தையிட்டியில் தற்போது திஸ்ஸ விகாரை அமைந்துள்ள 02▸

தையிட்டி விகாரை வடக்கில் உள்ள மிகப்பெரிய கூட்டுப் படைத்தளத்தின் எல்லைக்குள் காணப்படுகிறது. படையினரால் கட்டப்படுகிறது; படையினரால் பாதுகாக்கப்படுகிறது. இலங்கைத் தீவில், தமிழ்ப் பகுதிகளில் அரச படைகளால் பாதுகாக்கப்படாத ஒரு பௌத்த விகாரையாவது உண்டா? அரச போகங்களைத் துறந்து பரிநிர்வாணம் அடைந்த அஹிம்சா மூர்த்தியான புத்த பகவானை இதைவிடக் கேவலமாக அவமதிக்க முடியாது.

தமிழ் மக்கள் புத்த பகவானைப் புறத்தியாகப் பார்க்கவில்லை. தமிழ் மக்கள் மத்தியில் ஏற்கனவே பௌத்தம் இருந்திருக்கிறது. தமிழ் மொழியின் காப்பிய காலம் எனப்படுவது பௌத்த, சமண மதங்களின் காலம்தான். ஐம்பெரும் காப்பியங்களும் பௌத்த சமணக் காப்பியங்கள்தான். எனவே தமிழ் மக்கள் பௌத்தத்தை எப்பொழுதும் ஒரு பகை மதமாகக் கருதியது இல்லை. தமிழ் மக்கள் மத்தியில் எப்பொழுதும் மதப் பல்வகைமை உண்டு. தமிழ்த் தேசிய வாதம் என்பது மதப் பல்வகைமையின் மீதுதான் கட்டியெழுப்பப்பட வேண்டும். எனவே தமிழ் மக்கள் மதப் பல்வகைமைக்கு எதிரில்லை. ஆனால் ஒரு மதத்தை ஆக்கிரமிப்பின் கருவியாக பயன்படுத்தும் பொழுதுதான் அது ஓர் அரசியல் விவகாரமாக மேல் எழுகிறது. இங்கு பிரச்சனை மதப் பல்வகைமை அல்ல. மத மேலாண்மைதான். தையிட்டி விகாரை என்பது மத மேலாண்மையின் ஆகப் பிந்திய குறியீடு. கிண்ணியாவில் ஒரு புத்தர் சிலையானது விவகாரமாக மேலெழுந்த பொழுது, முஸ்லிம் கொங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறியதுபோல, “புத்தர் சிலைகளை எல்லைக் கற்களாக நகர்த்தும்” ஓர் ஆக்கிரமிப்பு நடவடிக்கை அது.

உள்ளூர் மக்களின் உணர்வுகளைப் பொருட்படுத்தாமல் படைமைய நோக்கு நிலையிலிருந்து படையினரால் கட்டப்பட்ட ஒரு விகாரை அது. ஒரு விதத்தில் இராணுவ மயமாக்கலின் குறியீடும் தான். எனவே அந்த விடயத்தில் ஆக்கிரமிப்பு ஒன்றை எப்படிக் கையாள்வது என்றுதான் சிந்திக்கலாம். ஒரு வணக்கத் தலத்தை அகற்றலாமா என்ற கேள்வி வரும். அது மத உணர்வுகளைப் புண்படுத்தும் என்ற வாதம் முன்வைக்கப்படும். ஆனால் அதற்கு மதப்பரிமாணம் மட்டும் கிடையாது. அதைவிட ஆழமாக அதற்கு ஒரு படைப் பரிமாணம் உண்டு. படையினரால் வெற்றி கொள்ளப்பட்ட ஒரு நிலத்தில் அது கட்டப்படுகிறது. அதற்குள்ள படைப் பரிமாணம்தான் இங்கு பிரசசனை. அது கட்டப்படும் பிரதேசம் பலாலி காங்கேசன் துறை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய கூட்டுப் படைத்தளப் பகுதி ஆகும். அப்பெருங் கூட்டுப் படைத்தளம் உருவாக்கப்பட்ட பொழுது அங்கே ஏற்கனவே இருந்த இந்து, கிறிஸ்தவ மத வழிபாட்டிடங்கள் சுவடின்றி அழிக்கப்பட்டுள்ளன அல்லது சிதைக்கப்பட்டுள்ளன. அக்கூட்டுப் படைத்தளம் பெருப்பிக்கப்படுகையில் இந்து மற்றும் கிறிஸ்தவ மதப் பிரிவினரின் உணர்வுகள் மதிக்கப்படவில்லை.

தையிட்டி விகாரை அமைந்துள்ள பலாலி, காங்கேசன்துறை கூட்டுப் படைத்தளப் பகுதிக்குள் மட்டும் சிறாப்பர் மடம், வைத்திலிங்கம் மடம், சடையம்மா மடம், சுக்கிரதார திரிகோண சத்திரம் ஆகிய இந்து கட்டுமானங்கள் ஒரு காலத்தில் இருந்தன. சுக்கிரதார திருகோண சத்திரம் எனப்படுவது 1800களில் ஒரு சித்தரால் கட்டப்பட்டது. சூரிய உதயத்தை தரிசிக்கும் ஒரு வழிபாட்டு மையமாக அது இருந்தது. அப்பகுதி இப்பொழுது படையினரால் நிர்வகிக்கப்படும் தல்செவன சுற்றுலா விடுதிக்குள் விழுங்கப்பட்டு விட்டது. கீரிமலையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகைக்கு அருகே ஆதிச் சிவன் கோவில் காணப்பட்டது. அந்த மாளிகைக்கு பின்பக்கம் உச்சிப் பிள்ளையார் கோயில் இருந்தது. அந்தச் சூழலில் பாதாள கங்கை என்று அழைக்கப்படும் வழிபாட்டு முக்கியத்துவம் மிக்க ஒரு தீர்த்தக் கிணறு இருந்தது. அங்குள்ள கடற்படையினரின் படைத்தளப் பிரதேசத்துக்குள் முன்பு கதிரவெளி முருகன் கோவில் இருந்தது. அப்பகுதி மக்கள் கதிர்காம யாத்திரையை அங்கிருந்துதான் தொடங்குவதுண்டு. இவை இந்து மத வழிபாட்டிடங்கள்.

இவை போல கிறிஸ்தவ மத வணக்கத் தலங்களும் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, பலாலியில் இருந்த சென் செபஸ்டியன் தேவாலயம், மயிலிட் டியில் காணிக்கை மாதா தேவாலயம், அந்தத் தேவாலயத்திற்கு அருகே இருந்த திருக்குடும்பக் கன்னிர் மடம், மயிலிட்டி கடற் கரையில் வேளாங்கண்ணி மாதா ஆலயம். போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தையிட்டி விகாரை கட்டப்பட்டுவரும் கூட்டுப் படைத்தளப் பிரதேசத்துக்குள் காணப்பட்ட ஏனைய மதக் கட்டுமானங்கள் இவை. இவை தொடர்பாக மதப் பெரியார்களும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சுட்டிக்காட்டி வருகிறார்கள்.

இவ்வாறு போர்க்காலத்தில் கட்டியெழுப்பப்பட்ட ஒரு பெரும் படைத்தளத்துக்குள் ஏற்கனவே இருந்த பௌத்தம் அல்லாத மத வழிபாட்டு நிலையங்களை அழித்துவிட்டு, அல்லது சிதைத்து விட்டு, அல்லது அப்பகுதிக்குள் பக்தர்கள் செல்வதற்கு அனுமதியை மறுத்துவிட்டு, ஒரு விகாரையை அங்கே கட்டுவதுதான் இங்கு பிரச்சனை.



ஒலை:023 | குரல்:330 | வெள்ளிக்கிழமை 07 பெப்ரவரி 2025 | Friday 07th February 2025 | பக்கம் 16 | விலை 50

- தமிழ் மக்களுக்கு எதிரான -

இனவாத கட்டமைப்பில் இராணுவமும் உள்ளது

-தையிட்டி விகாரையே அதற்கு சிறந்த எடுத்துக்காட்டு-

-பௌத்த காங்கிரஸ் தலைவர் முன்னாள் புலனாய்வு அதிகாரி-

-இனவாத அரசா? இனவாதமற்ற அரசா? தையிட்டி விகாரை விடயத்தில் காணலாம்-

-கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றில் கருத்து-

பிரிவினைகளை வளர்க்கும் நடவடிக்கைகளில் இராணுவம் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளதுடன், தமிழ் மக்களுக்கு எதிரான போர் மனோநிலையில் இருந்து அவர்கள் வெளிவர

வில்லை. என கூறியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,

தையிட்டி விகாரையை கட்டும் விடயத்தில் இராணுவத்தினர், விசேடமாக அப்போதைய இராணுவ தளபதி எப்படி செயற்பாட்டார்கள் என்பதே இராணுவத்தின

ரின் மனோநிலை மாறாமைக்கு சிறந்த உதாரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இந்த விடயம் தொடர்பாக உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இதன்போது மேலு அவர் கூறுகையில், பக்கம் 02

சிங்கள பௌத்தம் அல்லாத ஏனைய வழிபாட்டிடங்களை தட யமும் இல்லாமல் அழிப்பது என்பது இலங்கைத் தீவின் நவீன அரசியல் வரலாற்றின் பிரிக்கப்படவியலாத ஒரு பகுதியாகும். புழக்கத்தில் உள்ள வழிபாட்டிடங்கள் மட்டுமல்ல, தொல்லியல் அகழ்வாராய்ச்சிப் பிரதேசங்களில் உள்ள வழிபாட்டிடங்களையும் சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதம் விட்டு வைக் கவில்லை.

அமெரிக்காவில் வசிக்கும் கலாநிதி சுஜாதா அருந்ததி மீகம என்ற புலமையாளர் தொல்லியல் அகழ்வாராய்ச்சிப் பிரதேசங்களில் எவ்வாறு இந்து மத மரபுரிமைச் சொத்துக்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்பதனைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். காலனித்துவ ஆட்சிக் காலத்தில்-19ஆம் நூற்றாண்டில்-பொலநறுவையில் நிகழ்ந்த அகழ்வாராய்ச்சி தொடர்பான அறிக்கைகளில் பல சிவாலயங்கள் பற்றிய குறிப்புகள் உண்டு என்றும் ஆனால் பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கை விடுபட்ட பின் நிகழ்ந்த அகழ்வாராய்ச்சி அறிக்கைகளில் மேற்படி சிவனாலயங்கள் பலவற்றைப் பற்றிய குறிப்புக்கள் இல்லை என்றும் சுஜாதா அருந்ததி மீகம கூறுகிறார். இது முழுக்க முழுக்க ஒரு பண்பாட்டு இன அழிப்பு. இலங்கைத் தீவின் நவீன அரசியலின் ஒரு பகுதி அது.

எனவே அந்த வரலாற்றுப் படிப்பினையின் அடிப்படையில்தான் தையிட்டி விகாரை பொறுத்து முடிவெடுக்கலாம். அதை அதற்குரிய அரசியல் பரிமாணத்தோடுதான் அணுக வேண்டும். தனியே மதத்துக்கு ஊடாகவோ அல்லது சட்டத்துக்கூடாகவோ மட்டும் அணுகமுடியாது. அதற்கு அரசியல் தீர்வுதான் வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது இன முரண்பாடுகள் இல்லை என்று கூறுகிறது. ஆனால் அந்த விகாரை இன முரண்பாடுகளின் குறியீடு. 2009 க்குப் பின் இனங்களுக்கிடையே, மதங்களுக்கு இடையே, மொழிகளுக்கிடையே மெய்யான பொருளில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் கட்டமைப்பு சார்ந்த மாற்றங்கள் ஏற்படாத ஒரு வெற்றிடத்தில், சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பால்-அதாவது யாப்பில் ஒரு மதத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் அரசுக் கட்டமைப்பால்-தமிழ் மக்களின் ஒப்புதலின்றி தமிழ்ப் பகுதிகளில் கட்டப்படும் பெரும்பாலான பௌத்த வழிபாட்டிடங்கள் ஆக்கிரமிப்பு உள்நோக்கமுடையவைகளே. எனவே ஓர் ஆக்கிரமிப்பை எவ்வாறு கையாள வேண்டும் என்றுதான் இங்கு சிந்திக்கலாம். அது ஒரு அரசியல் தீர்மானம்.

இந்த விடயத்தில் தொடர்ச்சியாக விழிப்பை ஏற்படுத்தி வந்தது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான். ஆனால் அந்த விழிப்பு ஒரு கவன ஈர்ப்பாகத்தான் இருந்து வருகிறது. ஒவ்வொரு முழு நிலா நாளன்றும் விகாரைக்குப் போகும் வழியில் நின்று அந்தக் கட்சியின் விரல் விட்டு எண்ணக்கூடிய உறுப்பினர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதுண்டு. அதை ஒரு மக்கள் மயப்பட்ட போராட்டமாக மாற்ற முன்னணியால் முடியவில்லை. குறைந்தபட்சம் ஏனைய கட்சிகளைக்கூட அதில் இணைத்துக் கொள்ள முடியவில்லை.

அண்மையில் குமார் பொன்னம்பலம் நினைவுப் பேருரையை ஒழுங்குபடுத்திய பொழுது அந்தக் கட்சி அந்த விடயத்தில் கவனம் செலுத்தியது. “மக்கள் மயப்படுத்தப்பட்ட வேண்டிய அரசியல்” என்பதே நினைவுப் பேருரையின் தலைப்பு. ஆனால் நினைவுப் பேருரை ஆற்றிய பேராசிரியர் அந்த தலைப்பின் கீழ் உரையாற்றவில்லை. தமிழ் மக்களை தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் இருந்து எப்படி நிறுவனமயப்படுத்துவது என்ற விடயத்தில் தமிழ்க் கட்சிகளிடம் பொருத்தமான தரிசனங்கள் எவையும் கிடையாது. இதை இன்னும் ஆழமான பொருளில் சொன்னால், தமிழ்த் தேசியவாத அரசியலை எப்படி நிறுவனமயப்படுத்துவது என்று தமிழ்க் கட்சிகள் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

ஆக்கிரமிப்பை முன்னெடுக்கும் சிங்கள பௌத்த பெருந்தேசியவாதமானது அரசுடைய தரப்பு. அதனிடம் அரச வளங்கள் உண்டு திணைக்களங்கள் உண்டு. கடந்த 15 ஆண்டுகளாக திணைக்களங்கள்தான் அரசின் உபகரணங்களாக ஆக்கிரமிப்பை முன்னெடுத்து வருகின்றன. ஆனால் அதற்கு எதிராக போராடும் தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்களிடம் கட்டமைப்பு சார்ந்த சிந்தனை கிடையாது. அதாவது ஆக்கிரமிப்பு நிறுவனமயப்பட்டுள்ளது. அதற்கு எதிரான போராட்டம் உதிரியாக, சிறு திரளாக, கவனயீர்ப்பாகச் சுருங்கிக் கொண்டே போகிறது. முள்ளுக் கம்பிகளால் பாதுகாக்கப்படும் தையிட்டி விகாரை வான் நோக்கி எழுகிறது.

நன்றி: நிலாந்தன்

# தையிட்டி பௌத்த விகாரை, அகற்றப்படவேண்டிய சிங்கள ஆக்கிரமிப்பின் அடையாளம்: சிங்கள பௌத்தத்திற்குள் உள்வாங்கப்படுவதற்கான தமிழ்ப் பண்பாட்டு இனவழிப்பு

**பிரதமர் பணிமனை – நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்**

11.02.2025

2009ஆம் ஆண்டு ஈழத்தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் இனவழிப்புக்குப் பிறகு உள்நாட்டில் ஈழத் தமிழர்கள் ஒப்பளவில் வலுக்குன்றி விட்ட நிலையைப் பயன் படுத்திக் கொண்ட சிறீலங்க அரசு அப்பட்டமான பண்பாட்டு இன வழிப்பில் ஈடுபட்டது - ஈடுபட்டுள்ளது. சிங்கள பௌத்த அரசியல் சமூகத்திற்குள் ஈழத்தமிழர்களையும் முஸ்லீம்களையும் வலுக் கட்டயமாக உள்வாங்க ("சிங்களமயமாக்கம்") முயன்றது. இதனையொட்டியே குருந்தூர்மலை, குச்சவேலி இந்துக் கோயில்கள் அகற்றப்பட்டதும், தையிட்டியில் பௌத்த விகாரை சட்ட விரோதமாககட்டப்பட்டதும், பல தமிழ் பாரம்பரிய தளங்கள் அழிக்கப்பட்டதும் ஆகும்.

தமிழர் தாயகத்தில் இந்து - சைவக்கோயில்களையும், மசூதிகளையும் இடிப்பது ஒரு புதிய நிகழ்வன்று. 1970களில் சிங்கள இனவெறி அமைச்சர் சிறில் மாத்யூ தயாரித்த (பிறகு 1980இல் நூலாக நூலாக Sri Lanka: An Appeal to UNESCO to Safeguard and Preserve the Cultural Property in Sri Lanka Endangered by Racial Prejudice, Unlawful Occupation, Or Wilful Destructionntspte;j) https://www.jaffnahistory.com /Cyril.pdf ஆவணத்தில் 2,000த்துக்கு மேற்பட்ட பௌத்தத் தலங்கள் தமிழர் தாயகத்தில் இருப்பதற்கு சான்று இருப்பதாகக் கூறிக்கொண்டது. கடைசியாக நடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சித்தலைவர் திரு சஜித் பிரேமதாசா தமிழர் தாயகத்தில் 1,000 பௌத்த விகாரைகள் கட்டுவேன் என தேர்தல் மேடைகளில் உறுதியளித்தார். முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமான திரு ரணில் விக்கிரமசிங்கவிடமும் இதேபோன்ற திட்டம் இருந்ததாக நம்பப்படுகிறது. தற்போதைய ஆட்சியாளர்கள் தையிட்டி பௌத்த விகாரையை அகற்ற மாட்டோம் என்று முடிவெடுத்திருப்பது, ஆள்மாறினாலும் ஈழத் தமிழர ் மீதான சிங்கள மேலாதிக்கம் மாறவில்லை என்பதையே காட்டுகின்றது. நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் திரும்பத் திரும்பக் கூறிவருவது போல், சிங்கள அரசியல் சமூகத்தில் பரவலாக வேரூன்றியிருக்கும் பேரின வாதத்தால் தமிழர்கள் கண்ணியத்துடனும் சுதந்திரத்துடனும் வாழ இடமே இல்லை.

1949ஆம் ஆண்டின் நான்காம் ஜெனிவா ஒப்பந்தம், போர் நடவடிக்கைகளுக்குக் கட்டாயம் தேவை என்றால் மட்டுமே பொதுமக்கள் நிலங்களை இராணுவப்படை ஆக்கிரமிப்பதற்கு இடமளிக்கிறது. போர்முடிந்து 15 ஆண்டுகள் ஆகிய பின்னரும் தமிழர் தாய் நிலத்தை சிங்களப்படை ஆக்கிரமித்து நிற்பது தெளிவான சர்வதேசச் சட்ட மீறல் ஆகும். விடுதலைப்புலிகளுக்கும், சிறீலங்காவிற்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் போது சிறீலங்க ஆயுதப்படைகள் பொதுமக்கள் நிலங்களில் இருந்து விலகிக் கொள்ள மறுத்தமை பேச்சுவார்த்தை முறிவுற்றதற்கு ஒரு முதன்மைக் காரணம் ஆகும். தமிழ்ப் பகுதிகளில் பௌத்த விகாரைகள் கட்டப்படுவதற்கும், 2003ஆம் ஆண்டு பாலஸ்தீன நிலத்தில் இஸ்ரேல் சுவர் கட்டியதற்கும் ஒப்புமை காணலாம். இது குறித்து சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice) "சுவர் கட்டியதும் அது தொடர்பான ஆட்சி முறையும் மக்கள் தொகை இனப்பரம்பலில் (Demographic Changes) மாற்றம் ஏற்படச் செய்வதன் மூலம் நான்காம் ஜெனிவா ஒப்பந்தத்தின் உறுப்பு 49, பந்தி 6ஐ மீறுகின்றன..." என்று தீர்ப்புரைத்தது.

பௌத்த விகாரையைச் சுற்றிப் பல்வேறு வசதிகளைக் கட்டுமானம் செய்யவும் இராணுவம் திட்டமிட்டுள்ளது. (பௌத்த விகாரையைச் சுற்றி ஆயுதப்படைகளை நிறுத்திவைப்பது பற்றி பகவான் புத்தர் என்ன நினைப்பாரோ!) சிங்களக் குடிமக்கள் யாரும் வசிக்காத ஓரிடத்தில் பௌத்த விகாரை கட்டுவது தமிழர் தாயகத்தில் சிங்கள அரசியல் சமூகம் செய்யும் தெளிவானவன் குடியேற்றச் செயல் ஆகும். (Colonization) ஆகவே பௌத்த விகாரையை அகற்றுவது வன்குடியேற்ற நீக்கம் (De-Colonization) ஆகும். (சமயத் தலங்களை அகற்றுவதற்கு சிறீலங்காவில் முன்னுதாரணம் உள்ளது. எடுத்துக்காட்டாக 2013ஆம் ஆண்டு தம்புள்ளாவில் இந்துக் கோயில் இடிக்கப் பட்டது. மேலும் கீரிமலை, காங்கேசந்துறை, சம்பில் ஆகிய இடங்களில் இருந்த இந்துக் கோயில்களும், சைவ புனிதத் தலங்களும் இராணுவத்தால் அழிக்கப்பட்டன)

அமெரிக்க ஐக்கிய நாட்டு ராஜாங்கத் திணைக்களத்கினால் 2016ஆம் ஆண்டு சர்வதேச மத சுதந்திர அறிக்கையில் "... வடக்கு கிழக்கு மகாணங்களின் சில பகுதிகளில்" பௌத்தரல்லாத உள்ளூர் மக்களின் மறுப்பையும், எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் "பௌத்தக்குழுக்கள் அல்லது இராணுவத்தினர் பௌத்த விகாரைகள் கட்டிய செயல் பௌத்த சிங்கள சமய மற்றும் பண்பாட்டு ஏகாதிபத்தியத்தின் சர்ச்சைக்குரிய அடையாளங்களாகிப்போயின." எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.. [https://www.state.gov/reports/2016-report-on-international-religious-freedom/sri-lanka/]

2023ஆம் ஆண்டின் மனிதவுரிமைக் கண்காணிப்பக (Human Rights Watch) அறிக்கை... எப்படி அரசு ஆதரவோடு தமிழர்களையும் பிற சிறுபான்மைச் சமுதாயங்களையும் குறிவைத்து நிலப்பறிப்புகள் நடைபெறுகின்றன, எப்படிப் பலநேரம் எதிர்ப்புக் குரல்களை வாயடைக்கச் செய்யக் கொடிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பது பற்றிப் பேசுகிறது., https://www.hrw.org/report/2023/09/18/if-we-raise-our-voice-they-arrest-us/sri-lankas-proposed-truth-and-reconciliation].

தையிட்டி பௌத்த விகாரைக் கட்டுமானம் தொடங்கிய முதல் நாள் தொட்டே தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன், தமிழ் நிலச்சொந்தக்காரர்களுடன்




சேர்ந்து போராட்டங்களும் செய்தது. தமிழர்களின் சொந்த நிலம் சட்ட விரோதமாக பறிக்கப்பட்டிருந்தது. சிறீலங்க அரசு விகாரையை நிரந்தரமாக்கிக் கொள்ளும் பொருட்டு நிலத்தில் "நடந்து முடிந்து போன ஒன்று" என்ற நிலையைத் தோற்றுவிக்க முயல்கிறது. இந்த வஞ்சகச் செயல் தமிழ்த்தேசத்தை பழிப்பது மட்டுமல்ல, சர்வதேசச் சட்டத்தின்பால் வேண்டுமென்றே அவமதிப்புக் காட்டுவதும் ஆகும். சிங்களப் பகுதிகளில் உள்ள இந்துக் கோயில்களையும் மற்றும் முஸ்லிம் மசூதிகளையும் தமிழ்ப் பகுதிகளில் உள்ள சிங்களக் கோயில்களையும் சமப்படுத்த முடியாது. முன்னவை சிங்கள ஆட்சியின் கீழ் உள்ளன் ஆகவே அவற்றை ஆக்கிரமிப்பு அல்லது வன்குடியேற்றத்தின் அடையாளங்களாகக் கருத முடியாது-தமிழ்ப் பகுதிகளில் உள்ள பௌத்த விகாரைகளின் நிலை எதிர் மாறானது.

இது குறித்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் மனிதவுரிமைகளுக்கான ஐநா உயராணையருக்குக் கடிதம் அனுப்பியுள்ளது.

தமிழரின்தலைவிதிதமிழரின்கையில்
தமிழரின்தாகம்தமிழீழத்தாயகம்.

நன்றி.
விசுவநாதன் ருத்ரகுமாரன்
பிரதமர்
நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்



**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**







JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com




அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203




The ESTATE BANQUET AND EVENT CENTRE
The ESTATE BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com




Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# பராந்தகனின் ஈழத்து வெற்றியும் உரக நாணயமும்

இலங்கையிலும், தமிழகத்திலும் கிடைத்த நாணயங்களில் ‘ஶ்ரீலங்கவீர’, ‘உரக’ என்ற பெயர்பொறித்த பொன், செப்பு நாணயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவற்றை முதலாம் இராஜராஜ சோழன் இலங்கையில் அடைந்த வெற்றிக்காக இலங்கையிலேயே வெளியிட்டான் எனக் கூறப்படுகிறது. அவ்வாறு கூறுவதற்குப் பல காரணங்கள் காட்டப்படுகின்றன. இந்நாணயங்களில் பெரும்பாலானவை இலங்கையில், குறிப்பாக வடஇலங்கையிலும் தமிழ்நாட்டில் சோழமண்டத்திலுமே கிடைத்துள்ளன. பாண்டிய நாட்டையும், சேர நாட்டையும் வெற்றி கொண்டதற்காக செப்பு நாணயங்களை வெளியிட்ட இராஜராஜ சோழன் இலங்கை வெற்றிக்காக பொன் மற்றும் பொன்முலாம் பூசப்பட்ட நாணயங்களை வெளியிட்டுள்ளான். வடிவமைப்பிலும் இலங்கையில் வெளியிடப்பட்ட இந்நாணயங்களுக்கும் தமிழ்நாட்டில் வெளியிடப்பட்ட இவன் கால நாணயங்களுக்கும் அடிப்படையில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. தமிழ்நாட்டு நாணயங்களில் சிறிய கோடாகக் காட்டப்பட்டுள்ள மன்னன் அல்லது மனித உருவம் இலங்கை நாணயங்களில் தடித்த கோட்டில் காட்டப்பட்டுள்ளது. இந்த வேறுபாடு ‘ராஜராஜ’, ‘உரக’, ‘ஶ்ரீலங்கவீர’ என்ற பெயர்களுக்கிடையிலான எழுத்தமைதியிலும் காணப்படுகிறது. தமிழ்நாட்டு நாணயங்களில் சிறிதாக உள்ள குத்துவிளக்கு இலங்கை நாணயங்களில் பெரிதாகக் காட்டப்பட்டுள்ளது. இவற்றில் காணக்கூடிய இன்னொரு சிறப்பம்சம் இலங்கை நாணயங்களில் சங்கு ஒரு முக்கிய சின்னமாக இடம்பெற்றிருப்பதாகும். (ஆறுமுக சீதாராமன், 1989, 1:6). இவற்றின் அடிப்படையில் ‘உரக’, ‘ஶ்ரீலங்கவீர’ என்ற பெயர்பொறித்த நாணயங்கள் இராஜராஜ சோழனால் இலங்கையில் உள்ள அக்கசாலையில் வெளியிடப்பட்டதென அறிஞர்கள் பலரும் கூறிவருகின்றனர்.

இவற்றுள் உரக என்ற பெயர் பொறித்த நாணயம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இதன் முன்புறத்தில் நிற்கும் மனித உருவமும், மேலே உயர்த்தப்பட்ட இடக்கையில் பூரணகும்பமும், கீழ்நோக்கிய வலக்கையில் வச்சிராயுதம் போன்ற பொருளும், பின்புறத்தில் விளிம்பைச் சுற்றி வட்டமான சிறு புள்ளிகளும், அதன் உட்புறமாக விளிம்புடன் சங்கும், மத்தியில் தேவநாகிரி எழுத்தில் ‘உரக’ என்ற பெயரும் இடம்பெற்றுள்ளன. ஆயினும் இப்பெயரின் வாசிப்பையிட்டு அறிஞர்களிடையே வேறுபட்ட கருத்துகள் உண்டு. பிறின்செப் (1885), எலியட் (1970:133) முதல், அண்மையில் மிற்சினர் (1998:38) வரை பலரும் இப்பெயரை ‘உரக’, ‘தரக’, ‘இரக’, ‘அக’ எனப் பலவாறு வாசித்துள்ளனர். சிலர் இதன் முன்னெழுத்தை தமிழாகவும் வேறுசிலர் கிரந்தமாகவும் கருதுகின்றனர். அண்மையில் ஈழத்து வெற்றியும் இராஜராஜன் காசும் என்ற தலைப்பில் தஞ்சாவூரில் கிடைத்த உரக நாணயம் பற்றி ஆராய்ந்த குடவாயில் பாலசுப்பிரமணியம் நாணயத்தில் வரும் பெயருக்குரிய எழுத்துகள் 11 ஆம் நூற்றாண்டிற்குரிய தமிழ் மற்றும் தேவநாகரி எனக் குறிப்பிட்டு, இவ்வகை நாணயம் இராஜராஜ சோழனால் வெளியிடப்பட்டதென்பதற்குப் பல சான்றாதாரங்களைக் கொடுத்துள்ளார் (1988). ஆனால் கொட்றிங்ரன், உரக என்ற பெயருடன் தரக, அக என்ற பெயரிலுள்ள நாணயங்களை தனது நூலில் புகைப்படத்துடன் பிரசுரித்துள்ளார் (1924:60-2, Plate,III, Nos. 59-60). நாணயங்களில் பொறிக்கப்பட்ட எழுத்துகளுக்கிடையிலான வேறுபாட்டை நோக்கும் போது உரக என்ற பெயருடன் தரக, அக போன்ற பெயரிலும் நாணயங்கள் வெளியிடப்பட்டது எனக் கருத இடமளிக்கிறது. இருப்பினும் இங்கு உரக என்ற பெயரிலுள்ள நாணயங்கள் மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.


தமிழ்நாட்டில் முதலாம் இராஜராஜ சோழன் காலத்திலிருந்தே நிற்கும் அல்லது இருக்கும் மனித உருவத்துடன் தேவநாகரி எழுத்தில் மன்னன் பெயர்பொறித்த நாணயங்கள் கிடைத்து வருகின்றன. இம்மரபைச் சோழ மன்னர்கள் இலங்கையில் இருந்து பெற்றதால் காலப்போக்கில் தமிழ்நாட்டு வம்சங்கள் வெளியிட்ட நாணயங்களில் வரும் மனித உருவம் பொறித்த நாணயங்கள் ‘இலங்கை மனிதன் நாணயம்’ (Ceylon Man type Coin) என நாணயவியலாளரால் அழைக்கப்பட்டு வருகிறது. இலங்கையில் பண்டுதொட்டு மனித உருவம் பொறித்த நாணயங்களை வெளியிடும் மரபு இருந்துள்ளது (Bopearachchi 1999:104). இதில் மனித உருவத்தைக் கோட்டுருவில் வார்க்கும் மரபு சோழர் வெற்றிக்கு முன்னரே ஏற்பட்டுவிட்டது (Michener 1998:137, Codrington 1924:58-60). இக்காலத்தில் இலங்கை சோழரால் வெற்றி கொள்ளப்பட்டதால் அதன் நினைவாக இலங்கை நாணய மரபைப் பின்பற்றி சோழ மன்னன் இலங்கையிலேயே உரக என்ற பெயர் பொறித்த நாணயங்களையும் வெளியிட்டான் எனக் கூறுவது பொருத்தமாகும். ஆனால் தமிழ் நாட்டில் மனித உருவத்துடன் மன்னன் பெயர் பொறித்த நாணயங்கள் இராஜராஜ சோழன் காலத்திலிருந்து கிடைப்பதால் அவனே உரக என்ற பெயர் பொறித்த நாணயத்தையும் வெளியிட்டான் எனக் கூறப்பட்டு வருகின்ற கருத்து பல நிலைகளில் ஆராயப்பட வேண்டியுள்ளது.

முதலாம் இராஜராஜ சோழனுக்கு முன்னரே வடஇலங்கை முதலாம் பராந்தகனால் வெற்றி கொள்ளப்பட்டமை, மதுரை வெற்றியோடு அவனது 38 ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. இவன் காலத்தில் இருந்துதான் இலங்கையோடு தொடர்புடைய ஈழக்காசு, ஈழக்கருங்காசு என்ற செய்தி கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இதுவரை தமிழகத்தில் கிடைத்த கல்வெட்டுகளில் 17 கல்வெட்டுகள் ஈழக்காசு, ஈழப்பொற்காசு, ஈழக்கருங்காசு பற்றிக் கூறுகின்றன (பவானி 2000:133-4). இதில் 15 கல்வெட்டுகள் முதலாம் பராந்தகச் சோழன் காலத்திற்குரியவை. இவற்றுள் 12 கல்வெட்டுகள் தஞ்சாவூரில் கிடைத்தவை. இப்புள்ளிவிவரம் பராந்தகனுக்குப் பின்னர் ஈழக்காசு பற்றிய செய்தி தமிழ் நாட்டில் படிப்படியாக மறைந்து போவதைக் காட்டுகின்றன. இத்தனைக்கும் பராந்தகனால் வெளியிடப்பட்டவை எனக் கூறக்கூடிய எந்தவொரு நாணயமும் தமிழ்நாட்டில் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. சிலர் ‘மதிராந்தன்’ என்ற பெயர் பொறித்த நாணயத்தை மதுரை வெற்றிக்காக பராந்தகன் வெளியிட்டிருக்கலாம் என்பதற்கு மதுரை வெற்றிபற்றிய கல்வெட்டை ஆதாரமாகக் காட்டுகின்றனர் (நடன காசிநாதன் 1995:59-60). ஆனால் முன்னாள் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் நாகசுவாமி அதை உத்தம சோழன் வெளியிட்ட நாணயமாகக் கூறுகின்றார் (1981:36). ‘மதிராந்தன்’ என்ற பெயர் பொறித்த நாணயத்தை மதுரை வெற்றிக்காக பராந்தகன் வெளியிட்டான் எனக் கொண்டால், சமகாலத்தில் வடஇலங்கையில் அடைந்த வெற்றிக்காகவும் நாணயம் வெளியிட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இல்லை, அதை உத்தமசோழனே வெளியிட்டான் என எடுத்துக் கொண்டால் பராந்தகன் காலக் கல்வெட்டுகளில் வரும் ஈழக்காசு எது என்ற கேள்வி எழுகின்றது.

தமிழ்நாட்டு மன்னர்கள் இன்னொரு நாட்டை வெற்றி கொண்டதன் நினைவாக அந்நாட்டுப் பெயரில் நாணயங்கள் வெளியிட்டதற்குப் போதிய சான்றுகள் உண்டு. மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழநாட்டை வென்றதற்காக ‘சோளநாடு கொண்டான்’ என்ற பெயரிலும், முதலாம் இராஜராஜ சோழன் சேரநாட்டை வெற்றி கொண்டதன் நினைவாக ‘மலைநாடு கொண்ட சோளந்’ என்ற பெயரிலும், இராஜேந்திரசோழன் கங்கை வெற்றிக்காக ‘கங்கை கொண்ட சோழன்’ என்ற பெயரிலும் நாணயங்களை வெளியிட்டுள்ளனர் (Nagaswamy 1981). ஆனால் ஒரு நாட்டு வெற்றிக்காக இரு பெயரில் தமிழ்நாட்டு மன்னர்கள் நாணயங்கள் வெளியிட்டதற்கு இதுவரை சான்றுகள் கிடைக்கவில்லை. இராஜராஜ சோழன் இலங்கை வெற்றிக்காக ‘ஶ்ரீலங்கவீர’ என்ற பெயரில் நாணயம் வெளியிட்டான் என்பது பல்வேறு சான்றாதாரங்களின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அப்படியிருக்கும் போது இந்நாணயத்துடன் ஏன் ‘உரக’ என்ற பெயரில் இன்னொரு நாணயத்தை வெளியிட்டான் என்பது புரியவில்லை. மேலும் இவன் கால நாணயங்கள் இவனது பட்டம் அல்லது விருதுப்பெயர்களை அடிப்படையாகக் கொண்டே வெளியிடப்பட்டுள்ளன. இராஜராஜசோழன், உரக என்பதை பட்டப்பெயராகவோ அல்லது விருதுப்பெயராகவோ பயன்படுத்தியதற்கு எதுவித சான்றுகளும் இல்லை. இந்நிலையில் இந்நாணயத்தை இராஜராஜசோழனே வெளியிட்டான் என அறுதியிட்டுக் கூறுவது பொருத்தமாகவில்லை.

வடமொழியில் உரக என்பதற்கு பாம்பு, நாகம், நாகர் (உரகர்) எனப் பல கருத்துண்டு. யாழ்ப்பாணப் பேரகராதியில் இதற்கு நாகவல்லி, மலை போன்ற கருத்துகள் உண்டு (T.L. 438). ஏறத்தாழ இதே கருத்தையே ‘அக’ என்ற சொல்லும் குறித்து நிற்கின்றது. சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் நாகம் என்பதைக் குறிக்க உரக என்றும், நாகரைக் குறிக்க உரகர் என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பின் மூவர் தேவாரத்தில் நாகம் என்பதைக் குறிக்க உரகம் என்னும் சொல்லும், பின்னர் ஜெயங்கொண்டார் கலிங்கத்துப்பரணியில் நாகர் என்பதைக் குறிக்க உரகர் என்ற சொல்லாட்சியும் கையாளப்பட்டுள்ளது (பாலசுப்பிரமணியம், 1988). கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டின் காவிரியின் தென்கரையில் உள்ள பாம்பூர், உரகபுரம் என அழைக்கப்பட்டதை பல்லவர் கால கூரம் செப்பேடுகள் கூறுகின்றன (பல்லவ செப்பேடுகள் முப்பது, 44, 65). இவ்வுரகபுரத்தை அறிஞர்கள் சிலர் உறையூர் எனவும் கருதுகின்றனர் (வேங்கடசாமி 1983-251). பிற்காலத்தில் இலங்கையில் பௌத்த மதத்தைப் பரப்பிய புத்ததத்தர் இவ்வுரகபுரத்திலிருந்தே பாளிமொழியில் பல நூல்களை எழுதியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆதியில் இலங்கையில் வாழ்ந்த மக்களில் ஒரு பிரிவினரை நாகர் எனப் பாளி நூல்கள் கூறுகின்றன. கி.பி. 1 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட 80 கல்வெட்டுகள் நாக மக்கள் பற்றியும், நாக என்ற பெயரிலுள்ள சிற்றரசர்கள் பற்றியும் கூறுகின்றன. பாளி நூல்கள் அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்த நாக என்ற பெயரிலுள்ள பல மன்னர்களைப் பற்றிக் கூறுகின்றன. வடஇலங்கையில் கிடைத்த நான்கு பிராமிக் கல்வெட்டுக்கள் நாகச் சிற்றரசர்கள் பற்றிக் கூறகின்றன. கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் தமிழர் படையுடன் வந்து ஶ்ரீநாக என்பவன் வடஇலங்கையை (உத்தரதேசம்) கைப்பற்ற முற்பட்டான் எனச் சூளவம்சம் கூறுகிறது (44:703). ஆதியில் நாக என்ற பெயர் இலங்கையில் பரந்துபட்ட மக்களோடு தொடர்புடையதாக இருந்தாலும் காலப்போக்கில் அப்பெயர் பெரும்பாலும் தமிழ் மக்களுடன் தொடர்புடையதாக இருந்து வருவதை இன்றும் வழக்கிலுள்ள நாகன்,



நாகி, நாகம்மாள், நாகமுத்து, நாகநாதன், நாகராசா, நாக வண்ணன் போன்ற ஆட்பெயர்களும் நாகபடுவான், நாக முனை, நாகர்கோயில், நாகதேவன்துறை, நாகதாழ்வு போன்ற இடப்பெயர்களும் உறுதிப்படுத்துகின்றன. பண்டைய கல்வெட்டுகளிலும், மட்பாண்டங்களிலும் வரும் 'ம' என்ற ஒலிப் பெறுமானத்தைக் கொடுக்கும் பிராமி எழுத்தையொத்த குறியீட்டை நாகர்களின் குலச்சின்னமாகக் கூறும் பேராசிரியர் வேலுப்பிள்ளை அக்குறியீடு இலங்கையின் ஏனைய வட்டாரங்களை விட, வடஇலங்கையில் கூடுதலாகக் காணப்படுவதற்கு இங்கு நாக இன மக்கள் வாழ்ந்ததே காரணம் என்றார் (1980A:54).

நாக இனமக்கள் பற்றிக் கூறும் பாளி நூல்கள் அநுராதபுரத்திற்கு வடக்கிலுள்ள பிராந்தியத்தை நாகதீப(ம்) எனவும். இங்கு இரு நாக மன்னர்களிடையே நடந்த சிம்மாசனப் போட்டியை புத்தர் தீர்த்து வைத்ததாகவும் கூறுகின்றன (M.V. VIll: 54-3). இந் நிகழ்ச்சியை மணிமேகலை, சிலப்பதிகாரத்தில் வரும் சம்பவங்களுடன் தொடர்புபடுத்தி அவற்றில் வரும் நாக நாடு இலங்கையில் உள்ள நாகதீபத்தைக் குறிப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது (சிற்றம்பலம் 1993:67-83). கலிங்கத்துப்பரணியில் ஜெயங்கொண்டார் இராஜபாரம்பரியம் பற்றிக் கூறும் போது சோழவம்சத்துக் கிள்ளிவளவன் நாகநாட்டு இளவரசியை மணந்த கதையைக் கூறுகிறார். இதேபோல் பல்லவர்கால வேலூர்ப்பாளையச் செப்பேடு பல்லவ மன்னன் ஒருவன் நாகர் குலமகளை மணந்த செய்தியைக் கூறுகிறது (பாலசுப்பிரமணியம் 1988). ஆயினும் இந் நாகதீபம் எவ்விடத்தைக் குறித்தது என்பதையிட்டு அறிஞர்களிடையே பொதுவான கருத்தொற்றுமை காணப்படவில்லை. சிலர் இவ்விடம் மகாவலி கங்கைக்கு வடக்கிலுள்ள பிராந்தியம் எனவும், வேறு சிலர் யாழ்ப்பாணம் எனவும், இன்னும் சிலர் நயினாதீவு எனவும் கருத்துத் தெரிவித்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் வல்லிபுரம் என்ற இடத்தில் கிடைத்த கி.பி. 3 ஆம் நூற்றாண்டிற்குரிய பொற்சாசனத்தில் நாகதீவ(ப) என்ற பெயர் வருவதைக் கொண்டு இப்பெயர் யாழ்ப்பாணத்தையே குறித்ததாக அறிஞர்கள் பலரும் கருதுகின்றனர். சிலர் இதன் தலைநகர் மணிமேகலையில் வரும் மணிபல்லவம் எனவும், அது தற்போது வல்லிபுரத்தில் உள்ள பல்லப்பை என்ற இடமெனவும் கூறுகின்றனர் (கிருஷ்ணராஜா 1998:25). அநுராதபுரத்தில் 300 இற்கும் மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப் பட்டும் அக்கல்வெட்டுகள் எதிலும் குறிப்பிடப்படாத அநுராதபுரம் என்ற பெயர் தென்மேற்கே அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கிடைத்த கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது (Paranavithana 1970, CVII. No706). வட மத்திய மகாணத்தில் கிடைத்த இன்னொரு பிராமிக் கல்வெட்டு தமிழில் 'நாகநகர்' பற்றிக் கூறுகிறது. கலாநிதி இரகுபதி இவ்விடம் கந்தோரடையைக் குறித்திருக்கலாம் எனக் கருதுகிறார் (பிரசுரிக்கப்படாதது). நிக்கலஸ் என்ற அறிஞர் இந் நாகநகரை கி.பி 9 ஆம் நூற்றாண்டிற்குரிய கல்வெட்டில் வரும் பெயருடன் தொடர்புபடுத்தி இது வவுனியாவின் வட எல்லையில் இருந்த இடமாகக் கூறுகிறார் (1962:81). இதிலிருந்து கல்வெட்டில் வரும் பெயர்கள் அவை காணப்படும் இடங்களை மட்டும் குறித்ததாகக் கொள்வது பிற மூலதாரங்களின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது தெளிவாகின்றது. அதிலும் ஆரம்பகாலக் கல்வெட்டுகள் பௌத்த சங்கத்திற்கு அளிக்கப்பட்ட தானங்கள் பற்றிக் கூறுவதால், பிற இடங்களுக்குச் சென்று தானம் அளித்தோர் தமது தானத்துடன் தனது சொந்த இடத்தையும் கல்வெட்டில் பொறிப்பது ஒரு வழக்கமாக இருந்துவந்துள்ளது.

ஆரம்பத்தில் ஒரு இடத்தைக் குறித்த பெயர், காலப்போக்கில் பரந்த பிரதேசத்தையும், சில வேளைகளில் நாட்டின் பெயரையும் குறித்ததற்கு வரலாற்றில் பல சான்றுகள் உண்டு. கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் வடமேற்கிலங்கையில் உள்ள ஒரு இடத்தின் பெயராக இருந்த தம்பபண்ணி நீண்டகாலம் இலங்கையின் பெயராக அழைக்கப்பட்டதற்குப் பல சான்றுகள் உண்டு. அது போல வடஇலங்கையின் குறிப்பிட்ட இடத்தின் பெயராக இருந்த நாக தீபம் படிப்படியாக பரந்த பிரதேசத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். தொடக்ககாலப் பாளி நூல்களில் நாகதீபம் என்ற பெயர், பிறகாலப் பாளி நூல்களில் நாகதீபம், உத்தரதேசம் என மாறிமாறி அழைக்கப்பட்டதை இக்கூற்றிற்குச் சார்பாகக் கொள்ளலாம். 13 ஆம் நூற்றாண்டிற்குரிய குடமியா மலைக் கல்வெட்டில் வரும் நாக நாடு யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடஇலங்கையின் பரந்த பிரதேசத்தைக் குறிக்கிறது.

முதலாம் பராந்தகச் சோழன் காலத்தில் வடஇலங்கை 'உரக' என்ற வடமொழிச் சொல்லால் அழைக்கப்பட்டிருக்கலாம் என்பதற்கு நிலாவெளியில் கிடைத்த முற்காலச் சோழருக்குரிய கல்வெட்டை ஆதாரமாகக் குறிப்பிடலாம். அண்மையில் இக்கல்வெட்டை விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் சி. பத்மநாதன் பத்தாம் நூற்றாண்டில் தமிழும் கிரந்த எழுத்தும் கலந்து பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டு இங்குள்ள மச்சகேஸ்வர ஆலயத்திற்கு 'உராகிரிகாம', 'கிரிகண்ட கிரிகாம' என்னும் இடங்களில் இருந்து வழங்கப் பெற்ற தேவதானம் பற்றிக் கூறுவதாகக் குறிப் பிட்டுள்ளார். இவற்றுள் 'கிரிகண்ட கிரிகாம' என்ற இடம் பண்டுதொட்டு திருகோணமலை மாவட்டத்தில் இருந்து வருவதற்குப் பாளி இலக்கியங்களையும், கல்வெட்டுகளையும் சான் றாதாரமாகக் காட்டி, இது திரியாயிலுள்ள கந்தசாமி மலை யினை உள்ளடக்கிய நிலப்பரப்பாக இருக்கலாம் என்கிறார் (1998:17-8). இதில் 'உராகிரிகாம' என்ற இடம் எங்கேயிருந்தது எனத் தெரியவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். 'உராகிரிகாம' என்ற இடப்பெயரில் வரும் உரா என்பது நாக என்ற முன் னொட்டுச் சொல்லைக் கொண்டு தொடங்கும் ஒரு இடத்தைக் குறிப்பதாகக் கருதலாம். கிரி என்பதற்கு மலை, முனை, பன்றி, குன்று, பிணையாளி என்ற பல கருத்துண்டு. மலைகள் அற்ற வட இலங்கையின் பல இடங்கள், அதன் அமைவிடத்தின் தன்மை மற்றும் பிற காரணங்களால் கிரி என்ற பின்னொட்டுச் சொல்லுடன் முடிவடைவதைக் காணலாம். இதற்கு நவக்கிரி, குலதிகிரி, இலபின்கிரி, குப்பங்கிரி முதலான இடப்பெயர்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். கம, காம என்ற பின்னொட்டுச் சொல்லுடன் முடியும் பல இடப்பெயர்கள் இலங்கையிலும் ஆந்திராவிலும் கி.மு. 2 ஆம் நூற்றாண்டிலிருந்து வழக்கிலுள்ளன. இது தமிழில் கிராமம் என்ற கருத்தைக் கொண்டுள்ளது. ஆந்திராவில் கி.பி 9 ஆம் நூற்றாண்டிற்குரிய கல்வெட்டுகள் கம, காம என்பவற்றைப் பின்னொட்டுச் சொல்லாகக் கொண்ட இடங்கள் பற்றிக் கூறுகின்றன (Ramachandramurthy 1985:244-5). வடஇலங்கையிலும் இதையொத்த பெயர்கள் பண்டுதொட்டுப் புழக்கத்திலிருந்து வருவதற்கு சோழக் கல்வெட்டில் வரும் வலிகாமம், போத்துக்கேய ஆவணங்களில் வரும் பனங்காமம் போன்ற இடங்களை உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இவற்றின் அடிப்படையில் நிலாவெளிக் கல்வெட்டில் வரும் 'உராகிரிகாம' என்ற வடமொழிப் பெயருக்கு நாகமலையில் உள்ள கிராமம் (நாகமலை) அல்லது நாகமுனையில் (நாகமுனை) உள்ள கிராமம் எனப் பொருள் கொள்ளலாம். யாழ்ப்பாண அரசு கால இலக்கியங்களில் வெளிநாடு எனக் குறிப்பிடப்படும் பூநகரி போத்துக்கேய ஆவணங்களில் 'உரயில் பூநரிம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்குள்ள ஈழஊருக்கு பக்கத்தேயுள்ள கடற்கரைக் கிராமம் ஒன்று நாகமுனை என அழைக்கப்படுகிறது. இவற்றிலிருந்த நிலாவெளிக் கல்வெட்டில் வரும் உராகிராம என்ற இடத்தை பூநகரியுடன் தொடர்புபடுத்தலாம் போல் தெரிகிறது. அவ்வாறு கருதுவதற்கு இன்னொரு காரணமும் உண்டு. 12 ஆம் நூற்றாண்டுக்குரிய சோழக் கல்வெட்டு, இப்பிராந்தியத்திற்கு அண்மையிலுள்ள பதவியாவில் இருந்த சிவன் கோயிலுக்கு கோணாவிலைச் சேர்ந்த வெண்காடான், எறிமணியொன்றைக் கொடுத்ததாகக் கூறுகிறது. இவ்விடம் பூநகரியில் உள்ள கோணவில் என்பதற்கு சில ஆதாரங்கள் உண்டு (புஷ்பரட்ணம் 2000:125-8).




இராஜராஜ சோழனது வடஇலங்கை வெற்றி சிங்கள் இராசதானிக்குட்பட்ட இராஜரட்டைப் பிரதேசம் அனைத்தையும் உள்ளடக்கியிருந்தது. அநுராதபுரத்திற்கு வடக்கிலுள்ள பிராந்தியத்தை நாகதீபம் என அழைத்த பாளி நூல்கள் அதனுடன் இராஜரட்டையையும் உள்ளடக்கிக் கூறியதற்குச் சான்றுகள் இல்லை. அநுராதபுரத்தின் பின்னர் பொலநறுவையைத் தனது தலைநகராகத் தெரிவு செய்த இராஜராஜ சோழன் அதற்கு ஜனநாதமங்கலம் என்ற விருதுப் பெயரையும், இலங்கைக்கு மும்முடிச்சோழ மண்டலம் என்ற பெயரையும் இட்டான். இவையிரண்டும் இராஜராஜ சோழனது விருது, பட்டம் சார்ந்த பெயர்களாகும். இவ்வாறான நிலையில் இராஜராஜன் நாகநாட்டையோ, நாகர்களையோ தனித்து இனங்காட்டி அதன் வெற்றிக்காக நாணயம் வெளியிட்டிருப்பான் எனக் கூறுவதற்கு எந்தக் காரணமும் இல்லை என்றே கூறலாம். இந்த இடத்தில் நாணயத்தில் வரும் உரக என்ற சொல் நாக இன மக்களை அல்லது நாக நாட்டைக் குறித்ததெனக் கொண்டால் இந்நாணயத்தை முதலாம் இராஜராஜ சோழனோடு தொடர்புபடுத்துவதைவிட, பராந்தகச் சோழனுடன் தொடர்புபடுத்துவதே பொருத்தமாக உள்ளது.

முதலாம் பராந்தகச் சோழனின் இலங்கை மீதான வெற்றியைப் பற்றி சூளவம்சம் எதுவுமே கூறாத நிலையில் அவனது 38 ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு 'மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி வர்மன்' எனச் சிறப்பித்துக் கூறுகிறது (S.I.I.11:35). இவ்வெற்றியை கலிங்கத்துப்பரணியும் (பாட்டு 200), இராஜராஜன் உலாவும் (வரி 39-40) கூறுகின்றன. இவற்றில் மிகைப்படுத்தப்பட்ட செய்திகளும் இருக்கலாம். ஆனால் யாழ்ப்பாணத்திற்கு வெளியே பூநகரியில் உள்ள மண்ணித்தலை என்ற இடத்தில் பெருமளவு மண்ணில் புதையுண்ட நிலையில் சோழர்கால ஆலயமொன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இது தொடர்பான கல்வெட்டுகள் இதுவரை கிடைக்காவிட்டாலும் ஆலயத்தின் அமைப்பு, பாணி, கலை வேலைப்பாடுகள், பயன்படுத்தப்பட்ட ஓடுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இது முற்காலச் சோழக் கலைமரபுக்குரியதெனக் கூறமுடிகிறது (புஷ்பரட்ணம் 1993:83-95). அதேபோல் பல்லவராயன் கட்டுப்பகுதியில் கிடைத்த சூரியச் சிற்பமும் பிற்பட்ட பல்லவ அல்லது முற்பட்ட சோழக் கலைமரபுக்குரியதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. பூநகரியில் புழக்கத்தில் இருந்து வரும் குடமுறுட்டியாறு, மண்ணியாறு, நல்லூர், சோழியகுளம் போன்ற இடப்பெயர்கள் பெரிதும் முதலாம் பராந்தகச் சோழன் காலத்தில் சோழமண்டலத்தில் புழக்கத்திலிருந்த இடப்பெயர்களாகும். பாண்டியர், சோழர் அநுராதபுர அரசை வெற்றி கொள்ள முன்னர் வடஇலங்கையில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டியிருக்கலாம். அவ்வாறு கருதுவதற்குப் பாளி இலக்கியங்களிலும் சில சான்றுகள் உண்டு. பேராசிரியர் கே.எம்.டி. சில்வா இக்காலத்தில் தமிழகப் படையெடுப்பாளர்களுக்கு வடஇலங்கையே தளமாக இருந்ததென்பதை சான்றாதாரங்களுடன் குறிப்பிட்டுள்ளார் (1980). சூளவம்சம் கூறும் நாகதீபத்தின் மீதான தென்னிந்தியப் படையெடுப்பு, இவன் படையெடுத்த காலத்துடன் தொடர்புடையதாகும். இதில் வரும் நாகநாட்டை ஒரு அரசுக்குட்பட்ட நாடாகச் சுட்டுவதாக எடுத்துக்கொள்ள இடமுண்டு. ஏனெனில் ஏறத்தாழ இதே காலத்தைச் சேர்ந்த (கி.பி. 9 ஆம் நூற்றாண்டு) உதயணன் பெருங்காதையையும், பிற்பட்ட மயிலநாதர் உரையும் இலங்கையைச் சிங்களம், ஈழம் எனத் தனித்தனியாகக் கூறுகின்றன (வேலுப்பிள்ளை 1986:10). இச்சான்றுகள் இலங்கையில் இருவேறு அரசுகள் இருந்ததெனக் கருத இடமளிக்கிறது. ஈழம் என்ற சொல் வரலாற்று மூலங்களில் சில சந்தர்ப்பங்களில் முழு இலங்கையைச் சுட்டி நின்றாலும் பல சந்தர்ப்பங்களில் நாகநாடான வடஇலங்கையைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். பாண்டியர் காலக் கல்வெட்டில் நாகநாட்டைக் குறித்த ஈழம் (A.R.E.1917:No.588 of 1916), விஜயநகரக் கல்வெட்டில் யாழ்ப்பாணத்தைக் குறிக்கிறது (S.I.I.:No.778). இந்த வேறுபாடு ஆள்புலத்தைக் குறிக்காது அரச தலைநகரத்தைக் குறிக்கின்றது. ஏனெனில் விஜயநகரக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த தலைநகர், பாண்டியர் காலத்திற்கு முன் நாகநாட்டில் (வன்னியில்) இருந்துள்ளது. இங்கே போத்துகேய ஆவணங்களில் வரும் உரயில், நிலாவெளிக் கல்வெட்டில் வரும் உராகிரிகாம, சோழ நாணயத்தில் வரும் உரக என்பவற்றிக்கிடையே பெயரடிப்படையில் ஒருவித ஒற்றுமை காணப்படுகிறது. இதனடிப்படையில் நாகநாட்டை வெற்றி கொண்டதற்காகவே 'உரக' என்ற பெயர் பொறித்த நாணயம் பராந்தகச் சோழனால் வெளியிடப்பட்டதெனக் கூறலாம். இக்காலத்தில் ஈழம் என்ற சொல் வடஇலங்கையின், அதாவது நாக நாட்டின் இன்னொரு பெயராக இருந்துள்ளதைக் காணமுடிகிறது. கல்வெட்டுகளைப் பெரும்பாலும் தமிழில் வெளியிட்ட சோழ மன்னர்கள் சர்வதேச வர்த்தக நோக்கத்திற்காக நாணயங்களை வடமொழியில் வெளியிட்டுள்ளனர். இந்த வேறுபாட்டையே பராந்தகன் காலக் கல்வெட்டுகளில் வரும் ஈழம் என்ற நாட்டுப் பெயரும், நாணயங்களில் வரும் உரக என்ற நாட்டுப் பெயரும் எடுத்துக்காட்டுவதாகக் கொள்ளலாம். இச்சான்றாதாரங்களின் பின்னணியில் வைத்துப்பார்க்கும் போது 'உரக' என்ற பெயர் பொறித்த நாணயத்தை வடஇலங்கையின் வெற்றிக்காக முதலாம் பராந்தகன் வெளியிட்டான் எனக் கூறுவதே பொருத்தமாகும்.

குறிப்பு : நாணயங்களுக்குரிய படங்களைத் தந்துதவிய நாணயவியலாளர் அளக்குடி ஆறுமுக சீதாராமனுக்கு நன்றி.

நன்றி: போராசிரியர் பரமு புஷ்பரட்ணம் – எழுநா முகநூல்

**விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.**

**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு**

**437.345.4203**

# எங்கே தொடங்கியது இனமோதல்?

"நினைவில் வைத்துக் கொள்" என்றோ ஒரு நாள் வெள்ளைக் காரன் இந்த நாட்டைவிட்டுப் போய்விடுவான். ஆனால் அவர்களின் பிள்ளைகளைப் போன்று இருபதனாயிரம், முப்பதனாயிரம் கறுப்பு வெள்ளையர்களை உருவாக்கிவிட்டுத்தான் அவர்கள் வெளியேறுவார்கள். அதன் பிறகு இந்த நாட்டை ஆளப்போவது அந்தக் கறுப்பு வெள்ளையர்கள் தான். அவர்கள் சிங்கள மொழியையும் சிங்களப் பண்பாட்டையும் வெறுப்பார்கள். இன, மத, மொழி வேறுபாடு தேவையில்லையென அவர்கள் உங்களுக்குப் போதிப்பார்கள். மரக்கலக் ஹம்பியாக்களும் தமிழர்களும் கொச்சிகளும் போறகாரன்கள் என எல்லோரும் ஒன்றே என்பார்கள். இந்த நாடு இவர்கள் அனைவருக்கும் உரியது என்பார்கள். விகாரைகளைச் சுற்றி தேவாலயங்களையும், சைவக் கோவில்களையும், மசூதிகளையும் கட்டுவார்கள். இப்படிக் கூறி ஆங்கிலத்திலேயே அதிகாரம் செலுத்துவார்கள். உங்களுக்காக உங்களை விடுவிக்கும் ராஜகுமாரர்கள் பிறக்கும்வரை நீங்கள் காத்திருப்பீர்கள். ஆனால் அந்த இராஜகுமாரர்களை கருவிலேயே அழித்துவிட அந்தக் கறுப்பு வெள்ளையர்களால் முடியும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எமது பிள்ளைகளுக்கு அவர்கள் போதை மாத்திரைகளை கொடுத்துவிடுவார்கள். அதன் பின் எங்கள் பிள்ளைகள் கொட்டையுள்ள வாழைப் பழங்களை விழுங்கிவிட்டு மலம் கழிக்க முடியாமல் முக்கிக் கொண்டிருக்கும் குரங்குகளைப் போல் ஆக வேண்டிவரும்"

இவை சிங்கள பௌத்த மறுமலர்ச்சியின் முன்னோடி என்றும் இலங்கைப் பௌத்தர்களின் ஞானத்தந்தை என்றும் போற்றப் படும் அநகாரிக தர்மபால 1931ஆம் ஆண்டு தனது நாட்குறிப்பில் எழுதிய கொடிய விஷத் தன்மை கலந்த வார்த்தைகள்.




ஐரோப்பியர்கள் இந்த நாட்டை ஆக்கிரமித்ததும் இந்த மண்ணின் மக்களாகிய சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என அனைத்துச் சுதேசிகளையும் அடிமை கொண்டது உண்மை. எனவே ஆங்கிலேயர்களை எதிர்ப்பதும், அவர்களிடம் இருந்து விடுதலை பெறப்போராடுவதும் நியாயமானது என்பது மட்டுமல்ல அவசியமானதும் கூட.

ஆனால், அநகாரிக தர்மபால தமிழர்களையும், முஸ்லிம்களையும், பறங்கியரையும் கூட ஆங்கிலேயருக்குச் சமனான எதிரிகளாகவே பார்க்கிறார். அதாவது நாட்டை ஆக்கிரமித்திருக்கும் ஆங்கிலேயருக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தில் சிங்களவர்களுடன் ஐக்கியப்படுத்தப்படவேண்டிய சக்திகளே தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் ஆகியோர். ஆனால் இவரோ சிறுபான்மை இன மக்களையும் எதிரிகளாகவே பார்க்கிறார்.

எனவேதான் இவரது கொள்கை தேசியம் என்ற வட்டத்தைக் கடந்து ஏனைய இனங்களின் மேல் வெறுப்பையும் மேலாதிக்கப் போக்கையும் காட்டும் பெரும் தேசியவாதம் என்ற சிந்தனைப் போக்கில் நிலைத்திருப்பதை எம்மால் அவதானிக்க முடியும்.

எனவே தமிழர்களின் தோலில் செருப்பு தைப்பேன் என முழங்கிய கே.எம்.பி.ராஜரத்தின, போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் எனச் சொல்லி ஒரு இன அழிப்புக்கலவரத்துக்கு ஆதரவு வழங்கியபோது ஜே.ஆர்.ஜெயவர்த்தன, சிறில் மத்யூ, லலித் அத்துலத்முதலி, ராஜபக்ஷ குடும்பம், எல்லாவல்ல மெத்தானந்த தேரர், இனவாத பொது அமைப்புக்கள், ஞானசார தேரர், அத்துரலிய ரத்தின தேரர் எனப் பல தரப்பினரும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக முன்வைக்கும் இனவாதக் கருத்துக்களும், இன மோதல்ப் போக்கும் இன அழிப்பை நியாயப்படுத்தும் கொள்கைகளும் அப்படி ஒன்றும் புதியவை அல்ல; ஏற்கனவே இருந்த சிங்கள இன மேலாதிக்கப் போக்கு அநாகரிக தர்மபாலவினால் முன்வைக்கப்பட்டது. 1915ஆம் ஆண்டு இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளுக்கும் அதனால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள், சொத்திழப்புக்களுக்கும் தத்துவார்த்தத் தன்மையை அநகாரிக தர்மபால வழங்கினார் என்றால் அது மிகையாகாது.

சில தீவிரவாத பௌத்த அமைப்புக்கள் இறைச்சிக்காக மாடு வெட்டுவதை தடைசெய்ய வேண்டுமெனப் போராட்டம் நடத்தியதை நாமறிவோம். மாடுவெட்டுவதை எதிர்த்து ஒரு தேரர் தன்னைத் தானே தீ மூட்டிக் கொண்டதும் நினைவிருக்கலாம். கனனிப் பிரதேசத்தை மாட்டிறைச்சி இல்லாத புனிதப் பிரதேசமாக்கப் போவதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா முன்னெடுத்த அட்டகாசப் போராட்டத்தை மறந்துவிட முடியாது. இது முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு அராஜக நடவடிக்கையாகவே மேற்கொள்ளப்பட்டது.

இது அப்படி ஒன்றும் புதிதல்ல!

அநகாரிக தர்மபால இப்படி ஒரு பிரசாரத்தை 1911ஆம் ஆண்டு ஆரம்பித்துவைத்தார். அதில் ஒரு வண்டியில் "கள் குடிப்பவன் கேவலமானவன், மாட்டிறைச்சி உண்பவன் இழி சாதியினன்", என எழுதி நாடு முழுவதும் ஒரு வண்டியில் கொண்டுதிரிந்து அவரின் வழிகாட்டலில் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

அவர் எப்பொழுதுமே சிங்கள, பௌத்த இனத்தையும், மதத்தையும் பாதுகாப்பதைவிட சிங்களவர்களுக்கு ஏனைய இனங்கள் மீது வெறுப்பை ஊட்டுவதிலேயே கூடுதல் அக்கறை செலுத்தினார்.

அவர் சிங்கள பௌத்த காயாவில் உரையாற்றியபோது,

"ரிக்சா ஓட்டும் தமிழன் சாப்பிட்டுவிட்டு ரிக்சாவில் ஓய்வெடுக்கும் போது பத்திரிகையைச் சத்தம் போட்டு வாசிப்பான். மற்றவர்கள் அனைவரும் காது கொடுத்துக் கேட்கச் செய்துகொண்டிருப்பார்கள். ஆனால் இந்தக் கொழுத்த சிங்கள மாடுகள் இந்த நேரத்தில் என்ன செய்கிறார்கள்? கள்ளைக் குடித்துவிட்டு சூது விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். சாப்பிட்டது செமிக்க பின்புறத்தைச் சொறிந்துகொண்டு குறட்டைவிட்டுத் தூங்குவார்கள்" என்றார். தனது மக்களை நேர்வழியில் அறிவுரை சொல்லித் திருத்துவதற்குப் பதிலாக இன்னொரு இனத்தின் மீது வெறுப்பை ஏற்படுத்தும் பாணியைக் கையாள்வதை அவதானிக்கலாம். ஒரு இனம் இன்னொரு இனத்தில் பொறாமைப் பட்டு அதன் மேல் வெறுப்புக் கொள்ளும் நிலையையே இப்படியான வார்த்தைகள் ஏற்படுத்தும்.

இன்றைய சிங்கள அரசியல் தலைவர்கள் இவரை சிங்கள இனத்தின் வழிகாட்டி என்றும் பௌத்தர்களின் ஞானத் தந்தை என்றும் தூக்கித் தலையில் வைத்தாலும் உண்மையிலேயே பௌத்த மறு மலர்ச்சிக்கு வித்திட்டவர் ஒரு அமெரிக்க ஆங்கிலேயர் அவர் தான் ஒல்கொட். இன்றும் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக உள்ள வீதி ஒல்கொட் மாவத்தை என்றே அழைக்கப்படுகிறது.

அநகாரிக தர்மபால செய்ததெல்லாம் பௌத்த சிங்கள மறுமலர்ச்சியை ஏனைய இனங்களுக்கும், மதங்களுக்கும் எதிரான வெறுப்புணர்வாகவும், பொறாமையுணர்வாகவும் மாற்றியது தான். அது மட்டுமன்றி ஒல்கொட் ஐ துரோகி எனப் பட்டம் சூட்டியதை அடுத்து அவர் நாட்டைவிட்டே வெளியேறிவிட்டார்.

இத்தனைக்கும் அநகாரிக தர்மபால பிறப்பால் ஒரு பௌத்தர் அல்ல. இவர் ஒரு கத்தோலிக்கர். இவருக்கு கிறிஸ்தவ முறைப்படி தேவாலயத்தில் சூட்டப்பட்ட பெயர் டொன் டேவிட். இவரின் தந்தை கொவிக சமூகத்தைச் சேர்ந்தவர். தாயார் துராஜ சமூகத்தைச் சேர்ந்த கத்தோலிக்கர். இவர்கள் தென்னிலங்கையிலிருந்து வந்து கொழும்பில் குடியேறி ஒரு மரத்தளபாடத் தொழிற்சாலையை அமைத்து அங்கேயே தங்கிவிட்டனர்.

1883 இல் கொட்டாஞ்சேனையில் கத்தோலிக்கர்களுக்கு எதிராக ஒரு கலவரம் இடம்பெறுகிறது. அதில் ஒரு பொலிஸ்காரர் கொல்லப்படுகிறார். அப்போது பிரம்ம ஞான சங்கத்தின் மூலம் பௌத்தத்தின் மறுமலர்ச்சிக்குப் பாடுபட்ட வெள்ளையரான ஒல்கொட் இக் கலவரம் பற்றி ஆராய 1884 இல் வருகிறார். அவர் பௌத்தர்களுக்கு நியாயம் கோரி வாதாடி வெற்றி பெற்றுக் கொடுக்கிறார். அதன் காரணமாக பௌத்தர்கள் மத்தியில் அவருக்கு ஒரு தனியான கௌரவம் வழங்கப்படுகிறது.

அக்காலப் பகுதியில் கல்கிசை புனித தோமஸ் கல்லூரியில் மெட்ரிக்குலேசன் வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருந்தார் டொன் டேவிட். அப்போது கல்லூரியை விட்டு வெளியேறிய டொன்பிலிப் தான் பிரமஞான சங்கத்தில் சேர்வதற்கான தன் விருப்பத்தைத் தெரிவிக்கிறார். ஒல்கொட், பிரமஞான சங்கத்தின் இலங்கைக் கிளையின் அடுத்த தலைவர் லெப்.பீட்டர் ஆகியோரின் உரைகளையும் கட்டுரைகளையும் ஆங்கிலத்திலிருந்து சிங்களத்துக்கு மொழிபெயர்க்கும் பணியில் அமர்த்தப்படுகிறார். 1884இல் சென்னை அடையாற்றிலுள்ள பிரமஞான சங்கத்தின் தலைமையகம் சென்று டொன். டேவிட் அங்கு பாளி மொழியைக் கற்கிறார். 12.02.1886இல் அவர் பௌத்த மதத்துக்கு மாறி தனது பெயரை தர்மபால ஹேவ விதாரண என மாற்றிக்கொள்கிறார். ஒரு கத்தோலிக்கராகப் பிறந்து கத்தோலிக்கராக வாழ்ந்த அவர் தனது 22ஆவது வயதிலேயே ஒரு பௌத்தராக மாறுகிறார்.

அதையடுத்து இவர் தீவிர பௌத்த மத பிரசாரத்தில் இறங்கினார். பௌத்த பத்திரிகைகள் வெளியிடுவதில் தீவிரமாக ஈடுபட்டதுடன் பௌத்த பாடசாலையின் முகாமையாளராகவும் செயற்பட்டார். பின்பு பிரம்மஞான சங்கத்தின் பௌத்த பிரிவின் செயலாளராகவும் பௌத்த பாதுகாப்பு அமைப்பின் இணைச் செயலாளராகவும் செயற்பட்டார். இக்காலப் பகுதியில் அவரின் பிரசாரங்கள் பௌத்தத்தை வளர்ப்பது என்ற எல்லையைக் கடந்து தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான துவேஷப் பரப்புரைகளாக மேலெழுந்தன.

1906இல் சிங்கள பௌத்தம் என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்படுகிறது. இது அப்பட்டமான இனவாத பிரசாரத்தை மேற்கொள்கிறது. இதன் ஆசிரியராக ஆரம்பத்தில் பியதாஸ சிறிசேன என்பவர் செயற்பட்டார். பின்பு அதன் தலைமை ஆசிரியராக அநகாரிக தர்மபால பொறுப்பேற்ற பின்பு அப் பத்திரிகை படுமோசமான இனவெறியைக் கட்டவிழ்த்துவிடுகிறது.

கொழும்பு, கண்டி ஆகிய நகரங்களிலும் வர்த்தகத்திலும் ஏற்றுமதி இறக்குமதித் துறையிலும் ஆதிக்கம் செலுத்திவந்த முஸ்லிம்களை இலக்குவைத்து படுமோசமான இனவெறிப் பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது, சிங்களவர்களுக்குரிய இலங்கையின் வர்த்தகத்தை சோனகர்களும், தமிழர்களும் மலையாளிகளும் கைப்பற்றிவிட்டனர் எனப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதன் பலனாக 1915 முஸ்லிம்களுக்கு எதிரான பெரும் இன அழிப்புக் கலவரம் கட்டவிழ்த்து விடப்படுகிறது. இதில் கொழும்பில் மட்டும் 38 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். மூவாயிரம் வர்த்தக நிலையங்கள் உட்பட தொழில் நிலையங்கள் நிர்மூலமாக்கப்படுகின்றன. ஏராளமான வீடுகள் அழிக்கப்படுகின்றன.

நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே பிரிட்டிஷ் அரசாங்கம் "மார்ஷல் லோ" என்ற கண்டவுடன் சுடும் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருகிறது.

இதில் ஒரு சிங்களப் பெரும் வர்த்தகர்களின் இரு மகன்மார் உட்பட வீதிகளில் இறங்கி கலவரங்களில் இறங்கிய சிலர் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். டி.எஸ்.சேனநாயக்க, எம்.ஆர்.சேனநாயக்கா, பரன் ஜயதிலக, ஏ.க.குணசிங்க போன்ற சிங்களத் தலைவர்கள் கைது செய்து சிறையில் அடைக்கப்படுகின்றனர்.

அநகாரிக தர்மபால இனவாதப் பிரசாரம் செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு 9 மாதங்கள் வீட்டுக்காவலில் வைக்கப்படுகிறார்.

இலங்கையில் தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்த சொலமன் வெஸ்ட் டயஸ் பண்டாரநாயக்க, போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்று பிரகடனம் செய்து இன அழிப்பை தூண்டியவருமான யூனியர் ரிச்சேட் ஜெயவர்த்தனா ஆகியோரும் டொன்டேவிட்டாக இருந்து பௌத்த தர்மபால ஹேம விதாரணவாய் மாறியதைப் போல கிறிஸ்தவர்களாயிருந்து, பௌத்தர்களாக மாறியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பௌத்த சிங்கள தேசியம் என்றால் அது ஏனைய இனத்தவர்களையும் மதத்தவர்களையும் வன்முறைகள் மூலம் அழித்து அடக்கி அடிமைகொள்வது என்ற அடிப்படை இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பே அநகாரிக தர்மபால போன்றவர்களால் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்பது தான் நாம் அறியவேண்டிய உண்மை.



எனவே இனவாத அரசியலை முன்வைத்து ஏனைய இனங்களை அடிமைகளாகக் கருதும் பேரினவாதப் போக்கினை மூலதனமாகக் கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்ற முயலும் அரசியல்வாதிகள் அநகாரிக தர்மபாலவை தமது ஞானத் தந்தையாகப் போற்றுவதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

நன்றி: நா.யோகேந்திரநாதன்

# உக்ரைன் – ரஷ்ய போர்க் களத்தில் கொல்லப்படும் சிறீலங்கா வீரர்கள்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா

08.02.2025

அண்மையில் ரஷ்ய - உக்ரைன் மோதல்களில் இலங்கையின் பல முன்னாள் இராணுவத்தினர் உயிரிழந்துள்ளதாக சிறீலங்கா அரசு உறுதிப்படுத்தியுள்ளது.

தனியார் இராணுவ கூலிப்படைகளுக்கு வன்முறைகள் ஒரு பொருட்டே இல்லை. கொடூரங்களை தவிர வேறு எதுவும் அவர்களுக்கு மீதம் இருக்காது. அதிக கூலி, அதிக கொடுமைகள் என்ற கோட்பாட்டில்தான் இந்த தனியார் இராணுவப்படைகள் செயல்படுகின்றன.

### உக்ரைன் – ரஷ்யாவில் கூலிப்படை:

உக்ரைன் - ரஷ்ய போரில் கூலிப்படையாக இணைந்துள்ள இலங்கையர்களில் 2025 ஜனவரி 20 ஆம் திகதி வரையில் 59 பேர் உயிரிழந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அண்மையில் தெரிவித்தார்.

உக்ரேனிய போரில் சிறீலங்காவின் பல இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாக கடந்த ஆண்டு வெளியான தகவல்கள் தெரிவித்தன. கடந்த சில ஆண்டுகளில் பல இலங்கையர்கள் உக்ரைனிய இராணுவத்தில் கூலிப்படைகளாக இணைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.





இந்நிலையில் ரஷ்ய இராணுவத்தில் கடந்த சில ஆண்டுகளில் 554 இலங்கையர்கள் இணைந்துள்ளதாகவும், அவர்களில் யாரும் வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை என்றும் தெரியவந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இலங்கையின் நூற்றுக்கணக்கான முன்னாள் படைவீரர்கள் உக்ரேனிய எல்லையிலுள்ள போர்க்களங்களில் உயிரிழப்பதாக, அங்கிருந்து தப்பிய முன்னாள் படைவீரர் ஒருவர் பரபரப்பு தகவலை கடந்த ஆண்டு தெரிவித்திருந்தார்.

இலங்கையிலிருந்து பலகுழுக்களால் வெளிநாட்டு வேலைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள இலங்கையை சேர்ந்த 200க்கும் மேற்பட்ட முன்னாள் படைவீரர்கள் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.



உக்ரைன் - ரஷ்ய போர்களங்களிற்கு இலங்கையில் ஆட்களை சேர்ப்பது கடந்த வருடத்தில் தீவிரமடைந்தது.

இதே வேளை கியுபா போன்ற இலத்தீன் நாடுகளில் இருந்தும் பெருமளவு கூலிப்படையினர் ரஷ்யாவில் காணப்படுகின்றனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### இந்தியா – நேபாள கூலிப்படைகள்:

உக்ரைனில் தனியார் இராணுவ கூலிப்படையில் சேர்வதற்கு உலகம் முழுவதும் இருந்து பலர் ஆர்வமாக இருப்பதாக செய்திகள் வெளிவந்தன.

குறிப்பாக இந்தியா, நேபாள நாட்டிலிருந்து ஏராளமான இளைஞர்கள், முன்னாள் ராணுவ வீரர்கள், இத்தகைய தன்னார்வ இராணுவ குழுவில் சேர்கிறார்கள் என்று ஓர் செய்தி வெளிவந்தது.

இவ்வாறு சேரக்கூடிய வீரர்களுக்கு ஓராண்டுக்குப் பிறகு அந்நாட்டு குடியுரிமை வழங்கப்படும் என்ற சலுகை இருப்பதாகவும் அதனால், மேலும் பலர் சேருகிறார்கள் என்றும் தெரிகிறது.

நேபாள அரசு இது அவர்களுடைய தனிப்பட்ட விஷயம், நாங்கள் என்ன செய்ய முடியும் என்ற வகையில் கையை விரித்துக் கொண்டார்கள்.

இந்திய அரசு, நேபாள வீரர்களை இராணுவத்தில் எடுப்பதை நிறுத்திவிட்டு மட்டுமல்ல, அக்னி பாத் என்ற பெயரால் நிரந்தர இராணுவ பணியை ஒழித்துக் கட்டியதும் இதற்கு முக்கிய காரணம் என்றும் வேலைவாய்ப்பு அற்ற இளைஞர்கள் இது போன்ற அண்டை நாடுகளில் இணைவது இந்தியாவுக்கு ஆபத்து என்று தெரிவித்துள்ளது.

### ரஷ்ய வாக்னர் கூலிப் படைகள்:

முன்பு ரஷ்யாவில் இயங்கிய தனியார் இராணுவப் கூலிப் படையான வாக்னர் குழுவும் (Wagner Group), உக்ரைன் யுத்தத்தில் தீவிரமாக களமாடியது. ஆனால் 2023 ஜூனில் தளபதி எவ்கேனி பிரிகோஷின் யுத்த களத்தில் இருக்கும் போது ரஷ்ய இராணுவ தலைமைக்கு எதிராக கலகத்தை ஆரம்பித்தார்.

ஆயினும் 24 மணி நேரத்தில் அவர் அறிவித்த கலகம் முடிவுக்கு வந்தது.




வாக்னர் குழுவின் கலகத்தை ரஷ்யாவின் அதிபர் விளாடிமிர் புடின் மக்களுக்கு எதிரான தேசத்துரோகம் என்று குற்றம் சாட்டி, ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்படும், மரண தண்டனை உட்பட சட்ட ரீதியான அனைத்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

உடனடியாக பிரிகோஷின் தனது கலகத்தை வாபஸ் வாங்குவதாக அறிவித்தார். யுத்த காலத்தில் இது ஒரு மோதலாக மாற வேண்டாம், அப்படிப்பட்ட மோதல் உக்ரைன் யுத்தத்திற்கு ரஷ்யாவிற்கு பின்னடைவை ஏற்படுத்தும் என்ற பின்புலத்தில் அவர் மீதான சட்ட நடவடிக்கை கைவிடப்பட்டு பெலரஸ் நாட்டில் தஞ்சமடைய அனுமதிக்கப்பட்டார்.

ஆனால் அவர் டூலா (Tula) நகர விமான விபத்தில் கொல்லப்பட்டார். இந்த கலகத்தை அடுத்து விளாடிமிர் புடின் ரஷ்ய இராணுவத்தை ஒன்றுபடுத்தி இருப்பதுடன், மக்களின் ஆதரவையும் அதிகப்படுத்தி இருப்பதாக கள நிலவர தகவல்கள் தெரிவித்தன.

### ஆட்கடத்தலில் இராணுவ அதிகாரிகள்:

ரஷ்ய உக்ரைன் போரில் ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களை கூலிப்படையாக பயன்படுத்தி ஆட்கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி உட்பட மேலும் பலர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை அரசு கடந்த ஆண்டு தெரிவித்தது.

தற்போது இலங்கை இராணுவத்தில் பொது மன்னிப்புக்காக சுமார் 15,000 பேர் விண்ணப்பித்துள்ளனர். 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் சட்டவிரோதமான முறையில் இராணுவத்தை விட்டு வெளியேறியவர்களின் எண்ணிக்கை 357 ஆக காணப்பட்டது. அத்துடன் சட்டவிரோதமான முறையில் சேவையிலிருந்து விலகி மீண்டும் பணிக்குத் திரும்பியவர்களின் எண்ணிக்கை 799 என அறிவிக்கப்பட்டுள்ளது என அரசு அறிவித்துள்ளது.

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் கடமையாற்றி அங்கவீனமடைந்த அல்லது யுத்தத்தில் உயிரிழந்த இராணுவத்தினருக்கு 55 வயது வரையில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் பல முன்னாள் இராணுவ வீரர்கள் கூலிப்படையாக அனுப்பப்படுவதற்கு, அரசின் உயர் அதிகாரிகளும் பொறுப்பு என்றே கூறப்படுகிறது.

இதேவேளை 2020 ஆம் ஆண்டு மட்டும் தனியார் ராணுவ கூலி படைகளுக்கான அமெரிக்காவின் முதலீடு 224 பில்லியன் டாலர் என்ற தகவல்களும் வெளியாகியுள்ளன. ஆனால் 2030 ஆம் ஆண்டு இது 457 பில்லியன் டாலர் அளவிற்கு உயரம் என்று மதிப்பீடு செய்யப்படுகிறது.



அனேகமாக ஒரு நாட்டின் இராணுவத்திற்கு சமமாக தனியார் இராணுவ கூலிப்படைகளும் இன்றைய தினம் உருவாகி விட்டது அல்லது உருவாக்கப்பட்டுள்ளது என்றே கருத வேண்டியிருக்கிறது.

# REWARDING YOUR EVERYDAY

MyEverydayShopping is a one-stop-shopping-platform for your everyday essential needs. It is integrated with an efficacious platform to create a better economy with a profitable Points Program that benefits all of our shoppers and merchants.

EVERYDAY SHOPPING



**1-855-856-6875**

## Merchant Benefits

- Website Template: Modern design for improved user experience.
- Personalized Marketing Tools: Push notifications, personalized gift cards, and electronic flyers.
- Convenient Payment Options: EV gift wallet for seamle transactions.
- Comprehensive Analytics: Access full reporting and tracking online.
- Customer Engagement: Loyalty programs and "Find Me" feature to attract and retain customers.
- Financial Security: Build income for future sale or retirement.
- One-time Registration Fee: $199 to unlock these benefits.

## Member Benefits

- Point Accumulation: Earn 4% to 60% on purchases.
- Diverse Product Range: Access everyday essentials and a wide variety of products and services.
- Shopping Flexibility: Enjoy convenience with both local and online shopping options.
- Gift Card Rewards: Benefit from gift cards and an EV gift wallet.
- Simple Tracking: Easily monitor progress with our user-friendly tracking system.
- Networking Opportunities: Build your own shopping network effortlessly.
- Exclusive Privileges: Gain mining rights worth $60.




WWW.MYEVERYDAYSHOPPING.COM



# விடியும்

-சுதாமதி-

நாய்களின் பெருஞ்சத்தமான குரைப்புக்கள் தொடர அவர்கள் வழமையாக வந்து போவார்கள். அந்நேரம் மட்டக்களப்பின் ஒவ்வொரு மூலையும் பயத்தால் விழிபிதுங்கிக் கிடக்கும். தங்கச்சி ஓடிவந்து, பயத்துடன் அம்மாவோடு ஒட்டிக்கொள்வாள். அவர்களை மருட்சியோடு பார்ப்பாள். அம்மா மட்டும் அதே வெறித்த பார்வையோடும் சோகம் அப்பிய முகத்தோடும் வருவது வரட்டும் என்ற அசட்டுத் துணியில் நிற்பாள். அவர்களைப் பார்க்க அருவருப்பாக இருக்கும். அவர்களது கரகரப்பான குரலும் மொழிபுரியாத பாசையும் அம்மாவை மருளச் செய்யும்.

கனத்த சப்பாத்துக் காலடிகளின் பதிவோடு இன்னும் அவர்கள் வழமைபோல வந்தார்கள். முற்றத்திற் படுத்திருந்த மெலிந்து போன சீவனற்ற கிழட்டு நாயை காலால் உதைத்தார்கள். அது வலி தாளாது அலறலோடு சுருண்டு விழ பெரிதாகச் சிரித்தார்கள்.



அம்மாவுக்கு நெஞ்சு படபடத்தது. தங்கச்சி, அம்மாவின் சேலைத் தலைப்பை விடாது பற்றிக் கொண்டாள். அவர்களது உரத்த அதட்டலான குரல், அம்மாவுக்குப் பயத்தை ஊட்டியது. அவர்கள் அம்மாவிடம் ஏதோ கேட்டனர் அம்மா மலங்க மலங்க விழித்தாள். அவர்களோடு வந்த "எங்களில் ஒன்று" அதை மொழி பெயர்த்தது.

"நீ போனகிழமை மகனைப் பார்க்க யாழ்ப்பாணம் போனியாம்; உண்மை".

"இல்லை ஐயோ, நான் கொழும்புக்குத்தான் போனனான்" - அம்மாவுக்கு நாக்குழறியது. வார்த்தைகள் தடுமாறின.

"அப்ப என்ன பலகாரம் செய்துகொண்டு போன மாதிரிக் கிடந்தது. எங்களுக்கென்ன காது குத்துறியோ"?

மரியாதையிழந்த அவனது வார்த்தைகளைக் கேட்க அம்மாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இயலாமையோடு மனதுக்குள் திட்டித்தீர்த்தாள்.

"இஞ்சை எங்கடை கட்டுப்பாட்டுக்குள்ளை இருந்துகொண்டு, எங்களுக்கு வாலாட்ட நினைக்காதையுங்கோ; தெரியுமே. யாழ்ப்பாணம்... பெடியளைப் பார்க்கப் போறது: அப்பிடி, இப்பிடியெண்டு கேள்விப்பட்டமோ, கொளுத்திப் போடுவம்; கவனம்" உறுமிக்கொண்டு போனார்கள், அம்மாவின் கால்கள் படபடத்தன். அவளது சொரசொரத்த உதடுகள் ஒருமுறை ஆத்திரத்தோடு மடிந்தன. "எப்பதான் நாங்கள் நிம்மதியா இருக்கப் போறமோ? அம்மாவின் வாய் ஏக்கத்தோடு முணுமுணுத்தது. தங்கச்சி அம்மாவைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

"நாங்கள் எங்கையாவது போய்விடுவமே அம்மா"! - அவளது பிஞ்சு விழிகளில் ஈரம் பனித்தது. அம்மாவுக்கு தாங்க முடியாமல் இருந்தது.

அம்மா அவளை அணைத்து ஆறுதல்படுத்தினாள்.

"எங்கடை வீடு, காணி இதைவிட்டிட்டு எங்கை மகள் போறது"?

"முந்தி கலவரத்துக்கு காட்டுக்குள்ளை போய் இருந்தவே; அப்படிப் போய் இருப்பமே"? அவளது வேதனையான வார்த்தைகளால் அம்மா தவித்துப் போனாள். அவளைக் கட்டிக்கொண்டு ஆறுதல்படுத்தினாள்.

"கொஞ்சக் காலத்திலை இஞ்சையிருக்கிற ஆமியையெல்லாம் பெடியள் துரத்திப் போடுவாங்கள். அப்ப நாம நிம்மதியா இருக்கலாம்" அம்மாவின் வார்த்தைகள் நம்பிக்கையோடு வெளிப்பட்டன.

"அம்மா... அண்ணையைப் பார்க்கப் போவமே" தங்கச்சியின் கலங்கிய விழிகள் அம்மாவிடம் கெஞ்சின.

"என்னண்டு போறது? இப்பதான் அவங்கள் இதுக்காக வத்திட்டுப் போறாங்கள். இதை அறிஞ்சாங்கள் எண்டால்...." அம்மாவிடமிருந்து நீண்டதொரு பெருமூச்சு வெளிப்பட்டுத் தேய்ந்தது.

வாகீசனை நினைக்கும் போது அம்மாவை ஒரு கணம் ஏக்கம் தழுவிக் கொள்ளும். மறுகணம் நீண்டதொரு நிம்மதிப் பெருமூச்சு எழும். "அவன் இஞ்சையிருந்தால் இந்நேரம் வாவியிலை மிதந்திருப்பானோ, தகப்பனை மாதிரி..." அம்மா கற்பனை செய்து பார்த்து, மனதைத் திருப்திப் படுத்திக் கொள்வாள். "நாட்டுக்காக...." என்ற திருப்தி மனதில் நிறையும். அவனை நினைக்கும் போது, அம்மாவுக்குப் பெருமையாக இருக்கும்.

"என்ன பிள்ளை அவன்". அவனை ஒரு போதும் அதட்டி எச்சரித்ததாக அம்மாவுக்கு ஞாபகம் இல்லை. அவன் இருக்கும் போது. தனக்கொரு வளர்ந்த பொம்பிளைப்பிள்ளை இல்லையே என்ற கவலைகூட அம்மாவுக்கு ஏற்பட்ட தில்லை.

வயலுக்குப் போய்... பள்ளிக்கூடத்தில் ஒழுங்காக படித்து... வீட்டு வேலைகளில் உதவிசெய்து...

அவன் போய்விட்டது - அம்மாவுக்கு தனது வேலைகளில் ஒரு கையை இழந்ததுபோல... என்றாலும் அவனை நினைக்கும் போது அம்மாவின் மனது நிறைகிறது.

அது ஒரு மம்மலான பகற்பொழுது. அன்று அம்மாவுக்கு நிறைய வேலைகள் இருந்தன. அன்றைக்கு வந்த தபாலில் அவனுக்கு மேல்படிப்புக்கான வெளிநாட்டுப் புலமைப்பரி சில அனுமதி கிடைத்தபோது... அம்மா இயல்பாக, எல்லாத் தாய்மாரும் அடைகின்ற சந்தோசம் அடைந்தபோது - அவன் மட்டும் எப்படி நின்றான்.

"அம்மா நான் ஒரு நாளும் போகமாட்டன். உங்களையும் தங்கச்சியையும் விட்டிட்டு, அதுக்கும் மேலாக இந்த மண்ணையும் விட்டிட்டு நான் போக மாட்டன்" சின்னமாமி எடுத்துச்சொன்ன போதும் அவன் கேட்கவில்லை. அம்மா, நீண்டு வளர்ந்துவிட்ட தன்மகனைப் பெருமையோடு பார்த்தாள். அப்பா மட்டும் அம்மாவைப் பார்த்து "நீ வளர்த்த வளர்ப்பு" என்று திட்டிய போதும் அவன் மசியவேயில்லை.




அதற்குப் பிறகு திடீரென ஏற்பட்ட சுற்றிவளைப்புக்களில் வாகீசனை ஒருவாறு ஓடித்தப்பச் செய்து. காட்டுக்கு அனுப்பிவிட்டு அப்பா நின்ற போது, வேலி பிரித்து அவர்கள் வந்தார்கள். அம்மாவும் தங்கச்சியும் வீரிட்டுக்கத்த அப்பாவை இழுத்துச் சென்றார்கள். அம்மா குறுக்கே விழுந்து கதறியழுத போது அம்மாவை நெட்டித் தள்ளிவிட்டு....

அடுத்த நான் நெற்றியில் சூட்டுக்காயத்தோடு உப்பிப் பருத்துப்போன அப்பாவின் உடலைக்கொண்டு வந்தார்கள். அம்மாவுக்கு வெள்ளைப்புடவையும் வெறுமையான நெற்றியும் சொந்தமாயின. வாழ்வின் தேக்கத்தால் குழிவிழுந்து போன கண்களுடன் அவள் தினமும் கோயிலுக்குச் சென்றாள். அம்மா தன்னிடம் எஞ்சியிகுக்கும் தன் மகளினதும் மகனினதும் உயிர்களுக்காக விரதங்கள் இருக்கத் தொடங்கினாள்.



அதன் பின்னர் வாகீசன் மாறிப்போனான். நீண்ட நேரங்

களைத் தனிமையிற் கழித்தான். இரவில் நெடுநேரங் கடந்த பின்னர் வீட்டுக்கு வந்தான்.

அதற்கடுத்த காலங்களில் சுற்றிவளைப்புக்கள் அடிக்கடி நிகழ்ந்தன. மட்டக்களப்பு வாவியில் உப்பிய மனித உடல்கள் மிதந்து வந்தன. வீடுகள் தோறும் அழுகுரல்கள் கேட்டன.

அமாவாசைக்கு முந்திய ஒரு இரவில் அம்மாவின் மகன் காணாமற்போனான். அவனோடு அந்த ஊரின் நாலைந்து பேரும் காணாமற் போனார்கள்.

"அவங்கள் இயக்கத்துக்குப் போட்டாங்கள்" காதோடு காதாக அந்த ஊரிலுள்ளவர்கள் பேசிக் கொண்டார்கள்.

அம்மா காலத்தின் தேவையை அறிந்துகொள்கின்ற சூழ்நிலையில் அவர்கள் காணாமற் போனார்கள். அம்மா அவன் இல்லாத வெறுமையை உணரத் தொடங்கினாள். ஆர்ப்பாட்டம் இல்லாமல் அழுதாள். கோயிலுக்குப் போவதை நிறுத்திக்கொண்டாள். சுவாமி விரதங்கள் எதுவிலும் நம்பிக்கையற்றவள் போல மாறிக்கொண்டாள். இரவு வேளைகளில் அரவமில்லாது வரும் மண்ணின் குழந்தைகளில் தன் மகனைக் கண்டாள். அவர்களை உபசரிப்பதும்; சத்தமில்லாது அனுப்பிவைப்பதும்; அவர்க ளுக்காக பிரார்த்திப்பதுமே அவளது கடமைகளாகி விட்டன.

இப்போது அம்மா மாறித்தான். போனாள். அதிகமாகப் பயப்படுவதைத் தவிர்த்தாள். இயன்றவரை மனதைத் திடப்படுத்திக் கொண்டாள். அப்பாவின் படத்திற்கு முன்னால் நின்று அழுவதை நிறுத்திக்கொண்டாள்.





"அம்மா. . ."

மகளின் குரல்கேட்டு அம்மா ஏறிட்டுப் பார்த்தாள்.

"என்னை, அண்ணையிட்டைக் கூட்டிக்கொண்டு போங்கோ" —

"என்னெண்டு போறது. அவங்கள் அறிஞ்சாங்கள் எண்ணடால் என்ன நடக்குமோ தெரியாது. இஞ்சை இருக்கவேலிட மாட்டாங்கள் மகள்".

"இல்லை நாங்கள் எப்பிடியாவது போகணும். போகாட்டி நான் சாப்பிடமாட்டன்" - அந்தப் பிஞ்சு முகத்தில் பிடிவாதம் நிறைந்திருந்தது. அவள் எப்பவுமே அப்படித்தான். அண்ணனினதும் அப்பாவினதும் மிகுந்த பாசம் அவளை பிடிவாதக்காரியாக மாற்றிவிட்டிருந்தது.



அம்மாவுக்குக் கவலையாக இருந்தது. அண்ணாவின் முகத்தை வருடக்கணக்காக காணாத ஏக்கம் முகத்தில் தெரிந் தது. "போகத்தான் வேணும். என்ன பாடுபட்டாவது... இந்த நரக வாழ்க்கையை எத்தனை நாளைக்கு தாங்கிக்கொள்வது?- அம்மா தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். வாய்விட்டுச் சொல்ல முடியாத துயரங்களாக தன்னுள்ளே தேக்கிக் கொண்டாள்.

அவளது பிடிவாதம் வழமையைவிட இன்று கூடுதலாக இருந்தது.

"வெளிக்கிட்டுப் போகுமட்டும் அவங்கள் வரக்கூடாது" - அம்மா கடவுளிடம் வேண்டினாள். அவளது சின்னமகளுக்கு ஒரே புளுகமாக இருந்தது. அவள் தமையனுக்கு என்று ஒவ்வொன்றையும் எடுத்து வைத்தாள். என்றுமில்லாத ஆர்ப்பாட்டமான சந்தோசத்தோடு அவள் இருந்தாள். அம்மாவின் மனம் மட்டும் நிலைகொள்ளாமற் தவித்தது. நாய்களின் சிறுகுரைப்புக்கும் அஞ்சினாள். வேலிகளில் சிறு சரசரப்புக் கேட்ட போதெல்லாம் வெளியில் வந்து எட்டிப்பார்த்தாள். கடைசியில் வருவது வரட்டும் என்ற துணிவோடு புறப்பட ஆயத்தமான போதுதான் அது நிகழ்ந்தது.

மோப்பம் பிடித்துவரும் நாய்களாக அவர்கள் வந்தார்கள். அம்மாவின் சின்னமகள் கதறக் கதற அம்மாவை இழுத்துவந்து அடித்தார்கள். அம்மாவின் நலிந்த உடல் மயங்கிச் சரித்தபோது. சின்னமகளை வெருட்டிவிட்டுச் சென்றார்கள்.

அன்றிரவு அம்மாவைப் பார்ப்பதற்காக அந்த மண்ணின் குழந்தைகள் வந்தார்கள். அம்மா வழமைபோல அவர்களை உபசரித்தாள். தன் சின்ன மகளை ஆதங்கத்தோடு தடவிக்கொடுத்தாள். அந்த மண்ணின் குழந்தைகளோடு அவளை அனுப்பி வைத்தாள். அவளது கண்கள் என்றுயில்லாத ஒளியோடு பிரகாசித்தன - அவர்கள் சென்ற வழியையே அவை பார்த்துக் கொண்டிருந்தன.

களத்தில் 25.02.1994


**நாம் அரசியல்வாதிகள் அல்லர். நாம் புரட்சிவாதிகள். நாம் பழைய அரசியல்வாதிகள்போல மக்களை அணுகக்கூடாது. மாலைகள் அணிந்து, மேடைகள் மீது முழங்கி, மக்களின் உணர்ச்சிகளைக் கிளறிவிட்டு, மக்களுக்குப்பொய் சொல்லி, மக்களை ஏமாற்றி அந்தக்காலத்து அரசியல்வாதிகள் நாடக மாடினார்கள். நாம் மக்களை வித்தியாசமாக அணுக வேண்டும். மக்களுக்கு உண்மைநிலையை விளக்கவேண்டும். பொய்யான, நடை முறைச்சாத்தியமற்ற வாக்குறுதிகளை நம்மக்களுக்கு வழங்கக்கூடாது. நாம் எதற்காகப் போராடுகிறோம், எந்தக் கொள்கையில் அடிப்படையில் போராடுகிறோம், நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்ன? என்பதையெல்லாம் நாம் மக்களுக்கு எடுத்து விளக்க வேண்டும். உண்மைநிலையை எடுத்துவிளக்கும் பொழுதான் மக்கள் எம்மீதுநம்பிக்கைகொள்வார்கள்.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

# “போரிடுங்கள் பேசுங்கள் பேசுங்கள் போரிடுங்கள்”

திரு.க.வே. பாலகுமாரன்

இது பேச்சுவார்த்தைக் காலம். பேச்சுவார்த்தைகள் பற்றிய பேச்சுக்களாலே காலம் கழியும் காலம். பல்வேறுதரப்பட்டர்களுக்கிடையில். பல்வேறு நிலைகளில், பல்வேறு வடிவங்களில் பேச்சுக்கள் நடக்கின்றன. முன்னொரு காலத்திலே பெரும் பகைவர்களாகவிருந்த நாடுகளான அமெரிக்கா-வியட்நாம். அமெரிக்கா-வடகொரியா. வடகொரியா- தென்கொரியா, ஈரான்-மேற்குலகம். லிபியா-மேற்குலகம் எல்லாமே பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளன. போகிற போக்கில் இந்தியா-பாகிஸ்தான், சீனா- தைவான் ஆகியவையும் பேச்சுக்களில் ஈடுபட்டாலும் அதிசயப்படுவதற்கில்லை. தென்னமெரிக்காவில் மெக்சிக்கோ. கொலம்பியா, குவாத்தமாலா போன்ற நாடுகளில் போராட்ட அமைப்புக்களோடு நடக்கும் பேச்சுக்கள். ஆபிரிக்காவில் சியரா லியோன். அங்கோலா, கொங்கோ போன்ற நாடுகளில் கிளர்ச்சி இனக் குழுக்களோடு நடக்கும் பேச்சுக்கள் அண்மையில் பெரும் போர் மூண்ட எதியோப்பியா-எரித்திரியாவிற்கு மிடையில் அமெரிக்க ஏற்பாட்டில் நடக்கும் பேச்சுக்கள், இவற்றினைவிட, இடை விடாது வட அயர்லாந்து, பலஸ்தீனம் பற்றி நடக்கும் சர்வதேச மட்டப் பேச்சுக்கள். இவ்வாறாக எங்கும் பேச்சு வார்த்தைகள்.




பேச்சுவார்த்தைக் காலமாக இக்காலம் மாறியமைக்கான காரணங்களை ஆராய்வது எமது நோக்கமல்ல. என்றாலும், சில காரணங்களை பின்வருமாறு பட்டியலிடமுடியும். சோவியத் சாம்ராச்சியம் சிதறி. பனிப்போர் உருக. பொருண்மியம் உலகமயமாக, தகவல் தொழில்நுட்பம் பெரும் பாய்ச்சல் நிகழ்த்த. ஐ.நாவை துணைக்கழைத்து அமெரிக்கா அமைதி முகம் காட்டவெனப் பல காரணங்கள். இவைமட்டும்தானா காரணங்கள்? இவை புறக்காரணிகள். ஆனால் அகக்காரணியொன்றுமுண்டு. சகல விடுதலைப் போராட்ட வடிவங்களிலும் அதற்கெதிரான அமைவுகளிலும் பொதிந்துள்ள பொதுப்பண்பிது. இரு வேறு முரண்பட்ட இலக்குகளைக் கொண்ட இருதரப்புமே தமது இலக்கினை அல்லது இலக்குநோக்கிய பயணத்தில் முன்னேற்றத்தினை இராசதந்திரம். அரசியல் பேச்சுக்கள் என்பவை மூலம் அடையமுடியுமா என முயன்று பார்க்கின்றமை இப்பண்பு. போரின் நோக்கம் பற்றி படைத்துறை வல்லுநரான கார்ன் வொண்குளோசுபிட்சு கூறியதை இங்கு தொடர்புபடுத்துகின்றோம். “போர் என்பது மாற்று வழியில் தொடரப்படும் அரசியலின் நீட்சியைத் தவிர வேறில்லை“ (War is nothing more than continuation of politics by other mean) எனவே ஒன்றாகத் தொடங்கி இரு கிளைகளாகப் பிரிந்து மீண்டும் ஒன்று சேர்ந்து செல்லுமிடத்தை அடையும் பாதையிது. ஆனால் இப்பாதையில் சென்று வழிதவறியோர் எத்தனை பேர்? செல்லுமிடம் சென்றவர் எத்தனை பேர்? இது வரலாற்றின் தீர்ப்பு. வரலாற்றின் போக்கினையறிந்த மாந்தர் தம் தெரிவு.



'Danh ran dam dam ran danh' என்கிற வியட்நாமிய சொற்றொடர் குறிப்பது “போரிடுங்கள் பேசுங்கள். பேசுங்கள் போரிடுங்கள்” என்பதாகும். வியட்நாமின் போராளிகளிடையே ஒரு காலகட்டத்தில் புழக்கத்திலிருந்த இத்தொடரினை மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது எளிமையானது. ஆனால், அன்று வியட்நாமில் மிக ஆழமான பொருள் தந்த அரசியல், இராசதந்திரத் தொடரிது. “மிகச் சிக்கலான. மதிநுட்பமான, ஒன்றிணைக் ப்பட்ட இராணுவ இராசதந்திர அரசியல் மூலோபாயம் இது. அமெரிக்காவிலும். தென்வியட்நாமிலும் குழப்பங்களை ஏற்படுத்தி இவ்விரு கூட்டாளிகளிடையே பிளவுகளைத் தோற்றுவித்து. அமெரிக்கா



விலே வியட்நாம் போருக்கெதிரான கடும் எதிர்ப்பு தோன்றவும் காரணமான பேரபாயமிது. “இராசதந்திரம் என்பது இராணுவ வலிமைப் பிரயோகத்திற்கு அடுத்த நிலையிலிருந்து மட்டுமன்றி அதற்குத் துணையும் நின்றது. “இருதரப்புமே தமக்குக்கிட்டிய சகல வழிகளையும் பயன்படுத்தி, இராசதந்திரத்தையும் அமைதிப் பேச்சுக்களையும் (1) பரப்புரை வெற்றியை தமதாக்க (2) உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் ஆதரவைத்திரட்ட (3) எதிரி தரப்பில் குழப்பங்களை ஏற்படுத்த முழுமையாகப் பயன்படுத்தினர். இவர்களுக்கு இராசதந்திரமும் இராணுவ வழியைப் போலவே இலக்கை அடையப்பயன்பட்ட இன்னொரு வழியானது” இவ்வாறு வியட்நாமிய வரலாற்றினை ஆய்வு செய்தோர் அடித்துக் கூறுகின்றனர்.



போரும் பேச்சுவார்த்தைகளுமாகவே வியட்நாமிய விடுதலை வரலாறு நகர்ந்து முன் சென்றுள்ளது. 18ஆம். 19ஆம் நூற்றாண்டுகளில் இந்தோசைனா (லாவோஸ்- வியட்நாம்-கம்போடியா) என பிரான்ஸ் தென்கிழக்காசியாவில் உருவாக்கிய குடியேற்ற வலயத்திற்கெதிராக 1930கள் தொட்டே கோ-சி-மின் தலைமையிலான விடுதலையணி போராடிவந்துள்ளது. 2ஆம் உலகப் போரையடுத்து பிரான்சோடு பேச்சுக்கள் நடத்தியும் பயனளிக்காத நிலையில் பேச்சு வார்த்தைகள் மூலம் பெற முடியாததை போர் மூலம் பெறுவதற்காக 1946களில் போரை ஆரம்பித்தார். எட்டு வருட தீவிர ஆயுதப் போராட்டத்தின் பின் 1954 மேயில் தியென்- பின்பூ வின் வீழ்ச்சியோடு பிரான்சியரின் ஆதிக்கம் அடங்கியது. எனினும், வியட்நாம் முழுமையாக விடுதலை பெற முடியவில்லை. அதேயாண்டு ஜெனீவாவில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் வியட்நாம் துண்டாடப்பட்டது. வடவியட்நாம் முழுமையான விடுதலைபெற, தென் வியட்நாமில் சில காலம் இருந்து பின் பிரான்சியர் வெளியேற அமெரிக்கர் நுழைந்தனர். தென்வியட்நாமை விடுவிக்கப் போராடிய தேசிய விடுதலையணி சைகோனைக் கைப்பற்றும் நிலை உருவாகியபோது அமெரிக்கா நேரடியாகத் தலையிட்டது. வடவியட்நாம் மீது விமானக் குண்டு வீச்சினை தொடங்கியதோடு, தரைப்படையையும் தென்வியட்நாம் அனுப்பியது. இவ்வாறாகத்தான் பெரும் போருக்கான சூழல் அங்கு உருவாகி புகழ்மிக்க விடுதலை மலர் அங்கு பூத்தது.

இந்நிலையிலேதான் இரு முரண்பட்ட தரப்பினரும் தமது இலக்குகளை இவ்வாறு வரையறுத்துக் கூறினர். 1965ஆம் ஆண்டு ஏப்பிரல் 07ஆம் திகதி அன்றைய அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் ஜோன்சன் கூறினார். (அ) தென்வியட்நாமின் சுதந்திரம் எப்போதும் பாதுகாக்கப்படும். (ஆ) நேரடியாக மோதியோ அல்லது பேச்சுவார்த்தைப் போர்வையிலோ அமெரிக்கப் படையை மீளப்பெறச்செய்ய எவராலும் முடியாது. அதே வேளை. அமைதிக்கதவை மூடவில்லை. நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்கு நாம் தயார். இதற்கு மறுநாள் வட வியட்நாம் பிரதமமந்திரி பாக் பான்டொங் தமது நிலைப்பாட்டை இவ்வாறு வெளிப்படுத்தினார்.

(அ) போரை உடன் நிறுத்தி அமெரிக்கப்படைகள் உடன் வெளியேற வேண்டும். (ஆ) வெளியார் தலையீடின்றி வியட்நாமிய தேசிய விடுதலை முன்னணியின் முடிவிற் கேற்ப வியட்நாம் ஒன்றிணைய வேண்டும். இவ்வாறாக இரு தரப்பு நிலைப்பாடுகளும் வரையறுக்கப்பட்டபின் இவற்றினையடைய முயற்சிகள் தொடங்கின. இவ்வாறாக, உலகின் புகழ்மிக்க போராட்ட வரலாறு தொடங்கியது.

எமது வசதிக்காக வியட்நாமிய விடுதலை வரலாற்றினை மூன்று கட்டங்களாக வகுத்துக் கொள்ளலாம். முதற்காலகட்டம் 1965-1967இற்கு இடைப்பட்டது. மிகத்தீவிரமாக இரு தரப்பிற்கும் இடையில் போர் நடைபெற்றகாலம். எனினும், போப்பாண்டவர். ஐ.நா செயலர். வேறும் பல நாடுகளும் அமைதி முயற்சிகளை மேற்கொண்டன. பேச்சுக்கு தாம் தயார் எனக் கூறி அமெரிக்கா குண்டு வீச்சுக்களை இடைக்கிடை இடை நிறுத்தி, பாவனைகள் செய்தபோதும் பேச்சுவார்த்தைகளை குழப்பும் வகையில் செயற்பட்டது. அதேவேளை, நிபந்தனையுடன் கூடிய பேச்சுக்களுக்கு (குண்டு வீச்சுக்களை நிறுத்தல்) தாமும் தயாரென வடவியட்நாமும் கூறிக்கொண்டது.

உண்மையில் இரு தரப்புமே பேச்சு வார்த்தைகளுக்குத் தயாராகவில்லை. இக்கட்டத்தினை “இராசதந்திர நிழல் மல்யுத்த காலம்” என்றும் “அமெரிக்க இராசதந்திர வரலாற்றின் பயனற்ற பக்கங்கள்” எனவும் வரலாற்றாளர் விபரிக்கின்றனர்.



இதற்கடுத்த இரண்டாம் காலகட்டம் ஆழ்ந்த கவனிப்பிற்குரியது. 1968ஆம் ஆண்டு ஜனவரியின் இறுதியில் பாரிய தாக்குதலை வியட்நாமிய விடுதலையணி தொடுத்தது. ரெற் தாக்குதல் (Tet Offensive) என அழைக்கப்பட்ட இத்தாக்குதல் தென்வியட்நாம் எங்கும் பரவலாக நிகழ்த்தப்பட்டது. இத்தாக்குதல் பாரிய அதிர்ச்சி அலைகளை அமெரிக்கத் தரப்பிலும், அமெரிக்க மக்கள் மத்தியிலும் ஏற்படுத்தியது. இதனால் இரண்டு மாதகால அழி விரக்க சிந்தனையின் பின் தாமாகவே பேச்சுவார்த்தைக்கு முன்வந்த ஜோன்சன். விமானக்குண்டு வீச்சினை மட்டுப்படுத்தினார். அதேவேளை, பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தி சற்று ஓய்ந்திருந்த வடவியட்நாம் தரப்பும் சகலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி, பேச்சுவார்த்தைகளுக்கு தாம் தயார் என்கிற முடிவினை அறிவித்தனர். இவ்வாறாகத்தான் பேச்சுக்கள் பாரிசில் 13 மே 1968இல் தொடங்கின. ஆனால், தொடக்கமே பெரும் சிக்கலில் சிக்கியது. யார் யார் பேச்சுக்களில் பங்குபற்றுவது என்பதிலிருந்து பேச்சுவார்த்தை மேசை எவ்வாறு அமைய வேண்டும் என்பதுவரை பெரும் இழுபறி. அப்போது அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் காலம். தனது கட்சி வேட்பாளர் நிக்சனை வெல்ல வைக்க ஜோன்சன் முயல. அவரது காலம் முடியுமுன்னர் பெறக்கூடியதை அவரிடமிருந்து பெற வடவியட்நாம் தரப்பு முயல, இராசதந்திர முனைப்புக்கள் தீவிரம் பெற்றன. இதேவேளை, அமெரிக்கா தன்னை கைகழுவி விடுமோ என வருந்திய தென் வியட்நாமிய பிரதம அமைச்சர் நிகுயென் வான்தியு "அவமானம்" "துரோகம்" "தோல்வி" என அலறி ஜோன்சனுக்கு பெரும் எரிச்சலை ஊட்டினார். அதேவேளை, அமெரிக்கப் படை விலக வேண்டும் என்கிற முடிவில் உறுதியாக விடுதலைப் போராளிகள் நின்றனர். இவ்வாறாக, எதுவித முடிவுமின்றி இக்காலகட்ட இழுபறி முடிவிற்கு வந்தது.

அடுத்தது தீர்க்கமானதும் இறுதியுமான காலகட்டம். 1969இல் நிக்சனும் அவரது ஆலோசகரான கென்றி கீசிங்கரும் பதவியேற்போடு ஆரம்பமாகியது. ஜோன்சனால் செய்யமுடியாததை தம்மால் செய்யமுடியும் என நிக்சன் கூறிக்கொண்டார். கீசிங்கரோ இராசதந்திர முயற்சிகளில் வெகு தீவிரமாக செயற்பட்டு தமது இலக்கினை, அதாவது படைவிலகல், தென்வியட்நாமிய சுதந்திரம் பாதுகாக்கப்படல் என்பதனை அமைதிப் பேச்சுக்கள் என்கிற போர்வையில் அடைய முடியும் என நம்பி "கௌரவத்துடன் அமைதி" எனக் கூறிக்கொண்டார். பாரிய அழுத்தங்களை டீ 52 விமானக் குண்டு வீச்சுக்களின் மூலமும் 1970இல் கம்போடியா மீதானபடையெடுப்பின் மூலம் தொடுத்தவண்ணம் இரகசியப் பேச்சுக்களை வியட்நாம் தரப்போடு ஆரம்பித்தார். பேச்சுக்களில் ஈடுபட்டும், அதனை இடைநிறுத்தியும் வெளியேறியும் பாரிசில் வியட்நாம் தரப்பு இத்தகைய அழுத்தங்களை பயனற்றதாக்கியது. இதேவேளை, தொடர்ந்து ஈடுபடுவதன் மூலம் (பாரிசில் தங்கியிருந்த வியட்நாம் தரப்பு தாம் எத்தனை காலமானாலும் பேச்சுக்களில் ஈடுபடத்தயார் எனக் கூறியிருந்தனர்) அமெரிக்காவில் வியட்நாம் போருக்கெதிரான எதிர்ப்பு வலுக்கவும் வழிவகுத்தனர். அப்போதைய கருத்துக் கணிப்பொன்று வியட்நாமுக்கு படையனுப்பியது தவறு என 71 விழுக்காட்டினர் கருதியதாகத் தெரிவித்தது.

இவ்வாறாக, 1971 வரை "ஆரியக் கூத்தாடிப் பார்த்தும் கீசிங்கரினால் தனது அரசியல் இராசதந்திர அணுகுமுறையால் எதனையும் பெறமுடியவில்லை. இக்கட்டத்திலே 1972ஆம் ஆண்டு மார்ச்சில் "ஈஸ்டர் தாக்குதல்" எனப்படும் பாரிய தாக்குதலொன்றை வடவியட்நாம் தரப்பு தென் வியட்நாம் மீது தொடுத்து சைகோனுக்கு 60 மைல் தூரம்வரை உட்புகுந்தது. இதற்குப் பதிலடியாகத்தான் உலகமே அதிர்ந்து போன பேரளவிலான தொடர் குண்டு வீச்சுக்களை அமெரிக்கா 1972 மேயிலிருந்து ஒக்டோபர் வரையும் (Line Bicker லைன் பைக்கர்) டிசம்பரிலும் (லைன் பைக்கர் 11 "கிறிஸ்மஸ் குண்டு வீச்சுக்கள்") நிகழ்த்தி வடவியட்நாமில் பெருத்த அழிவுகளை ஏற்படுத்தியது. வடவியட்நாமின் கைபொங் துறைமுகத்தைச் சூழ கடற்கண்ணிகளை விதைத்து கடல் முற்றுகையிட்டது. அமெரிக்கத் தரப்பின் மூர்க்கத்தனமான இராசதந்திரத்தின் வெளிப்பாடான இக்குண்டு வீச்சுக்கள் அமெரிக்காவின் கறைபடிந்த காலமாகியது. பேச்சுக்களுக்கு வடவியட்நாமை தள்ளி மோசமானதொரு உடன்பாட்டினை திணித்து தனது படைகளை மீளப்பெற அமெரிக்கா துடியாய்த்துடித்தது. இக்காலகட்ட செயற்பாடுகளை கென்றி கீசிங்கர் யுகுலர் இராசதந்திரம் என்றார். (Jugular Diplomacy மூளையிலிருந்து இருதயத்திற்கு குருதியை கொண்டு செல்லும் பிரதான நாளம் யுகுலர் எனப்படும்) ஈற்றில் ஒருவாறாக இரு தரப்பும் தமது நிலைகளிலிருந்து இறங்கிவந்து "பாரிஸ் உடன்படிக்கை" எனப்படும் உடன் பாட்டிற்கு 1973 ஜனவரியில் வந்தனர். அமெரிக்கக் கைதிகளை விடுவிக்கவும். அமெரிக்கப் படைகள் வெளியேறவும் அதேவேளை, வடவியட்நாம் துரப்புக்கள் ஒரு தொகை தென்வியட்நாமிலிருக்கவும். வியட்நாம் தேசிய விடுதலை முன்னணிக்கு அரசியல் அங்கீகாரம் வழங்கவும் வழி செய்த இவ்வுடன்பாடு போருக்குப் பிரதானகாரணமான தென்வியட்நாமின் எதிர்காலம் பற்றிய முடிவினைத் தள்ளிப்போட்டது.



1965–U.S. bombing of North Vietnam
1968–U.S. Marines at the Battle of Hue
1975–Evacuation of the U.S. embassy in Saigon

இப்போது. கீசிங்கருக்கு பெருத்த புகழாரம் சூட்டப்பட்டது. "விண்ணாதி விண்ணன்" எனப் பாராட்டும் கிடைத்தது. அவருக்கும் 1969இல் இருந்து வியட்நாம் பிரதி நிதியாக பேச்சுக்களில் ஈடுபட்ட லீடக் தோவிற்கும் (Leedak Tho) நோபல் அமைதிக்கான விருதும் கிட்டியது. ஆனால். அமைதி இன்னமும் கிட்டவில்லை எனக்கூறி பரிசைப் பெற மறுத்ததோ தனது தாயகத்திற்குத் திரும்பிவிட்டார்.



ஆனால், அமைதிக்கனவு நீடிக்கவில்லை. தென்வியட்நாம் உடன்பாடு நிறைவேற ஒத்துழைக்கவில்லை. வடவியட்நாமோ தனது இலக்கினை கைவிடவுமில்லை. 1973 டிசம்பர் அளவில் உடன்பாட்டினை நிறைவேற்ற முடியாதநிலை தோன்றியது. அதிருப்தி அடைந்த அமெரிக்க செனெற் தென் வியட்நாமிற்கான நிதியுதவியை வெட்டித்தள்ளியது. "வோட்டர் கேற்" மோசடியால் அவமானமுற்ற நிக்சன் பதவி விலக. 1975இல் போட் ஜனாதிபதியானபோது நிலைமைகள் தலைகீழானது. 1975 ஜனவரியில் பாரிய மரபுவழி படையெடுப்பினைத் தொடங்கிய விடுதலையணி 1975 ஏப்பிரல் 30ஆம் திகதியளவில் கடைசி அமெரிக்கப்படையை ஓட ஓட விரட்டியது. தனது இலக்கினை (1965இல் வெளியிட்ட வண்ணம்) அடைந்தது. 10 வருடங்களாக இருதரப்புமே வெகு கவனமாக தமது இராசதந்திர, அரசியல், இராணுவ நிலைப்பாடுகளை வரையறுத்துச் செயற்பட்டனர். முடிவில் வியட்நாமில் அமைதி இராணுவ வழியில், விடுதலைப் போராட்டத்தின், ஆயுதப்போராட்டத்தின் வெற்றியிலே கிட்டியது.

ஆதாரம்: வியட்நாம் போரின் கலைக்களஞ்சியம்

விடுதலைப்புலிகள் குரல் 97, டிசம்பர்-தை 2001

**எமது போராளிகளின் தனிப்பட்ட நேர்மை, ஒழுக்கம் – வழிகாட்டும் வகையில் வாழும் வாழ்க்கை – இவையே மக்கள் எம்மீது மரியாதை வைக்கக் காரணமாகும்.**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**

# சிதைந்த காசாவை சொர்க்க புரியாக்கும் டிரம்ப்! இசுரவேல் ஆக்கிரமிப்பின் இன்னொரு வடிவம்!!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

06.02.2025

பாலஸ்தீனத்தின் காசா பகுதியை குறிவைத்து அமெரிக்கா புதிய காய் நகர்த்தல்களை மேற்கொண்டுள்ளது. போரின் கொடூர விளைவுகளை சந்தித்த பாலஸ்தீன மக்கள், அதன் தாக்கத்தில் இருந்து மீண்டு எழ முடியாமல் தவித்து வருகின்றனர்.

### சாம்பல் மேட்டிலிருந்து எழும் பீனிக்ஸ்:

ஆயினும் சாம்பல் மேட்டிலிருந்து எழும் பீனிக்ஸ் பறவைகள் போல, பாலஸ்தீன மக்கள் தங்கள் தாயகக் கோட்பாட்டில் இருந்து ஒருபோதும் விலகி நிற்பதில்லை.



காலங்காலமாக எத்தனையோ இன்னல்களை சந்தித்து வந்த போதிலும், பாலஸ்தீன மக்கள் தங்களின் உரிமைகளை இழந்து விடுவதில்லை.

தற்போது காசாவை சொர்க்க புரியாக மாற்றும் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ள திட்டமானது, இசுரவேலிய ஆக்கிரமிப்புக் கொள்கையின் இன்னொரு வடிவம் என்றே கருதலாம்.

இசுரவேல் பிரதமருடனான செய்தியாளர்கள் சந்திப்பில், போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பாலஸ்தீனியர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பப் படுவார்கள் என அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறினார். டொனால்டு டிரம்பின் இந்த முன்மொழிவு சர்வதேச அளவில் பரபரப்பை கிளப்பியுள்ளது.

அமெரிக்க அதிபரக டொனால்டு டிரம்ப் பதவியேற்றது முதலே பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கோண்டு வருகிறார். பல்வேறு உலக தலைவர்களையும் தொடர்ச்சியக சந்தித்து வருகிறார். அந்த வகையில் இசுரவேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கோண்டார்.



டிரம்பை சந்தித்த இசுரவேல் பிரதமர்காசாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ள நிலையில், இசுரவேல் பிரதமரின் இந்த அமெரிக்க பயணம் முக்கியத்துவம் பெற்றது. அமெரிக்காவில் அந்நாட்டு அதிபர் டொனால்டு டிரம்பை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

இந்த சந்திப்புக்கு பிறகு இரு நாட்டு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது டொனல்டு டிரம்ப், காசா முனையை அமெரிக்கா கைப்பற்றும் என்று அதிரடியாக பேசினார்.

டிரம்ப் கூறுகையில், பாலஸ்தீனத்தில் போரால் பாதிக்கப்பட்டுள்ள காசா முனையை அமெரிக்கா கைப்பற்றும்.

பாலஸ்தீனியர்கள் வேறு இடத்தில் குடியேறிய பிறகு அந்த இடத்தை மேம்படுத்தி அதை சொந்தமாக்கி கொள்வோம். அங்கு உள்ள அனைத்து ஆபத்தான வெடிக்காத குண்டுகள் மற்றும் பிற ஆயுதங்கள் அகற்றப்படும்.

### காசாவை கைப்பற்றுவோம் !




**காசாவை கைப்பற்றி, சொர்க்க புரியாக மாற்றும் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ள திட்டமானது, இசுரவேலிய ஆக்கிரமிப்புக் கொள்கையின் இன்னொரு வடிவம் என்றே கருதலாம்.**

இதற்கு நாங்கள் பொறுப்பு. பொருளாதாரத்தை மேம்படுத்தி அந்த பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் வீட்டு வசதி உள்ளிட்டவற்றை செய்து கொடுப்போம். தற்போது ஏற்பட்டுள்ள போர் நிறுத்த ஒப்பந்தம் மூலமாக அப்பகுதியில் அமைதியை நிலையை நாட்டுவோம் என்று டிரம்ப் பேசினார்.

அத்துடன் காசா முனையில் உள்ள பாலஸ்தீனியர்கள் எகிப்து மற்றும் ஜோர்டான் போன்ற மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்படுவார்கள் என்றும் டிரம்ப் கூறியுள்ளார். அதே வேளையில், டிரம்பின் இந்த பரிந்துரையை ஏற்கனவே பாலஸ்தீனம் மற்றும் பிற நாடுகள் திட்டவட்டமாக நிராகரித்துள்ளன என்பது கவனிக்கத்தக்கது.

### இசுரவேல் – ஹமாஸ் போர்:

பாலஸ்தீனத்தின் காசா நகரை நிர்வகித்து வந்த ஹமாஸ் அமைப்பினருக்கும் இசுரவேலுக்கும் நீண்ட காலாம மோதல் நீடித்து வந்த நிலையில், கடந்த 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பாரிய போர் ஏற்பட்டது. ஹமாஸ் அமைப்பினர் இசுரவேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி பலரையும் பிணைக் கைதிகளாக பிடித்து சென்றனர்.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல் காசா மீது போர் தொடுத்தது.
கடந்த 15 மாதங்களாக இருதரப்பு இடையே போர் நடந்து வந்தது. இந்த தாக்குதலில் காசாவில் 46,000 பாலஸ்தீனர்கள் இறந்துள்ளனர். இசுரவேல் 1,600 பேரை பலி கொடுத்துள்ளது. அதோடு காசாவில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர். இதுதவிர பல இலட்சம் பேர் உயிருக்கு பயந்து காசாவை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்த போரை நிறுத்த பல நாடுகள் முயன்றன. ஆனால் இசுரவேல் பிரதமர் நெதன்யாகு ஒரு போதும் சம்மதிக்கவில்லை. இறுதியாக போர் நிறுத்தம் தொடர்பாக இசுரவேல் – ஹமாஸ் இடையே ஒப்பந்தம் கடந்த மாதம் கையெழுத்தானது. அமெரிக்கா, எகிப்து, கத்தார் உள்ளிட்ட நாடுகள் மத்தியஸ்தம் செய்து வந்த நிலையில் இருதரப்பு இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

### இசுரவேல் பிரதமர் – டிரம்ப் சந்திப்பு :

அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற டிரம்ப், கடந்த ஜனவரி 20ல் அதிபராக பொறுப்பு ஏற்றுக் கொண்டார். அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற உடன், தான் அதிபராக இருந்தால், உலகில் எங்கும் போர் நடக்க விட மாட்டேன் என டிரம்ப் கூறியிருந்தார்.

அமெரிக்க வெள்ளை மாளிகையில், இசுரவேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, அதிபர் டொனால்டு டிரம்ப் ஆகிய இருநாட்டு தலைவர்களும் சந்தித்து போர் நிறுத்தம், இரு தரப்பு உறவு உள்ளிட்டவை குறித்து ஆலோசனை நடத்தினர்.

அப்போது டிரம்ப் தெரிவித்த கருத்து தொடர்பாக சர்வதேச ஊடகங்கள் பல விசனங்களை தெரிவித்துள்ளன. தேவைப்பட்டால் காசா பகுதியை அமெரிக்கா கைப்பற்றும், அப்பகுதியில் எங்கள்



அமெரிக்க நாட்டு இராணுவத்தினரை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்துவோம்.

இது மத்திய கிழக்கு பகுதியில் அமைதி சூழலை உருவாக்கும். காசா பகுதியில் உள்ள வெடிகுண்டுகள் மற்றும் ஆயுதங்களை அகற்றுவோம். அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்புகள் மற்றும் வீடுகள் ஆகியவற்றை உருவாக்குவோம். இவ்வாறு டிரம்ப் கூறினார்.

இது குறித்து இசுரவேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறுகையில், அதிபர் டிரம்பின் யோசனை வரலாற்றை மாற்றக்கூடிய ஒன்று. காசாவிற்கு ஒரு வித்தியாசமான எதிர்காலத்தைக் கற்பனை செய்கிறார். மத்திய கிழக்கின் புவிசார் அரசியலில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்றார்.

### டிரம்பின் அடாவடித்தனம் :

ஆனால் அமெரிக்கா அதன் இராணுவ மற்றும் பொருளாதார வலிமையைப் பயன்படுத்தி பாலஸ்தீன தாயகத்தை அச்சுறுத்துவது நிச்சயமாக அரபுலகில் பலத்த கொந்தளிப்பை ஏற்படுத்தும்.

அமெரிக்காவின் வர்த்தக வரிகள், பொருளாதர தடைகள் மற்றும் வர்த்தக ஒப்பந்தங்களை கிழித்தெறியும் அச்சுறுத்தல்களால் மற்ற நாடுகளை கொடுமைப்படுத்துவது டிரம்ப் அரசின் தவறான அணுகுமுறை என்றே தோன்றுகிறது.

கனடா, மெக்சிக்கோ மேலான பொருளாதார வரி விதிப்பும், கிரின்லாந்து, பனாமா கால்வாயை மீண்டும் கைப்பற்றும் முயற்சிகளுக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை மேற்குலகம் முன்வைத்துள்ளது.

தற்போது பாலஸ்தீனத்தின் காசா பகுதியை குறிவைத்து அமெரிக்கா புதிய காய் நகர்த்தல்களை மேற்கொண்டுள்ளது. போரின் கொடூர விளைவுகளை சந்தித்த பாலஸ்தீன மக்கள், அதன் தாக்கத்தில் இருந்து மீண்டு எழ முடியாமல் தவித்து வருகையில், காசாவை சொர்க்க புரியாக மாற்றும் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ள திட்டமானது, இசுரவேலிய ஆக்கிரமிப்புக் கொள்கையின் இன்னொரு வடிவம் என்றே கருதலாம்.

www.sangathamil.ca

# தமிழர் தாயகத்தில் கரிநாளாகிய சிறீலங்காவின் சுதந்திர தினம்

– நவீனன்

07.02.2025

மீண்டும் ஒருமுறை தமிழ் மக்கள் தங்கள் தேசிய சுய அடையாளத்தை தெளிவாக வெளிக்காட்டி உள்ளனர். நிகழ் கால அனுர அரசோடு தமிழ் மக்கள் இல்லை என்பதையும், சிறீலங்காவின் சுதந்திர தினம் ஈழத்தமிழ் மக்களுக்கு எதனை உணர்த்துகிறது என்பதையும் உலகறிய வெளிக்காட்டி உள்ளனர்.

### வட கிழக்கு தமிழர் தேசம் :

வடக்குக் கிழக்கு தனியான தேசம் தான் என்பதை அனுரவின் அரசிற்கு அடித்துக் கூறிய சுதந்திரதின நிகழ்வுகளை தாயக மக்கள் அறைகூவி உள்ளனர்.




இவ்வருடமும் சிங்கள அரசின் சுதந்திர நாளான 04.02.2025 அன்று தமிழர் தாயகத்தில் கரிநாள் என பிரகடனப்படுத்தி வடக்கு - கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழினப் படுகொலைக்கு நீதி கோரியும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி கோரியும், அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் எனக் கோரியும் கிளிநொச்சியில் மாபெரும் கறுப்புக்கொடிப் போராட்டம் நடைபெற்றது.

இதனைப் போல சிங்கள சுதந்திர நாளை கரிநாள் என அறிவித்து தமிழர் தாயகம் முழுவதும் பொதுமக்கள் திரண்டு வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். குறிப்பாக மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் நடைபெற்ற போராட்டத்தில் தாயக மக்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் பல நூறு மாணவர்கள் கலந்துகொண்டு, கறுப்புக் கொடியை பல்கலைக்கழக வளாகத்தில் ஏற்றி வைத்தனர்.



சிறீலங்கா சுதந்திரம் பெற்று 77 ஆண்டுகள் நிறைவு பெற்ற நிலையில் சிறுபான்மையான தமிழ் மக்கள் இன்றும் தங்கள் சுதந்திரத்திற்காகப் பல வழிகளில் போராடி வருகின்றனர்.

பல வருடங்களாக தமிழீழ மக்கள் தொடர்ந்தும் சிறீலங்கா சுதந்திர தினத்தை தமிழர்களின் கரிநாள் என பிரகடனப்படுத்தி தமிழர் தாயகம், புலம்பெயர் நாடுகளிலும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

### சிறீலங்காவின் கறைபடிந்த வரலாறு:

சிறீலங்காவின் வரலாற்றில் கறைபடிந்த வடுக்களைப் பதிவாக்கிக் கொண்ட இனக் கலவரங்களையும், இனப்படுகொலைகளையும் சிங்கள ஆட்சியாளர்கள் உருவாக்கி உள்ளனர்.

சிறீலங்காவின் சுதந்திர தினம் என்பது சிங்களவர்களிற்கானது என்று ஆக்கப்பட்ட போது நாட்டின் சுதந்திர தினம் சிறுபான்




மைத் தமிழ் மக்களிற்கு வேதனைக்குரிய நாளாகிப் போனது. சுதந்திர தினத்தைப் புறக்கணிப்பதே ஒரேவழி என்று தமிழ் மக்கள் நீண்ட காலமாகவே முடிவு செய்து கடைப்பிடிக்கின்றனர்.




தமிழர்க்கான சுதந்திரத்தை தர மறுத்துவிட்டு சுதந்திர தினத்தைக் கொண்டாடுங்கள் என்றால் அது எந்த வகையில் நியாயமாக இருக்க முடியும்?

பிரித்தானிய காலணியாதிக்கத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட பெப்ரவரி நான்காம் தினமே முன்னைய இலங்கையின் (Ceylon ) சுதந்திர தினமாக அனுஷ்டிக்கப்பட்டது யாவறும் அறிந்ததே.

### இரண்டாம் தர பிரஜைகளாக தமிழர் :

ஆயினும் இன்றைய சிறீலங்காவில் (Sri Lanka) சிங்களவர்களுக்கு சுதந்திரம் கிடைத்த 77 வருடங்கள் ஆகினாலும், சிறுபான்மையின தமிழர் இரண்டாம் தர பிரஜைகளாக அல்லது ஏதிலிகளாக வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்பதே வரலாற்று உண்மையாகும்.

இந்தியாவின் சுதந்திரத்திற்கான தேசிய எழுச்சி பிரித்தானிய காலணியாதிக்கவாதிகளுக்கு எதிராக அகிம்சை வழியிலும், ஆயுதப் போராட்ட வடிவத்திலும் பரந்துபட்ட மக்களை இணைத்து நடாத்தப்பட்ட போராட்டமாகும். இந்தியாவின் போராட்டத்தின் பக்க விளைவுகள் இலங்கையிலும் பிரதிபலித்ததாய் இருந்தது என்பதே சாட்சியமாகும்.

ஆங்கிலேயர்களின் பிரித்தானிய நவ காலணித்துவ சுரண்டல் முறமைக்கு தம்மை மாற்றிக் கொண்டு இந்தியாவை விட்டு வெளியேறும் போது இலங்கையையும் விட்டு வெளியேறினர்.

உண்மையில் இலங்கை தனது சுதந்திரத்திற்காக இந்தியா அளவிற்கு போராடவில்லை. ஆனால் இலங்கையின் சுதந்திரத்திற்காக தமிழ் மக்களின் பங்களிப்பும் தியாகங்களும் அளப்பரியதாகும்.

பிரித்தானியரிடம் இருந்து 1948 பெப்ரவரி நான்கில் கிடைத்த சிறீலங்காவின் சுதந்திரம் தமக்கான சுதந்திரம் என்று தமிழர்களால் உணரப்படாமல் தள்ளிப்போனமைக்கான முக்கிய காரணமாக ஆட்சியாளர்களின் விரோத இனத்துவேசம் அமைகின்றது.

பிரித்தானியர் சுதந்திரத்தை வழங்கும் போது இலங்கையின் அனைத்து இனத்தவர்களுக்குமே வழங்கினராயினும் துரதிர்ஸ்டவசமாக இலங்கையின் சுதந்திரம் பௌத்த சிங்களவர்களுக்காக போனது காலத்துயரமே. இந்நிலைமையானது நாட்டின் சுதந்திரம் என்பது இலங்கையில் வாழும் ஒரு பகுதியினருக்குன்றாயிற்று.

பிரித்தானியர் இலங்கைக்கு வழங்கிய சுதந்திரத்தை தமதாக்கியவர்கள் நாடும் தங்களுடையது, ஆட்சியும் தமக்கானது என்று முடிவு செய்து, அதை நிலை நிறுத்தப் பல்வேறு நடவடிக்கைகளை சிங்கள அரசுகள் மேற்கொண்டது. அதன் ஒரு அம்சமாக தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக ஆக்கப்பட்டதுடன், தமிழர்களைக் காலத்திற்குக் காலம் வஞ்சித்துத் தண்டிக்க வேண்டும் எனவும் பேரினவாதிகளால் அடிமைப் படுத்தப்பட்டனர்.

சிறீலங்கா சுதந்திரத்திற்கு பின்னரான இலங்கையின் வட கிழக்கு, மலையகம் வாழும் சிறுபான்மையின தமிழ் மக்கள் இரண்டாம் தர பிரஜைகளாக வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என்ற உணர்வலைகளுக்கு சிங்கள அரசுகளால் உள்ளாக்கப் பட்டனர்.

### தமிழர் தாயகத்தில் கரிநாள்:

இவ்வருடமும் சிங்கள அரசின் சுதந்திர நாளான 04.02.2025 அன்று தமிழர் தாயகத்தில் கரிநாள் என பிரகடனப்படுத்தி வடக்கு - கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழினப் படுகொலைக்கு நீதி கோரியும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி கோரியும், அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் எனக் கோரியும் கிளிநொச்சியில் மாபெரும் கறுப்புக்கொடிப் போராட்டம் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பின்வரும் கோரிக்கைகளாக முன்வைத்தனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதி வேண்டும். தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

அத்துடன் பௌத்த மயமாக்கல் உடனே நிறுத்தப்பட வேண்டும். தமிழர் தாயக பிரதேசத்தில் தொடர்ச்சியாக நடந்து வரும் நில அபகரிப்பு உடனே நிறுத்தப்பட வேண்டும். தமிழர் தாயக வளத்தை அபகரிப்பது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

தமிழர் தாயக பிரதேசத்தில் இருந்து இராணுவம் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும். தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணை வேண்டும். சிவில் செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்துதல்கள் நிறுத்தப்பட வேண்டும்.




ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவது நிறுத்தப்பட வேண்டும். எமது நிலம் எமக்கு வேண்டும். தாயகம், தேசியம், அரசியல் சுயநிர்ணயம் என்பன எமது உரிமைகள். அவற்றை உடனே அங்கீகரிக்க வேண்டும்.

வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும். சர்வதேசம், வட்டுக்கோட்டை தீர்மானத்தை அங்கீகரிக்க வேண்டும். அத்துடன் எமது தலைவிதியை நாமே தீர்மானிக்க சர்வதேச நியமங்களுக்கு அமைய எமது தாயக பிரதேசத்தில் பொதுசன வாக்கெடுப்பு நடத்துமாறு சர்வதேசத்தை கோருகிறோம் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

# ஈழத்தமிழினத்தின் 77வது கறுப்பு நாளாக பெப்ரவரி 04

பா. அரியநேத்திரன்

03.02.2025



இலங்கை பிரித்தானியரிடம் இருந்து சிங்கள ஆட்சியாளர் களுக்கு கைமாறியது 1948, பெப்ரவரி, 04ல் அது இலங்கை சுதந்திரம் அடைந்த நாளாக கூறபடுகிறது அதுவே ஈழத்தமிழர் களுக்கு கைவிலங்கு இட்ட கரிநாளாகும். எதிர்வரும் 2025, பெப்ரவரி, 04ம் திகதி 77, ஆண்டு தமிழ் மக்கள் சுதந்திரம் இன்றி அந்த சுதந்திரத்தை மீட்டெடுப்பதற்காக அகிம்சைவழி யிலும், ஆயுத வழியிலும், இன்று இராஜதந்திர வழியிலும் ஈழத் தமிழர்கள் போராடிக்கொண்டே இருக்கிறார்கள்.

இன்னும் அந்த சுதந்திரம் தமிழர்களுக்கு கிடைக்கவில்லை. 1948, பெப்ரவரி, 04ம் திகதி சுதந்திரம் கிடைத்து சரியாக பத்து மாதம் கடந்து முதலாவதாக செய்த வேலை மலையக் தமிழர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கையாக 1948, டிசம்பர், 10ல் பிரஜா உரிமைச்சட்டம் கொண்டு வரப்பட்டு மலையக மக்கள் வெளியேற்றப்பட்டனர். அதன் உண்மையை உள்ளார்ந்தமாக உணர்ந்த தந்தை செல்வா 1949, டிசம்பர் 18ல் இலங்கை தமிழரசு கட்சியை ஆரம்பித்து தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு சமஷ்டி அடிப்படையி லான ஒரு தீர்வே என்பதை வலியுறுத்தி அதற்காக வேலைத் திட்டங்களை முன் எடுத்தார்.



அகிம்சை ரீதியான பல போராட்டங்கள் இலங்கை சுதந்திரதின நாளை ஏற்றுக்கொள்ளாத நாளாக அறிவிப்பு செய்தல் என்ற எதிர்ப்பு போராட்டங்கள் அப்போது 1949 தொடக்கம் ஈழத்தமிழ்




அரசியல் சாத்வீக போராட்டமாக மாறத்தொடங்கியது 1949 ஜனவரி இரண்டாம் வாரத்தில் கொள்ளுப்பிட்டியில் உள்ள தந்தை செல்வாவின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சமஸ்டி அரசியல் திட்டத்தை தந்தை செல்வா சமர்ப்பித்தார். அங்கு குழுமியிருந்த திரு.வன்னிய சிங்கம் உட்பட பல சட் டவல்லுனர்கள் அதை விவாதித்து ஏகமனதாக அங்கீகரித்தனர்.

தந்தை செல்வா இணைப்பாட்சி(சமஷ்டி) தொடர்பாக அளித்த விளக்கங்கள் "ஒற்றையாட்சி முறை, சிங்களவர்கள் தமது சனத் தொகைப் பலத்தை உபயோகித்து தமிழ் இனத்தை அடக்கி ஆள் வதற்கு வசதியளிக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும் நாடுகளில் ஒவ்வொரு இனமும் தாம் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் தம்மைத் தாமே ஆட்சி புரிய அனுமதிக் கப்படுகின்றனர். ஆனால் அவரவர்கள் சுதந்திர தனியரசாக இயங்குவதில்லை. சமஸ்டி அமைப்பாக இயங்குகின்றன. அத்தகைய சமஸ்டி அமைப்புத்தான் இலங்கைக்குத் தேவை."

ஈழத் தமிழர்களுக்கு ஒரு சுயாட்சி, தனியரசு வேண்டும் என் பதை 75 வருடங்களுக்கு முன்னர் கூறியது இன்றும் யதார்த்த மாக நோக்கப்படுகிறது. இந்த இலட்சியத்தை அடைவதற்கு 30 வருட காலமாக அகிம்சை வழிப் போராட்டம் நடத்தினர். இலங் கைத்தமிழ் அரசுக்கட்சியால் இலங்கையின் சுதந்திரநாளை கரி நாளாகவே நோக்கியது அந்த நாட்களில் கறுப்பு கொடி போராட்டங்களை நடத்தியது அது வடகிழக்கு தழுவியதாக தந்தை செல்வா முன் எடுத்தார்.

1952, பெப்ரவரி, 04ம் திகதி தமிழ் மக்களின் கரிநாள் போராட் டத்தில் திருகோணமலையில் மணிக்கூட்டு கோபுரத்தில் ஏறி கறுப்பு கொடி கட்டியவேளையில் 22, வயது மாணவனாக இருந்த நடராசா என்பவன் இலங்கை பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டான். அவன் உயிர்நீத்து இன்று 73 வருடங் களாகிறது. 1956, பெப்ரவரி, 04ல் சுதந்திர தின கொண்டாட் டத்தை நடத்திய கையோடு சரியாக நான்கு நாட்கள் கடந்து 1956, பெப்ரவரி, 08, S.W.R.D பண்டார நாயக்கா தமது சிறீலங்கா சுதந்திர கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் "தனிச்சிங்களம்" நாட்டில் அமுல் படுத்துவேன் என வாக்குறுதி வழங்கினார். அந்த இனவாத கருத்துக்காக சிங்கள மக்களின் அமோக வெற்றியைப் பெற்று தனிச்சிங்களச்சட்டத்தை பாராளுமன்றில் நிறைவேற்றினார்.

இந்த சட்டம் நாடாளுமன்றில் விவாத்ததிற்கு வரும் வேளை இலங்கை தமிழரசுகட்சி சத்தியாகிரக போராட்டங்களை நடத் தியது வடகிழக்கு தாயகம் எங்கும் மக்கள் எழுச்சி போராட் டங்களாக மாறியது. பல்வேறுபட்ட வடிவங்களில் அகிம்சை ரீதியிலான போராட்டங்கள், தமிழரசுக்கட்சி மாநாடுகளில் தீர்மானங்கள், பேச்சுவார்த்தைகள் ஒப்பந்தங்கள் எல்லாம் தந்தை செல்வா மேற்கொண்டார்.

1957, யூலை, 26ல் பண்டா, செல்வா ஒப் பந்தம், அடுத்து 1965, மார்ச், 24ல் டட்லி-செல்வா ஒப்பந்தம் இந்த இரண்டு ஒப்பந்தங் களும் அப்போது வரலாற்று ஆவனமாக கருதப்பட்டது. இவை களை சிங்கள பேரினவாத அரசுகள் கிழித்தெறிந்தவரலாறு இனவாத உச்சமாக பார்க்கலாம். இவ்வாறு ஏமாற்றமடைந்த நிலையில் 1976, மே, 14ல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை தந்தை செல்வா தமிழர் விடுதலை கூட்டணி ஊடாக மேற் கொண்டதும் அதனூடாக 36, விடுதலை இளைஞர்கள் இயக்கம் ஆரம்பமாகி 1987, யூலை, 29ல் இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு பின்னர் 2009, மே 18, வரை விடுதலைப் புலிகள் தியாக போர் நடைபெற்று மௌனமானதும் வரலாறு. அதன் பின்னர் தற்போது 16, வருடங்களாக தமிழ்தேசிய தலைமை அற்ற நிலையில் ஈழ உரிமை அரசியல் இராஜதந்திர ரீதியாக சென்றுள்ளது.

தந்தை செல்வா 1949, டிசம்பர், 18ல் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியியை ஆரம்பித்து சமஷ்டி தீர்வை கேட்டு அகிம்சை போராட்டம் தொடங்கியவர், 1976, மே, 14ல் தமிழர் விடுதலை கூட்டணியை ஆரம்பித்து தமிழீழம் கேட்டு தீர்ரமானத்தை எடுத்தே 1977, ஏப்ரல், 26ல் மரணித்தார். இதில் பார்க்க வேண் டியது தந்தை செல்வா என்ற தலைவர் இரண்டு தீர்மானங் களை நிறைவேற்றினார் ஒன்று சமஷ்டி தீர்வு, அடுத்தது தமிழீழத் தனியரசுத் தீர்வு. ஆனால் இரண்டும் இரண்டு வெவ் வேறு கட்சிகள் என்பதே உண்மை. இதில் புலம்பெயர் அமைப்பு களின் பங்களிப்பு, மற்றும் தமிழ்தேசிய அரசியல் கட்சிகள் ஒரு நேர்கோட்டில் பயணிக்கவேண்டிய நிலையில் எதிர்வரும் 2025, பெப்ரவரி, 04ல் 77வது இலங்கை சுதந்திரதினத்தை வழமைபோன்று கரிநாளாக அனுஷ்டித்து சர்வதேசத்திற்கு மீண்டும் நிருபிக்க அணிதிரள்வது காலத்தின்தேவை.



## ஈகையர் திருமலை நடராசன்

தமிழ் மொழியின் உரிமை காப்பதற்காக ஒரு சிங்கள வெறியனின் துப்பாக்கிக் குண்டுக்குத் தன் இன்னுயிரை இரையாக்கிய திருமலைத் தியாகி நடராசனின் படத்தை ஆழ்ந்த அனுநாபத்துடன் இங்கு வெளியிடுகிறோம்.

திரு. நடராஜன் துடிக்கத் துடிக்க உயிர்விட்ட சிறிது நேரத்தில் திருகோணமலை சுதந்திரன் புகைப்படக்காரரால் இப்படம் பிரத்தியேகமாக எடுக்கப்பட்டது.


திரு. நடராஜன் குறிப்பிடக் கூடிய இனபந்தர்கள் இல்லாத ஒரு அனாதை. இவருக்கு தாயார் மட்டுந்தான் வவுனியாவில் இருக்கிறார் என்று தெரிகிறது. திரு நடராசன் திருகோணமலையில் லிபடன்ஸ் தேயிலை வியாபாரியாக விருந்தார் தேவிலையைத் தள்ளு வண்டியில் வைத்து விற்பனவு செய்வது தான் இவர் மேற்கொண்ட தொழில்.

தொழிலில் வியபாரமாய் இருந்த போதிலும் தமிழ் காக்குந் தொண்டில் இவர் ஓர் ஆர்வம் மிக்க இளைஞ்ராக விளங்கினார் பெப்ரவரி 4ந் திகதியைத் துக்க தினமாகக் கொண்டு, அன்று அவர் வியாபாரத்திற்குச் செல்லாமல் ஹர்த்தால் அனுஷ்டித்து, திருகோணமலையில் தமிழரசுக் கட்சி நடத்திய மொழியுரிமை ஆர்ப்பாட்டத்தில் ஒரு தொண்டராகக் கலந்து கொண்டார்.

அனாதையான இவருடை சடலத்தை தமிழரசுக் கட்சியின் திருகோணமலைக் கிளை கையேற்று, கட்சிக்காரியாலயத்தில் பொது மக்களின் இறுதி மரியாதைகளுக்காக வைத்திருந்து, மறு நாள் நல்லடக்கம் செய்தது,

நன்றி: சுதந்திரன் 17.02.1957

# திருகோணமலையில் பெப்ரவரி 04.02.1957ஆம் ஆண்டு நடைபெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தின் போது திருமலை நடராசன் என்பவர் தமிழ் மொழியின் உரிமையைப் பாதுகாப் பதற்காக உயிர் நீத்து தியாகிகளின் வரிசையில் இடம் பெற்றார். மற்றும் பலர் துப்பாக்கிக் குண்டுகளுக்கும், ரவைகளுக்கும் இலக்காகி காயமும், படுகாயமுற்றனர். இரத்தம் சித்திய அத்தகைய வீரர்களில் சிலரை கீழ் உள்ள படத்தில் காண்க.





திருமலை நடராசன்

1. பன்னிரண்டு வயது பள்ளி மாணவ வீரன் எஸ். மயில்வாகனம். ஒரு எஸ்.ஜீ. குண்டு இவருடைய கண்ணுக்கு அருகாமையாக நெற்றியில் பாய்ந்தது. இவர் கண்டி ஆஸ்பத்ரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

2.வீரர் வி.நடராஜா, வயது 22. இவருக்கு தேகத்தில் 16 ரவைகள் பாய்ந்தன.

3. வீரர் கே.வெண்டரசன், இவர் நான்கு குண் டுகளுக்கு இலக்கானார்.

4. வீரர் எஸ். கந்தசாமி வயது 30 இவர் மாணவன் எஸ். மயில்வாகனத்தைக் காப்பாற்றுவதற்காக பாய்ந்து ஓடுகையில் பதினாறுரவைகளுக்கு இலக் கானார்.

5. வீரர் எஸ்.சிவப்பிர காசம் வயது 28. இவர் தேகத்தில் நான்கு ரவைகள் பாய்ந்தன.

6. வீரர் எஸ்.அருமைத்துரை இவர் தேகத்தில் எட்டு ரவைகள் பாய்த்தன, மற்றும் எட்டுக் காயங்களும் ஏற்பட்டன. குண்டுகள் பாய்ந்த அடையாளங்கள் படத்தில் தெரிவதைக் காண்க. திரு அருமைத்துரை மீன் வியாபாரம் செய்து வருகிறார். கடந்த ஆண்டு திருகோணமலையில் வகுப்புக் கலவரம் ஏற்பட்டு சிங்கள மீன் வியாபாரிகள் தமிழ் மக்களைப் புறக் கணித்த போது இவர் மீன் வியாபாரத்தில் ஈடுபட் டார். இன்று வரை இனப் பற்றோடு இத் தொழிலை மேற் கொண்டு நடத்தி வருகிறர். குண்டுக்கு இலக்கான பின்னும் அவர் தமது மீன் வினியோக சேவையை தம்மாலான வரையில் தமிழ் மக்களுக்குச் செய்து வருகிறார்.

மேலேயுள்ள படம்: துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற திருகோணமலை மணிக்கூண்டுக் கோபுரத் தடியையும் அது சமயம் அங்கு கூடிநினற் பெருந்திரளான சனக் கூட்டத்தையும் படத்தில் காண்க. - நன்றி: சுதந்திரன் 17.02.1957


16 ஆம் ஆண்டு
வீரவணக்கம்
ரவி
02.02.2009
இராஜா
07.02.2009
இரவிச்சந்திரன்
07.02.2009
அமரேசன்
08.02.2009
தமிழ்வேந்தன்
18.02.2009
சிவப்பிரகாசம்
21.02.2009
கோகுலகிருஷ்ணன்
25.02.2009
சீனிவாசன்
01.03.2009
எழில்வளவன்
05.03.2009
ஆனந்த்
15.03.2009
இராசசேகர்
17.03.2009
பாலசுந்தரம்
22.03.2009
மாரிமுத்து
22.03.2009
சிவானந்தன்
17.04.2009
சுப்பிரமணி
23.04.2009
தமிழின் இரத்த உறவுக்காய்
தணலிற்கே தம்முயிர் தந்து – தமிழனின்
தன் மானத்தை நிலைநாட்டிய வீரச் செம்மல்களே
எம் தொப்புள்கொடி உறவுதனை
தரணியெங்கும் உணர்த்திட்ட தீரர்களே!
உங்கள் சுடரின் வழியில் எம் பயணம் தொடரும்...
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

# இலங்கை சுதந்திர தினத்தை கறுப்பு தினமாக அறிவித்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள்

03.02.2025



இலங்கையின் 77வது சுதந்திர தினத்தை கருப்பு நாளாக அனுஷ்டிப்பதற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை சேர்ந்த, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் உறவினர்கள் தீர்மானித்துள்ளனர்.

இலங்கையின் 77வது சுதந்திர தினம் எதிர்வரும் 04ம் தேதி (செவ்வாய்கிழமை) அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நாட்டில் 30 வருட காலமாக இடம்பெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் இன்று வரை நீதி கிடைக்காத பின்னணியில், தமக்கு சுதந்திர தினம் கிடையாது என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கூறுகின்றனர்.

இலங்கையில் காணப்பட்ட இனப் பிரச்னையை அடுத்து இடம்பெற்ற உள்நாட்டுப் போர் 2009ம் ஆண்டு மே மாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்த நிலையில், ஆயிரக்கணக்கான தமிழர்கள் அரசாங்கத்தினால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதாக குற்றஞ்சுமத்தி, யுத்தம் முடிவடைந்த காலம் தொடக்கம் இன்று வரை அவர்களின் உறவினர்கள் பல்வேறு வகையான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தை கருப்பு தினமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் பிரகடனப்படுத்தி போராட்டங்களை நடத்துவது வழமையானதாக காணப்பட்டது.

குறிப்பாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் கடந்த காலங்களில் தமிழ் அரசியல்வாதிகளுக்கு வாக்குகளை அளித்து அரசாங்கத்துக்கு எதிராக போராட்டங்களை நடத்தி வந்த நிலையில், வரலாற்றில் முதல் தடவையாக ஆளும் அரசாங்கத்துக்கு வாக்களித்து அரசுக்கு எதிராகவே இந்தப் போராட்டத்தை நடத்த முற்படுகின்றனர்.

2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் தேதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, வரலாறு காணாத வெற்றியை பதிவு செய்தது.

குறிப்பாக மட்டக்களப்பு தவிர்த்த ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றியை தன்வசப்படுத்தியது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அதிகாரத்தை இலங்கை தமிழ் அரசுக் கட்சி தனதாக்கிக் கொண்டது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழர்கள் தமக்கான தீர்வை வழங்குமாறு கோரி, கடந்த காலங்களில் அரசாங்கத்துக்கு எதிராக போராட்டங்களை நடத்தியது மாத்திரமன்றி, அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிராகவே வாக்களித்திருந்தனர்.

எனினும், இம்முறை அரசாங்கத்துக்கு சார்பாக வாக்களித்து விட்டு, அரசுக்கு எதிராக போராட்டங்களை நடத்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழர்கள் முன்வந்துள்ளனர்.

இந்த நிலையில், வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்திலும், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் எதிர்வரும் 4ம் தேதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பாரிய போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

சுதந்திர தினத்தை கருப்பு தினமாக பிரகடனப்படுத்தி, இந்த போராட்டம் நடத்தப்படவுள்ளது.



*காணாமல் ஆக்கப்பட்டோரின் தமிழர்கள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்*

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் என்ன சொல்கின்றார்கள்?

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவியாக அமலராஜ் அமலநாயகி செயற்பட்டு வருகின்றார்.

கடந்த 2009ம் ஆண்டு வயலுக்கு வேலைக்கு சென்ற தனது கணவரான அந்தோனி அமலராஜ் ரஞ்ஜித், விசேட அதிரடி படையினரால் அழைத்து செல்லப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதாக அமலநாயகி குற்றஞ்சுமத்துகின்றார்.

“தமிழனாக பிறந்த பாவம் தான் நாங்கள் இந்த நிலைமையில் இருப்பதற்கு காரணம்” என அமலநாயகி தெரிவிக்கின்றார்.

மூன்று பிள்ளைகளின் தாயான அமலநாயகி, 2009ம் ஆண்டு முதல் இன்று வரை தனது கணவரை தேடிய பயணத்தைத் தொடர்ந்து வருகின்றார்.



*தனது கணவர் விசேட அதிரடி படையினரால் அழைத்து செல்லப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதாக அமலநாயகி குற்றஞ்சுமத்துகின்றார்*

ஆனால், கணவரை தேடும் கேள்விக்கான பதில் கிடைக்காத நிலையில், தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றார் அமலநாயகி.

“மாவட்ட ரீதியாக 2010ம் ஆண்டிலிருந்து எமது போராட்டம் தொடர் போராட்டமாக தொடங்கியது. ஒவ்வொரு விதங்களாக போராட்டங்களை நடத்தி வந்தோம். வழிபாடுகள், தியானங்கள், பேரணிகள், மௌன ஊர்வலங்கள் போன்ற விதமான போராட்டங்களை நாங்கள் 2010ம் ஆண்டே தொடங்கி விட்டோம். வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் 2015ம் ஆண்டு ஒருங்கிணைந்து விட்டோம். சில அமைப்புக்களின் ஊடாக வடக்கு, கிழக்கில் ஒருங்கிணைந்து செயற்பட்டோம்” என பிபிசி தமிழிடம் தெரிவித்தார் அவர்.

எனினும், கடந்த 2017ம் ஆண்டு தனித்துவமாக வடக்கு-கிழக்கு ஒன்றிணைந்து செயற்பட ஆரம்பித்ததாக, அமலநாயகி கூறினார்.

இவ்வாறு போராட்டங்களை நடத்திவரும் தமது அமைப்பிலுள்ள 300க்கும் அதிகமான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தீர்வு எட்டப்படாத நிலையில், வயது முதிர்வு காரணமாக உயிரிழந்துள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

போர் இடம்பெற்ற காலப் பகுதியில் மாத்திரம் சுமார் 18 ஆயிரத்துக்கும் அதிகமானோர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தினர் குறிப்பிடுகின்றனர்.



**காணாமல் போனதாக கூறப்படும் அந்தோனி அமலராஜ்**

இலங்கையின் சுதந்திர தினத்தை கருப்பு தினமாக அனுஷ்டிப்பதற்கான காரணத்தை தெளிவூட்டினார் அமலநாயகி.

“இலங்கை சுதந்திர தினத்தை கொண்டாடிக்கொண்டிருக்கின்ற இந்த தருணத்தில், நாங்கள் 15 வருடங்கள் தாண்டிய நிலையிலும் வடகிழக்கு தாயக மக்கள் எந்தவொரு அடிப்படை உரிமைகளும் அற்ற நிலையில் தான் வாழ்ந்துகொண்டு வருகின்றோம். முக்கியமாக காணாமல் ஆக்கப்பட்ட விடய பரப்பு, தமிழர்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் தான் நாங்கள் வாழ்ந்து வருகின்றோம். எங்களுக்கான உரிமைகள் கிடைக்கும் வரை இலங்கையின் சுதந்திர தினத்தை நாங்கள் கருப்பு தினமாக தான் அனுஷ்டிப்போம்” என அமலநாயகி குறிப்பிடுகின்றார்.

நாட்டில் கடந்த காலங்களில் தமிழ் கட்சிகளுக்கு ஆதரவு வழங்கிய நிலையில், சுதந்திர தினத்தை கருப்பு தினமாக அனுஷ்டித்தமைக்கு மாறாக, மத்திய அரசாங்கத்துக்கு இம்முறை முழுமையான ஆதரவை வழங்கிய நிலையில் சுதந்திர தினத்தை கருப்பு தினமாக ஏன் அனுஷ்டிக்க வேண்டும் என பிபிசி தமிழ், அமலநாயகியிடம் கேள்வி எழுப்பிது.

“இந்த அரசாங்கம் கூட தமிழர்களின் உரிமைகளை தடுக்கும் வகையில் தான் செயற்பட ஆரம்பித்துள்ளது. எங்கள் இனத்துக்கு நடந்த இன அழிப்பு மற்றும் அநீதிகள், காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளின் காயங்களுக்கு மருந்து போடாமல் வெறும் அபிவிருத்தி மற்றும் மாயைக்குள் தான் நாங்கள்

இருக்கின்றோம். எங்களுடைய உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதை கூற சொல்லி, இந்த 15 வருட காலமாக நாங்கள் தெருக்களிலிருந்து போராடி வருகின்றோம்" என கூறுகிறார் அவர்.

மேலும் பேசிய அவர், "நாங்கள் தொலைத்தது ஆடோ, மாடோ பொருளோ இல்லை. விலைமதிக்க முடியாத எங்களின் வாழ்க்கையை தொலைத்திருக்கின்றோம். வாழக்கூடிய வல்லமை இப்போது எங்களிடம் இருந்தாலும், அந்த வலியுடனான சுதந்திர வாழ்க்கையை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்கான ஒரு நீதியை பெற்றுக்கொள்ளாமல், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை நாங்கள் அறியாமல் இந்த போராட்டத்தை விட மாட்டோம்." என அவர் கூறுகின்றார்.

மேலும் "இவர்கள் ஒரு இனத்தை காப்பாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். இதற்குள் இனவாதம் பேசப்படுகின்றது. அவர்களின் பெரும் ஆதிக்கத்தை தான் பேசுகின்றார்கள். மனிதர்களின் உணர்வுகளை கண்டுகொள்ள தவறுகின்ற பட்சத்தில் தான் நாங்கள் இவ்வாறான தினங்களை எதிர்ப்பு தினமாக பிரகடனப்படுத்துகின்றோம்" என அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வர இளம் சந்ததியினரே முன்வந்ததாக கூறிய அவர், இளைஞர், யுவதிகளை ஒரு மாயைக்குள் இந்த அரசாங்கம் கொண்டு வந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றார்.

இந்த அரசாங்கத்தை இளைஞர், யுவதிகள் நம்பி வாக்களித்துள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

அரசாங்கம் சில சோதனைச்சாவடிகளை அப்புறப்படுத்தியுள்ள போதிலும், தமிழர்களுக்குத் தேவையான விடயத்தை இன்னும் தொடவில்லை என அவர் கூறுகின்றார்.

இதனால், புதிய அரசாங்கம் தமக்கான தீர்வை வழங்கும் என்ற நம்பிக்கை தமக்குக் கிடையாது என அவர் குறிப்பிடுகின்றார்.

காணாமல் போன உறவினர்கள் இன்று அல்லது நாளை வந்து விடுவார்கள் என்ற நம்பிக்கையில் போராட்டங்களை தொடர்ந்தும் நடத்தி வருவதாக, வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவி அமலராஜ் அமலநாயகி தெரிவித்தார்.

### பாதுகாப்பு அமைச்சின் பதில்

யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதாக கூறப்படும் நபர்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சிடம் பிபிசி தமிழ் வினவியது.

இவ்வாறான குற்றச்சாட்டுகள் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமையினால், அது தொடர்பில் அதிகாரபூர்வ பதிலொன்றை வழங்க முடியாதுள்ளதாக, பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

### அரசாங்கத்தின் பதில்



## நீதி பெறாமல் போராட்டத்தைக் கைவிட மாட்டோம் என்கிறார், அமலராஜ்

இந்த காணாமல் போனோர் விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்த தாம் எந்த நேரத்திலும் தயாராக இருப்பதாக, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் பிபிசி தமிழுக்கு தெரிவித்தார்.

77வது சுதந்திர தினத்தை கருப்பு தினமாக அனுஷ்டிக்கின்றமை தொடர்பில் வினவிய போதே அவர் இதனைக்



குறிப்பிட்டார்.

"நாங்கள் நஷ்ட ஈட்டை வழங்க தயாராக உள்ளோம். இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாட தயாராக இருக்கின்றோம். உங்களின் கிராமங்களை கட்டியெழுப்ப தயாராக இருக்கின்றோம். கிராமத்திலுள்ள வீதிகளை கட்டியெழுப்ப தயாராக இருக்கின்றோம். இதைவிட வேறு என்ன செய்ய இருக்கின்றது?" என அவர் கேள்வி எழுப்பினார்.

"காணாமல் போனோரை கொண்டு வருமாறு கூறுகின்றார்கள். அவர்களை எங்கிருந்து கொண்டு வருவது? உலகத்தில் எங்காவது காணாமல் போனோரை கொண்டு வந்ததாக வரலாறு இருக்கின்றதா? 100 வீதம் விசாரணைகள் நடத்தப்பட்டிருக்கின்றதா? எங்கேயும் கிடையாது. கூடுதலான அனுபவம் உள்ள நாடு தென் ஆப்பிரிக்கா. தென் ஆப்பிரிக்காவில் கூட 5 சதவிகிதம் தான் விசாரிக்கப்பட்டுள்ளனர்." என அவர் கூறுகின்றார்.

"அவர்கள் அனுபவிக்கும் வேதனையை நாங்கள் அறிவோம். இனி எந்தவொரு காலத்திலும் அவ்வாறான சம்பவங்கள் இடம பெறாது என்ற உத்தரவாதத்தை வழங்க வேண்டும். இனங்களுக்கு இடையில் இனி முரண்பாடுகள் ஏற்படாத அளவுக் மக்களை பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு எங்களுக்கு உள்ளது" என்றார் அவர்.

தங்கள் தரப்பிலும் பல ஆயிரம் பேர் கொலை செய்யப்பட்டதாகவும் பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு ஆளானதாகவும் அவர் கூறினார்.


நன்றி: பிபிசி தமிழ் -ரஞ்சன் அருண் பிரசாத்



# சோல்பரி ஆணைக்குழு நியமிக்கப்பட்ட 80வது ஆண்டில் ஈழத்தமிழர் இறைமையின் தொன்மை குறித்து சில தெளிவுகள்

31.01.2025

நீதியரசர் சச்சி பொன்னம்பலத்தின் "சிறீலங்கா-தமிழர் தேசியப் பிரச்சினையும் தமிழர் விடுதலைப் போராட்டமும்" நூலிருந்து சில தரவுகள் சிறீலங்காவின் இன்றைய அரசத்தலைவர் அநுர குமர திசநாயக்கா இரு தேச இனங்களின் இறைமைகளின் சமத்துவத்தை உறுதிப்படுத்தி நாட்டை பொருளாதார பெருவீழ்ச் சியிலிருந்து மீட்பதற்கான சில வரலாற்று வழிகாட்டல் ஈழத் தமிழர் இறைமையை இலண்டன் கிழக்கிந்தியக் கம்பெனி 1796 இல் டச்சுக் காலனித்துவ அரசிடம் இருந்து கைப்பற்றி மதராசில் இருந்து (இன்றைய சென்னை) தமிழகத்துடன் இணைந்ததாக முழு இலங்கையையும் 1802 வரை ஒரே சட் டத்தில் ஒரே நிதியுடன் ஆட்சிப்படுத்தியமை ஈழத்தமிழர் ஆங் கிலேய ஆட்சிக்குட்பட்ட வரலாற்றின் முதல் தொடக்க மாகவுள்ளது.




சேர். கியூ கிளக்கோன் (Sir Hugh Cleghorn) இலங்கைக்கான முதலாவது காலனித்துவ செயலாளர், தனது 1799ம் ஆண்டு 'கிளக்கோன்' அறிக்கையில், "இருதேச இனங்கள் இலங்கைத் தீவின் நிலத்தை இரண்டாகக் கூறுபோட்டுத் தமக்குள் வைத் துள்ளனர். தெற்கின் உட்பகுதியிலும் மேற்குப் பகுதியில் வளவை ஆறுமுதல் சிலாபம் வரையும் சிங்களவர்கள் வாழ்ந்து வருகின்றனர். மலபார்காரர்கள் (தமிழர்களுக்கு அரபுநாட்டு வணிகர் அல்பரூனி அறிமுகம் செய்த சொல். தமிழையும் மலபார் மொழி என்றே அரபு நாட்டவர் வழி போர்த்துக்கேயர் முதல் முதற்கட்ட ஆங்கில ஆளுநர்களான சேர் றொபெர்ட் பிறவுணிங், சேர். எமேசன் ரெனென்ற் ஆகியோரும் பயன் படுத்தினர் என்பது முனைவர் காரைசுந்தரம்பிள்ளை அவர் களின் வடஇலங்கை நாட்டார் அரங்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முனைவர் பட்ட நூலில் 140வது பக்கத் தகவல்) இலங்கையின் வடக்கு கிழக்கு மாவட்டங்களை தமதாகக் கொண்டிருக்கின்றனர். இந்த இருதேச இனங்களும் தங்களின் மதம், மொழி, நடத்தைகள் என்பவற்றில் முற்றிலும் வேறுபட் டவர்கள்." எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளமை. தமிழக - ஈழத்தமிழர்களை தமிழினத்தைக் குறிக்கும் மலபார்களாகவே கருதி 1796 முதல் 1802 வரை ஈழத்தமிழகத்தையும் தமிழகத்தையும் ஒரே ஆட்சி அலகாக ஆட்சி செய்தமைக்கான காரணத்தைத் தெளிவுபடுத்துகிறது.

வடக்கின் நாகதீப ஆட்சி மேற்கில் சிலாபத்தில் இருந்து கிழக்கே திருகோணமலை வரை இருந்த ஆட்சிப்பிரதேசம் என கி.பி. 2ம் நூற்றாண்டின் யாத்திரிகரான பிலோமி (Ptolemy) குறித்தமை 1799 இலும் கிளக் கோனின் அறிக்கையிலும் உறுதியானது முக்கியமான விடயமாக உள்ளது.

சேனன் குடிக்கன் தமிழ் அரசர் ஆட்சிகள் கி.மு 177-155 இல் நிலவியமை பற்றிய குறிப்புக்களும் தமிழ் அரசன் எல்லாளன் அநுராதபுரத்தில் ஆட்சியினை கிமு 145-101 வரை ஆட்சிப் படுத்திய வரலாற்றுக் குறிப்புக்களும். மகாவம்சத்தின் 24வது அதிகாரத்து சிங்கள அரசு குறித்த தொன்மத்திலும் கூட துட்ட கைமுனு தனது தந்தைக்குப் போர் பிரகடனம் செய்தைக் கூறிய பொழுது அவர் மகாகங்க என அழைக்கப்பட்ட இன்றைய மகாவலி கங்கைக்கு அந்தப் புறத்தில் தமிழர்கள் ஆளட்டும் இந்தப் புறத்தில் நாங்கள் ஆளுவோம் எனச் சமரசம் செய்ய முயன்ற குறிப்புக்களும் கூடவே துட்டகைமுனு தென்கிழக்கில் மகியங்கனையை ஆண்ட சாத்தன் என்ற தமிழரசனை வென்று தொடர்ந்து 31 தமிழ்ச் சிற்றரசர்களை வென்று அநுராத புரத்தில் எல்லாளனுடன் போருக்கு வந்தான் எனக் கூறியிருப் பதும் ஈழத்தமிழர்களின் இறைமையுள்ள தாயகமாக வடக்கு கிழக்கு வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இருந்து வந்துள் ளமைக்கான மக்கள் வரலாற்று நினைவுகளாக உள்ளன.





ஆயினும் கி. பி 1214 முதல் கி.பி 1621 வரை 407 ஆண்டுகள் யாழ்ப்பாண அரசு ஈழத்தமிழர்களின் அரசாக சமகால வரலாற் றில் நிலைபெற்றிருந்து 1505இல் கோட்டே சிங்கள அரசில் போரத்துக்கேயர் உடைந்த கப்பலைப் பழுதுபார்க்கக் கால் வைத்து கோட்டே அரசைக் கைப்பற்றிய பொழுது கோட்டே அரசன் விதியபண்டாரவுக்கு நல்லூரில் யாழ்ப்பாண அரசு அர சியல் புகலிடம் கொடுத்துப் பாதுகாத்ததும். அச்சமயம் விதியப் பண்டார வெடிமருந்து தயாரிப்பில் மரணம் அடைந்த பொழுது அவருக்கு பூதவராயர் நடுகல் கோயிலை அமைத்துத் தமிழர் பண்பாட்டு முறையில் வீர வணக்கத்தை யாழ்ப்பாண அரசு செய்தமை சிங்களவர்களுக்கான பாதுகாப்புத் தோழமையாக வும் யாழ்ப்பாண அரசு விளங்கியது என்பதற்கான வரலாற்றுச் சான்றுகளாக உள்ளது.


நல்லூர் பூதவராயர் நடுகல் கோயில்

வடஅமெரிக்க முஸ்லீம் யாத்திரிகரான இபின் பட்டுடா 1344 இல் யாழ்ப்பாண அரசரான ஆரியச் சக்கரவர்த்தியினைச் சந் தித்த பின்னர் அவருடைய அரண்மனையின் பிரமாண்டத் தையும் அனைத்துலக வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த கப்பல் அணிகளின் பெருக்கத்தையும் அரசரின் அனைத் துலகத்தவரை வரவேற்று விருந்தளி த்து மதிப்பளிக்கும் பெரும்பண்பையும் வியந்து பாராட்டியமையும் இவ்விடத்தில் மீள்நினைவு படுத்தப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது.


மேலும் 1802 இல் நெதர்லாந்துடன் பிரித்தானியா செய்து கொண்ட அமீன்ஸ் உடன் படிக்கையின் படி (Treaty of Amiens, Holland) இலங்கைத் தீவு பிரித்தானியா முடிக்குரிய அரசாக மாற்றப்பட்டதன் பின்னர் அடுத்து வரும் 30 ஆண்டுகளும் பிரித்தானியா காலனித்துவ அரசாங்கம் ஈழத்தமிழர்களின் அரசுக்குரிய பகுதிகளையும் சிங்களவர்களின் அரசுக்குரிய பகுதிகளையும் தனித்தனியான அலகுகளாகவே ஆட்சிப்படுத் தினமை இலங்கைத் தீவில் இரு இறைமையுள்ள அரசுக்களை பிரித்தானியாகைப்பற்றியது என்பதற்கான வரலாற்றுச் சான்றாக உள்ளது.

இக்காலத்தில் 10.07. 1813இல் பிரித்தானியா தனது சிலோன் அரசாங்கத்தின் ஆட்சி மொழியான ஆங்கிலத்துடன் பயன் படுத்த வேண்டிய மொழிகள் குறித்து சிந்தித்த பொழுது அக் காலத்து தனியான யாழ்ப்பாணப் பட்டினத்துக்கும் கரையோரச் சிங்களப் பகுதிகளுக்கும் பிரித்தானியா ஆளு நராக இருந்த





சேர். றெபேர்ட் பிறவுணிங் அவர்கள் காலனித்துவச் செயலாள ருக்கு அனுப்பிய நெறிப்படுத்தல் கடிதத்தில் "தமிழ்மொழி போத்துக்கேயத்துடன் கலந்து எல்லா மாகாணங்களிலும் வழக்கில் உள்ளது.

புத்தளத்தில் இருந்து மட்டக்களப்பு அடங்கலாக வடக்கு முழுதும் தாய்மொழியாக உள்ளது. எனவே நான் தமிழ் மொழியையும் சிங்களத்துடன் சமமாகப் பயன் படுத்தும்படி ஆணைப்படுத் துவதை உங்கள் மேலான கவனத்துக்கு கொண்டு வருகின் றேன். இதனை நீங்கள் எதிர்க்கமாட்டீர்கள் என எண்ணு கிறேன்" எனக் குறிப்பிட்டிருந்தமை தமிழும் சிங்களமும் இலங் கைத் தீவு முழுவதும் மக்களின் வழக்கு மொழியாக இருந் தமைக்கான வரலாற்றுச் சான்றாக உள்ளது.




கடைசி நாலு அரசர்களையும் தமிழர் களாகவே கொண்டிருந்த கண்டி சிங்கள அரசை 1815இல் பிரித்தானிய காலனித்துவ அரசு கைப் பற்றியதன் பின்னர் 17 ஆண்டுகளுக்குப் பின்னர் வன்னித் தமிழரசின் கடைசி மன்னனான பண்டார வன்னியன் 31.10. 1832 இல் கற்சிலை மடுவில் உயிரிழந்த பின்னரே 1833இல் பிரித்தானியரால் தாம் விரும்பியவாறு தங்களின்

சந்தை மற்றும் இராணுவ நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த அதுவரை இலங்கைத் தீவின் வரலாற்றில் என்றுமே இருந்திராத “சிலோன்” என்னும் செயற்கையான ஒற்றையாட்சி கொண்ட அரசு ஒன்றையும் செயற் கையான தேசியமான “சிலோனிஸ்” தேசியம் ஒன்றையும் பிரித்தானிய காலனித்துவ அரசால் தமிழ் சிங்கள மக்களின் விருப்பின்றி உருவாக்க முடிந்தது என்பதும் இலங்கை தீவின் வரலாறாக உள்ளது.




1833இல் பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் கோல்புறூக் கமரோன் அரசியல் சீர்திருத்ததின் மூலம் பிரித்தானியர்களின் இலங்கைகான சட்டசபைக்கு சட்டவாக்கத்தில் நிர்வாகத்தில் பரிந்துரைகள் வழுங்குவதற்கு இலங்கையர்களை தாம் நிய மனம் செய்து உள்நாட்டு மக்களை ஆட்சிப் படுத்தலை இலகு வாக்க முனைந்த பொழுது தமிழர்களின் தேச இனத்தன் மையையும் (Tamil Nation), சிங்களவர்களின் தேச இனத்தன் மையையும் (Sinhala Nation) சமத்துவப்படுத்தி இரு தேச இனங்களில் இருந்தும் ஒவ்வொரு உறுப்பினர்களை நியமித் தமையும் வரலாறு.

கோல்புறூக் கமரோன் அரசியலமைப்பு இலங்கையில் நடை முறைப்படுத்தப்பட்ட பொழுது ஆறுமுகநாவலர்க்கு 11வயது. அடுத்த ஆண்டில் 1834இல் இவருடைய தந்தையார் பல கிறிஸ்தவ நாட்டுக் கூத்துக்களை தமிழ்ப்படுத்திய வகையில் கிறிஸ்தவர்களிடை பெற்ற மதிப்பின் பின்னணியில் பீற்றர் பார்சிவல் பாதிரியாரின் யாழ் வெல்சியன் மிசன் கல்லூரிக்கு (பின்னர் யாழ் மத்திய கல்லூரியாகியது) ஆங்கிலம் கற்கச் சென்று ஆங்கிலத்திலும் கிறிஸ்தவத்திலும் பழக்கப்படுகின்றார். 19 வயதில் தமிழ் ஆங்கில ஆசிரியராக மட்டுமல்லாது பீற்றர் பார்சிவல் பாதிரியாரின் தமிழ்ப் பண்டிதராகவும் பரிணாம டைந்து பைபிளின் தமிழ்மொழியாக்கக் குழுவிலும் பங்கேற் கின்றார்.

ஆயினும் 24 வயதில் அம்பலவாண முதலியாருடன் சென்னை சென்று அங்குள்ள பள்ளிகளைப் பார்வையிட்டதன் பின்னர் 1847டிசம்பர் 31ம் நாள் வண்ணார்பண்ணை சிவன் கோயி லில் கிறிஸ்தவ மதத்தை எதிர்த்து முதன்முதலாகச் சைவப் பிரசங்கம் தொடங்குகின்றார். இந்த கிறிஸ்தவ மத எதிர்ப்பை சைவப்பண்பாட்டு மீட்பாக முன்னெடுக்கத் தொடங்கிய ஆறுமுக நாவலர் 1879 மே மாதம் 22ம் திகதி பிரித்தானிய சட்டசபைப் பிரதிநிதியாக 1833 முதல் 1879 வரை இருந்த சேர். முத்துக் குமாரசுவாமி அவர்களின் இடத்துக்கு அவரின் உறவினரான சேர். பொன்னம்பலம் இராமநாதனை நியமிக்க வேண்டுமென மக்கள் மத்தியில் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் உரையாற்றிய பொழுது “தமிழரைத் தமிழர் அல்லாதவர் ஆளக் கூடாது” என்ற ஈழத்தமிழர் தேசியத்தன்மையை வெளிப் படுத் தினார். இதனாலேயே பேராசிரியரி கைலாசபதி அவர்கள் தனது பொதுவுடைமை நிலைப்பாட்டையும் கடந்து ஆறுமுகநாவல ரைத் தமிழ்த் தேசியத்தின் தந்தையென வரைவுசெய்தார். இதனால் “பண்பாட்டு மீட்டுணர்வு” மூலம் பிரித்தானிய காலனித்துவத்துக்கு எதிரான விடுதலையை முன்னெடுக்கும் வழமை ஈழத்து அரசியலில் ஆரம்பமாகியது. இது சைவ









வேளாளமேலாண்மை ஈழத்தமிழர் அரசியலில் வழக்க மாகவும் வழிசெய்தது.

ஆயினும் நாவலர் இந்து என்ற நிலையில் என்றுமே ஈழத் தமிழரை அடையாளப்படுத்தாது சைவர் என்ற நிலையிலேயே தனது பண்பாட்டு மீட்டுணர்வை முன்னெடுத்தார். சைவசமயத் தைத் தமிழ்ச்சமயம் என்று அழைக்க வேண்டாம். சைவக் கோயில்களைத் தமிழ்க்கோயில்கள் என அழைக்காதீர்கள். சைவம் ஒரு மதம். தமிழ் ஒரு மொழி. சைவரல்லாதவர்களும் தமிழர்களாக உள்ளனர் என்ற தெளிவான வரையறைகளை நாவலர் தனது தேசியத்தை பண்பாட்டு மீட்டுணர்வால் கட் டமைத்த பொழுது ஏற்படுத்தினார். ஆனால் அநகாரிக்க தர்மபாலர் பௌத்தமும் சிங்களமும் சிங்கள தேசியத்தின் தன் மையெனச் சிங்கள பௌத்த பேரினவாதத்தை உருவாக் கியமையே இன்றுவரை இலங்கைத் தீவு சமுக பொருளாதார அரசியல் ஆன்மிகத் தளங்களில் சிங்கள இனவெறி மொழி வெறி தன்மையினை வெளிப்படுத்தி முழு இலங்கைத்




**இலங்கை சுதந்திரம் பெறுவதற்கான ஆவணத்தில் கையெழுத்திடும் டி.எஸ். சேனநாயக்க**

தீவையும் அமைதியற்ற பொருளாதார வளர்ச்சியற்ற ஈழத் தமிழின அழிப்பால் ஈழத்தமிழர்களின் நிலத்தை வளத்தை ஆக்கிரமிக்கும் சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சித்தளமாக மாற்றியுள்ளது.

பிரித்தானிய காலனித்துவ அரசால் உருவாக்கப்பட்ட இந்தப் போக்குகளையும் அதன் விளைவுகளையும் இன்றைய சிறீலங்காவின் அரசத்தலைவர் அநுர குமர திசநாயக்கா உண்மையுடனும் நேர்மையுடனும் உணர்ந்து இருதேச மக் களின் இறைமைகளும் சமமானதும் இலங்கையின் எல்லாக் குடிகளும் சமமான அரசியல் உரிமைகளை அனுபவிப்பது உறுதியானதுமான அரசியல் அமைப்பு மாற்றங்களை கொண்டு வந்து அனைவருக்குமான பாதுகாப்புடன் கூடிய அமைதியையும் வளரச்சிகளையும் சட்டத்தின் முன் அனை வரும் சமம் என்ற உறுதியான செயற்பாட்டுடன் முன்னெடுக்க இந்த வரலாற்று மீள்வாசிப்பு உதவ வேண்டும். இதற்கு எந்த சோல்பரி அரசியல் அமைப்பு 1945 ஏப்ரலில் இன்றைய சிக்கல் களைதத் தோற்றுவித்ததோ அந்த சோல்பரி அரசியல் அமைப்பு அறிமுகம் செய்த சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமையில் இருந்து வெளிவந்து சிறு பான்மை பெரும்பான்மை என்கின்ற பிரித்தானியக் காலனித் துவம் ஏற்படுத்திய வடிவங்களை விடுத்து இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கில் ஈழத்தமிழர்களின் வரலாற்றுத் தாயகமும் மற்றைய பகுதிகளில் சிங்களவர்களின் வரலாற்றுத் தாயகமும் உள்ளது என்ற உண்மையின் அடிப்படையில் இருதேச மக் களதும் இறைமைகளைச் சமமாக மதித்து இலங்கையில் வர்த்தகத்தால் குடிகளாகவும் தொழில் பங்களிப்பால் குடிக ளாகவும் உள்ள முஸ்லீம் மக்கள் மலையகத் தமிழ் மக்கள் அனைவரதும் அரசியல் உரிமைகளையும் உறுதி செய்து புதிய அரசியலமைப்பை உருவாக்கினாலேயே பாதுகாப்புடன் கூடிய அமைதி வாழ்வும் வளர்ச்சிகளும் இலங்கைத் தீவில் அனைத்து மக்களுக்கும் நடைமுறைச்சாத்தியமாகி நாட்டின் வங்குரோத்து நிலையும் மக்களின் வறுமையும் அறியாமையும் நீங்கும்.

-சூ. பற்றிமாகரன்

நன்றி: இலக்கு இணையம்




தமிழீழ சுதந்திரம்
எங்கள் பிறப்புரிமை